அணைக்கரு ப்பங்காரவாதம்

உலகுலா

நவம்பர் -1994



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புதிய வரலாறு படைக்கும்
தலைவரின் பார்வையில்
நவீன உலகை நோக்கிய
உலக உலா

★ கலியுகவரதன் ★

★ வான வில்லின் வர்ணங்கள்
கலியுகவரதனின் கைவசமோ ! ! !
ஆமாம்

★ வீட்டிற்கு மேலும் அழகு தரும்
வர்ணப் பூச்சுக்கள்
மலிவு விலையில்

★ எமல்சன் பெயின்ற்
★ எனாமல் பெயின்ற்

தமிழீழ ஆவணகம்
Tamileelam Archive

கலியுகவரதன்

இரும்புப் பொருட்கள்
மற்றும்
அனைத்து
வாகனங்களினதும்

உதிரிப்பாகங்களிற்கும் இன்றே முந்துங்கள்

கலியுகவரதன்

நீராவியடி. யாழ்ப்பாணம்.

பயத்தில் அலறும் பெண்கள்; நடுக்கடல் காட்சி.

அமெரிக்காவின்

பொருளாதாரத் தடையைத் தகர்க்க, கட்டுக்கடங்காத கியூபா அகதிகள் அமெரிக்காவை நோக்கிச் செல்கின்றனர். கஸ்ரோவின் இராஜதந்திரம் பலிக்குமா?

பார்க்க பக்கம் 24

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இச்சிறுகலத்தினுள் இருப்பது சின்னஞ்சிறு அளவு புளுற்றோனியம் கருப் பொருள்கள் கள்ளச்சந்தையில் விற்பனையானால் . . . ?

சோவியத் யூனியன்

B-454

துண்டுதுண்டாகச் சிதறியதைத் தொடர்ந்து, ருஷ்யாவில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அங்கிருந்த மிகவும் பெறுமதிவாய்ந்த அணுக்கருட் பொருள்கள் தற்போது ஆபத்தான கடத்தற் பொருள்களாக மாறி உள்ளன. உலகையே அழிக்க வல்ல அணுக்

பார்க்க பக்கம் 31

உலக விவகாரங்கள்

ஆசியா

அணுவாயுத சூதாட்டம் 05
மீண்டும் கொலைக்களம் 07
தந்தையின் வாரிசு 10
புதிய முகங்கள் பழைய உத்தி 13
தொடரும் ஆர்மீனியப் போர் 15

ஆபிரிக்கா

அபாச்சாவும் அமியோலாவும் 17
தண்ணீர் . . . . தணலீர் 19
தேர்தலுக்குப்பின் . . . . ? 22

அமெரிக்கா

கியூபாவின் அழுத்தம் 24
ஹெய்ற்றியில் அமெரிக்கா 28

ஐரோப்பா

பேராபத்தான அணுக்கருப் பொருள்கள் 31
வடஅயர்லாந்தில் சமாதானம்? 37

அவுஸ்ரேலியா

போகனவில்லா பிரச்சனை தீருமா? 44

மனிதவியல் வரலாறு

சீனாவின் கலைப்பொருள்கள் கடத்தப் படுகின்றன 46

விஞ்ஞானம்

பரம்பரையலகு புவியியல் 48

உலா: 15

உலக உலா

பல்துறைசார் மாத இதழ்

விலை ரூபா 100/-

உலக உலா நவம்பர் 1994

குற்றவியல்

காலோசின் கைது 49
குற்றமற்ற ஒற்றனின் மரணம் 52

சமூகவியல்

இழந்ததும் பெற்றதும் 55
டோக்கியோவில் யூதக் கண்காட்சி 57

வாணிகம்

நாணயத்தின் நிறம் ... 59

விண்வெளி

தொலைநோக்கியின் பங்களிப்பு 61

முகாமைத்துவம்

பொருத்தமான ஊழியர்களை வேலைக்கமர்த்தல் 65
அணியாக வேலை செய்யுங்கள் 68

வரலாறு

தொடரும் வேதனை 72

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

இலத்திரனியல் இன்று 76
அலாஸ்கா – சைபீரியப் பாலம் 79

பல்தினைப்பகுதி

செய்திச்சரம் 03
பார்வைகள் 04

அச்சுப் பதிப்பு

இராசன் அச்சகம்
144, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

★

முன் அட்டைப் பதிப்பு

அந்திவானம் பதிப்பகம்
ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்.

★

வெளியீடு

உலக உலா நிறுவனம்
144, அருச்சுனா சாலை,
(3 ஆம் மாடி)
யாழ்ப்பாணம்.

★

பணிமனை

உலக உலா செயலகம்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

★

விநியோகஸ்தர்கள்

தென்மராட்சிக் கோட்டம்
சோதி புத்தக நிலையம்
கச்சாய் வீதி
சாவகச்சேரி

★

வடமராட்சிக் கோட்டம்
உதயன் புத்தக நிலையம்
மருதடி
பருத்தித்துறை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பங்களா தேசத்தில் அகதி வெள்ளம் வழி தேடுகிறது

பங்களாதேச முகாம்களில் உள்ள றொகின்ஜியா, அகதி முகாமில் உள்ள அகதிகளை நாளொன்றிற்கு 5,000 பேர் வீதம் தான் ஏற்றுக்கொள்ள இணங்கியுள்ளது. இதற்கு முன்பு அது நாளந்தம் ஏற்றுக் கொண்ட அகதி எண்ணிக்கை 3,000 ஆகும். றொசின்ஜியா என்ற அநேகமானோர் முஸ்லிங்களான 2,50 000 அகதிகள் 1991 இல் பர்மிய இராணுவத்தின் அடக்கு முறையில் இருந்து தப்புவதற்காகப் பங்களாதேசத்திற்கு ஓடி வந்தனர். அவர்களில் இதுவரை பர்மிய அரசு 1,50,000 பேர்களுக்கு மீண்டும் பர்மாவிற்குத் திரும்ப அனுமதி வழங்கியுள்ளதுடன் அதில் 60 000 பேர் மீண்டும் பர்மா சென்றுள்ளனர்.

ஹொங்கொங் தேர்தலில் மந்தமான போட்டி

ஹொங்கொங் ஆளுநர் கிறிஸ் பட்டன் தனது அரசியல் சீரமைப்பு முறையின் படி செப்ரெம்பர் 18 ஆந் தேதி நாடளாவிய ரீதியில் நடத்திய மாவட்ட சபைகளுக்கான தேர்தலில் அநேகர் உற்சாகங் காட்டி சுமார் 1,000 பேராவது போட்டியிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டபோது 346 இடங்களுக்கு 762 பேர்களே போட்டியிட வேட்பு மனு சமர்ப்பித்திருந்தனர்.

வியற்நாம் சினப் பேச்சுக்கள்

எல்லைப் பிரச்சனைகள், தென்சீனக் கடல் பிராந்திய உரிமைக் கோரிக்கைகள் என்பன பற்றி சீனாவும் வியற்நாமும் அண்மையில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தின. ஒரு வருடத்திற்கு முன்பு இரு நாட்டு அதிகாரிகளும் முதலாம் சுற்றுப் பேச்சுக்கள் நடத்திய போது பிணக்குகளைத் தீர்க்கப் பலப்பிரயோகம் செய்வதில்லை என இணங்கின. இரு நாடுகளினதும் பிரதி வெளியுறவு அமைச்சர்கள் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களை நடத்தினர்.

தாய்வானின் அரசுத் தலைக்கை அதிகாரசபை அரசைக் குறை கூறுகிறது

அரசின் தலைக்கை அதிகாரசபையான கொண்ரோல் யுவான் தாய்வானின் பாதுகாப்பு அமைச்சு இரகசியங்கள் இரகசியமாக வெளியேறுவதாகவும் ஆயுதக் கொள்வனவுகளில் முறை கேடுகள் நிகழ்வதாகவும் தாய்வானின் மத்திய வங்கி கணக்கு வைப்பதிலும் கொள்வனவுக் கொள்கைகளைக் கண்காணிப்பதிலும் குறைவான கவனம் செலுத்துகிறது என்றும் குறை கூறியுள்ளது. சென்ற டிசம்பர் மாதத்தில் ஒரு கடற்படை உயர் அதிகாரி கொலையுண்டது பற்றி விசாரித்த ஆணைக்குழு, யாவும் இலஞ்சம் ஊழல்போன்ற சிலந்தி வலைப் பின்னல் என்கிறது.

தாய்லாந்தின் காவற்றுறைத் தலைவர் மீது கள்ளக் குற்றச் சாட்டு

சவூதி அரேபிய இளவரசர் ஒருவருடைய பல மில்லியன் டொலர் பெறுமதியான நகைகளை மோசடியாக அபகரித்துக் கொண்டதாக தாய்லாந்தின் காவற்றுறையின் முன்னாள் தலைவர் அமோர்ந்தி விவடானாகை செய்யப்பட்டுள்ளார். சீனாவிற்குப் பயணம் மேற்கொண்டு சென்றிருக்கும் அவர் திரும்பி வந்த உடனே கைது செய்யப்பட இருப்பதாகத் தற்போதைய காவற்றுறைத் தலைவர் கூறினார்.

காஷ்மீர் முழுவதற்கும் இந்தியா உரிமை கோருகிறது

இந்தியாவில் 47 ஆவது சுதந்திர தின ஆண்டு விழாவின் போது பேசிய இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பாகிஸ்தான், தான் கைப்பற்றி ஆக்கிரமித்துள்ள காஷ்மீரின் ஒரு பகுதி இந்தியாவின் சொந்த நிலம் என்பதால் அதனை விட்டு வெளியேற வேண்டியது இன்னும் நிறைவேறாமல் உள்ளது என்று குறிப்பிட்டார். அத்துடன் காஷ்மீரில் விரைவில் தேர்தல் நடத்தப்போவதாகவும் குறிப்பிட்டார்.

அனைத்துலக மன்னிப்புச் சபை இந்திய அரசு மகாராஷ்டிர மாநிலத்தில் நடக்கும் பயங்கரவாதச் சட்டத்துக்குப் புறம்பான கைதுகள் பற்றிய வெளிவரும் அறிக்கைகளை சரியாகக் கவனத்தில் எடுக்காமல் அந்தச் செயல்களுக்கு அனுசரணை செய்வது போல் செயற்படுவதாகக் குற்றம் கூறியுள்ளது. பம்பாயில் உள்ள பொலிஸ் நிலையங்களில் 15 முதல் 60 நாள்கள் வரை கைது செய்யப்பட்டவர்கள் எவ்விதவிசாரணையோ பதிவோ இன்றி அடைத்து வைக்கப்பட்டு இருப்பதாகவும், சட்டத்தரணிகளோ, அந்தக் கைதிகளின் உறவினர்களோ அவர்களைப் பற்றி விசாரிக்கச் செல்லும் போது அத்தகைய எவரையும் தாம் கைது செய்து வைத்திருக்கவில்லை என்று பொலிசார் கூறுவதாகவும் மன்னிப்புச் சபை முறையிட்டுள்ளது.

பார்வைகள்

பேச்சுவார்த்தைகளின் போது காதில் விழுந்தவை

✱ ஐக்கிய அமெரிக்கா – வடகொரியா:—
பேச்சு நடத்துபவர்கள் சுறுப்பு நிற ஆடை அணிந்திருப்பது, கொரியத் தலைவர் இன்னும் தனது தந்தையாரின் மரணத்திற்குத் துக்கம் அனுசரிப்பதாலாகுமோ?

✱ ஐக்கிய அமெரிக்கா - ஹெய்ற்றி:—
நேரமாகிறது தம்பிமாரே! பேபிடொக் பிரயாண முகவரை அழைத்து நாடு விட்டு ஓடிப்போகச் சலுகைக் கட்டணம் என்னவென்று விசாரியுங்கள்.





✱ ஐக்கிய அமெரிக்கா - கியூபா:—
அரசாங்கங்கள் பேசி விளாசிக் கொண்டு இருக்க, தோணி ஏறி அமெரிக்கத் தளம் நோக்கி ஓடித்தப்புவோர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலாபம் அடைகிறார்கள்.

✱ பிரித்தானியா - ஐரிஸ் விடுதலைப் படை:—
கொண்டாட்டக் குடி குடிக்க இன்னும் வெகு தூரம் போகவேண்டும். அதற்கிடையில் கரைச்சல் ஒய்ந்ததற்காவது ஒரு வாழ்த்துக் குடி குடிப்போம்.

✱ புருண்டியின் ருட்சிகளும் -ஹூடுலம்:—
போராடிய படு கொலைகள் செய்து ஊர்விட்டு ஓடி அல்லோலகல்லோலப் பட்ட பின்பு ஒரு புது வகை இனவெறுப்பாக மயான அமைதி நிலவுகிறது.

✱ இஸ்ரேலும் – பாலஸ்தீனிய விடுதலை இயக்கமும்:—
நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்! இல்லை நீங்கள்தான் பொய் சொல்லுகிறீர்கள்! பொறுங்கள், இதோ கமரா! எங்கே சிரியுங்கள்.

அணுவாயுத சூதாட்டம்

எழுதியவர்: அகமட் றஷிட்

பாகிஸ்தானிடம் அணுக் குண்டு உண்டு என்ற தனது கூற்று சர்வதேச ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்க்கட்சித் தலைவர் நவாப் ஷெறிவ் அறிந்திருக்க வேண்டும். ஆனால் பாகிஸ்தான் அணுகுண்டு வைத்திருப்பது அதன் உள்வீட்டு விஷயம் என்று கருதினால் அவருடைய உறுதியான கூற்று இவ்வளவு ஆரவாரத்தைக்கிளப்பி விட்டிருக்கும் என்று அவர் எதிர் பார்த்திருக்க மாட்டார்.

பாகிஸ்தானிய வெளியுறவுச் செயலகம் விளக்கத்தைக் கேட்க வந்த தூதுவர்களால் நிரம்பி வழிந்தது. பாகிஸ்தானுக்கு ஏற்படக்கூடிய பின்விளைவு அது வருடாந்தம் பெறும் 3 மில்லியன் டொலர் உதவி சம்பந்தமானதாக இருக்கும் என்று தூதுவர் வட்டாரங்கள் சொல்கின்றன. ஏற்கனவே பாகிஸ்தானுக்கு ஆகக் கூடுதல் உதவி வழங்கும் ஜப்பான் இதனைத் தெளிவுபடுத்துமாறு வற்புறுத்துகிறது. உதவி வழங்கும் நாடுகளான ஜேர்மன், ஸ்கண்டிநேவியன் தேசங்கள் கூட ஆத்திரமடைந்துள்ளதாகச் செய்திகள் வருகின்றன.

ஷெறிவ் அவர்களின் பிரதான நோக்கம் பிரதமர் பெனாசிர்பூட்டோவின் அரசைச் சங்கடத்தில் ஆழ்த்துவதும், மற்றும் பிரதமரை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கு எடுக்கவிருக்கும் வெகுசன போராட்டத்திற்குச் சர்வதேச கவனத்தை ஏற்படுத்துவதுமாகும். ஆனால் எதிர்க்கட்சித் தலைவருக்கு வேறு நோக்கங்களும் உண்டு என்று சில அவதானிகள் வாதிடுகிறார்கள்.

''இராணுவம் இந்தியாவுக்கு ஒரு செய்தியை அனுப்பவிருந்தது. அதற்கு அரசியற் தலைவர்களைப் பயன்படுத்தியது. முன்பும் அவ்வாறு நடந்துள்ளது'' என்று பழுத்த இராஜதந்திரி சொன்னார். பல மாதங்களாக இந்தோ-பாகிஸ்தான் உறவுகளில் பதற்றம் நிலவுகிறது. அண்மையில் இருசாராரும் காஸ்மீரின் சச்சரவுக்குரிய கட்டுப்பாட்டுப் பகுதியில் கனரக ஆயுதங்களைப் பிரயோகித்துச் சண்டை செய்துள்ளார்கள். மேலும் இஸ்லாமாபாத், காஸ்மீர் தீவிரவாதிகளுக்குத் தொடர்ந்தும் உதவி வழங்கி வருமாயின் இந்தியா

ஷெரிவ் அவர்களின் இந்த வெடிகுண்டு பூட்டோவை பதவி இறக்க எடுக்கும் முயற்சியைப் பிரகாசமாக்குகிறது.

காஸ்மீரைத் தனது உடைமையாக்கக்கூடும் என்ற இந்தியப் பிரதமரின் எச்சரிக்கையால் பாகிஸ்தான் இராணுவம் கோபமடைந்துள்ளது.

இருப்பினும் அவருடைய கூற்றில் முக்கியமாக உள்ளூரில்ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைப் பற்றிய ஐயம் சிறிதுமில்லை. உண்மையில் சில விஷயங்களில் அவரது கூற்றால் கிளறப்பட்ட நெருப்பானது அவருக்கும், பூட்டோவுக்குமிடையேயான மோதல்களின் திருப்பமே. அது தேசத்தை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தும் ஆபத்தானது. கடந்த காலத்தைப்போல பூட்டோ அரசின் உயிர்வாழ் நிலை பாராளுமன்றில் பெரும்பான்மையை வைத்திருப்பதாலோ, அல்லது அவருடைய அரசியல் ஆளுமையினாலோ அல்ல: எவ்வாறு இராணுவம் அவருக்குப் பக்கபலமாக நிற்கிறது என்பதிலேயே தங்கியிருக்கிறது.

ஷெறிவ் தனது ஆதரவுத் தளத்தை ஒரளவு ஆரம்பித்தார். பூட்டோவும், ஜனாதிபதி பாறூக்கும் செப்டெம்பருக்கிடையில் பதவியிலிருந்து விலகாவிடில் தாமும் தனது அரசியல் ஆதரவாளர்களும் ''நீண்ட பலி'' யை ஒயில் மூலம் கராச்சி தொடக்கம் டெலாவர் வரைக்கு நடத்தப் போவதாகப் பகிரங்கமாகத் தெரிவித்தார். ''நாங்கள் அரசைக் கடலுக்குள் தள்ளிவிடுவோம்'' என்றார்.

பூட்டோவின் (PPP) பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தொடர்ச்சியான ஆளுகையின்போது ஜனநாயகத்துக்கும், தேசிய பாதுகாப்புக்கும், மற்றும் பொருளாதாரத்துக்கும் பாரதூரமான பின்விளைவுகளை உண்டாக்கிவிட்டது எனவும் சொன்னார். நாடு அணுக்குண்டை வைத்திருக்கிறது என்ற ஷெறிவின் நிடமான கூற்று மிகவும் பொறுப்பற்ற கூறு என்றும் அதைத் தாம் முற்றிலும் மறுப்பதாகவும் பூட்டோ சொன்னார்.

வோஷிங்டனின் வற்புறுத்தலின் பேரில் பூட்டோ பாகிஸ்தானின் அணுத் திட்டங்களை விற்க எத்தனிக்கிறார் என்று ஷெறிவ் எதிர் பதில் கூறினார். ''நான் எதைச் சொன்னாலும் அது ஆழமாகச் சிந்தித்துச் சொன்னது'' என்றார். ''இவ்வாறு கூறியதால் நான் பாகிஸ்தானுக்கு எதிரான காஸ்மீரில் இந்திய ஆக்கிரமிப்பை முன்கூட்டியே கூறியுள்ளேன். அல்

லாமலும் இந்தியாவையும், பாகிஸ்தானையும் சரிசமமாகக் கணிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்துக்குப் பட்டவர்த்தனமாக கூறியுள்ளேன்'' என்று மேலும் ஷெரிவ் கூறினார்.

ஆயினும் அணுவாயுத பூனையைப் பைக்கு வெளியே விடுவதற்கான தீர்மானம் சில அவதானிகளுக்கு உருசி கொடுக்கிற விஷயம். அவர் அவ்வாறான தந்திரங்களில் ஈடுபடுவது அரசினால் அவரது அரசியல் பொருளாதாரத் தளத்தைப் படிப்படியாகக் குறைக்கும் நோக்கினாலேயே என்கிறார்கள். ஷெரிவினுடைய பாரிய கைத்தொழில் சாம்ராஜ்யம் அது அவர் பஞ்சாப்பின் முதன் மந்திரியாயும் பிறகு பிரதம மந்திரியாகவும் இருந்தபோது விரிவாக்கப்பட்டது. வரி கொடாமைக்கும், வேறு முறைகேடுகளுக்கும் அதிகாரிகளால் முற்றுகையிடப்பட்டுள்ளது. ஷெரிவுக்கு எதிராகப் பல நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டவை தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அவருடைய சொந்த உலங்கு வானூர்தி பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

''வெகுஜன இயக்கம் இருக்காது'' என பூட்டோ சொன்னார். அவர் தனது சாம்ராஜ்யத்தைக் காப்பாற்ற முயலுகிறார். அவர் ஊழல் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளார். இப்போது தனக் கெதிரான விசாரணையைத் தடுக்கப் பார்க்கிறார்.

ஷெரிவ் கைது செய்யப்படலாம் என்று செய்தித் தாள்கள் குறிப்பாகச் சொல்கின்றன. கடந்த மாதம் அவருடைய சகோதரர் ஷாபா ஷெரிவ் லண்டனில் இருந்தார். வைத்திய சிகிச்சைக்காக என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையான காரணம் கைதாவதைத் தவிர்ப்பதற்கே என்று ஊகிக்கப்படுகிறது. ஷெரிவின் அதேக கிட்டிய உதவியாளர்கள் இளைப் பாறிய பிரிகேடியர் இம்ரியாஸ் சிவில் உளவறியும் நிலையத் தலைவர் உட்பட தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அரசு இம்ரியாசைச் ஷெரிவுக்கு எதிராக அரச தரப்புச் சாட்சியாகக் கொண்டு வர முயற்சிக்கிறது. வெறும் உத்தேச சாட்சிகளாக விலாசமிக்க வியாபாரிகளை விசாரணை செய்கிறது. சில் எதிர்க்கட்சித் தலைவருடன் வெளிப்டையான தொடர்புகள் அற்றவர்கள்.

முஸ்லிம் லீக்கை உடைப்பதற்கு அரசு எல்லாவிதத் தந்திரங்களையும் பயன்படுத்துகிறது. பூட்டோ 30 புதிய நீதிபதிகளை நியமித்த போது பிரத்தியேகமாக எதிர்க்கட்சியினர் அவமானப் பட்டனர். இவர்களில் 13 பேர் (பிபிபி) கட்சியின் அங்கத்தவர்கள். இது ஷெரிவுக்கும், அவரது சகாக்களுக்கும் எதிராக ஊழல் குற்றச்சாட்டு வழக்குகள் வரும் போது சாதகமான தீர்ப்பளிக்கும் என்று கருதப்பட்டது. இதற்கிடையில் பூட்டோ கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. ''நாங்கள் சட்டப்படி போய்க்கொண்டிருக்கிறோம்'' – ''அவர் அதிகாரத்தில் இருந்த போது பிபிபி மீது செய்ததைப் பார்க்கும் போது அவ்வளவு மோசமானதல்ல'' என ஒரு கிட்டிய உதவியாளர் சொன்னார்.

தேசிய சட்ட சபையின் எல்லா எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் பல்வேறு நிறந்தரக் குழுக்களிலிருந்து ராஜினாமாச் செய்ததுடன் ஷெரிவின் அரச எதிர்ப்பு இயக்கம் சூடு பிடிக்கத் தொடங்கிற்று. ஷெரிவ் சொன்னார்: ''அரசு தனது கோரிக்கைகளுக்கு இணங்காது விட்டால் எல்லா முஸ்லிம் லீக் அங்கத்தவர்களும் இராஜினாமாச் செய்து விடுவார்கள்'' என்று. இதற்கிடையில் சட்டசபை விவாதங்கள் வழமைக்கு மாறாக சண்டித்தனம், ஆத்திரம், வசை பாடுகல் நிறைந்தனவையாக மாறியுள்ளன.

இந்தக் குழப்ப நிலைக்கு மத்தியில் அரசு செய்தித்தாள் சம்பந்தமாகக் கடுமையான சட்டங்களைக் கொண்டுவர இருப்பதாகப் பயமுறுத்துகிறது. உத்தேசிக்கப்பட்ட சட்ட மூலத்தை செய்தி ஸ்தாபனங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன. 1950 இக்குப் பிறகு முப்பது வருட காலமாகச் செய்தித் தாள்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பின்னடையச் செய்வதே உத்தேச சட்ட மூலத்தின் நோக்கமாகும் என்று (PNO) பாகிஸ்தான் செய்தித்தாள் ஒன்றியத்தின் பொதுச் செயலாளரும், தேசத்தின் ஆங்கில நாளேடான ''விடிவு'' (Dawn) பத்திரிகையின் பதில் பிரதான நிர்வாகியுமான ஹமிட்ஹறூன் கூறுகிறார். ''பூட்டோ தமது அரசுக் கெதிரான தற்போதைய செய்தித்தாள் விமர்சனத்துக்கு மிகவும் உணர்ச்சி வசப்படுகிறார்'' என்று ஹமிட்ஹறூன் மேலும் கூறுகிறார்.

செய்தித்தாள் விமர்சனம் செய்வோரும், ஏனைய அவதானிகளும் ஷெரிவின் பிரச்சார நடவடிக்கை இயக்கும் வெற்றி அடைய வேண்டுமென்று எதிர் பார்க்கவில்லை. அவருக்கு ஆதரவாக மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடத் தயாராயில்லை. இவர்களுக் கிடையேயான கட்சிச் சண்டை பொருண்மிய மற்றும் சமூக முன்னேற்றத்தைத் தடுத்துள்ளது என்றும் ஜனநாயக செயற்பாடுகளைச் செயலிழக்கச் செய்கின்றதென்றும் பரவலாகக் கருதப்படுகிறது. மேலும் எதிர்க்கட்சியானது பிரிவினைச் சக்திகளால் பிளவுண்டிருக்கிறது. இராணுவத் தலையீட்டைத் தவிர்க்க வேண்டும் என்று சமாதானப் புறாக்கள் வற்புறுத்துவதையும், சும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கழுகுகள் வற்புறுத்துவதையும் காணலாம். ஷெரிவ் தனது கட்சிப்.

மீண்டும் கொலைக் களத்திற்கு

எழுதியவர்: வில்லியம் சகுரோஸ்

பாராளுமன்ற அங்கத்தவர்களைச் சட்ட சபையிலிருந்து இராஜினாமாச் செய்யச் சொல்லிக் கேட்பாராகில் எல்லாருடைய ஆதரவும் அவருக்குக் கிடைக்கும் என்று உத்தரவாதம் கூற முடியாது.

அரசு, முஸ்லிம் லீக் மற்றும் அவாமி தேசியக்கட்சி (ANP) ஆகியவற்றுக்குள் ஊடுருவி இருக்கிறது. மூன்று லீக் அங்கத்தவர்களும், ஓர் (அவாமி) அங்கத்தவரும் மிக அண்மையில் பாகிஸ்தான் மக்கள் கட்சியைக் குறை கூறி உள்ளார்கள். இப்போ லீக்கில் 83 பாராளுமன்ற உறுப்பினர்களில் 12 பேர் மட்டுமே உள்ளனர். அநேக அங்கத்தவர்கள் தங்களுடைய தேர்தல் தொகுதிகளில் அபிவிருத்தி வேலைகளுக்கென அரசிடமிருந்து நிதி பெற்றுள்ளார்கள். இது அவர்களை இழுக்க வலை விரிக்கப்பட்டுள்ளதை அல்லது (பிபிபி) யை ஏற்கனவே ஆதரிக்கிறார்கள் என்பதற்கான சமிக்ஞை.

இதுவரை இராணுவம் தலையிடும் நோக்கிற்கான சமிக்ஞையை வெளிக்காட்டவில்லை; அலலது அது அரசை அழிக்க இரகசியமாகச் செயல்படுகின்றதாகவும் இல்லை. ஆனால் எல்லா அரசியல் குழுக்களைப் பொறுத்த மட்டில் இராணுவம் கூடுதலாகச் சலிப்படைந்துள்ளது. அது தற்போதுள்ள பாராளுமன்ற முறையை மாற்றி ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டு வர விருப்புகிறது. அவ்வாறான மாற்றம் இராணுவம் நேரடியாகத் தலையிட்டால் அன்றி நிகழப் போவதில்லை.

தமிழில்:
நிரு. வி. அரியநாயகம்

வார் ஸ்ரேன் எக்கனமிக் ரிவியூ.
செப்ரெம்பர் 8, 1994.

★

கமரூச் மாறவில்லை. ஒரு தலைமுறைக்கு முன் அதன் கெரில்லாக்கள் ஏறக்குறைய தமது ஒரு மில்லியன் சகாக்களைக் கொல்ல, கம்போடியாவின் காடுகளிலிருந்து புறப்பட்டார்கள். இப்போது கம்போடியாவை ஜனநாயக வழிமுறைக்கு மாற்ற ஐ.நா எடுத்துக் கொண்ட முயற்சியை அடுத்து ஒரு வருடம் கழிந்த பின் கமரூச் கெரில்லாக்கள் எப்பொழுதும் போலவே கொடிய வர்களாக இப்போதும் காட்டில் உள்ளனர். உலகைச் சுற்றிலுமுள்ள கம்யூனிஸ்ற் அரசுகள் சாயம் வெளிறிப் போகையில், பயங்கரவாதம் காலத்துக்கு ஒவ்வாததாக மாறுகிறது. அதி தீவிர போக்குடைய கமரூச், கிராமப் புறத்திலிருந்து கொண்டே நகரங்களைக் கைப்பற்றலாம் என்று நம்புகிறது. இது மாவோவின் சிறந்த வழிக் கோட்பாடு. அநேகமாக அது வெற்றி பெறாது ஆனால் இரத்தம் சிந்தவும் கனவுகளைச் சிதறடிக்கவும் தான் முடியும்.

பொல்பொட் என்பவரால் வழி நடத்தப்படும் கமரூச் கம்போடியாவின் பத்தில் ஒரு பங்கினை வைத்திருக்கிறது. மேற்கிலும், வடக்கிலும், தாய்லாந்துக்கு அண்மித்த பகுதிகளில் அங்கிருந்து தாய் இராணுவத்திடமிருந்து விசேட ஆதரவைப் பெறுகிறது. கமரூச்சின் இராணுவ சக்தியாக எல்லாமாக 6,000 இற்கும், 20,000 இற்கும் இடைப்பட்ட தொகைப் போர் வீரர்கள் இருக்கிறார்கள் என்று கணிக்கப்படுகிறது. ஆனால் கெரில்லாக்கள் இவ்வருட முற்பகுதியில் இரு நடவடிக்கைகளின் போது அரச படையினரை அவமானப்படுத்தியுள்ளனர் இப்போதும் கம்போடியர்களையும், வெளிநாட்டவரையும் ஒரே தன்மையாகப் பயமுறுத்தி வருகிறார்கள் கடந்த ஜூலையில் புகையிரதத்தை மறைந்திருந்து தாக்கி மூன்று மேற்குலக சுற்றுலாப் பயணிகள் (ஒரு பிரான்சுக்காரர், ஒரு பிரிட்டிஷ்காரர், ஓர் அவுஸ்திரேலியர்) மற்றும் மூன்று வியற் நாமியருடன் அநேகம் கம்போடியர்களையும் கடத்தியிருக்கிறார்கள். கடந்த வாரம் கமரூச் மேற்குலக நாடுகள் கம்போடிய அரசுக்கு வழங்கும் இராணுவ உதவியை நிறுத்தினால் மட்டுமே மூவரும் விடுவிக்கப்படுவார்கள் என்று கூறிற்று. இணங்குவதற்கான காலக்கெடு இவ்வாரம் முடிவடையும்.

இரக்கமற்ற கமரூச் இயக்கத்தால் விதிக்கப்பட்ட பயமுறுத்தல் இப்போதும் கம்போடிய அரசியலில் ஆதிக்கம் செலுத்துகிறது. இம்முறை கடந்த வருடம் கொலுக் தலைமையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அரசுடன் இயல்நிலைப்பாதையை விரும்புகிறார்கள் என்று கணிக்கப்பட்டது. 23 வருட சிவில் யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவின் பாரிய வாலத்தாக்குதல்கள், கம்யூனிசப் புரட்சி, மற்றும் வியற்நாமியரின் ஆக்கிரமிப்பு கடையாக நாடு தென் கிழக்கு சியா அயல்வர்களுடன் சேர்ந்து அபிவிருத்திப் பாதையில் சேரமுடிந்தது. ஆனால் அது நடக்கவில்லை. கமரூச்சின் வெற்றி அண்மையில் இல்லாதபோதும் கம்போடியா கொடிய கஷ்டத்துக்

குள்ளாகிறது. காச்திரமில்லாத கூட்டரசு ஸ்தம்பிதமடைந்து ஊசலாடுகிறது. ஊழல் மற்றும் பிரிவினைச் சக்திகள் அரசியலை வரையறை செய்கின்றன, நேர்மையற்ற தளபதிகள் கமரூச்சிற்கு ஆயுதத்தளபாடங்களை விற்கிறார்கள். பயிற்சி பெறாத ஊதியம் வழங்கப்படாத வீரரைப் போர் முனைக்கு அனுப்புகிறார்கள். போரினாலும் போர்ப்பயத்தினாலும் பொறியில் அகப்பட்டுள்ள கம்போடியா, தென்கிழக்காசியாவில் அராஜகம் மிக்கதாக விளங்குகிறது. கம்போடியாவின் நண்பர்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகள் கூட பொறுமை இழக்கின்றன.

கடந்த வருடம் கமரூச் தேர்தலில் பங்குபற்ற மறுத்ததால் முற்றுகையிடப்பட்ட நாட்டில் ஐ.நா சபை தேர்தலை நடத்தியது. இருந்தும் பிரம்மாண்டமான வெற்றி ஜனநாயக வழிக்கு சாதாரண மக்களால் உணர்வு பூர்வமான வெளிக்காட்டல். பதியப்பட்ட வாக்காளரில் 93 சத வீதமானோர் வாக்களித்தனர். சிகானூக்கின் மகன் இளவரசர் றனறித் தலைமையிலான கட்சிக்கு 45 சத வீதமானோர் வாக்களித்தனர் அது அமைதிக்காகவும், கமரூச்சுடன் சமாதானத்துக்காவும் பிரச்சாரம் செய்தது. ஆனால் (CPP) ஆளும் கம்போடிய மக்கள் கட்சி ஐப் போதும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. அது தோல்வியை ஒப்புக்கொள்ள மறுக்கிறது.முடிவு இருசாராரும் அடங்கிய கூட்டாட்சி. இதற்குக் காரணகர்த்தாவாக இருந்த சிகானூக் அரசுத் தலைமைக்கு உயர்த்தப்பட்டார். அவர் ஆட்சி செய்கிறார், ஆனால் கட்டளை பிறப்பிப்பதில்லை. பிளவுபட்ட ஆட்சி:- புதிய அரசில் இரு பிரதமர்கள். றனறித் மற்றும் முன்னாள் சிபிபி பிரதம மந்திரி ஹன்சென். கட்சிகளுக்கிடையே மந்திரிமார் பிளவுபட்டுள்ளனர். ஒரு புன்சின் பெக் (அரசியற் கட்சி) மந்திரி சிபிபி உதவியாளரை வைத்துள்ளார்.

கமரூச் போராளிகளது கட்டுப்பாட்டில் உள்ள கம்பொங் பகுதி

தேசிய சமாதானத்துக்காக ஏற்பட்ட அரசு தற்போது கொள்ளைக்குப் போட்டியிடும் ஒன்றாக மாறியுள்ளது. சிபிபி மந்திரிமாரும் சிரேஷ்ட அதிகாரிகளும்தான் மிக மோசமான ஊழல் புரிபவர்கள், ஆனால் புன்சின்பெக்கின் ஆட்கள் அவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கூட்டரசு செயலிழந்தமையால் தேக்க நிலையில் உள்ளது. அநேக புன்சின்பெக் ஆதரவாளர்கள் தங்கள் தலைவர் தூரநோக்கு உடையவராகவோ அல்லது அதிகார வலு உள்ளவராகவோ இல்லை என்று குறை கூறுகிறார்கள். அவர் ஹன் சென்வின் நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுபவராகக் காணப்படுகிறார் கடந்த மழைக்காலத்தில் கமரூச்சின் கட்டுப்பாட்டில் உள்ள நிலைகளைத் தாக்கும் சிபிபியின் திட்டத்திற்கு றனறித் ஒத்துக்கொண்டார் நடவடிக்கை அரசுக்குப் பெரிய தோல்வியில் முடிந்தது பைலின் என்ற இடத்தில் தாங்கள் கொள்ளையிடத் திட்டமிட்டுள்ள வீடுகளின் கதவுகளில் வர்ணம் பூசி விட்டிருந்தனர். ஒருசிறு தொகைக் கமரூச்சினர் எதிர்த்தபோது அந்நாள் அரசபடை அதிகாரிகள் குடிபோதையில் இருந்தவர், அவர்களுடைய போர் வீரர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

மடைமைத்தனமாகத் தற்சமயம் 2,000 தளபதிகளும். 10,000 கேணல்களும் கம்போடியப் படையில் உள்ளனர். தேசம் ஏறத்தாழ 15,000 போர் வீரரை வைத்திருக்கத் தகுதியுடையது. பதிலாக அதன் சம்பளப் பட்டியலில் 1,000,000 க்கும் மேற்பட்டோர் உள்ளனர். அநேகமான பெயர்கள் கற்பனையானவை. அவர்களின் சம்பளம் ஊழல் புரியும் படை அதிகாரிகளின் பொக்கற்றுக்குள் போகிறது. உண்மையான போர் வீரர் வழமையாகச் சம்பளம் பெறுவதில்லை, அவர்கள் திருப்தியற்றவர்கள். போர் வீரர் உள்ளூர் வாசிகளிடமிருந்து சாப்பாடும், காசும் அறவிடுவர். நட்பு நாடுகளிடமிருந்து இராணுவ உதவியைக் கம்போடிய மந்திரிகள் கேட்கிறார்கள் ஆனால் மேலும் படைக்கலன்கள் கமரூச்சிற்கு விற்கப்படலாம். அதனால் வெளியார்கள் அவதானை வழங்கத் தயங்குகிறார்கள். இராணுவத்திற்குத் தேவைப்படுவது கடின பயிற்சியும் வலுவுள்ள அமைப்புமே.

எல்லாப் புதினங்களும் கசப்பானவையல்ல. நிதி மந்திரி சாம் றெயின்சி, நிதி ஆள்கையில் காரியசித்தி உடையவர் என்று உதவி வழங்கும் நாடுகளால் கருதப்படுபவர். அவர் நிதியின் ஸ்திர நிலையை உறுதிப்படுத்தினார். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தினார் மற்றும் அரச வருமானத்தைக் கூட்டினார். ஆனால் அவருக்கு இரு பிரச்சினைகள். அவர் சிபிபியிலுடைய மாற்றத்துக்கான விருப்பின்மைக்கு எதிராக விடாப்பிடியாகப் போரிட வேண்டியிருந்தது. தனது பிரதம மந்திரியுடன் ஒத்துப்போகாமையினால் முன்னரிலும் பார்க்க அவர் வெளிப்படையாகவே கண்டிப்பவராகவும் மாறி வருகிறார். சிலில் சேவை அதிகாரிகள்வதும், படை

யினரதும் தொகை வெகுவாகக் குறைக்கப்படாதவரை, தேசத்தின் நலிவுற்ற பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப அவரால் நேர்மையாகத் தொடங்க முடியாது.

கடந்த மழைக்காலத்தில் கம்போடியாவுக்கு மிக அண்மையில் சென்றிருந்தேன். அங்கே கிராமங்களுக்கூடாக வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது புதிதாகத் தோன்றுகின்ற சுபீட்சத்தின் அறிகுறியாக புதிய வீடுகளையும் அவற்றின் மேல் புதிய ஓட்டினால் வேயப்பட்ட கூரைகளையும் கண்டேன். சந்தைப்பகுதி எல்லா நேரமும் இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால் ஆசுப்பின் தங்கிய கிராமப் புறங்கள் இப்போதும் வறுமையில் சிக்கி தேர்தலுக்குப் பிறகு ஒரு வித மாற்றமும் இல்லாமல் இருக்கின்றன அது கமரூச்சிற்குத் துணி வைக் கொடுக்கிறது.

அவர்களை அரசுக்குள் கொண்டு வருவதுதான் சிகானூக் அரசரின் ஆரம்ப நம்பிக்கையாக இருந்தது. கமரூச் அரசுக்குள் உள்ளடங்காமல் அமைதியோ அல்லது அபிவிருத்தியோ ஏற்படாது என்று எல்லோரும் எண்ணுகிறார்கள். ஆனால் வடகொரியாவில் நடத்தப்பட்ட அமைதிப் பேச்சுக்கள் முறிந்துவிட்டன. அதனால் வழமைக்கு மாறாக கமரூச்சை முற்றுமுழுதான சட்ட விரோத இயக்கம் என்று தேசிய சட்டசபை மூலம் அடக்கிற்று. பீஜிங்கில் கான்சர் வியாதிக்கு வைத்தியம் செய்து கொண்டிருந்த அரசர் ஆத்திரமடைந்து கம்போடிய அரசியலில் எதுவித பங்கும் வகிக்கப்போவதில்லை எனறு அறிவித்தார்.

இப்போது 1970 களில் இருந்ததுபோல அரசில் மலிந்துள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள், மாணவர்களையும், புத்திஜீவிகளையும் கமரூச்சை ஆதரிக்கத் தூண்டுகிறது. அரசில் நிலவும் குழப்ப நிலையைத் துப்புரவாக்க, கமரூச்சை மீண்டும் தேவை என்று புத்திக் கூர்மையுள்ள மாணவர்களால் சொல்லப்பட்டபோது, மேற்குலகத் தூதுவர் ஒருவர் அதிர்ச்சியடைந்தார். இந்த இளம் ஆட்கள் கமரூச் நடத்திய அக்கிரமங்களை அறியமாட்டார்கள்;அவர்கள் வியற்நாமிய ஆட்சியின்போது வளர்ந்தவர்கள். அந்தத் தூதுவர், கமரூச்சினர் எண்ணற்ற கம்போடியர்களைக் கொன்றுள்ளார்கள் என்று கூறியபோது, மாணவர்கள் அரசின் பிரச்சாரத்தை நம்பமுடியாது என்றார்கள். மிக அண்மைவரைக்கும் ஒரு துடிப்பான பத்திரிகை, ஊழல் பற்றிய செய்திகளை வெளியிட்டது. ஆனால் எட்டுப் புதினத் தாள்களை மூடியும், பத்திரிகையாளர்களைக் கைது செய்தும் அரசு அதை முறியடித்தது.

□□□

கமரூச் இயக்கத்தின் ஆதிக்கம் கம்போடியாவின் அரசியலை ஆட்டங் காணச் செய்கிறது.

□□□

கமரூச் காட்டு மரங்கள், இரத்தினக் கற்கள் ஆகியவற்றை தாய் எல்லைக்கப்பால் விற்றுப் பணம் சேர்க்கிறது. இது தாய்ப் போர் வீரரைக் கோடிக்கணக்காகச் சம்பாதிக்கச் செய்கிறது. தன்னால் இராணுவத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்று தாய் அரசு சொல்கிறது ஒரு வேளை இருக்கலாம்; ஆனால் அதன்கீழ் உள்ள உண்மை யாதெனில் தாய்லாந்தின் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தளவில் கம்போடியா நலிவுற்றிருக்க வேண்டும் என்பதே.

மூலதன வெளியேற்றம்

கமரூச் அதிகாரத்துக்கு மீண்டும் வர வாய்ப்பில்லை. ஆனால் அதன் தத்திரோபாயங்கள் கம்போடியாவில் முதலீட்டை வற்றச் செய்கிறது. தென்கிழக்காசியாவின் மற்றெல்லாப் பகுதிகளிலும் பணம் பாதுகாப்பாயிருக்கிறது. இது கம்போடியாவுக்கு ஆபத்தானது. அதன் அபிவிருத்தி இரு வருடங்களை இழந்துள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நொம்பென்னில் எரும் சமூகப் பிரச்சனைகளைக் கிளப்புவதில்லை. அரசு விவசாயிகளுக்காக நலிந்து நிற்பதில்லை. அது கமரூச்சிற்கும் கரண்டலுக்குக் காரணமாகிறது.

கமரூச்சைப் போர்க்களத்தில் தோற்கடிக்க முடியாது. அரச படைக்கு அது இயலாத காரியம். அதனால் அரசின் கொள்கை அதை நகரவிடாது தடுப்பதுவே. எல்லா வளங்களும் கிராமப்புற வளர்ச்சிக்காகப் பயன் படுத்தப்பட வேண்டும். அரசு ஊழலுக்கெதிராகப்போரிடவேண்டும். அத்துடன் பத்திரிகைச் சுதந்திரம் போன்ற அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லாம் நழுவிப்போய் விடவில்லை. ஆனால் ஊழல், பிரிவினைச் சக்திகள், மற்றும் அரசியல்திரமின்மை ஆகியவை அழிக்கும் தன்மையவை. அலைகள் கட்டுப்படாவிட்டால் பெரும் பேராபத்தாகமுடியும்.

தமிழில்:
நந. வி. அரியநாயகம்

நியூஸ்வீக் செப்டெம்பர் 5, 1994

★

பொய்களும் குசுகுசுப்புக்களும்

மிக நுட்பமானதும், தலிப் போக்குடையதுமாகப் பியொங்யாங்கின் அரசியல் வேறுபட்டுள்ளதாகக் கருதுகிறார்கள். யாருக்குப்பின் எவர் பதவிக்கு வருவார்? பத்திரிகைத் தலையங்கங்களின் ஊகங்கள் எவை? கிம் தம் தந்தையாரின் வெற்றிகரமான வாரிசாவாரா? அல்லது அவரின் தலைமை சவாலுக்கு இடமாகுமா? வட கொரியாவின் அணுவாயுதத் திட்டத்தை அது கைவிடுவது பற்றி அக்கறை கொண்டுள்ள ஐக்கிய அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்தக் கேள்விகள் வெறும் புலமைத்துவ ஆய்வுக்கு உரியன என்று கூறிவிட முடியாது. கிம் பதவியேற்பது பற்றிய இருவகைப்பட்ட சாதகமும், பாதகமுமான கருத்துக்கள் அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றன. கிம்மினுடைய பதவியேற்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகுமானால் பொதுசனக் கிளர்ச்சி ஏற்படுவதற்குப் பதிலாக, பியொங்யாங் அரண்மனையில் அரசியற் சதி ஒன்று ஏற்படுவதற்குச் சாத்தியம் உண்டு. கிம்மினுடைய குடும்பத்தில் அவருக்கு நெருங்கிய உறவினர்களே பதவியாசை கொண்டு அவரை வீழ்த்தச் சதித்திட்டத்தில் இறங்கலாம்.

புதிய தலைவரின் உடல் நிலையைப் பற்றிய ஹேல்யங்களும் பரவலாக உலவுகின்றன அவர் நீரிழிவு நோயாலும், இதயக் கோளாறாலும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கருதுகிறார்கள். யாருக்குப்பின் எவர் பதவிக்கு வருவார்? பத்திரிகைத் தலையங்கங்களின் ஊகங்கள் எவை? கிம் தம் தந்தையாரின் வெற்றிகரமான வாரிசாவாரா? அல்லது அவரின் தலைமை

எழுதியவர்: ஸிம் ஜே. ஹூன்.

தந்தையின் இறுதி யாத்திரையில் கலந்துகொள்கிறார் கிம். அவர் அருகில் நிற்பவர் பதவிக்கு போட்டியிடும் பாதுகாப்பு மந்திரி ஒ ஜின் யூ.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிம், தந்தையின் வாரிசாக ஆட்சிக்குப் பொறுப்பாளர் ஆவாரா? கலப்படமான சமிக்ஞைகளுக்கும் குழப்பமான ஆதாரங்களுக்கு மிடையில் இந்தக் கேள்வி மட்டும் தெளிவாகவே உள்ளது.

வட கொரியாவின் தலை நகரமான பியொங்யாங்கில் அசாதாரண நிகழ்வுகள் இடம்பெற்றுவரும் அதே வேளையில் எந்நிகழ்வுகள் கட்டாயமாக இடம்பெறவேண்டுமோ அவை இடம்பெறாமலேயுள்ளன. வட கொரியாவில் புதிதாகப் பதவியுயர்த்தப்பட்ட கிம் ஜொங் ii தம் தந்தையாரின் மரணச் சடங்குகள் யூலை 20 இல் நிகழ்ந்த நாளிலிருந்து பொதுமக்கள் முன்பு வெளிப்படாமலே இருந்து வருகிறார் மரணச் சடங்கின்போது மற்றைய பிரமுகர்கள் பலரும் உரையாற்ற கிம் ஜொங் ii ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. தமது 22 மில்லியன் குடிமக்களுக்கு ஒரு செய்தியாவது வெளிப்படுத்தவில்லை. எந்த நாட்டின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுமில்லை. உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியாகாமலும் தந்தையார் வகித்த பதவியான பொதுவுடைமைத் தொழிலாளர் கட்சியின் பொதுச் செயலாளராக இப்பதவி தந்தையாரான கிம் ii சுங் அவர்களால் மரண பரியந்தம் வகிக்கப்பட்டது– ஆக்கப்படாமலும் இருந்து வருகிறார்.

ஸ்ராலினின் வழியை முழுமையாகப் பின்பற்றிய போதிலும் வடகொரியா கிறெம்ளின் ஆகிவிடவில்லை. சோவியத் அரசியலின் மறைமுகத் தன்மையினையும் முறைமைகளையும் முன்பு மதிப்பீடு செய்த வெளிநாட்டு நிபுணர்கள் அதிலிருந்து

மிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார் என்றும் ஈரலரிப்பு Cisshosis of the liver நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் கதைகள் அடிபடுகின்றன. இவற்றை நிரூபிக்கப் போதிய ஆதாரம் இல்லை. அவர் பற்றி நன்கறிந்துள்ள நிபுணர்களின் கருத்துப்படி இரகசியமாகவும், அமைதியாகவும் தமது பதவி நிலைப்பாட்டிற்காகக் கிம் செயற்பட்டு வருகிறார். அடுத்த வாரம் இடம்பெறப் போகும் தேசிய அத்திவாரத் தினத்தன்று (National Foundation Day) கிம் ஆடம்பரமான வைபவங்களிடையே தமது பதவியேற்பையும் சிறப்பாக நிகழ்த்துவார் என்றே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கிம் யொங் ii முறைப்படி ஆட்சியை ஏற்காதிருப்பதேன்? பியொங்யாங்கின் புதிர்

பிரமாண்டமான சுவரொட்டிகள் பியொங்யாங்கில் காட்சி தருகின்றன. புன்முறுவலுடன் தோற்றும் கிம் யொங் ii, அவரின் பின்னணியிலே தரை, கடல் விமானப் படைகள் கூட்டாகப் பயிற்சியில் ஈடுபடல் ஆகிய சித்திரங்கள் அந்தச் சுவரொட்டிகளில் காணப்படுகின்றன. அதேவேளை அரசின் தலைமைப் பொதுக் காரியாலயக் கட்டடத்தினுள்ளே 7 மீற்றர் உயரமான கிம்மின் சிலை ஒன்று திரை நீக்கப்படாமலே மூடிய நிலையில் விளங்குகிறது. அந்தச் சிலையின் வலக் கரம் 'யூச்' (வடகொரியாவின் தற்சார்பு நிலை பற்றி எழுதப்பட்ட) நூலின் மேல் பொறுத்திருக்கக் காணப்பட்டது.

இவற்றையெல்லாம் நோக்குகையில் ஆட்சியிலுள்ள கொரியத் தொழிலாளர் கட்சி மீதும் 1.1 மில்லியன் எண்ணிக்கை கொண்ட ஆயுதப்படையின் மீதும் கிம் அவர்களுக்கு உறுதியான தலைமைத்துவக் கட்டுப்பாடு உள்ளது என்ற உண்மையே புலனாகின்றது. எனினும் நாட்டுத் தலைமையை இன்னும் கிம் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. யூலை 8 ஆந் தேதியன்று வடகொரியாவின் 'மாபெரும் தலைவர்' கிம் இல் சுங் மரணமடைந்ததைத் தொடர்ந்து அந்த நாட்டின் 22 மில்லியன் மக்கள் முறையான தலைவரின்றியே இருந்து வருகின்றார்கள். கிம்யொங் ii பதவி ஏற்பதில் காட்டும் தாதமதம் பியொங் யாங்கில் தலைமைத்துவப் போராட்டம் ஒன்று நிகழ்ந்து கொண்டிருப்பதாகிய ஊகத்தினை அவதானிகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சிக்கல் சியோல் தென்கொரியத் தலைநகர்) பெய்ஜிங் (சீனா) வோஷிங்ரன் (ஐ. அ.) தலைமைப் பீடங்களுக்குக் கவலை தருவதாயுள்ளது. இம் மூன்று நாடுகளும் வடகொரியாவின் இரகசிய அணுவாயுத் திட்டத்திற்குத் தீர்வு காண்பதில் ஆவலுடையனவாயிருக்கின்றன. ஒகஸ்ற் 27 இல் பியொங்யாங் வானொலியில் ஒலிபரப்பான செய்தியறிக்கை இந்த ஆவலை மிகுதிப்படுத்துகின்றது.

சோல் (தென்கொரியா) தான் வழங்கும் மென்னீர் எதிரியக்கி (Light Water Reactor) க்கு மாற்றாக வடகொரியா தனது அணுவாயுதப் பரிசோதனையை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வடகொரியா நிராகரித்து விட்டது என்பதே வானொலிச் செய்தியறிக்கை. இதுமட்டுமன்றி ஐ. அமெரிக்காவோடு இணைந்து தியோல் வடகொரியாவின் அணுவாயுத நடவடிக்கைகளைப் பரிசோதனை செய்வதில் ஈடுபடுவதையும் வடகொரியா ஏற்கவில்லை என்பதும் அந்தச் செய்தியறிக்கையின் மற்றுமோர் அம்சமாகும். இது மீண்டும் அணுவாயுதம் தொடர்பான ஓர் எதிர்ப்பு நிலை உருவாவதையே புலப்படுத்துவதாகச் சியோல் நம்புகிறது.

கொன்பியூசியஸ் மதானுசாரத்தைக் கடைப்பிடிக்கும் வடகொரியா, கிம் இல் சுங் இறுதிக் கிரியை அந்த மதவிதிகளின் படியே செய்தது என்பதிலும் மேலாக சுவாரசியமான வதந்திகள் பலவும் அதனைத் தொடர்ந்து எழுந்துள்ளன. கிம் யொங் ii இன் பதவியேற்பை ஏற்காது அவருக்கெதிராகப் பியொங்யாங் இராஜதந்திர வட்டாரங்களில் துண்டுப் பிரசுரங்கள் பரவலாக விநியோகிக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது. பியொங் யாங்கிலுள்ள ஜேர்மன் இராஜதந்திரி இத் துண்டுப் பிரசுரங்களைத் தம் கண்ணால் பாராமலே தமது அரசாங்கத்திற்குத் தாம் கேள்வியுற்றவதந்தியை அறிவித்தார்.

"இது தென் கொரிய அரசாங்கத்திற்குத் தெரிய வந்ததும் அரச அதிகாரிகள் மேலும் விபரங்களை அறிய முற்படாது அவசரம், அவசரமாக இதனை வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் வாயிலாக வெளிப்படுத்தினார்கள். இதனால் ஜேர்மனிய வெளிவிவகார அமைச்சுக்குச் சங்கடமான நிலை உருவானதோடு, தென் கொரிய ஜனாதிபதி கிம் யம் சாம் அவர்களுக்கும் செய்திவய வெளியிட்டவர் என்ற வகையிலே சிக்கல் ஏற்பட்டது.

இது எவ்வாறாயினும் இவ்வதந்தி உண்மையாகவும் இருக்கலாம் என்ற வகையில் வடகொரியாவின் பிரதி இயக்கம் தோற்றமளிக்கிறது. பியொங்யாங் வானொலி, சியோலின் துண்டுப் பிரசுர வதந்திப் பரப்பலைக் கடுமையாகக் குற்றஞ் சாட்டியது. அது ஒகஸ்ற் 21 இல் வெளியிட்ட செய்தியறிக்கை, "பதவி வேட்கை கொண்டோரதும், சதிகாரரதும்" எழுச்சி வாரி சுரிமைத் தீர்மானத் தொடர்பில் தலையெடுப்பதாகக் குறிப்பிட்டது.

'' புரட்சித் தலைவர் ஒருவரின் பின் அவரின் பதவிக்கு வருபவர் பற்றிய பிரச்சினைக்குச் சரியான முறையிலே தீர்வு காணப்படாத வரை பதவி வேட்கை கொண்டவரும், சதிகாரரும் தமது விசுவாசத்தைக் கைவிட்டுக் கட்சியையும், புரட்சியையும் கேலிக் கூத்துக்களாக்கி விடுவர் என்பது வரலாறு தரும் அநுபவமாகும். இத்தகைய செயல்களால் புரட்சியும், அதன் அத்திவாரமும் அழிவுக்குள்ளாவதே பெறக்கூடிய பயன் '' என்று அந்தச் செய்தியறிக்கை கூறுகிறது.

சியோலிலுள்ள பகுப்பாய்வாளர்கள் வட கொரியா தனது தலைவரின் இறுதிக் கிரிகைகளை அடுத்து வெளிப்படையாகவே பதவிப் போராட்டத்தில் இறங்கும் என்ற கருத்தை மறுக்கிறார்கள். செய்தியறிக்கையும், துண்டுப் பிரசுரங்களும் சாத்தியமான அறிகுறிகள் மட்டுமே. அவை தெளிவான ஆதாரங்கள் அல்ல. இவற்றைக் கொண்டு கிம் யொங் ii இல் பொது மக்கள் அநுதாபமின்றி இருக்கிறார்கள் என்று கொள்வதற்கில்லை.

அதிகார பூர்வமான முதன்மைத் தகவல்களை வெளியிடும் நிறுவனமாகப் பெருமையடிக்கும் வட கொரியாவின் தேசிய ஒருமைப் பாட்டாய்வுச் சபையின் தலைவர் சூ. ஜே யின் '' கிம் யொங் ii இற்கு எதிர்ப்பு என்பது வட கொரியாவிலே புதியதன்று '' என்கிறார். '' கிம்முக்கு எதிரான உணர்வுகளும் புதியன அல்ல '' என்பதும் அவர் கூற்று. இராச தந்திரிகளும், கட்சி விடுதுக் கட்சி தாவுவோரும் கிம் மைப் பெண் பித்தர், குடிகாரர், புரட்சியோடு தொடர்பான தரக் குறைவான நினைவுச் சின்னங்களை அமைப்பதில் வீண் செலவு செய்பவர் என்றெல்லாம் கேலியாகப் பேசுவதாகவும், சூ. ஜே யின் கருத்துத் தெரிவிக்கிறார்.

ஆனால் முக்கியமான கேள்வி கிம், தமது முன்னவரின் தலைமைத்துவத்தைத் தொடர்ந்து தாம் கைக்கொண்டு நிறம்பட செயலாற்றுவாரா என்பது தான். அவர் தலைமைப் பதவியை எவ்வளவு காலத்திற்கு வகிக்கக் கூடும்? சியோலின் சோகாங் பல்கலைக் கழகப் பேராசிரியர் றீ சாங்வூ '' அவருடைய பதவிக் காலம் மூன்று மாதத்திலிருந்து மூன்றாண்டுகள் வரை தான் நீடிக்க வாய்ப்புள்ளது '' என்கிறார். வட கொரியாவின் அரசியல் விவகாரங்களில் நிபுணரான அவர் மேலும் கூறுவதாவது: '' வட கொரிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதில் அவர் முனைந்தால் தமது வாழ் நாள் காலம் முழுவதுங் கூடத் தலைவராக விளங்கலாம் '' என்பதாக.



தலைமைத்துவ நிலை பேற்றுக்குக் கிம் யொங் ii படையினரிடையேயும், கட்சி விசுவாசிகளிடையேயும் நேச உறவினை ஏற்படுத்தியாக வேண்டும். கட்சி விசுவாசிகள் 40 களிலும், 50 களிலும் மங்கியொன்டேயில் புரட்சியாளர்களின் பிள்ளைகள் கற்பதற்காகத் தொடங்கப்பட்ட கலைக் கழகத்தில் கிம் யொங் ii உடன் சக படிகளாகப் பயின்றவர்கள். தம்முடைய தந்தையார் போலவே கிம், படையினரதும், கட்சியினரதும் போட்டி சார் தேவைகளைத் திறமையான முறையில் நிறைவேற்றி இரு பகுதியாரிடையேயும் சமநிலையைப் பேணுவது அவசியம்.

றீ சாங்வூவின் மேற் குறித்த ஆலோசனைக்கு நேர் எதிரிணையான கருத்தை வோஷிங்ரனிலுள்ள கார்ணகி அறக் கட்டளையைச் சேர்ந்த செலிக் ஹரிசன் தருகிறார். கொன் பியூசிய சமூகத்தில் இறந்த தந்தையின் நிபத்தை (பதவியை) த் தாங்கி மகன் செல்வதென்பது அசாதாரணமான ஒன்று. கிம் யொங் ii தமது தந்தையின் வயிக் கவர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை என்றும் ஹரிசன் கருதுகிறார். ஆகையால் கட்சியோடும், படையோடும் தொடர்புகளை முடிவுக்குக் கொணர்வதோடு புதியதொரு சத்தியோடு தன்னை இணைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலமே கிம் தலைமைத்துவத்தின் உச்சத்தில் நீடித்து அமர முடியும் என்பதே ஹரிசனின் ஆலோசனை.

கிம் மின் சடங்காசாரப் பதவியேற்பு செப்ரெம்பர் 9 அன்றோ ஒக்ரோபர் 10 அன்றோ இடம் பெறலாம் என்பது ஏற்றைய பகுப்பாளரின் கணிப்பு. பியொங்யாங் அரசு நிறுவப்பட்டது செப்ரெம்பர் 9 இல். கொரியாவின் தொழிலாளர் கட்சி ஆரம்பித்தது ஒக்ரோபர் 10 இல். எனவே இவற்றில் ஒரு நாளைத் தெரிவது பொருத்தமாயிருக்கும் என்பது உண்மை தான். ஆனால் அவர் தெரிவித்துக் கொள்ளும் நாள் எதுவாகவும் இருக்கட்டும். வட கொரியாவை அழிவிலிருந்து காப்பாற்றி சகச வாழ்வை மக்களுக்கு வழங்க வேண்டுமானால் பொருளாதாரச் சீர் திருத்தம் ஒன்றே கிம் கடைப்பிடிக்க வேண்டிய வழி.

தமிழில் :
நிரு. சொக்கலிங்கம்

ரைம், செப்ரெம்பர் 5, 1994.
வோர் ஸ்ரேன் எக்கனமிக் றிவியூ,
செப்ரெம்பர் 6, 1994.

புதிய முகங்கள் பழைய உத்திகள்

எழுதியவர் : லிசாபெயர்

"இல்லை, இங்கு வீடே இருக்கவில்லை. நாங்கள் வீடு எதனையும் அழிக்கவில்லை" என்று பாலஸ்தீனியப் போர்வீரர் கூறியது முதற்பார்வையில் சரியானது போலவே தோற்றுகிறது. காசாவின் நீள் நிலப் பிரதேசத்தின் தெற்குந்தத்தில், றாஃபா நகரத்தின் அயலிலுள்ள சேரெப் சதுக்கத்தின் சமதரைப் பகுதி தூசும் துகளுமாய்க் காட்சி தந்தது. ஆனால், சாம்பல் படிந்த சுவர்ச் சிதறல் முற்றிலும் வேறொரு கதையைக் கூறியது. போர்வீரர்களின் இடத்திலிருந்து கூப்பிடுதொலைவில் வாழ்ந்த மக்கள் தாம் உண்மையான கதையைச் சொன்னார்கள். அயலவரான ஹிசெயன்சோறப் என்பவர் தம் வீட்டினை மீண்டும் கட்டிக்கொண்டிருந்த பொழுது, அவ் வீட்டு முற்றத்து வேலியின் பின்னால் மறைந்திருந்த பாலஸ்தீனியப் போராளிகள், வீதியால் சென்ற இஸ்ரேலியப் படையினரைத் தாக்கியதாகவும், அந்தத் தாக்குதலில் இஸ்ரேலியப் போர் வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அன்று பின்னேரமே சோறப்பின் வீடு பாலஸ்தீனிய அதிகாரிகளால் இடித்து அழிக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினார்கள். "இவ்வளவிற்கும் சோறப் எதிலும் சம்பந்தப்படவில்லை. புல்டோசர் கொண்டு இடிக்கப்பட்ட வீட்டின் இடிபாட்டுச் சிதறல்கள் உடனடியாக அகற்றப்பட்டன."

காசா நீள் நிலப்பகுதியை ஆக்கிரமித்துள்ள பாலஸ்தீனிய ஆட்சியாளர்கள், சோறப்பின் வீட்டை அழித்ததை மறுப்பதில் வியப்பில்லை. இஸ்ரேலியர் வீடுகளை அழித்ததாகிய வெறுக்கத்தக்க கொடுஞ் செயலால் பாதிப்படைந்த பாலஸ்தீனியரும், மனித உரிமை நிறுவனங்களும் இஸ்ரேலியர் ஆதிக்கங் கொண்டிருந்த காலத்தில் கடுமையாகக் கண்டனம் செய்தது உண்மைதான். ஆனால், காசாவிலும், ஜெரிக்கோவிலும் சுயாட்சி பெற்றுவிட்ட யாசிர் அரபாத்தும், அவரின் தளபதிகளும் அதே அழிப்பு வேலையைத்தான் தொடர்கின்றார்கள். இஸ்ரேலியர் சென்ற பின்பு சுதந்திர உணர்வு ஏற்பட்டாலும், பாலஸ்தீனியர் எதிர்பார்த்திருந்த அளவு சுதந்திரத்தை அவர்களால் அனுபவிக்கக் கூடவில்லை என்று சுதந்திர பாலஸ்தீனிய மக்கள் உரிமைபேணும் ஆணைக்குழுவில் ஓர் உறுப்பினரான கலாநிதி இயாட் சராஜ் கூறுகிறார். "இராணுவ சர்வாதிகாரத்திற்கான அடையாள அச்சுறுத்தலுக்கு நாம் உள்ளாகியிருக்கின்றோம்." புதிய ஆட்சியாளர் இஸ்ரேலியரின் ஒழுக்காற்று உத்திப் பாணியைத் தாமும் பின்பற்றி வருகின்றனர். எடுத்துக்காட்டாக றாஃபாவில் 17 வயதுச் சிறுவன் ஒருவன் துப்பாக்கிச் சூட்டினால் இறந்ததைத் தொடர்ந்து அங்கு பாலஸ்தீனியப் பாதுகாப்புப் படையினர் தமது முதலாவது ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியுள்ளமையைக் காட்டலாம்.

கடந்த காலத்தில் ஒருவரின் வீட்டை அழிப்பதிலும், குறைந்த தொரு தண்டனையாக அவரை

அந்த வீட்டினுள் செல்லாதவாறு வீட்டைப்பூட்டி முத்திரை வைப்பதும் இஸ்ரேலியரின் வழக்கமாய் இருந்தது. யூலை மாதத்தில், ஜெரிக்கோவில் அஹமட் நவாப் பிறஹாம் என்பவர் இஸ்ரேலியருடன் இணைந்து செயற்பட்டதாகச் சந்

காசாவிலும், ஜெரிக்கோவிலும் பாலஸ்தீனிய விடுதலை அமைப்பின் (பி. எல். ஓ) ஆட்சித் தொடக்கம் இஸ்ரேலின் வல்லாதிக்க முறையை ஒத்ததாகவேயுள்ளது.

தேகித்த பாலஸ்தீனிய அதிகாரிகள், அவருடைய வீட்டுச் சாவிகளை எடுத்துக்கொண்டதோடு, போர்வீரர்கள் சிலரை அவ்வீட்டினுள் சென்றிருக்கச் செய்தனர். ஒரு மாதத்திற்குப் பின்பு இத்தாலிய தேசிய இனத்தவரான அவரின் மனைவியை அந்த வீட்டில் வந்து வசிக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், பிறஹாம் பாலஸ்தீனியரின் எல்லைக்கப்பால் உள்ள ஜெருசலேமின் புறநகரிலே சென்று தங்கினார். இது அவரின் புத்திசாலித்தனமான எதிரியக்கம் என்றே கூற வேண்டும்.

பிறஹாப்போல் இஸ்ரேலியருக்குத் துணைபோனவர்கள் என்ற சந்தேகத்தின் பேரால் 50 பாலஸ்தீனியர்கள் பாலஸ்தீனியச் சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பதோடு. அவர்களின் உறவினர்களும், நண்பர்களும் அவர்களைச் சந்திப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும், மக்களும் கூறும் கருத்துப்படி, சிறைகளிலே தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதாகத் தெரிகிறது. '' பாலஸ்தீனியர் சித்திரவதை முறைகள் மிகச் சிறந்தவை. ஏனெனில் இவை இஸ்ரேலியரிடம் பட்ட அனுபவத்தால் பெற்றுக்கொண்டவையாகும். எனவே உண்மையை வெளிக்கொணர்வது இந்தவகைச் சித்திரவதைகளே உகந்தவை என்பது புதிய ஆட்சியாளரின் அழுத்தமான நம்பிக்கை '' என்கிறார் சறாஜ்.

இவ்வாறான சித்திரவதை எந்த அளவிற்கு மோசமாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதற்குக் காவல் துறையினரின் சந்தேகத்துக்குள்ளான 28 வயது இளைஞர் ஜார்பவுவாவுக்கு நிகழ்ந்ததொன்றே போதிய எடுத்துக்காட்டாகும். அவருடைய சடலம் அவரின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டபோது உடலில் பாரிய அடிகாயங்களும், தோல் கிழிவுகளும் காணப்பட்டன. மரண விசாரணையின் பொழுது ஜார்பவுவா கொடுரமான வகையில் சிறையிலே கொல்லப்பட்ட உண்மை வெளியாயிற்று. அதிகாரிகள் உடனடியாகச் செயற்பட்டு இந்தச் சித்திரவதைக் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் காவல் துறையைச் சேர்ந்த நால்வர் என்ற முடிவுக்கு வந்து, அவர்களை நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தினர் ஜார்பவுவாவின் குடும்பச் சார்பில் இந்த வழக்கில் தோற்றி வாதிக்கும் காசா நகர மனித உரிமை நியாயவாதி றாஜி சவுராணி, '' இதுவரை இலட்சிய பூர்வமான விசாரணை இடம்பெறாவிட்டாலும் திருப்திகரமான முறையில் வழக்கு நடந்துகொண்டிருக்கிறது '' என்கிறார்.

ஜார்பவுவாவின் வழக்கு விசாரணை போதிய முக்கியத்துவம் பெறாமைக்கு, அவர் துரோகச் செயலில் ஈடுபட்டவர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளமையே காரணம். இதற்கும் மேலாக மக்களிடையே பொதுப்படையாக அச்சம் நிலவி வருவதால் நிகழ்வுகள் தொடர்பான ஆதாரங்கள் வெளிப்படாது புதையுண்டு கிடக்கின்றன என்றே பத்திரிகையாளர்கள் கருதுகின்றனர். பெரும்பாலான மக்கள் ஆட்சியாளருக்கு எதிரானவர்களாயினும் தாம் இஸ்ரேலியருடன் இணைந்தவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படலாம், என்று கவலையடைந்து வாய்களைப் பூட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொள்ளும் சிறிய சந்தேகமும் தமக்கு மரணத்தை வருவிக்கும் என்பது அம் மக்களுக்குத் தெரியும்.

பாலஸ்தீனியரின் ஆட்சிக்குட்பட்ட எல்லையிலுள்ளே ஜனநாயகம் வீறைப்புக்குள்ளாகி விட்டது என்பதை யூலை மாதக் கடைசியில் பாலஸ்தீனிய செய்தித்தாள்கள் இரண்டில் ஒன்றான அல் நஹர் வெளிவராது தடைசெய்யப்பட்டதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இந்தச் செய்தித்தாள் அரபாத்தின் தேசியக் கோட்பாட்டினை மென்மையான முறையில் கண்டனம் செய்தும் ஜோர்டான் அரசர் ஹுசெய்னுக்கு விசுவாசம் காட்டியும் வந்ததாகும். ஹுசெய்ன் இஸ்ரேலியரோடு செய்துகொண்ட உடன்படிக்கையின்படி இஸ்ரேலில் இஸ்லாமியர் வாழும் பகுதியின் காப்புரிமை அவருக்கு வழங்கப்பட்டதாலும் அதே உரிமை தமக்கே வழங்கப்படல் வேண்டும் என்று அரபாத் கோரியதாலும், இவற்றில் முன்னையதை ஆதரித்தும், பின்னையதை விமர்சித்தும் அன் – நஹர் கட்டுரை வெளியிட்டதற்குத் தண்டனையாக அது தடை செய்யப்பட்டது. ஜோர்டான் சார்பான அக்பர் அல் பலாட் பத்திரிகையும் இவ்வகையில் மூடுவிழாவுக்கு இலக்காகியுள்ளது.

இந்தத் தடைகள் அரபாத்தின் உள் வட்டத்தின் ஒரு பகுதியாராலும் ஏற்றுக்கொள்ளப்படாதிருந்த போதிலும் அவர்கள் வெளிப்படையாக எதிர்ப்புக் காட்டாதிருக்கின்றனர். 'அல்-பயன்' என்ற வாரப் பத்திரிகையை இஸ்ரேல் தடை செய்த வேளையில், இது சென்ற மாதம் இடம்பெற்றது. பாலஸ்தீனிய தகவல் அமைச்சு அதனைக் கண்டித்து ஓர் அறிக்கையை வெளியிட்டது: '' கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மானிடத்தினதும், அதன் மதிப்பார்ந்தவாழ்வினதும்முதன்மையான நிபந்தனையாகும். பத்திரிகையின் நிலைப்பாடு தனக்கு எதிரானது என்ற ஒரே காரணத்திற்காக அப்பத்திரிகை தாக்குதலுக்குள்ளாக்கக் கூடாது '' என்பதாக.

ஆரோக்கியமான இந்த நிலைப்பாடு காசாவிலும், ஜெரிக்கோவிலும் உள்ளிட்ட எல்லாப் பகுதிகளுக்கும் கையளிப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

சைம், செப்டெம்பர் 5, 1994

தமிழில்:

நிரு. சொக்கலிங்கம்

அகதிகளை மீண்டும் தாயகத்தில் குடியேற்றுதல்

ஆர்மீனியா: பிறந்த மண்ணை விட்டு அலைவதே போருக்கு அடிப்படைக் காரணம்.

★ ● ★ ● ★

சாஹோ அஜமியான் படை வீரரின் உருமறைப்புப் போர் உடையணிந்து ஆர்மீனியாவின் தேசியப் போர் மாவீரர் நினைவுச் சின்னங்கள் நிறைந்த இடு காட்டில் நிற்கிறார். யெரெவனில் தன் நண்பனின் மலர் தூவப்பட்ட சவக்குழியை உற்று நோக்குகிறார். அவர் வசிக்குமிடம் கலிபோர்னியாவிலுள்ள ஃபிறேஸ்னோ. ஓர் ஆண்டுக்கு முன் அவரும் மற்றோர் ஆர்மீனிய அமெரிக்கனான காரோ கசேஜியானும் ஆர்மீனியா தன் அயல்நாடான அஸர்பைஜானுடன் நடத்தும் போரில் தொண்டர்களாகச் சேர்ந்தனர். கசேஜியான் சற்று அதிக போர் அனுபவம் உள்ளவர். பிறெஸ்னோவிலுள்ள தமது வர்த்தக ஏற்றுமதி இறக்குமதிப் போர்வையில் ஆர்மீனியாவுக்குத் துப்பாக்கிகள் கடத்தும் பணியில் ஈடுபட்டவர். ஆர்மீனியாவில் சிலுவைப் போர் வீரர் என்ற பெயருள்ள கெரில்லாப் போரில் பங்கு பற்றினர். இரு நண்பர்களும் நாகோர்னோ கரபாக் என்ற இடம் அஸர்பைஜானில் ஆர்மீனிய இனத்தவர் அடர்ந்து வாழும் பிரதேசம், அதைத் தனக்கே உரிமை என்கிறது ஆர்மீனியா. இதனை மீட்பதற்கான போரில் இருவரும் கலந்து கொண்டனர். அங்கு நடந்த சிறு போரில் தலையில் ஸ்னைப்பர் சன்னம் தாக்கி கசேஜியான் உயிர் நீத்தார். அஜமியான் தன் நண்பன் உயிர் துறப்பதைக் கண்ணுற்றார். இப்போது அவர் இல்லாமலே போரில் தொடர்ந்து பங்குபற்றுகிறார். தம் இருவரையும் வசீகரித்த தமது முன்னோரின் தாயகத்துக்காக உருமாறிய நெஞ்சினராய் ஏறமுடியாத மலைகளில் தனித்து நிற்கிறார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆர்மீனிய – அஸர்பைஜான் போர் ஆறாண்டுகள் நடைபெறுகிறது. 15,000 பேர் இறந்தனர். பத்து இலட்சம் பேர் வீடற்று அகதிகளாயுள்ளனர். அவ்வாறு தாயகம் துறந்து அலைவோரை மீண்டும் தமது பண்டைய இருப்பிடத்தில குடியேற்றி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க ஆர்மீனியா கூடிய ஆதரவும் வழங்குகிறது. அஜமியான் போன்ற பல இடசின் தொண்டர்கள் பிற இடங்களில் இருந்து வந்து போரிடுகின்றனர். கடல் கடந்த நாடுகளிலிருந்து, விசேடமாக அமெரிக்காவிலிருந்து ஆர்மீனிய இனத்தவர்கள் பல இலட்சம் டொலர் வகுலித்து ஆர்மீனியப் போருக்கு உதவுகின்றனர். அப்பணம் மனிதாபிமான சேவைக்கு என்றே வெளிப்படையாகக் குறிக்கப்பட்டாலும், அதில் கணிசமான அளவு தொகை போர்க் கருவிகளும் மருந்துகளும் குண்டுகளும் வாங்கப் பயன்படுத்தப் படுகிறது என்று அரசாங்கச் செய்தி மூலங்கள் கருதுகின்றன.

மேலும் திறமைமிக்க முறையில் சட்டமன்ற உறுப்பினரின் ஆதரவு தேடும் தந்திரோபாயங்களும், முக்கிய சட்டவாக்கத் துறையினருக்குத் தேர்தற் பிரச்சார நிதியை உரிய காலத்தில் வழங்கியதும், வாசிங்ரனின் வெளியுறவுக் கொள்கையில் ஆர்மீனியச் சார்பு ஏற்பட வழி திறந்துள்ளன. ஆர்மீனியாவின் எண்பது இலட்சம் தாயகம் துறந்தோரில் ஒருமுகப்பட்ட போக்கு களத்தில் நல்ல நிலைபாதை அளித்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளுக்குள் ஆர்மீனியப் படைகள் தற்காப்புப் போரிலிருந்து எதிர்த்துத் தாக்கும் போர் முறைக்கு உயர்ந்துள்ளனர். நகோர்ணோகரபக் மட்டுமன்றி அஸர்பை

ஜான் குடியரசின் ஐந்தில் ஒரு நிலப் பரப்பையும் தமக்குச் சொந்தமாக்கி விட்டனர்.

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்ஜலீஸ் :புறெஸ்னோ, பொஸ்ரன், நியூயோர்க், டிற்றோய்ற், :பிலடெல்:பியா, புறொவிடென்ஸ் நகரங்களில் குடியேறியுள்ள ஆர்மீனியர்கள் பத்து இலட்சம் வரை உள்ளனர். அவர்கள் ஆர்மீனியரின் போர் முயற்சிக்குப் பெரிதும் உதவுகின்றனர். அமெரிக்காவிலிருந்து போர் முனைக்குச் சென்றோர் சிலர் இடசின் வீரரே! இருவர் அங்கே இறந்ததாக அறிகிறோம். ஆனால் நிதி சேகரித்தல் பெருமளவு வெறிபூட்டியுள்ளது. அமெரிக்காவிலுள்ள மிகப் பெரிய ஆர்மீனியப் பத்திரிகையான 'அஸ்பரேஸ்'' இதழின் ஆசிரியர் ஜோன் கொஸ்ஸகியான் கூறுகிறார்: ''ஆர்மீனிய அமெரிக்கர் இதுவரை 7 அல்லது 8 மில்லியன் டொலர் போருக்கெனச் சேகரித்தனர். பிறரது கணிப்புகளின்படி இன்னும் அதிக தொகை சேர்ந்திருக்க வேண்டும். 2½ இலட்சம் ஆர்மீனியர்கள் அமெரிக்க வசிக்கும் லொஸ் ஏஞ்ஜலீஸ் தான் மிகக கூடிய தொகை சேர்ந்தது. 12 மணித்தியாலத் தொலைபேசித் தொடர்பில் சேர்ந்தது 1½ மில்லியன் டொலர்'' என்பதாக.

வோஷிங்ரனில் ஆர்மீனியரது பிரச்சார முயற்சிகள் பெரிதும் வெற்றியளித்துள்ளன. ஈரான்டு களுக்கும் முன் ஆர்மீனியச் சட்டப் பகர்ப்பை நிறைவேற்றும் முயற்சியாளர் கடும் முயற்சி செய்து, அஸர்பைஜானுக்கு மனிதாபிமான உதவி தவிர்ந்த ஏனைய உதவிகள் எதுவும் அனுப்பக் கூடாது என்றும், அக்குடியரசு ஆர்மீனியாவுக்கு எதிராக விதித்த பொருளாதாரத் தடைகளை நீக்கி, நகோர்ணோகரபக் பிரதேசத்திற்குப் பொருளாதார உதவி ஏதும் போகக் கூடாது என்ற கடும் கட்டுப்பாட்டை நீக்கும் தீவிர முயற்சிகளைச் செய்யுமட்டும் இத்தடை நிலைத்திருக்க வேண்டும் என்றும் சட்டம் இயற்றச் செய்தனர். சென்ற ஆண்டு வோஷிங்ரன், 195 மிலலியன் டொலர் உதவியை ஆர்மீனியாவுக்கு அனுப்பியது. முன்னைநாள் சோவியத் அரசுகளில் ருஷ்யாவுக்கு அடுத்தபடி செய்த பெரிய உதவி இதுவே. அஸர்பைஜானுக்குக் கிடைத்தது 30 மில்லியன் டொலர் மட்டுமே சக்தி வாய்ந்த முதலை (செனெற்) உறுப்பினர்களுக்கும், காங்கிரஸ் அங்கத்தவர்களுக்கும் தேர்தற் பிரச்சாரத்துக்குத் தாராளமாக உதவியமை ஆர்மீனிய அமெரிக்கரின் வெற்றியை நிச்சயமாக்கியது. உதாரணமாக, செனெற் சபைச் சிறுபான்மைத் தலைவர் பொப் போல் மஸாசு செற்ஸ் செனெற்றர் ஜோன்கெரி, அவையின் ஜனநாயக கட்சிக் கொரடா டேவிட் போனியர் ஆகியவர்களின் உதவி இவ்வாறே பெறப்பட்டது. செனெற்றில் உதவியாளர் ஒருவர் கூறுகிறார்: ''அமெரிக்க அரசியலில் ஆர்மீனியர் வலுமிக்கவர்கள். காரணம் அவர்கள் (தேர்தல்) நிதி சேகரிக்கும் திறனுடையோர். அவர்கள் இடைவிடாது கொடுப்பர்; எப்போதும் தேர்தல் நிதிப் பெட்டி அங்கமாவர்'' என்று.

ஆர்மீனியரை ஆதரிக்கும் குழுக்கள் பல ஆர்மீனியர் நாடிழந்து அகதிகளாய்த் தீரியத் தொடங்கிய காலம், 1915 அவர்களில் பத்து இலட்சம் பேர் துருக்கியர் கையினால் மடிந்த சந்தர்ப்பமாகும். அவர்கள் மீண்டும் தாயகம் நோக்கிச் சென்று குடியேற வேண்டும் என உழைக்கும் தீவிர வாதக்குழுக்களில், ஏதென்ஸ் நகரைத் தளமாகக் கொண்ட ஆர்மீனியப் புரட்சி ஒன்றியம் முக்கியமானது. 'தஷ்னுக்' என்று குறிப்பிடப்படுவது (அச்சொல் ஆர்மீனிய மொழியில் சமஷ்டி ஒன்றியம் என்று பொருளுடையது) அதை இயக்குபவர் 64 வயதுடைய ஈரானில் பிறந்த ஆர்மீனியரான வ்ரெயர் மருக் ஹியான் உலகம் முழுவதும் 13 இடங்களில் காரியாலயங்களை வைத்து நகோர்யோகரபக் மீட்புக்கு வேண்டிய நிதியில் பெருமளவைச் சேகரிக்கிறார்கள். தஷ்னுக் தீவிர வாதிகள் சிலர் இப்பிரதேச மீட்புடன் நின்று விடாது ''விசால ஆர்மீனியாவில்'' முன்னைநாள் சோவியத் ருஷ்ய மாகாணமான ஜோர்ஜியா, துருக்கியிலுள்ள ஒன்பது மாகாணங்கள் என்பவற்றையும் சேர்த்துவிடக் கனவு காண்கிறார்கள். இது சற்று யதார்த்தத்துக்கு மாறுபட்ட இலட்சியம் தான். எனினும் 'தஷ்னுக்' கின் தீவிரவாதம் ஆர்மீனியாவிலும் பரவியுள்ளது போலும். ஆர்மீனிய இராணுவம் கைப்பற்றிய அஸெரி கிராமங்களை எரித்துத் தரைமட்டமாக்கி, அஸெரி மக்களை ஓடோடத் துரத்துகின்றது.

நகோர்னோ-காபக்கில் ஜூலை மாதம் முதல் ருஷ்யாவின் மத்தியஸ்தத்தால் தற்காலிக போர் ஓய்வு ஏற்பட்டுள்ளது. ஆர்மீனிய படைகளின் கை ஓங்கிய நிலை காணப்படுகிறது. ''ஆர்மீனியர், அஸர்பைஜானை முழங்காலில் இருத்தி விட்டனர்'' என்கிறார் அஸர்பைஜான் தலைநகரான பாகுவிலுள்ள சிரேஷ்ட மேற்குலக இராஜதந்திரி ஒருவர். அமெரிக்காவிலிருந்து தொலைபேர்படையில் சேவை செய்யவந்த மைக்மெல்கோனியான், கலிபோர்னியாவில் முன்பு நகைக் கடை வைத்திருந்தவர். நகோர்னோகரபக்கில் காயமுற்றபின், ஓய்வுக்கும், உல்லாசப்பொழுது போக்குக்கும் என்று தம் வீடு திரும்பினார். மீண்டும் போருக்கு வருவதாகக் கூறிச் சென்றார். ''நான் போராடாவிடில் அஸர்பைஜானியர் எம்மை ஆர்மீனியாவுக்குள் வள்ளிக் கொண்டுவந்து விட்டுவிடுவார்கள்'' என்கிறார். ஆர்மீனியாவின் படைத்திறனையும், தாயகம் விட்டுச் சென்றோரின் மாபெரும் ஆதரவையும் நோக்கும் போது அப்படி நிகழவே மாட்டாதுபோலத் தோன்றுகிறது.

நியூஸ்வீக், ஒகஸ்ற் 8, 1994

மன்னரை உருவாக்குபவர் எதிர் தப்பிப் பிழைத்தவர்

நைஜீரியா: அபாச்சாவும் அபியோலாவும் மோதுவது சாதாரண நைஜீரியர்களை நடுவில் சிக்க வைத்துள்ளது.

இரு யானைகள் சண்டையிடும்போது புற்கள்தான் நசியும் என்று ஆபிரிக்கப் பழமொழி கூறுகிறது. ஜெனரல் சானி அபாச்சாவும், கோடீஸ்வரர் வர்த்தகர் மொஷாட் அபியோலாவும், தூரவிலகி ஏழு வாரங்கள் முடிவடைந்துள்ளது. கோடிக்கணக்கான நைஜீரியர்கள், நசுக்கப்பட்ட புற்கள் போல உணருகிறார்கள் போலும். அபியோலா கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினார் என்று அநேக நைஜீரியர்கள் நம்புகிறார்கள். அபுஜா தலைப்பட்டின நீதி மன்றில் அவர்களுடைய இராஜதுரோக குற்றச்சாட்டு வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அபியோலா சிறிது நேரம் சமுகமாயிருந்தார். 50 வயது ஜெனரல் நைஜீரியாவை ஆண்ட வல்லாளர்களில் ஆகப் பிந்தியவர். 3.5 மில்லியன அங்கத்துவங் கொண்ட (NLC) நைஜீரியத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர்களையும், எண்ணெய்த் தொழிற் சங்கத் தலைவர்களையும் பதவி நீக்குவதற்கான தனது பேச்சை எழுதிக் கொண்டிருக்கிறார். இரு தொழிலாளர்கள் யூனியன்களும் கடந்த யூலையிலிருந்து வேலை நிறுத்தத்தில் உள்ளன. அவைகள் அபியோலாவின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவரை ஜனாதிபதிப் பதவியில் இருத்துமாறும் வற்புறுத்துகின்றனர். அபாச்சாவின் முறியடிப்பு சொற்ப பலனையே

கொடுத்தது எனினும் அபியோலா விடுதலை ஆகும்வரை யூனியன்கள் வேலைக்குத் திரும்பாமல் நிற்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளன. இதனால் சாதாரண நைஜீரியர்களுக்குத் தொடர்ச்சியான எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டது.

தொடர்ச்சியான நெருக்கடி நிலை நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்துள்ளது. நைஜீரியாவைக் கீழ்த்தர அரசாக மாற்றிவிட்டது. அதனால் வெகு விரைவில் தனிநபர் சண்டையாக மாறியுள்ளது. அபியோலாவுக்கு எதிராக அண்மையில் இடம்பெற்ற இரு சதிகளின்போது நேரடியாகப் பங்குபற்றி 'மன்னரை உருவாக்குபவர்' என்ற பட்டப்பெயரையும் அபாச்சா வாங்கிக் கொண்டவர். ஒருவராவது பின்வாங்குவதாகத் தெரியவில்லை. எம். கே. ஓ. என்று அவர்களுடைய சகாக்களால் அழைக்கப்பட்ட அபியோலா ஜனாதிபதியாகப் பிரகடனஞ் செய்து 34 வருட சுயாதிபத்திய ஆட்சியில் 24 வருடமாகப் பலகட்சி ஜனநாயக முறை மறுக்கப்பட்ட நாட்டில் நிகழக் கூடாத சின்னமாகத் திகழ்கிறார். கடந்த நவம்பரில் இடைக்கால அரசைக் கலைத்து விட்டு அபாச்சா நைஜீரியாவை ஆண்டு வருகிறார். இப்போ அவர் என்ன நடந்தாலும் அதிகாரத்தில் பற்றிக் கொள்ள முனைகிறார் என்று குறை கூறுகிறார் அபியோலாவின் உதவியாளர் பிரெட்ஈகவா.

அபாச்சா தனது தொலைக்காட்சி உரையில்; "ஜனநாயக ஆதரவு தொழிற்சங்கங்களை முறியடிக்க எடுத்த முயற்சியை ஆதரித்தார். 1993 யூன் வாக்களிப்பை இரத்துச் செய்வதற்கான குற்றத்தை ஒப்புக்கொண்டார். அது ஒரு போலியான உரிமைகோரல்" என்கிறார்.

வாக்களிப்புத் தினத்திற்கு முந்திய கிழமைகளில் அபாச்சா சிவில் நிர்வாகத்துக்கு வழிகோலும் இப்றாகிம பபாங்கிடாவின் நிட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த இராணுவ அதிகாரிகளுக்குத் தலைமை தாங்கினார் என்று நப்பப்படுகிறது. மீளவும் சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவரத் தனது தைரியமான நிலைப்பாட்டை தமது உரையில் வெளிப்படுத்தியிருந்த போதிலும் அவருடைய ஜனநாயக நம்பகத்தன்மை சிரிப்புக்கிடமானது. நவம்பரில் அதிகாரத்துக்கு வந்தகும் எல்லா அரசியல் கட்சிகளையும் ஒழித்துக்கட்டிவிட்டார். அத்துடன் தேசிய சட்டசபையின் இரு சபைகளையும் கலைத்துவிட்டார். அவர் எல்லா ஆளுநர்களையும், நீக்கிவிட்டு அவர்களின் இடத்துக்கு இராணுவ அதிகாரிகளை நியமித்தார். மற்றும் கடந்த வார இறுதியில் 20 ஜனநாயக தீவிரவாத ஆதரவாளர்களைக் கைதுசெய்தார். வார இறுதியில் அபியோலாவின் உதவியாளர் ஈலோ மற்றும் செல்வாக்குள்ள தொழிற் சங்க தலைவர் பிராங்க் கொகோரி உட்பட ஐவர் சிறையில் வைக்கப்பட்டனர்.

அவருக்காக இன்னும் மூன்று விஷயங்கள் உள்ளன. எண்ணெய்த் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தின் மத்தியிலும் தேசம் பொருளாதார நகர்வுக்குப் போதிய எண்ணெயை உற்பத்தி செய்கிறது. அபாச்சா வடபகுதி நகரமான (Kano) கனோவில் பிறந்தவர் அதனால் வட நைஜீரியாவாழ் உயர் குடி முஸ்லிம்களின் ஆதரவு உடையவர். அவர்கள் நாடு சுதந்திரமடைந்த காலந் தொட்டு அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். கடைசியாக அபியோலா மிஸ்ரர் கிளீன் (Mr. Clean) என்பதற்கான தகைமைகள் கேள்விக்குரியன. அவருடைய செல்வத்துக்கான மூலாதாரம் எப்பொழுதும் ஊகத்திற்கிடமானது. அவர் தப்பிப் பிழைப்பதற்கான சுபாவம் இராணுவத்திடம் மிகத் திருப்தியான தொடர்பை வைத்திருக்கத் தூண்டுகிறது. கடந்த வருடப் பிற்பகுதியில் அப்பாச்சா பொதுத்தேர்தலின் பின் அதிகாரத்தைக் கைப்பற்றியதும். எம்.கே.ஒ உபசார விஜயத்தை மேற்கொண்டது. அதன்பிறகு பலமாதங்களாக அபியோலா அமைதியாய் இருந்தார். ஜனநாயக சார்பு சிவில் அமைப்பு மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் அடங்கிய விரிவான கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டபின் மேஇல் தனது மௌனத்தைக் கலைத்துத் தானே ஜனாதிபதி என்று பிரகடனஞ் செய்தார்.

நைஜீரியாவின் வருங்கால ஜனாதிபதி அடுத்த வாரம் நீதிமன்றத்துக்கு மீண்டும் செல்ல வேண்டும். ஒருதலைப்பட்சமாக என். எல். சீ. தலைவர்களை வேலையிலிருந்து நீக்கியதால் பொதுவேலை நிறுத்தப் பயமுறுத்தலைத் தற்காலிகமாகத் தடுத்துள்ளார். ஐக்கிய அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய அரசுகளும் நைஜீரிய எண்ணெய் மீதான தடையைத் தற்சமயம் நிராகரித்த போதும் அபாச்சாவின் தோழர்களால் மட்டுமே அவரைப் பதவியிறக்க முடியும். அபாச்சாவால் தேசத்தின் எண்ணெய் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர இயலுமா என்பது வேறுவிஷயம், லாவோஸில் தங்கியுள்ள இராஜதந்திரி கூறுகிறார்: ''அபாச்சா தன் கைவரிசையைக் காட்டி, கழுகுகளுடன் சேர்ந்து விட்டார் என்று அவருடைய கூற்று சுட்டிக்காட்டுகிறது. ''அவர்தன்னுடைய பலத்தைக் கொண்டு தனது பாதைவழியே எதிர்க்கட்சியைக் கட்டுப்படுத்தி, தான் அதிகாரத்தில் இருக்க எண்ணுகிறார். ''இதுவரை ஒரு யானையும் போரில் கடுமையாக வருந்த வில்லை. ஆனால் புற்களால் மேலும் எவ்வளவுக்கு தாங்க முடியும்'' என்பதாக.

தமிழில்:
திரு. வி. அரியநாயகம்
நியூஸ்வீக், ஒகஸ்ற் 29, 1994

*

அழுக்கும் கிருமிகளும் இல்லா உலகம்

வைத்தியசாலைகளிலும், நூறுவீதம் சுத்தம் பேணப்பட வேண்டிய தொழிற் சாலைகளிலும் பாவிக்கப்படும் ஒரு சாதனம் இப்போது சிறிய உருவத்தில் வீட்டுத்தேவைக்கும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தில் இயங்கும் இக்கருவி அழுக்கை அகற்றுவதோடு சுத்திகரிப்பையும் செய்கிறது. இதுவரைகாலமும் எமது வீடுகளில் பாவிப்பில் இருந்து வந்த வக்கூம்கிளினர் (Vaccum Cleaner) என்ற சாதனத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் இப்புதிய கருவி அழுக்கை அகற்றுவதோடு சுத்திகரிப்பு வேலையும் செய்கிறது. இக்கருவி முதலில் வீட்டுக்குத் தரையிலும், சுவரிலும், தளபாடங்களிலும் காணப்படும் தூசி, ஊத்தை, அழுக்கு யாவற்றையும் உறுஞ்சித் தனக்குள் எடுக்கிறது. இதற்குள் மூன்று தேனீர்க்கோப்பை அளவு சுத்தமான நீரை விட்டால், அது 220 பாகை பரனையிற் சூடுகாட்டி நீராவியாக்கி அழுக்குகளை நீராவிமூலம் சுத்தப்படுத்துகிறது. இது சமையற்கூட அழுக்குகளையும் பிள்ளைகள் விளையாடும் அறைகளையும் சுத்தம் செய்யப் பேருதவி புரிவதாக வீட்டுத் தளபாடச் சஞ்சிகை தெரிவிக்கிறது. இதன் விலை 450 டொலர்.

கண்ணீர் தண்ணீர் கண்ணீர்

"தாகம் தீரத் தண்ணீர் தா"

ருட்சி இனத்தவர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் முடிவுக்கு வந்துள்ளது. பழிவாங்கலுக்குப் பயந்து நாட்டை விட்டு வெளியேறிய ஹூட்டு இனத்தவர்கள் தங்கியுள்ள சயர் நாட்டு அகதி முகாம்களில் நோயின் காரணமாக மரணம் தொடருகின்றது. நாளொன்றுக்குச் சராசரி 2,000 மக்கள் மடிகின்றனர். உதவியாளர்கள் பற்றாக்குறையால் இறந்த உடல்கள் தெருவிலும், திறந்த வெளியிலும் நாட்கணக்காகக் கிடக்கின்றன. இதுவும் நோய்க்குப் பிரதான காரணமாக அமைகின்றது. அமெரிக்கா தொடங்கிப் பிரான்ஸ் உட்பட மேற்கு நாடுகள் யாவும் உணவு, மருந்து, டாக்டர்கள் போன்ற நிவாரண உதவிகளைச் செய்கின்றன. ஆனால் தண்ணீர்ப் பஞ்சத்தால் நிலைமை படுமோசமாக மாறி வருகின்றது. 2 மில்லியன் மக்கள் தீடீரெனப் புதியதோர் நீரற்ற பிரதேசத்தில் குழுமியதே காரணம். இவர்கள் தங்கியுள்ள சயர் நாட்டின் கோமாப் பகுதி முன்பொரு காலத்தில் எரிமலைக் குழம்புமூட்டிய உஷ்ண வலயமாகும். 15 மைல் தொடக்கம் 30 மைல் வரை கால் நடையாகச் சென்று குடிநீர் பெறவேண்டியுள்ளது. அதுவும் அசுத்தமான கலங்கல் நீராகும். கிபும்பா அகதிமுகாமிலும் இதே நிலைதான். இங்கு 250,000 அகதிகள் அடைந்து கிடக்கின்றனர். இதில் 10,000 பேர் ஏற்கனவே இறந்து விட்டனர். மிகுதியானோர் சாகக் காத்திருக்கின்றனர்.

●●●

கியூ வரிசையில் நின்று உணவு நிவாரணம் பெறும் ஹூட்டு இனச் சிறுவர்கள்.

●●●

யுத்த காலத்தில் ஓர் இராணுவ நடவடிக்கை என்ற விதத்தில் நிலைமையைக் கையாளாவிட்டால் அது எம்மை மீறிவிடும் என்றார் அயர்லாந்து நாட்டு வைத்தியர் ஒருவர். இராட்சத விமானங்களில் ஏற்றிவந்து இறக்கப்பட்ட நிலத்தைக் கிளறும் புல்டோசர்கள் செயலிழந்து கிடக்கின்றன. வைரமான இந்த நிலத்தில் புதை குழி வெட்டுவது அவ்வளவு கடினமாக இருக்கிறது உயிர் உள்ளோருக்கு இப்போது தேவை தண்ணீர் தான். எல்லைகளுக்கு அப்பால் மருத்துவ உதவி என்ற பிரஞ்சு நிவாரணக் குழு (இவர்களை எமது பகுதியிலும் காணலாம்) 15,000 லீற்றர் குடிநீரைச் சேமித்து வைத்திருக்கிறது. இது நோயாளர்களுக்கு மாத்திரம் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இதைத் தமக்கும் தரும்படி மக்கள் கலவரஞ் செய்கின்றனர். ஐ. நாவின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் நீரைத் தருவித்துப் பங்கீடு செய்கின்றது. மூன்று பெரும் கொள்கலன்களில் நிரப்பப்பட்ட இந்த நீர் மிகச் சொற்பமாகக் கொடுப்பதும் 20 சதவீதத்தினருக்கு மாத்திரம் போதுமானதாக இருக்கிறது. உடல் எலுவுள்ளோர் தண்ணீர் பெற்றுக் கொள்ளப் பகலில் எறிக்கும் வெயிலையும், இரவில் அடிக்கும் குளிர் காற்றையும் பாராது வரிசையில் நின்றனர். உணவை அள்ளித் தரும் உலக நாடுகள் நல்ல கொள்கலன்களையும், குடிநீரையும் தந்துதவ முடியாதா என்று உதவியாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதற்கிடையில் ஐ. நா. வின் அகதிகளுக்குதவும் அலகு மீதும் கண்டனக் கணை தொடுக்கப்பட்டுள்ளது. ஓர் உலக ஸ்தாபனம் ருவாண்டா அகதிகள் போன்ற பாரிய பிரச்சனையைக் கையாளும் வகையில் தன்னை எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதே பிரதான குற்றச் சாட்டு. ஐ. நாவின் பிரதான நோக்கம் இதுவாக இருத்தல்

வேண்டும் என்பது இன்னும் ஒரு சாராரின் மனக்குறை. உதவி வழங்குவோரின் தாமதமும், உதவிகளில் எமது கூடுதல் முக்கியம் என்ற அறிவுக் குறைவும், கோமா விமான நிலையத்தில் காணப்படும் வசதிக் குறைவுகளும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும். பாரிய பொதி சுமக்கும் விமானங்கள் பெருந் தொகையில் ஏறி இறங்கக்கூடியதாக இந்த நிலையம் கட்டப்படவில்லை. ஐ. நாவின் முதல் வேலை சடலங்களைப் புதைப்பதுதான். அகதிகளில் இருந்தே தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள் நாளொன்றுக்கு 2 டொலர் கூலிக்கு இந்த வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்குச் சிருடைகளும், கையுறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் குழிகள் இல்லாத குறையால் இவர்களுடைய பணி தடைப்படுகிறது.

ஐ. நாவும் அதனுடைய அலகுகளும் வெள்ளைமாளிகை அறிக்கைகளும், அகதிகளை நாடு திரும்பும்படி வற்புறுத்துகின்றன. புதிய ருவாண்டா அரசின் நேர்மை, நாணயம், கண்ணியம் ஆகியவற்றை தாம் உணர்ந்துள்ளபடியால் இவ்வரசின் அழைப்பை ஏற்று நாடு திரும்பும்படி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ருவாண்டாவில் நீர் உண்டு, உணவு உண்டு, புகலிடம் உண்டு என்ற முக்கோண நம்பிக்கையோடு ஒரு சில ஹூட்டு இனத்தவர் நாடு திரும்பியுள்ளனர். இன்னுமொரு சிலர் உடல் வலிமைக் குறைவால் பின் தொடர முடியாது இருக்கின்றனர். பெருந் தொகையான மக்கள் நாடு திரும்புவதற்குத் தடையாக இருப்பது ஹூட்டு பேரினவாதிகள் விடாது கடைப்பிடிக்கும் இனவாத அரசியல் தான். சயரில் ஏறியேறியுள்ள ருவாண்டாவின் ஹூட்டு இன ஆட்சியாளர்களும், இராணுவத்தினரும் தம் இனத்தவர்கள் ருவாண்டாவில் கொல்லப்படுகின்றனர் என்று பொய்ப்பிரச்சாரம் செய்து மக்களை நம்பவைத்துள்ளனர். கொல்லப்பட்ட 5 இலட்சம் மக்களும் ருட்சிகள் அல்ல ஹூட்டு இனத்தவர்கள் தான் என்று அவர்கள் நம்புகின்றனர். ஹிற்லர் யூதர்களைக் கொல்லவில்லை, கொன்றதாகக் கதை கட்டியது யூதப் பத்திரிகையாளர்களே என்று இப்போது ஜேர்மனியில் நவநாசிகள் கூறியிருக்கின்றனர். இரண்டு பிரச்சாரயுத்திகளும் ஒத்தவையாக இருக்கின்றன. இப்போது ஹூட்டு மக்களை திரும்பி வரும்படி அழைத்த ருவாண்டா அரசிடம் முன்னால் ஹூட்டு அரசியல் வாதிகள் தமக்குப் பொது மன்னிப்பும், அரசுரிமையில் பங்கும் கேட்டுள்ளனர். ருவாண்டாவின் தலைவர் போல் ககாமே தாம் பேரம் பேசப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

சயர் நாட்டில் தங்கி ஓர் அணியாக இயங்கிவரும் ஹூட்டு இனத்தவரின் இராணுவம் மக்களைத் தமக்கோர் பாதுகாப்பு அரணாகப் பாவிக்கின்றது. வாகனங்களில் பவனி வரும் இவர்கள் மக்களுக்கு வரும் உணவைக் கொள்ளையடிப்பதுதான் வேலை ஆகும். ருவாண்டாவில் இருந்து சுருட்டிக் கொண்டு வந்த நிதியை அரசியல்வாதிகளும், இராணுவத்தினரும் இப்பொழுது சயர் நாட்டு விடுதிகளில் தங்குவதற்குப் பயன்படுத்துகின்றனர். ஹூட்டு இன இராணுவத்தை சயர் அரசு கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கின்றது இதே மாதிரியானதோர் சூட்டத்தில் 1968 ஆம் ஆண்டு ஜோர்தான் மன்னர் ஹுசெயின் தனது மண்ணில் செயற்பட்டபாலஸ்தீனியம் போராளிகளுடன் போராடி வெளியேற்றியுள்ளார் (உலக உலா ஜூன், ஜூலை 1994) அரசியல் வாதிகளாலும் இராணுவத்தினராலும் எத்தனை காலம் தான் மக்களை நாடு திரும்பாமல் தடுக்கமுடியும்?

ஹூட்டு இராணுவம் இன்னுமொரு யுத்தத்திற்கு தயாராகிவருவது தொகிறது தங்கள் தோல்வி தற்காலிகம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். பிரான்ஸ் போன்ற நாடுகள் தமது களஞ்சியத்தில் துயிலும் ஆயுதங்களைக் கொடுத்து மீண்டுமொரு போருக்கு வழி வகுத்து விடுவார்கள். இதற் கிடையில் ருவாண்டாவில் தியல்பு நிலையைக் கொண்டு வருவதில் புதிய அரசு மும்முரமாக ஈடுபட்டு உள்ளது. ஆட்சிப் பொறுப்பு சமபங்காக இரு இனமித வாதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ஹூட்டு இனத்தவரான ருவாண்டாவில் புதிய ஜனாதிபதி பாஸ்சுவர் பிசிமன்கு, " பெரும் பகுதி ஹூட்டு இனத்தவர்கள் நிரபராதிகள் என்பதை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது யாதொரு பயமும் இன்றி வெளியேறியோர் திரும்பி வரலாம் " என்று கூறியுள்ளார். ஆனால் அரசு பொது மன்னிப்பு வழங்குவதற்குத் தயார் இல்லை என்பது வெளிப்படை. கிராமந் தோறும் இயங்கிய ருவாண்டாப் படையினரும் அவர்களுக்குத் துணையாக இயங்கிய பொது மக்களும் நாடு திரும்பியதும், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவது திண்ணம்.

இரு வாரங்களுக்கு முன் புதிய அரசின் நீதி அமைச்சு தனது உடனடிச் செயல்திட்டத்தை வெளியிட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான குற்றவாளிகள் நீதி மன்றங்களில் முன் நிறுத்தப்படுவர் 22.000 த்திற்கு மேற்பட்ட நிர்வாகத் துறையினர் இன அழிப்பில் ஈடுபட்டதற்கு ஆதாரம் உண்டு. அத்துடன் இராணுவச் சேவையில் இருப்போருக்கு இராணுவச் சட்டப்படி தண்டனை கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது விசாரணைகள் பகிரங்கமாக நடக்கும் என்றும், வெளிநாட்டு பார்வையாளர்கள் வரலாம் என்றும் நீதி அமைச்சு அறிவித்துள்ளது. மேற்கு நாட்டவர்கள் கொங்கோப் பிரதேசத்திற்கு வந்தகாலத்திலும் அதன் பின்பு அதிகாரமும் செல்வமும் ருட்சிகளின் கையில் இருந்துள்ளது. உயர் கல்வியிலும் பொருள் திரட்டுவதிலும் அவர்கள் முனைப்பாக ஈடுபட்டுள்ளனர். இப்போது என்னதான் ஹூட்டு மிதவாதிகளைச் சேர்த்துக் கொண்டாலும் மீண்டும் ருட்சிகளின் பக்கம் நாட்டின் ஆட்சி அதி

காரம் சென்றுவிட்டது என்று பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். இலண்டன் மாநகரில் அலுவலகம் உள்ள ஆபிரிக்க நாட்டவர் குழுவொன்று பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளது: ''ருட்சிகள் எப்போதும் சுயலாபம் தேடுவதில் வல்லவர்கள்; அவர்கள் இன ஒற்றுமையை வளர்ப்பதற்காகக் காட்டுவது தம்மைப் பலப்படுத்துவதே.'' உணவு விஷயத்தில் ருவாண்டா ஒரு தன்னிறைவு உள்ளநாடு. இப்போது அறுவடைக்காலம். மனிதவளம் குன்றிய ஹூட்டு இனத்தவர்கள் வருகை அத்தியாவசியம். அவர்களை வரும்படி புதிய அரசு அழைப்பது நாட்டின் உணவுத் தேவைக்காகவே என்றும் மேற்கூறிய அறிக்கை தெரிவிக்கிறது.

ஜெனரல் போல் ககாமே
(*Gen. Paul kagame*)
ஒரு சொற்சித்திரம்

சட்டவல்லுநரும் பெரும் கல்விமானுமாகிய பாஸ்சுவர் பிசிமன்கு ருவாண்டாவின் புதிய ஜனாதிபதியாகப் பிரகடனப்பட்டிருந்தாலும் நாட்டின் உண்மையான அதிபதி ஜெனரல் போல் ககாமே என்பது உலகறிந்த விஷயம். நெடிய ஒல்லியான உருவமும், அளந்து பேசும் பண்பும் கொண்ட இவர் கெரில்லாப் போர் முறையில் ஒப்புவமை அற்றவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் அவருக்கு வயது 37. ஹூட்டு இனத்தவர்களின் அடக்குமுறைக்கு அஞ்சி இவர் இரண்டு வயதினராக இருக்கும் போதே, இருவருடைய பெற்றோரும், இன்னும் பல ருட்சிகளும் உகாண்டா நாட்டில் தஞ்சம் புகுந்தனர். இவரைப் போன்ற இளைஞர்களே தேசப்பற்றாளர், முன்னணிப் போராளியாவார்கள். இளம் வயதில் கல்வியில் நாட்டங் கொண்ட இவர் உகாண்டாவில் வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் இடிஅமீனின் வன்முறைகளுக்கு உகாண்டா நாட்டு இளைஞர்கள் எதிர் நடவடிக்கை எடுத்த போது இவரால் பார்வையாளராக இருக்க முடியவில்லை. இவருடைய போர் அனுபவம் இடி அமீனின் எதிர்ப்பில் ஆரம்பித்துள்ளது வெகு துரித கதியில் இங்கு முன்னேற்றம் கண்டுள்ளார். இடி அமீன் வெளியேற்றப்பட்ட காலத்தில் இவர் இராணுவப் புலனாய்வுத் துறைத் தலைவராகப் பதவி வகித்துள்ளார்.

ருவாண்டாவில் ருட்சிய இனத்தவர் மீட்சிக்காக லெப்ரினன்ட் ஜெனரல் பிறெட் ருஷகியேமா ஓர் இயக்கத்தை ஆரம்பித்த போது, அதில் இவர் இணைந்து கொண்டார் இவருடைய எதிர்காலப் பெறுமதியை உணர்ந்த இயக்கத்தினர் அமெரிக்காவின் கன்சாஸ் மாகாண இராணுவ அதிகாரிகள் கல்லூரிக்கு இவரை அனுப்பி வைத்தனர். இதனால் 1990 ஆம் ஆண்டு பிறெட் ருஷகியேமா தலைமையில் நடந்த ருவாண்டா மீதான தாக்குதலில் இவர் பங்கு ஏற்கமுடியாமல் போய் விட்டது. இப்போரில் ருஷகியேமாவும் நூற்றுக்கணக்கான போராளிகளும் உயிரிழந்தனர். படிப்பை இடையில் நிறுத்திவிட்டு ககாமே நாடு திரும்பினார். சின்னபின்னமாகிய தேசப்பற்றாளர் முன்னணியை ஒன்று சேர்ப்பதே இவருடைய தலையாய பணியாகியது. இப்போது பெண்களுக்கான அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அலோசியா இன்யும்பா பின்வருமாறு நினைவு கூருகிறார்: ''படுதோல்வி கண்ட எமக்கு புத்துயிர் கொடுத்தவர் ககாமே. போராடுவது துவக்கல்ல மன உறுதி தான் என்று எப்போதும் கூறுவார்'' மேற்கூறிய பத்திரிகையாளர்கள் இவரிடம் ஒரு குறை கண்டுள்ளனர். வெறும் வாயுள்ள உலகத் தலைவர்கள் மத்தியில் அவர் ஓர் அதிசயப்பிறவி. தனது செயல் திறனை மாத்திரம் தன் சார்பில் பேச வைத்துள்ளார். நேர்காணலுக்கு காத்திருக்கும் பத்திரிகையாளர்களுக்கு இது போதவில்லை. நாட்டைக் கட்டியெழுப்புவதை விட வேறொன்றையும் அவர் பேசத் தயாரில்லை. நசுக்கப்படும் சிறுபான்மை இனத்தவர்கள் யாபேருக்கும் இவர் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

நரம், நியூஸ்வீக், ஒகஸ்ட் 8, 1994

பெயரில் என்ன இருக்கிறது?

ஒரு முஸ்லிம் மதப்பிரிவினரான அர்குவாம் தனது அடையாளத்தில் சந்தைக்கு விடும் பொருள்களை விற்கமலேசியாவின் கடைக்காரர்கள் அஞ்சுகின்றனர். ஏனெனில் அந்த முஸ்லிம் பிரிவு மலேசியாவில் சட்டவிரோதமாக்கப் பட்டுள்ளது. ஆனால் அந்த முஸ்லிம் மதப்பிரிவு தனது உற்பத்திகளைச் ''சால்வா'' என்ற புதிய பெயரடையாளத்தில் இப்பொழுது சந்தைப்படுத்துகிறது. அது கடைக்காரர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ என்று சொல்லமுடியாவிட்டாலும் அவர்கள் அவற்றை இப்பொழுது விற்கின்றனர். தடைச்சட்டத்தையும், பொலிசாரின் அமுலாக்கலையும் மாற்றவென்று அதே பொருள்கள் புதிய பெயரில் சந்தைக்கு வருகின்றன. ஆனால் அந்த முஸ்லிம் மதப்பிரிவின் உணவு உற்பத்திகளும் இஸ்லாமியச் சட்டப்படி ஹலாலான (ஏற்கப்பட்ட) முறையில் தான் தயாராகின்றன.

மொசாம்பிக்

வாக்குச்சீட்டுக்கள் இறந்தகாலத்தைப் புதைத்துவிடுமா?

காயங்கள் மாறலாம்; ஆனால் தேர்தலுக்குப்பின் சமாதானம் நிச்சயமன்று.

மாறற்றோஸிலிருந்து, ஸ்கொற் மக்லியோட் எழுதியது.

ஐந்து இலட்சம் மொசாம்பிக் குடிகளின் உயிரைக் குடித்த உள் நாட்டுப் போரின் தின்னங்கள் எங்கும் தெளிவாகக் காணப்படுகின்றன. குண்டுகள் துளைத்த முகத்தளும்புகள், பிச்சை ஏற்க நீட்டிய கைகள், நிலக்கண்ணிவெடிகளினால் இழந்த கால்கள் ஆகியன கடந்த காலப் போரின் கொடுமையைப் பறை சாற்றுகின்றன. ஆனால் கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்து கிடக்கும் புண்களே மிக அதிகம். சேர்ஜியோ முஸ்ஸாகேற்றே அவன் 14 வயதுள்ள ஒரு சிறுவன். அவன் நெஞ்சில் ஆழப் புதைந்து கிடக்கும் புண்ணை எப்படி மாற்ற முடியும்? அவன் அன்னை மாரிகால மாலைப் பொழுதில் சமையல் செய்து கொண்டிருந்தாள். 1991 இல் றெனாமோ கெரில்லாக் குழு ஒன்று வீட்டில் நுழைந்து 2 குழந்தைகளையும், பெற்றோரையும் கொன்று அப்போது 12 வயதுச் சிறுவனைத் தம் முகாமில் அடிமைப் போர் வீரனாக ஊழியம் செய்ய அழைத்துச் சென்றனர்.

17 ஆம் ஆண்டு நிகழ்ந்த உள் நாட்டுப் போர் 1992 இல் சற்று ஒய்ந்தது. மார்க்சிய அரசாங்கம் வலது சாரிப் புரட்சியாளரை அடக்க முனைந்த போது தென்னாபிரிக்க வெள்ளை அரசு றெனாமோ கெரில்லாப் படைகளை ஆதரித்தது. அரசாங்கமும், கெரில்லாக்களும் சமாதான ஒப்பந்தம் எழுதினர். ஆனால் சேர்ஜியோ போன்ற 50,000 சிறுவர்கள் பெருந் துன்பத்தில் ஆழ்ந்தனர். பழைய நிலைவுகள், பெற்றோரை இழந்த துயரக் காட்சிகள் மீண்டும், மீண்டும் நினைவுக்கு வருகின்றன. அவர்களின் வருங் காலம் எப்படியோ? கண்களில் நீர் முட்ட சேர்ஜியோ கூறுகிறான்: ''நான் உறவினருடன் சேர்ந்தும் பழைய பயங்கர நினைவுகள் மாறவில்லை. அதற்காக நான் பழி வாங்கப் போவதில்லை. பாடசாலைக்குப் போக வேண்டும்''என.

மீண்டும் ஒற்றுமையுற்ற மொசாம்பிக் சேர்ஜியோவின் மாதிரியைப் பின்பற்றலாம். ஒக்ரோபரில் வாக்கெடுப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தென்னாபிரிக்காவைப் பின்பற்றி தேர்தல் மூலம் தேசிய ஒற்றுமைக்கு வழி செய்யப் படுமா? அல்லது அங்கோலாவைப் பின் பற்றி 1992 இல் நிகழ்ந்த (தேர்தல்) போட்டி மீண்டும் உள் நாட்டுப் போர் மூளக் காரணமானது போல மீண்டும் பூசலில் குதிக்குமா? மொசாம்பிக் இரு பகுதியும் களைத்து விட்டன. சென்ற யூலை மாதம் அரசாங்கப் போர் வீரரும், கெரில்லாப் போராளிகளும் போரை நிறுத்திக் குடி வாழ்க்கைக்குத் திருப்ப ஏற்பாடு செய்யும் படி வலியுறுத்தினர். மாபுற்றோ தலை நகரிலுள்ள தொடர்புச் சாதன வெளியீட்டகத்தின் ஆசிரியராகப் பணிபுரியும் கார்லோஸ், கார்டோசோ கூறுகிறார்: ''ஒரு பக்கத்து அரசியல் வாதிகளும் மீண்டும் போருக்குப் போவால் மக்கள் சிரிப்பார்கள்'' என்று.

ஆய்வுகள் நடுநிலையான வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்வது கடினம் எனக் காட்டுகின்றன. 1975 இல் சுதந்தரம் பெற்றது முதல் கஷ்டங்களையும், இழப்புக்களையும் அனுபவித்த மொசாம்பிக்கர்கள் எதிர்ப்புக் கூச்சலிடும் மனோநிலையில் தான் இருக்கின்றனர். இது ஜனாதிபதி ஜோக்கிம் சிஸ்ஸானோவுடைய ஃபிறெலிமோ கட்சியினை எதிர்க்கும் பலர் அக் கட்சியின் கடந்தகால ஊழல், மார்க்சியக் கொள்கைகள் தொடர்

பாகத் தண்டிக்க விரும்புகின்றனர். தேசிய பொருளாதாரத்தை வழிபாட்டுரிமையை மறுத்தும், பழங் குடிகளின் பாரம்பரியப் பழக்கங்களைக் கலைத்தும், மக்கள் வெறுப்பை அரசாங்கம் சம்பாதித்தது. அதன் தலைவர் 1987 இல் சோசலிசத்தைப் படிப் படிப்படியாகக் கைவிட அரசாங் கம் தீர்மானித்ததால் ஏற்பட்ட பணவீக்கத்துக்கும் அரசாங்கத் தையே மக்கள் குறை சொல்கின்றனர்.

றெனாமோ கொடுங்கோலைத் தொழிலில் கூசாது ஈடுபட்ட கெரில்லாக் கும்பல் என்ற பழியைக் கழுவுவதில் சங்கடம் உண்டு. ஆனால் அரசாங்க தரப்புப் போர் வீரரும் கொடுமை செய்ததாகப் பலர் கருதுகிறார்கள். றெனாமோ தான், அரசாங்கம் ஜனநாயகத் துக்குத் திரும்பும்படி அழுத்தம் கொடுத்தது என்ற புகழ் மாலை யைத் தயக்கத்துடன் சூட்டுகின்ற வர்களும் உளர். கற்றெம்பே உயர் நிலைப் பள்ளியின் அதிபர் ஒருவர் கூறுகிறார்: ''கொலைஞர்களுக்கு சில சிறப்பியல்புகள் இருக்கலாம் தானே'' என்று.

றெனாமோத் தலைவர் அஃபொன்சோ டலக்காமா தாம் இரக்கமற்ற புரட்சியாளன் நிலையை விட்டு ஜனநாயகப் பாதைக்குத் திரும்புவதாக வாக் களித்துள்ளார். ஒரு நேர்முகத்தில் போது தோற்றாலும், வென்றாலும் தேர்தல் முடிவை ஏற்பீரா? என்று கேட்டதற்கு அவர் உறுதி கூற மறுத்தார். ஆனால் மீண்டும் போருக்குப் போவதில்லை என்றார். நாம் வென்றால் ஆளும் ஃபிறெலிமோ கட்சியினரையும் தேசிய ஒற்றுமை அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ள விருப்புவதாகக் கூறினார். ''என் கருத்து அதிகாரத்தைக் குவித்து வைப்பதன்று, நிலைப்பற்றான ஆட்சியை ஏற்படுத்துவதே'' என்றார்.

5,000 உறுப்பினர் கொண்ட ஐ. நா. குழு நாடு ஜனநாயகப் பாதையில் செல்ல உதவுகின்றது. அவர்கள் கருத்துப்படி அரசாங் கமே இதற்கு இடையூறு செய்ய லாம். சிஸ்ஸானோ தமது படைகளைக் கலைப்பதை ஆமை வேகத்தில் செய்வது பலருக்கு ஐயத்தை உண்டாக்குகிறது. திட்டப்படி வருங்கால மொசாம்பிக் படையில் 30,000, போர் வீரர் இருப்பர். இதில் முன்னை நாள் ஃபிறெலிமோ, றெனாமோ போர் வீரர் கள் இடம் பெறுவர். ஆனால் ஜனாதிபதி தமது படையில் 50,000 பேரை வீடு திரும்பாமல் வைத்திருக்கிறார். றெனாமோவில் 2,000 பேர் மட்டுமே ஆயுதங் களுடன் இருக்கின்றனர். ஐ. நா. அரசாங்க உள் நோக்கம் பற்றி ஐயுறுவதில் வியப்பில்லை.

சில மேற்கத்திய இராஜதந் திரிகள் ஆளும் மார்க்சிய வாதி களில் தடித்தகொள்கையாளர்கள் தேர்தல் முடிவு எப்படி வரினும் ஆட்சி அதிகாரத்தைக் கைவிட விரும்பவில்லை எனக் கருதுகின்றனர். அமெரிக்க தூதுவர் டெனிஸ் ஜெற ஜூலை மாதம் மெல்லிய எச்சரிக்கை விடுத்தார்: ''யார் சமாதானத்தை நிலைநிறுத்த முயல்கின்றனர்? யார் அதனைக் குழப்புகின்றனர்? என்ற வினாக் கூள வாக்காளர் எழுப்புவர்'' என. இது சிஸ்ஸானோ அரசாங்கத் துக்கு ஆத்திரத்தை உண்டாக்கி யது. ஒகஸ்ற் நடுப்பகுதியில் ஐ நா. பாதுகாப்புச் சபையின் உண்மை காண் குழுவில் ஒன்பது பேர் நைஜீரிய நாட்டு இப்ராஹிம் காம்பரியின் தலைமையில் வந்தனர். அவர்கள் இரு பகுதியினருக் கும் ஐப்பசித் தேர்தல் நாளை பின் போடுவதிலுள்ள ஆபத்தை விளக்கினர். ''சர்வதேச சமூகத் தின் பொறுமை எல்லையற்றது எனக் கருதலாகாது'' என்றார்.

மொசாம்பிக்கில் ஐ. நா. சிறப்புப் பிரதிநிதியாயிருப்பவர் அல்டோ, அஜெல்லோ இரு கட்சி யினரையும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் சமாதான உடன் படிக்கைக்குச் சம்மதிக்கச் செய்ய முயல்கின்றார். ''அப்படி ஓர் உடன் படிக்கை இல்லாமல் தேர்தல் பிரச்சாரம் பயங்கரக் கன வாக விடலாம். தேர்தலில் தோற்ற கட்சி உயிருடன் நிலைத்திருக்கும் என்பது நிச்சயமன்று. இந் நாட் டின் கலாசாரத்தில் எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்கலாம் என்ற சிந்தனையே இடையாது'' என் கிறார்.

மொசாம்பிக்கின் பொருளா தாரம், கடல் உணவுகள், பருத்தி, சுகுக்கொட்டை ஏற்றுமதியில் தங்கி யிருக்கிறது. தலைக்கு 60 டொலர் மட்டும்தான் நாட்டின் வருமானம். இது உலகின் மிகக் குறைந்த தொகை. இந்த நிலையில் அந் நாட்டு மக்கள் எதற்காகப் போராட வேண்டும் என்ற வினா எழும். நீண்ட காலமாக நிகழ்ந்த உள் நாட்டுப் போரின் புண்களை ஆற விடாமற் செய்தால் வருங் காலச் சமுதாயம் இதிலும் குறைந்த தேசிய வருமானத்தைத் தான் ஏற்று உடலில் உயிரை வைத்தி ருக்க வேண்டிவரும்.

தமிழில்:
நிரு. சபாரட்ணம்

சரம், ஒகஸ்ட் 22, 1994.

அமெரிக்கா

கியூபாவில் நெருக்கடி

ஒக்ரோபர் 28, 1492இல் முதன் முறையாக கியூபாத் தீவின் வடகரையைக் கண்ணுற்ற கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் ''இதன் அழகுடன் ஒப்பிடப் பிறி தோர் இடம் இப்புவியில் இல்லை'' என்று குறிப்பிட்டுள்ளார். 4-ம் நூற் றாண்டுக்குப்பின் இன்று பெருந் தொகையான கியூபாக் குடிமக்கள் உயிராபத்தையும் பொருட்படுத்தாது தமது நாட்டை விடுத்து அமெரிக் காவை நோக்கி ஓடுகின்றனர். 750 மைல் நீளமும், சராசரி 60 மைல் அகலமும் கொண்ட கியூபா கரிபி யன் கடலில் மிகப் பெரிய தீவா கும். இத்தீவின் வடக்குப் பகுதியை யும், அமெரிக்காவின் புளொரிடா மாகாணத்தையும் 92 மைல் அகலக் கடல் பிரிக்கிறது. கரும்பும், புகையி லையும் கியூபாவின் இரண்டு பிர தான ஏற்றுமதிப் பயிர்களாகும். பசுமையான பூமியானபடியால் பல விதமான பழ வகைகளும், கணிச மான அளவு நெல்லும் இங்கு பயி ரிடப்படுகின்றன. சீனித் தொழிற் சாலைகளும், கருப்பஞ் சாற்றிலும் சக்கையிலிருந்தும் மதுபானம் தயா ரிக்கும் வடிசாலைகளும் இங்கு பெருமளவிற் காணப்படுகின்றன. கடலாற் சூழப்பட்ட நாடானபடியால் மீன்பிடித்தொழிலும், தகரமீன் ஏற் றுமதியும் குறைவிலாது நடைபெறு கின்றன. ஆனால் கியூபாப் பொரு ளாதாரம் பிரதானமாக அதன் சீனி, சுருட்டு ஏற்றுமதியில் தங்கியுள்ளது. இக்காரணத்தாலும், பிற சர்வதேச அரசியற் காரணங்களாலும் கியூபா மிக மோசமானதொரு நிலைக்கு வந்துள்ளது. பெசோ எனப்படும் கியூபா நாணயம் செல்லாத காசாகி விட்டது.

பொருளாதார நிபுணர்களின் கணிப்பில் ''கியூபாவின் பொரு ளாதாரம் இன்னுமொரு படி கீழுக்குப் போவதற்கு மேலும் இடமில்லை.'' அதாவது அது தரை தட்டிவிட்டது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி யால் கியூபாவின் மொத்த வருமானம் மூன் றில் ஒன்றாகச் சுருங்கி விட்டது. நாட்டிற்குத் தேவையான உண வின் இறக்குமதி 75 சத வீதமா கக் குறைந்துள்ளது. கியூபாவின் இன்றைய இக்கட்டான நிலைக்கும், மக்களின் கஷ்ட வாழ் வுக்கும்சோவியத் ரஷ்யாவின் மறைவே கார ணமாகும். அடிப்படை மாற்றங்களைச் செய்ல தற்கு கஸ்ரோ அஞ்சுகி றார். எனினும் அமெரிக்க டொலர் தாளோ நாண யமோ வைத்திருப்பது பெருங் குற்றம் என்ற விதியை அண்மையில் வாபஸ் வாங்கியுள்ளார். தனியார் வேலைகொடுப் பதும், அவ்வேலையை ஏற்பதும் சில துறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சீர்திருத்தங் களை அவர்தொடர முடி யாமல் சென்ற வருடம் நடந்த சில கசப்பான நிகழ்வுகள் தடுத்துள்ளன. வசதி குறைந்த கியூபா வாழ் மக்கள் வசதி உள் ளவர்களின் சொத்துக் களைப் பகிர்ந்தளிக்கும் படி கோரியுள்ளனர். ஒரு பொதுவுடைமை நாட்டில் இக்கோரிக்கை எழுந்ததே

பயத்தில் அலறும் பெண்கள்
நடுக்கடல் காட்சி

அமெரிக்காவின் 32 வருட கால பொருளாதாரத் தடையைத் தகர்க்க, கியூபாவின் கட்டுக்கடங்காத அகதிகள் வெள்ளம் அமெரிக்காவை நோக்கிப் பெருக்கெடுத்துப் பாய்கிறது கஸ்ரோவின் இராஜதந்திரம் பலிக்குமா? பொருளாதாரத்தடை நீங்குமா?

முதலாவது ஒழுங்கீனம். உணவுப் பங்கீட்டு அடிப்படைகள் மூலம் கொடுக்கப்படும் உணவு மக்களுக்கு இரண்டு வாரத்திற்கு மாத்திரம் போதுமானதாக இருக்கிறது. மக்கள் தங்கள் தேவைகளுக்குப் பெரும்பாலும் கறுப்புச் சந்தையை நம்பியிருக்கின்றனர். ஆனால், அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் மிகக் குறைவு. அவர்களுடைய நாணயத்தின் கொள்வனவு ஆற்றலும் அதிகம் குறைவு. ஒர் அமெரிக்கடொலர் பெறுமதியான 150 பெசோ ஒரு சராசரி குடும்பத்தின் அரைமாத வருமானமாகும். சுருக்கமாகக் கூறின் நாட்டின் பற்றாகுறையும் பஞ்சமும் நிலவுகின்றன.

பொதுவுடைமைவாதியான டாக்டர் பிடெல் கஸ்ரோ 1959 ஆம் ஆண்டில் கியூபாவின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளார். தனது கொள்கை முன்னெடுப்பின் காரணமாகக் கியூபாவில் காணப்பட்ட பெருந்தொகை அமெரிக்க முதலீடுகளை உடனடியாகத்தேசிய உடைமை ஆக்கியுள்ளார். இந்த ஒரு தலைப்பட்ச நடவடிக்கை அமெரிக்கர்களுக்குப் பெருத்த அவமானமும், நட்டமும் ஏற்படுத்தியுள்ளது. கஸ்ரோ பதவிக்கு வந்த ஐந்து வருட காலத்திற்குள் இரு நாடுகளுக்குமிடையில் மிக மோசமான முறுகல் நிலை தோன்றியுள்ளது. வியற்நாமும், அமெரிக்காவும் வர்த்தகத் தொடர்புகளை ஆரம்பித்து விட்டன. வட கொரியாவும், அமெரிக்காவுடன் பேசுவதற்குத் தயாராகியுள்ளது. ஆனால் கியூபா அமெரிக்க உறவுகள் சீரடையும் சாத்தியக் கூறுகள் ஒன்றுமே தென்படவில்லை. அமெரிக்கா சோவியத் ருஷ்ய வல்லரசுப் போட்டிகள் நிகழ்ந்த காலத்தில் அமெரிக்காவுக்கு அண்மையில் இருந்தபடி ருஷ்யாவின் நண்பனாகக் கஸ்ரோ செயற்பட்டுள்ளார். மூன்றாம் உலக நாடுகளுக்கும், அமெரிக்காவின் எதிரிகளுக்கும் கஸ்ரோ ஒரு தீரனாகத் தோற்றலாம். ஆனால் அமெரிக்காவைப் பொறுத்தளவில் கஸ்ரோ ஒரு விரும்பத்தகாத மனிதன் பணிப்போர் செலவாக, நெடுங்காலமாகச் சோவியத் ருஷ்யா கஸ்ரோவுக்குக் கொடுத்து வந்த 6 பில்லியன் டொலர் நிதி உதவியை கஸ்ரோ தமக்கெதிராகச் செய்த ஜூடொஸ் வேலையின் பரிசாகவே அமெரிக்கா கணித்துள்ளது. இந்த உதவி இன்று நின்று போனதும் அமெரிக்க உதவியை நாடவேண்டிய கட்டாயம் கஸ்ரோவுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் அமெரிக்கா அவரை மன்னிக்கத் தயாராகவில்லை.

1960 ஆம் ஆண்டு பதவியேற்ற நாட்தொட்டு நவம்பர் 1963 இல் படுகொலை செய்யப்படும் வரை அமெரிக்க அதிபர் ஜோன் கெனடி, கஸ்ரோ எதிர்ப்புக் கொள்கையை



வழி நடத்தியுள்ளார். அமெரிக்காவில் குடியிருந்த கஸ்ரோவின் எதிரிகளை ஒன்று திரட்டி ஆயுதமும், பயிற்சியும் வழங்கி 1961 ஆம் ஆண்டு ஒரு தாக்குதல் அணியாகக் கியூபாவுக்கு கெனடி நிர்வாகம் அனுப்பியுள்ளது. பன்றிக்குடாத் தாக்குதல் என வர்ணிக்கப்படும் இப்படையெடுப்பு படு தோல்வியில் முடிந்த தோடு கெனடியின் வரலாற்றைக் கறைபடியச் செய்துள்ளது. இன்று மொரு நடவடிக்கைகெனடி அரசுக்கு இழுக்குத்தேடித் தந்துள்ளது. கியூபாவிலிருந்து தப்பியோடுவோர் கடத்திக்கொண்டு வரும் விமானங்களை விற்பனையில் விட்டு அமெரிக்கர்களுகுச் சேரவேண்டிய பணத்தின் ஒரு பகுதியாகக் கெனடி அதிகாரிகள் கணக்கு வைத்துள்ளனர். இது சர்வதேச நடைமுறைக்கு முரணானதாகும் அத்துடன் இது இரண்டு தசாப்தங்களாக உலகெங்கும் பெருமளவில் நடந்த விமானக் கடத்தல்களுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது. (உலக உலா மே 1994) அத்துடன் சி-ஐ-ஏ- உளவு ஸ்தாபனம் கஸ்ரோவைக் கொலை செய்வதற்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. 1962 ஆம் ஆண்டு இருநாட்டு நட்புறவின் காரணமாகச் சோவியத் ருஷ்யாவின் அணு ஆயுதம் பொருத்தப்பட்ட ஏவுகணைகள் கியூபாவில் பொருத்தப்பட்டுள்ளன இதற்குக் கெனடி கடும் ஆட்சேபந் தெரிவித்த தோடு கியூபாவை நோக்கி வரும் ருஷ்யக் கப்பல்களை மறித்துச் சோதனையிடுப்படி அமெரிக்கக் கடற்படையைப் பணித்துள்ளார். அக்காலத்தில் சோவியத் ருஷ்யத் தலைவராக இருந்த நிகிற்றா குருஸ்சேவ் இதற்குப் பதிலடி கொடுப்பார், போர் மூளும் என்றெல்லாம் பயந்தவர்கள் சோவித் ருஷ்யா தனது ஆயுதத் தளபாடங்களை மீளப்பெற்றவுடன் நிம்மதி அடைந்தனர்.

99 வருடக் குத்தகை ஒப்பந்தத்தின்படி கியூபாத் தீவின் தெற்குக் கரையோரத்திலுள்ள குவான்தனமோ குடாவில் தனது கப்பற் படைத் தளத்தை அமைக்கும் அங்கு கப்பல்களையும், படையினரையும் நிறுத்தவும் அமெரிக்காவுக்கு உரிமை



உண்டு. கஸ்ரோ ஆட்சியைக் கைப் பற்ற முன்பே இந்த ஒப்பந்தஞ் செய்யப்பட்டுள்ளது. இன்றும் அமெரிக்கக் கடற்படை மேற்கூறிய குடாவில் நிலை கொண்டுள்ளது. தங்கள் நாட்டை விட்டு விலகும்படி கஸ்ரோ பல முறை கேட்டுக்கொண்டும் அமெரிக்கா இதற்குச் செவி மடுக்க வில்லை. இரு நாட்டு முரண்பாடுகளுக்கு இதுவும் ஒரு காரணம். 1963 இல் கெனடியின் கொலையைத் தொடர்ந்து இருநாட்டு உறவுகளும் படுமோசமடைந்துள்ளன. தனக்கெதிராக சி. ஐ. ஏ. எடுத்த கொலை முயற்சிகளுக்குப் பதிலடியாகக் கஸ்ரோ கெனடியைக் கொலைசெய்வித்துள்ளார் என்று நம்பும் அமெரிக்கர்கள் இன்றும் உளர். கெனடிக்குப் பின் அதிபராக வந்த லின்ரன் ஜோன்சன் நியமித்த அமெரிக்கப் பிரதம நீதியரசர் ஏர்ன் வாரன் தலைமையிலான ஆணைக்குழு கெனடிக் கொலையில் கியூபாத் தொடர்பைக் கண்டு பிடிக்காவிட்டாலும் சந்தேகங்கள் சாக மறுக்கின்றன. ''இலட்சக்கணக்கான கியூபா மக்கள் அகதிகளாக அமெரிக்கா வருவதிலும் கஸ்ரோ என்ற ஒரு மனிதர் கியூபாவை விட்டு அகல்வது வரவேற்கத் தகுந்தது'' என்று அண்மையில் ஓர் அமெரிக்க நிர்வாக அதிகாரி கூறியுள்ளார். கஸ்ரோவை எவ்வளது தூரம் அவர்கள் வெறுக்கிறார்கள் என்பதை இது காட்டப் போதுமானதாகும்.

32 வருடங்கள் நீடிக்கும் அமெரிக்கா, கியூபா மீது விதித்த பொருளாதாரத் தடை உலகின் மிக நெடியதும், இறுக்கமுள்ளதுமாகும். இத்தடையின் கீழ் கியூபாவுடன் யாதொரு வர்த்தகத் தொடர்புகளும் அமெரிக்க நிறுவனங்களோ, தனி மனிதர்களோ வைத்திருக்க முடியாது. வேறு நாடுகளிலிருந்து கியூபாவுக்குப் பொருள்கள் கொண்டு வரும் கப்பல்கள் தொடர்ச்சியாக 6 மாதங்களுக்கு அமெரிக்காவுக்கு வர முடியாது. கியூபாவுக்குப் போக்கு வரவு செய்யும் அமெரிக்கர்கள் கண்காணிக்கப் படுவார்கள். சதாம் ஹுசெயினுக்கு எதிராக ஐ. நா விதித்த தடைகள் இவ்வளவு மோசமாக இருக்கவில்லை. மனிதாபிமான காரணங்களுக்காக ஈராக் மருந்து வகைகளும், உணவும் அமெரிக்காவிடமிருந்தும், பிற ஐ.நா. ஸ்தாபனத்துவ நாடுகளிடமிருந்தும் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் கியூபா அமெரிக்காவிடமிருந்து மேற்கூறியவற்றை எக்காரணம் கொண்டும் வாங்க முடியாது. கியூபாவில் உள்ள நண்பர்களுக்கும், உறவினருக்கும் அன்பளிப்புச் செய்

வதற்கு விதிவிலக்கப்பட்டுள்ளது. பொதுவுடமை நாடுகளின் உதவி இருக்கும் வரை தடைகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால் இப்போது அவை பலத்த அடியாக விழுந்துள்ளன.

பொருளாதாரத் தடைகளை முறியடிப்பதற்கும் அமெரிக்க அரசை ஓர் இணக்கத்திற்கு வரச் செய்வதற்கும் கியூபா அதிபர் கஸ்ரோ எடுத்த அதிரடி நடவடிக்கை அமெரிக்காவைத் தடுமாறச் செய்துள்ளது. பெருந் தொகையான கியூபா மக்கள் அகதிகளாக அமெரிக்கா போய்ச் சேரும் வரையில் கஸ்ரோ கூட்டைத் திறந்து விடுமாற் போல மறைமுக அனுமதி வழங்கியுள்ளார். இதனால் உயிர் போனாலும் பரவாயில்லை, வெளியேறினால் போதும் என்ற சிந்தனையுடன் மக்கள் ஆயிரக்கணக்கில் அமெரிக்காவை நோக்கிப் புறப்பட்டுள்ளனர். இதனால் இரண்டு அனுகூலங்கள் கஸ்ரோவுக்குக் கிடைப்பதாகப் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். ஒன்று பசி பட்டினியால் தனது நாட்டில் உள்ளோரை வெளியேற விடுவதால் தற்காலிக நிம்மதி கிடைக்கின்றது, இரண்டு பந்தை அமெரிக்கா பக்கம் அனுப்புவதால் கியூபாவுக்கு விடிவு காலம் வரும் என்ற எதிர்பார்ப்பு. இதை நன்குணர்ந்த வெளியுறவு அலுவலக அதிகாரி ஒருவர் பின்வருமாறு கூறியுள்ளார்: ''கஸ்ரோ தன்னுடைய பிரச்சனைகளை மற்றவர்களுடைய தலையில் கட்டுவதிலவல்லவர்'' என. பொதுவுடமையாகக் கைலாசம் என்று வர்ணிக்கப்பட்ட கியூபாவை விட்டு மக்கள் வெளியேறுவது வெட்கக்கேடு என்றாலும் கிளின்ரனை நெருக்கடிக்கு உட்படுத்திப் பொருளாதாரச் சலுகைகள் பெறுவதில் கஸ்ரோ குறியாக உள்ளார்.

1980 ஆம் ஆண்டு கார்ட்டர் அமெரிக்க அதிபராக இருக்கும் காலத்தில் இதே தடை முறையைக் கஸ்ரோ பின்பற்றி 125,000 கியூபா மக்களை அமெரிக்காவுக்கு அனுபபியுள்ளார். செய்வதறியாது தவித்த கார்ட்டர் எல்லோருக்கும் பிரஜா உரிமை கொடுத்துள்ளார். கார்ட்டரின் தோல்விக்கு இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது. 1996 ஆம் ஆண்டு அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வர இருக்கின்றது. மீண்டும் போட்டியிட விருப்புடைய கிளின்ரன் கார்ட்டரின் பிழையை விடமாட்டாரென்பது திண்ணம். அமெரிக்கத் தொலைக் காட்சியில் தோன்றிய கிளின்ரன் அகதிகள் வருகையைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்: ''எமது உள்நாட்டு விவகாரங்களில் கஸ்ரோ தலையிடுகின்றார். எமது குடிவரவுக் கொள்கைகளையும், பொருளாதார விதிகளையும் கியூபாவின் விருப்பத்திற்கு எம்மால் மாற்ற முடியாது.'' அமெரிக்காவின் குடிவரவுச் சட்டங்களின்படி அகதிகளாக வருவோர் முகாங்களில் வைத்துப் பராமரிக்கப்பட்டு அவர்களுடைய தகைமை ஆரோக்கியம் போன்ற சகல விடயங்களும் ஆராய்ந்த பின்பே தங்க அனுமதி அளிக்கப்படுவர். ஆனால் கடந்த 30 வருடங்களாகக் கியூபா மக்களுக்கு மாத்திரம் இந்த விதிகளின் பிடியிலிருந்து அமெரிக்கா விதிவிலக்கு அளித்து வந்துள்ளது. இப்போது முதன்முறையாக இந்தச் சலுகை மீளப் பெறப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது கியூபாவிலிருந்து வரும் அகதிகள் யாவரும் அமெரிக்க அகதி முகாங்களில் தங்க விடாது கியூபாத் தீவின் தென் கரையில் அமைந்துள்ள அமெரிக்க கடற்படைத் தளத்தில் போடப்பட்ட முகாங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அமெரிக்காவில் சுகபோகம் அனுபவிக்கலாம் என்ற ஆசையில் கிளம்பியவர்களுக்கு இது அதிர்ச்சியூட்டும் மாற்றந் தான்.

சென்ற தேர்தல்களில் புளொரிடா மாகாணம் கிளின்ரனுக்கு எதிராகவே வாக்களித்துள்ளது. ஆகையால் கியூபா அகதிகள் பிரச்சனையில் கிளின்ரன் மிகவும் எச்சரிக்கையாக நடக்கவேண்டியுள்ளது. இப் பிரச்சனைக்கு அடிப்படை பொருளாதாரத் தடைதான். தடைகளை நீடிப்பதா, அல்லது அகற்றுவதா என்பதே கிளின்ரன் தீர்மானம் செய்ய வேண்டிய முக்கிய விடயமாகும். அகற்றுவது சோவியத் குஷ்யாவின் வீழ்ச்சி போன்று கஸ்ரோவின் வீழ்ச்சியும் நிகழும் என்பது சில ஆலோசகர்களின் அபிப்பிராயம். இன்னுமொரு சிலர் இன்னும் கூடுதலான தடைகளைக் கொண்டு வந்தால் மக்கள் கிளர்ந்தெழுந்து கஸ்ரோவைத் துரத்திவிடுவார்கள் என்கின்றனர். கிளின்ரன் இரண்டாவது ஆலோசனையை ஏற்றுள்ளார். மக்கள் வெள்ளத்தை அனுப்பி அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளை உடைப்பதற்குக் கஸ்ரோ வகுத்த திட்டம் வெற்றி அழிக்கவில்லை. ஒரு விதத்தில் கிளின்ரனின் கியூபாக் கொள்கை கியூபா மக்கள் கரைசேரும் புளொரிடா மாகாணத்தின் அரசியல் நிலையைப் பிரதிபலிக்கின்றது. இந்த மாகாணத்தில் பல வருடங்களுக்கு முன் வந்து குடியேறிய கியூபா மக்கள் கஸ்ரோவுக்குச் சாதகமான தடை நீக்கத்தை விரும்பவில்லை. இதற்கிணங்க கிளின்ரன் புதிய தடைகளையும் அமுலாக்கியுள்ளார். கியூபாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையிலான வரடகை விமானப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வருடமொன்றுக்கு 500 மில்லியன் டொலர் வரையில் அமெரிக்கக் கியூபா மக்கள் தமது உறவினருக்கு அனுப்பி வந்த பணம் இனிமேலும் அனுப்ப முடியாதவாறு புதுத் தடை போடப்பட்டுள்ளது. அத்துடன் கஸ்ரோவுக்கு எதிரான வானொலிப் பிரச்சாரமும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. எனினும் இரு நாடுகளுக்கிடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கலாம், புதிய உறவுகள் ஆரம்பிக்கலாம் என்ற செய்திகளும் அண்மைக் காலத்தில் வெளிவரத் தொடங்கியுள்ளன. இவ்வளவு நெருக்கடிகளிற்கு மத்தியிலும் அமெரிக்காவின் பக்கத்தில் தலை நிமிர்ந்து நிற்கும் பிடெல் கஸ்ரோவினைப் பாராட்டத்தான் வேண்டும்.

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

தொகுப்பு-ரைம், ஒகஸ்ற் 19 செப்ரெம்பர் 5, 1994, நியூஸ்வீக், த எக்கனமிஸ்ற், ஒகஸ்ற் 27, 1994 செப்ரெம்பர் 1994

இந்தப் படையெடுப்பு அவசியமா?

ஹெய்ற்றி: அமெரிக்கா உட்புகுந்து லெப். ஜெனரல் ராவுல் செட்றாஸ் தலைமையில் அரசு புரியும் இராணுவக் குழுவை அகற்றிவிட ஆயத்தமாயிருக்கிறது. ஆனால் ஏன் இச்செயற்பாடு என்பது தெளிவாய் இல்லை. கிளின்ரன் அமெரிக்க மக்களுக்கு இதன் அவசியத்தை விளக்கினார். அவர்களுக்கு இது அவசியம் என்று நம்பவைப்பது கடினமே.



இது ஓர் அமைதியாக நிகழும் விடயமாயிருக்கும். பனாமா படையெடுப்பின் போது இருந்து வான்வழிப் படையிறக்கமோ, சோமாலியாவில் நிகழ்ந்த தரை கடல் இருவழிப் படையிறக்கமோ இராது. ஒருநாள் காலை எழுந்த ஹெய்ற்றி மக்கள் தம் நாட்டு நிர்வாகம் கைமாறி விட்டது என்பதை உணர்வார்கள். இப்படித்தான் 'ஐங்கோண மண்டபம்' (பென்ரகன்) நிர்வாக அதிகாரிகள் கனவு காண்கின்றனர். "பதினாயிரம் கடற்படையினரை இறக்கி விட்டு இரண்டு ஹெய்ற்றி வீரர்கள் சுடுவதைப் பார்த்தால் உலகம் சிரிக்கும்" என்றார் ஒரு பென்ரகன் அதிகாரி. எனினும் ஜீன் – பேட்றன்ட் அலிஸ்ரீட் கையில் ஆட்சியை ஒப்புவிக்கும்வரை மிகக்கவனமாகத் திட்டமிடப்பட்ட படையிறக்கம் நடைபெறும். ஈராக்கில் 1991 இல் இடம் பெற்ற "வனாந்தரப் புயல்" நிகழ்வுக்குப் பின் மிகப்பெருமளவு படை பயன்படும் விவகாரம் இதுவே.

20, 000 பேர் கொண்ட படையிறக்கப்படும். செயல் பெருமளவு பிரச்சாரம் செய்யப்பட்டது. நாடகம் நடிப்பதுபோல ஒவ்வொரு செயலும் பயிற்சியில் பரிசோதிக்கப்பட்டது. அதன் சுடும் ஆற்றலைப் பிரகடனம் செய்வதன்மூலம் ஹெய்ற்றிப்படை வீரர் ஒருதுப்பாக்கி ரவையையும் வீணாக்காமல் விலகிச் செல்வர் என்று ஜனாதிபதி கிளின்ரன் நம்பினார். இறுதியாக அவர் கட்டளையிடுமுன் பென்ரகன் அமெரிக்க இரத்தம் ஒரு துளியும் வீணாகாமல் வெகு கவனமாகத் திட்டங்களை வகுத்த பாதுகாப்பு உதவிச்செயலர் ஜோன்டொய்ல் கூறினார்: "படைத்தலையீட்டின் போது நம்படை மிகப்பெருமளவு சக்தியைப்பிரயோகிக்க ஆயத்தமாயிருக்கும். அதனால் நம் உயிர் இழப்புக்களை குறைக்கலாம்" என. கடற்படைமட்டும் தாக்கினால் போதும் என்று நினைத்த நாள்கள் போய்விட்டன. வான்வழி உதவி சிறிது அளித்தால் போதும் என்றிருந்த திட்டமும் இப்போது இல்லை. அமெரிக்கப்படையணிகளின் மிகப் பெருமளவு பிரமாண்டமான தாக்கும் கருவிகள் பயன்படுத்தப்படும் போது ஹெய்ற்றியப் படையிலும் பொல்லாத எதிர் விளைவுகள் ஏதாயினும் ஏற்படலாம் என்ற அச்சமும் கூட இருக்கிறது.

ஒன்பது பாரிய போர்க் கப்பல்களும் நிலத்திலும் நீரிலும் தாக்குதல் நடத்தக்கூடிய 1,800 பேர் கொண்ட விசேட படையணி ஹெய்ற்றிக்கு அண்மையில் நிறுத்தப்பட்டன. வைத்திய உதவிக்கப்பல் காயப்பட்டோருக்கு உதவ வந்து கொண்டிருந்தது. ஆரம்பத் தாக்குதலுக்குப்பின் இராணுவத் தளபாடங்களை இறக்க 12 பாரிய சாமான்கள் சுமக்கும் கப்பல்களைக் கடற்படை தயாராக்கியது. 'டாங்கி' கள்

போன்ற பாரமான வாகனங்களைக் கப்பல்களிலிருந்து எடுத்துக்கரையில் சேர்க்கும் பிரமாண்டமான மிதக்கும் வாகனம் நிறுத்தும் தளங்கள் வந்து சேர்ந்தன.

கடற்படைக்கப்பல் ஒன்று போட்டோமிக்கோவுக்கு அருகில் ஒரு தீவின் இறுதிப்பயிற்சியை மேற்கொண்டது. 82 ஆம் வான் வழித்தாக்குப்படையின் சில அணிகள் வட கரோலினாவில் அவசர நடவடிக்கைப் பயிற்சி செய்தன. அயலில் போர் விமானப்படைத்தளத்தில் சி-130 சாமான்கள் ஏற்றும் விமானங்கள் தீவர் நடவடிக்கைக்கு ஆயத்தமாயின "நாங்கள் போகிறோம், ஆனால் யாருமே மகிழ்ச்சியடையவில்லை" என்றார் தரைப்படையின் விசேட செயற்பாட்டு அதிகாரி, 'விமானந்தாங்கிக்கப்பல் ஒன்று உலங்குவானூர்திகள் தங்கித் தீவின் நடுப்பகுதிக்கு ஆட்களை ஏற்றிச் செல்ல ஆயத்தமானது.

காலம் வெகுகவனமாகத் தீர்மானிக்கப்படல்வேண்டும். வான் வழி குதிக்கும் பரசூட்வீரர் சிறிது நிலாவுள்ள நாள்களில் இறங்கவே விரும்புவர். இருளில் குதித்தால் எலும்புமுறிவும், தரையிறக்கமுமே ஏற்படும். கடும் வெளிச்சமானால் எல்லாரும் கண்டுவிடுவர். செப்ரெம்பர் இறுதி அல்லது ஒக்ரோபர் முதல் வாரமே பொருத்தமான நிலாக் காலம். இலையுதிர்காலத்தில் கரும் பியன் பிரதேசத்தில் பயங்கரப் புயல்கள் எழுவதும் வழக்கம்,

பின்இரவில் சிறு படை வேகமாக நுழைந்து ஹெய்ற்றி இராணுவம் வீதிகளில் நடமாடுவதைத் தடுக்கும் படைகள் இருக்கும் இடம் வானொலி நிலையம் முதலிய கேந்திரஸ்தானங்களைக் கைப்பற்றும். இது முடிந்ததும் தரை, கடற்படைகளும், பரசூட் துருப்புக்களும் வேகமாக முன்னேறும். கொமாண்டோக்கள் இராணுவ நிர்வாகக் குழுவினரைத் தேடிப்பிடிப்பர்.

சிறிதும் எதிர்ப்பு இராது என்றே அங்கு வசித்த அனுபவமிக்க அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் கருதுகிறார். 7,000 பேருள்ள ஹெய்ற்றியின் படைகளில் 400 மட்டுமே கனரக ஆயுதங்களைக் கையாளப் பயிற்சி பெற்றவர்கள் ஆவர். எனினும் அவற்றை மூன்று வழிகளிலும் தலைநகரை முற்றுகையிடும் போது சிறு சிறு சூடுகளும், இறப்புக்களும் நிகழும்; நகரங்களை விரைவில் வசமாக்கலாம். ஆயினும் கிராமங்களில் எதிர்ப்பு இருக்கும். இராணுவ ஆட்சி புரிந்தோர் ஒட்டம் எடுக்க, நகர்புறச்சேரியின் வறியமக்கள் கொள்ளையில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. பிறரது அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவது பெரும் கஷ்டமான காரியம். அப்பயங்கரவாதச் செயல்களில் உயிர் இழக்கவேண்டிவரும். ஒரு கைக்குண்டு, கூட்டம் மிகுந்த மதுசாலையில் வீசப்படும் போது அமெரிக்க படைவீரர் உயிரிழக்கலாம். தனியே நடமாடும் ஒருவரின் உயிரை ஒரு சினைப்பர் தாக்குப்பறித்து விடலாம்.

படையெடுத்து 10 நாள்களுக்குள் பொலிஸ் நிர்வாகம் வேறு நபர்கள் வசம் ஒப்படைக்கலாம். அயலிலுள்ள ஜமெய்க்கா, பார்படோஸ், பசாமான், ட்றினிடாற், டொபாகோ நாடுகளிலிருந்து 300 வீரர் (இராணுவப் பொலிசார்) அமெரிக்க இராணுவத்துடன் போட்டோமிக்கோவில் பயிற்சி பெறுகின்றனர். வேறு பத்து நாடுகளிலிருந்தும் வரும் காவற்றுறையினர் சேர 1,000 பேர் பொலிஸ் கடமைகளைப்புரிவர். ஹெய்ற்றி அகதிகள் வசிக்கும் முகாம்களில் அமெரிக்க இராணுவத்தினர் தற்காலிக பொலிஸ் கடமைகளுக்கு ஆட்சேர்க்கின்றனர். எனினும் 400 அமெரிக்க வீரர் வரை அல்கு தொடர்ந்தும் ஆறு மாதம் அரசாங்க சேவைகளைப்பலமாக நிறுவ உதவுவர். பென்ரகன் திட்டப்படி சில மாதங்களுக்குள் ஐ. நா சமாதானக் காவலர் 6,500 பேர் அங்கு கடமை புரிவர் இதில் அரைவாசி அமெரிக்க படைவீரராயிருப்பர் கிளின்ரன் விரும்புவதுபோல அமெரிக்க உயிர் ஆபத்து 'சைபர்' ஆகவேண்டுமானால் ஹெய்ற்றியின் இராணுவ ஆட்சியை வெருட்டி மிரட்டி ஊதித்தள்ளிவிடவேண்டியது தான்.

புகழ்தேடச் செலவு எவ்வளவு?

பெருய இராணுவ நடவடிக்கைகள் பெருஞ்செலவுக்கு வழிகோலுபவை. விபத்துகளும் உள்நாட்டுக்குழப்பங்களும் தோன்றும் ஆபத்தும் வரலாம்.

நாடு / போர்	காலம் / செலவு	மொத்த அமெரிக்க வீரர்மரணம்	சிநேகித வமான ஆட் களின்மரணம்
கிறெனடா அவசரகோப ஒப்பரேசன்	ஒக்ரோபர் – டிசம்பர் 1983 – 76 மில்லியன் டொலர்	19	01
பனாமா நீதிக்காரண ஒப்பரேசன்	டிசம்பர் – பெப்ரவரி 1989 – 1990 164 பில்லி. டொலர்	23	02
ஈராக் வனாந்தரப் புயல் ஒப்பரேசன்	ஜனவரி – ஜூன் 1991 – 7.4 பில்லி யன் டொலர்	293	35
சோமாலியா "நம்பிக்கைமீட்சி" ஒப்பரேசன்	டிசம்பர் – பங்குனி 1992 – 1994 2 பில்லியன்	30	0

இராஜதந்திரம்:

யதார்த்தம் பெற்ற முதல் வெற்றி

அண்மையில் ஐக்கிய அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் இடையில் எட்டப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இணக்கப்பாடு பற்றி வோஷிங்ரனில் அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனமான சீ. ஐ. ஏ இராஜாங்க அமைச்சுடன் முரண்பாடான விதத்தில் விவாதிக்கின்றது. சீ. ஐ ஏ வடகொரிய அரசாங்கத்தை ஓர் அபாயகரமான இராணுவ அச்சுறுத்தலாக வர்ணித்து வந்துள்ளது. ஆனால் இராஜாங்க அமைச்சோ வடகொரியாவை அரசியல் சிக்கல் கொண்ட நிலையியலாகக் கருதி அதனைக் காலகதியில் அனைத்துலக சமுதாயத்துடன் ஒத்துப் போகக் கூடியதாக ஆக்கலாம் என்று யதார்த்த பூர்வமாகக் கருதி வந்தது.

இறுதியில் யதார்த்த வாதமே வென்றுள்ளது. ''மாபெரும் தலைவர்'' கிம் இல் சுங் இன் இறப்பின் பின் ஜனாதிபதி கிளின்ரன் வடகொரிய மக்களுக்கு அனுப்பிய இரங்கற் செய்தியின் பின்பு அமெரிக்க அரசு நிர்வாகம் தனது முந்திய முறுகல் போக்கை மடக்கி வைத்துக் கொண்டு பியொங்யாங்குடன் கவனமாக சிநேக பூர்வ உறவு மேற்கொள்ள முற்பட்டது. கொரியா பற்றிய பகுப்பாய்வாளர் ஒருவர் அதனை, ''நாங்கள் ஏதாவது நுணுக்கமான வழிகளைக் கையாள்வோம்: என்ன வகையான இணக்கப்பாடு என்றாலும் பரவாயில்லை'' என்ற வாறாக அந்தப் போக்கு அமைந்ததாகக் கூறினார்.

வழிமுறையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தும் எத்தவங்கள் முன்னேறிக்கொண்டு இருக்கையில் அணு சக்தி விடயமான சர்ச்சைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு உள்ளன. வடகொரியா எதிர்காலத்தில் புளூற்றோனியம் உற்பத்தி செய்வதில்லை என்று இணங்கியதுடன், (அது அணு ஆயுதங்கள் உண்டாக்கப் பயன் படுத்தப்படுவது) அமெரிக்கா மேற்குலகில் உள்ள மாநிரியில் பல அணுசக்தியால் இயங்கும் உலைகள் அமைக்க உதவப்போகிறது. அமெரிக்க சார்பாகப் பேச்சுவார்த்தைகளுக்குத் தலைமை தாங்கும் றொபட் கல்லூச்சியின் கூற்றுப்படி, ''இன்னும் முக்கிய பெரும் பகுதி வேலைகள் எதிர்காலத்தில் தான் செய்யப்பட உள்ளன.''

பிந்திக்கிடைத்த தகவலின்படி ஹெய்ற்றியில் யுத்தமின்றியே அமெரிக்கப் படைகள் தரையிறங்கியுள்ளன. இதற்கு முன்பாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மிக் கார்ட்டர், ஹெய்ற்றியின் இராணுவத் தளபதியும், ஆட்சியாளருமான ராவுல் செட்றஸ் உடன் செய்து கொண்ட ஓர் இரகசிய உடன்படிக்கையே இரத்தக்களரியின்றி அமெரிக்கப்படைகள் தரையிறங்கக் காரணமாக இருந்தன. தரையிறங்கிய அமெரிக்கப்படைகள் படிப்படியாகத்தமது கட்டுப்பாட்டைத் தலை நகரிலும், ஏனைய நகரங்களிலும் நிலைநிறுத்தினர். அமெரிக்கப் படைகளின் வருகையால் ஏற்பட்ட துணிவால். அரிஸ்ரைட்டின் ஆதரவாளர்கள் குதூகலமடைந்து சாலைகளில் நடனம் ஆடினார்கள். இதனால் கோபங் கொண்ட ஹெய்ற்றியப் படையினர் தாக்கியதில் சில ஹெய்ற்றியர்கள் கொல்லப்பட்டனர். வேறொரு சம்பவத்தில் அமெரிக்கப்படையினரால் பத்து ஹெய்ற்றியர் கொல்லப்பட்டனர். இதற்கிடையில் உடன்படிக்கையின் பிரகாரம் இராணுவத் தளபதி செட்ராஸ் தனது முக்கியமான சகாக்களுடன் மெக்சிக்கோவிற்குச் சென்றிருப்பதாகத் தகவல் ஒன்று கூறுகின்றது. எது எப்படியிருப்பினும் அரிஸ்ரைட் அமெரிக்காவிலிருந்து திரும்பிவந்து ஜனாதிபதிப் பதவியை ஏற்று ஆட்சியை நடாத்தினாலும், அமெரிக்கப்படைகளின் உதவியின்றி எவ்வளவு காலத்துக்கு இவரால் தாக்குப்பிடிக்க முடியும் என்பதே தற்போது எழும் வினாவாகும்.

நியூஸ்வீக், செப்ரெம்பர் 19, 1994.

★

Tamileelam Archive

பேராபத்தான அணுக்கருப் பொருள்கள் கள்ளச் சந்தையில் விற்பனை

"நல்லார்கட்பட்ட வறுமையின் இன்னாதே
அல்லார் கட்பட்டதிரு" — குறள்

சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்து தெறுண்ட பின், ருஷ்யாவில் பெருமளவில் சேமித்து வைக்கப் பட்டுள்ள கதிர்வீச்சு உலோகப் பொருள்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவில்லை; சரியாகக் கணக்கு வைக்கப்படவில்லை என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்து வந்துள்ளனர். அவற்றை நிறுவன ரீதியில் இயங்கும் கடுங் குற்றவாளிகள், பயங்கரவாதிகள், ஈராக், வட கொரியா போன்ற அணுசக்தி விஞ்ஞானத்தின் மூலம் வெற்றியின் எல்லையை அடைந்த நாடுகள் ஆகியோர் பெற வாய்ப்புண்டு என அச்சுறுத்தினர். அது வெறும் விஞ்ஞானக் கற்பனைக் கதைகளிலும், சினிமாவிலும் இருந்த நிலை மாறி இன்று நிஜ உலகில் நடக்கும், நெஞ்சைப் பிளக்கும், கிலியேற்படுத்தும் உண்மைச் சம்பவம் ஆகிவிட்டது. அணுக் கருப்பொருள்கள் திருட்டு சர்வ சாதாரணமாகிக் கொண்டு வருகிறது.

1990 இலிருந்து ஜேர்மன் குற்றவியல் விசாரணையாளரால் 500 அணுக்கருப் பொருள் கடத்தல் மன்னர்களின் மீது சந்தேகத்தின் பேரில் வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அணு ஆயுதம் செய்யப் பயன்படாத இரண்டு வஸ்துக்கள் ஆகிய ஸ்ட்றோன்ரியம்–90, செசியம்–137 என்பவை மட்டுமன்றி, முழுக்குண்டுகள்– ஏவுகணைத் தலைகள் வரை விற்பனைக்குப் பேரம் பேசப்பட்ட விபரம் விசாரணையிற் புலப்பட்டது. பிரதானமாக, ஜேர்மனிக்குள் திருட்டுத் தனமாக அணுக்கருப் பொருள்களைக் கடத்தி வருதல் கடந்த 4 ஆண்டுகளுக்குள் மிக வேகமாகப் பெருகி வருகிறது.

1990	இல்	—	4 வழக்குகள்
1991	''	—	41 ''
1992	''	—	158 ''
1993	''	—	241 ''

இவற்றுள் சரிபாதி போலி வழக்குகளே என்கிறது ஜேர்மன் காவற்றுறை. ஏமாற்றுக்காரர் தம்மிடம் இல்லாத பொருள்களை விற்பதாக நடித்துப் பொருள் சம்பாதிக்க முயன்ற சம்பவங்கள் அவை. சென்ற ஆண்டு அறிக்கையிட்ட வழக்குகளில் 100–க்கு மேல் காவற்றுறை தலையிட்டிருக்காவிட்டால் ஆபத்தான பொருள்கள் கைமாறியிருக்கக் கூடும்.

21 சம்பவங்களில் நிஜமாகவே, கதிர்வீச்சுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாண்டு வசந்த காலத்துக்கிடையில், அணு ஆயுதங்கள் செய்ய அவசியமான இரு உலோகப் பொருள்கள் உயர் செறிவு மிக்க யுரேவியம்–235, புளூற்றோனியம்–239 என்பவை ஐரோப்பிய கறுப்புச் சந்தைக்கு வரவில்லை.

சட்டவிரோதமாக நுழைந்த அந்நியனின் இச்சிறுகலத்தினுள் இருப்பது சின்னஞ்சிறு அளவு புளூற்றோனியம். ஜேர்மனியில் பிறமென் புகைவண்டி நிலையத்தில் கைப்பற்றப்பட்டது.

முன்னாள் சோவியத் ருஷ்ய சோஷலிச ஒன்றியத்தின் அணுசக்தி வளங்கள் காவலற்றுத் திருட்டுக்கு வாய்ப்பளிக்கின்றன.

ஆயுத உற்பத்திக்கு உதவும் புளூற்றோனியம் திறந்த சந்தைக்கு விற்பனைக்கு வந்த விடயம் உலகுவியக்கும் வகையில் சென்ற மே மாதம் தெற்கு ஜேர்மனியில் நிகழ்ந்தது. ஒரு ஜேர்மன் வர்த்தகனின் கார் கராஜில் 6 கிராம் புளூற்றோனியம் கண்டுபிடிக்கப்பட்டது. ஜூனில் உயர் செறிவு புளூற்றோனியம் ஒரு கிராம் ஓர் அணுசக்தி வலுவால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து கிருடப்பட்டதாயிருக்கலாம். லான்ட்ஷற் எனும் இடத்தில் இது பிடிபட்டது. இதுவரை பிடித்த தலைகளை ஒன்று திரட்டினாலும், ஒரு சாதாரண அணுகுண்டு செய்யப்போதியது அன்று. அனுபவமற்றவர் ஒரு குண்டு செய்ய 8 கிலோ கிராம் புளூற்றோனியம் வேண்டும்.

பெரும் சன அழிவுக்குக் காரணமாகக் கூடிய பொல்லாத சரக்கு, கறுப்புச் சந்தைக்கு வந்துள்ளது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும், கெட்ட கனா ஒன்று நிஜமாகி விட்டதும் உலகுக்குப் பெரிய சவாலாய்த் தோன்றியுள்ளது. சென்ற ஒகஸ்ற் 10 ஆந் தேதி ஜேர்மனியிலுள்ள மியூனிச் நகரின் விமான நிலையத்தில் மொஸ்கோவிலிருந்து வந்த விமானத்தில் 350 கிராம் அணு எரிபொருள் இருந்தது. ரோறெல் என்ற கொலம்பிய நாட்டு 'வணிகன்' கொண்டுவந்த சிறு கைப்பெட்டியில் ஈயமும், உருக்கும் சேர்த்துச் செய்யப்பட்ட 'டப்பா'வில் 10 அவுன்ஸ் அணு ஆயுதம் செய்யத்தக்க புளுற்றோனியம்-239 கடத்திவரப் பட்டதை பவேரி மாநில காவற்றுறையினர் கண்டுபிடித்தனர். இரு ஸ்பானியர்களும் கைது செய்யப்பட்டனர். இந்த விபரம் ஒகஸ்ற் 10இல் நிகழ்ந்தாலும் செய்தி வெளியிடப்பட்டது ஒகஸ்ற் கடைசிச் செவ்வாய்க் கிழமையாகும். உலக அதிரச் செய்த இந் நிகழ்ச்சி பவேரிய காவற்றுறையின் திறமைக்கு எடுத்துக்காட்டு. அதேதுறை வெளியிட்ட மற்றொரு விபரம் கூடத்தல் கும்பல் பிடிபட்டபோது, கதிர் வீச்சு இல்லாத பொருள் எனினும் ஐதரசன் குண்டுகள் செய்யப்பயன்படும் லிதியம்-6 என்ற உலோகமும் ஒரு கிலோ கிராம் கைப்பற்றப்பட்டதாம். பவேரிய மாநில உள்நாட்டு அமைச்சர் குந்தர் பெக்ஸ்ரன், "அணுக்கருப் பயங்கரவாதத்தின் புதிய பரிமாணம் ஒன்று தோற்றமளித்துள்ளது" என்று கூறினார். அவர் கருத்துப்படி மியூனிச் விமான நிலையத்தில் பிடிபட்ட 350 கிராம் அணு எரிபொருள்தான் "ஒரே முறையில் ஜேர்மனியில் ஏன் உலகிலேயே கண்டுபிடித்த மிகப் பெரிய அளவு அந்தக் கைப்பெட்டியிலிருந்த புளுற்றோனியம்." எம். ஒ. எக்ஸ் (கலப்பு ஒக்ஸைட் எரிபொருள்) அணு உலைகளில் பயன்படுத்தப்படுவது ஆயினும் அது அணு குண்டு செய்யவும் பயன்படும். அதிலுள்ள புளுற்றோனியம் 87சதவிதம் உயர் செறிவுள்ளது.

அதே விமானத்தில் விக்ரர் டொரென்கோ என்ற ருஷ்ய அணுசக்தி உதவி அமைச்சரும் பிரயாணம் செய்தார். அவரது முகவரகமே ருஷ்ய அணுக்கருப் பொருள்களை மேற்பார்வை செய்யும் பொறுப்புடையது. அவர் இவ் வழக்கில் சம்பந்தப்படவில்லை. ஆனால் அவரது நாட்டிலிருந்தே இப் பொல்லாத வர்த்தகப் பொருள் கறுப்புச் சந்தைக்கு வந்தது பாரதூரமான விஷயம் இல்லை.

"சூடான" கனமப்பொருள் மியூனிச்நகரில் கைப்பற்றிய பயணப் பெட்டியில் இருந்தவை.

சென்ற ஒகஸ்ற் நடுப்பகுதியில் ருஷ்யாவில் பால்ரிக் கடலையடுத்துள்ள கலினிகிராட் என்னுமிடத்தில் ஒரு தனியார் வர்த்தக நிலையத்தின் இயக்குனரும் இரு தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தரும் ஒரு செயின்ற் பீற்றர்ஸ் பேர்க் மனிதனைச் சந்தித்து, 20 சென்ரி மீற்றர் நீள அலகமுள்ள உலோகப் பெட்டியைக்கொடுத்து ஒரு மில்லியன் டொலர் பெற முயன்றனர். அப்பெட்டியில் கொடிய கதிர்வீச்சுப் பொருள் இருந்தது. காவற்றுறை அதிகாரிகள் குறுக்கிட்டு அவர்களைக் கைது செய்தனர். அப்பெட்டி 59 கிலோ கிராம். அதிலிருந்து தம்பா கதிர்வீச்சு நிகழ்ந்தது. விசேட விஞ்ஞான ஆய்வுகூடத்தில் அதனைப் பரிசீலனை செய்தே விபரம் அறிய முடியும். செயின்ற் பீற்றர்ஸ்பேர்க் நகர காவற்றுறையின் விசேட பிரிவான நிறுவன ரீதியாக இயங்கும் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பாளர் இப்படி இரண்டு அணுத்திட்டுக்களைச் சென்ற மே மாதத்திற்குப் பின் கண்டுபிடித்துள்ளார். அவர்கூற்றுப்படி, "பாதுகாப்பு முறைகள் தரங்குறைந்து விட்டன. அணு உலைப் பொருள்களை அணுகும் வசதி உடைய எவரும் எதையேனும் திருட வாய்ப்பு உண்டு."

அதைவிடக் கேவலமான நிலை விஞ்ஞானிகளதும், தொழில்நுட்ப வியலாளர்களதும் நிலை. இவர்கள் முன்னர் இராஜ போகங்களை அனுபவித்தவர்கள். இப்பொழுது கவனிப்பாரற்ற நிலை எய்தியுள்ளனர். கடந்த 4 ஆண்டுகளாகச் சம்பளம் கூட ஒழுங்காகக் கிடைக்கவில்லை. 10 "மூடப்பட்ட" நகரங்களில் வாழும் 3,000 உச்ச அணுசக்தி விஞ்ஞானிகளின் சம்பளம் மொஸ்கோ பேருந்துச் சாரதிகளின் வேதனத்திலும் குறைவானதே. கிறால் நோயர்ஸ்க் புளுற்றோனியம் உற்பத்தித் தொழிற்சாலையில் பணிபுரிவோர் சமீபத்தில் தமது நிலக்கீழ் வசதிகளை விட்டுக் கொடுக்க மறுத்தனர். காரணம் பல மாதங்கள் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவர்களது அவமானம், வறுமை ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் தொழில்நுட்பர், சேவைத் தொழிலாளர் 7½ முதல் 10 இலட்சம்வரை இதே அவல நிலையில் உள்ளனர். இவர்களுக்கு அணுக்கருப் பொருள்களைக் கையாடும் வாய்ப்பு உளது. இலண்டன் ரைம்ஸ் பத்திரிகைக்கு ஜோன் லாங் என்ற வணிகர் அளித்த பேட்டியில் தாம் ருஷ்யருடன்

தொடர்பு கொண்டபோது ஒரு கிலோ புளூற்றோனியம், யுரேனியம் என்பவற்றுக்கு 2½ இலட்சம் முதல் 5 இலட்சம் டொலர் வரை பணம் கேட்டார்களாம். ஒரு ருஷ்ய பத்திரிகையாளர் எஸ்எஸ்-20 என்ற ஏவுகணையை 70,000 டொலருக்குத் தரச் சம்மதித்ததாகக் கூறுகிறார். ருஷ்யாவில் 5,500 குற்றக்குழுக்கள் இயங்குகின்றன. அவற்றின் பிரதான கள்ள வியாபாரம், அணுப் பொருள்களை வாங்கி, ருஷ்யாவுக்கு வெளியே விற்பதாகும்.

வாங்குவோர் யார்?

இந்தச் சட்டவிரோத வியாபாரத்துக்கு எங்கேயாவது வாங்குவோர் இருக்கத்தானே வேண்டும். கெரில்லாக் குழுக்கள் வாங்கமுடியாது. ஒரு குண்டு செய்யத் தேவையான புளூற்றோனியம் வாங்கப் பத்து மில்லியன் டொலர்களுக்கு மேல் ஆனால் ஈரான் தன் சொந்த ஆயுதக் களஞ்சியத்தைப் பெருக்கப் பணம் போதாமல் இருக்கையில் பயங்கரவாதக் குழுவுக்கு உதவி செய்ய இவ்வளவு பாரியதொகைக்கு எங்கே போகும்?

ஈரான், லிபியா, ஈராக் போன்ற தீவிரவாத அரசுகூட 300 மில்லியன் டொலர் செலவிட்டுக் குண்டு வாங்கிப் பயங்கரவாதிகளுக்குக் கொடுக்காமல் தன் சொந்தப் பாதுகாப்புக்கு வைத்திருக்கும். ஆனால் சர்வதேச மனிதகுலம் அனைத்தின் கோபத்துக்கும் அது ஆளாகும். அப்போது அந்த நாடு எவ்விதமாக அழிக்கப்படும் என்பதைக் கற்பனை செய்யவும் முடியாது.

லண்டனில் உள்ள மெய்ம்மை அறுதியீட்டுத் தொழில் நுட்பவியற் செய்திணைய நிலையம் (வெரிஃபிக்கேன்ஷன் ரெக்னோலொஜி இன்ஃபோமேஷன் சென்றர்) இலாபமின்றிச் சேவை செய்யும் நிலையம். இதில் பணியாற்றும் நிச்சாட் குத்தீ சொல்கிறார்: ''இப்போது உள்ள பிரச்சனை அச்சுறுத்திப் பணம் பறிக்கும் வழிவகையே'' என்று. புளூற்றோனியம் சந்தையில் கிடைக்கும் என்று அறிந்தவுடன் பயங்கரவாதக் குழுக்கள் தாம் ஓர் அணுக்குண்டு செய்துவிட்டதாகச் சனங்களை நம்பச் செய்ய முடியும். ''ஒரு துஷ்டன் தான் குண்டு செய்ததற்குச் சான்றாக ஒரு கிராம் அணுக் குண்டுக்கு உபயோகிக்கும் தரமான சரக்கைக் காட்டினால் ஓர் அரசாங்கம் எப்படிப் பதில் நடவடிக்கை எடுக்கும்?'' என்கிறார் நிச்சாட்.

வோஷிங்ரன் தேசிய பாதுகாப்புப்பல்கலைக்கழகத்தில் ஈராக் (ஸிவகார) நிபுணரான ஃபீப் மார் கூறுகிறார்: ''பயங்கரவாதிகள் ஒரு குண்டு செய்வதே பேராபத்து என்று ஏங்கும் வேளையில் ஒரு நாட்டு அரசாங்கம் அணுக் கருத்துறையில் பேராசை மிக்க நிட்டங்களுடன் பெருமளவு புளூற்றோனியம் வாங்குவது தெரிந்தால் என்ன செய்வது? அந்த அரசாங்கம் ஒன்று இரண்டு குண்டு வாங்கி உலகின் கோபத்தை ஈர்க்காமல் பத்து, நூறு கிலோகிராம் புளூற்றோனியம் வாங்கத்தான் எத்தனிக்கும். அது பெரும் செலவுக்கு இடமாகும்'' என்பதாக.

இஸ்ரேலுக்கு அடுத்த படியாக ஈரான் ஒன்றே மத்திய கிழக்கில் அணுஆயுத உற்பத்தியில் தீவிரகவனஞ் செலுத்துகிறது. கடன் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற துன்பங்களுக்கு மத்தியில் ''பாரசீகக் குடாக் கடற்பிரதேசத்தில் மிகவலிமை வாய்ந்த இராணுவ சக்தியாக எழுச்சி பெறத் துடிக்கிறது. ஈரான் தன் போர்ச் செலவைக் கட்டுப்படுத்தவில்லை'' என்கிறார் கெய்ரோவிலுள்ள அல் அஹ்ரம் கேந்திரிய ஆய்வு மையத்திலுள்ள இராணுவ நிபுணர் மூராத் எல். தெருக்கி. ''ஈரான் தன்னைத் தாக்குவதைத் தடுக்கவும், அயல் நாடுகளை அச்சுறுத்தவும் அணுவாயுத வல்லரசாக ஆசைப்படுகிறது.'' மேற்கு ஐரோப்பாவில் ருஷ்ய புளூற்றோனியம் வாங்க ஈரானியர் முயற்சிக்கிறார்கள். அதற்குரிய பணமும் அவர்களிடம் உண்டு.

வேண்டும். அதை எந்தத் தனிப்பட்ட குழுவும் சம்பாதிக்க முடியாது. அரசுகளின் நேரடி ஆதரவுள்ள குழுக்கள் மட்டுமே பெறக் கூடும். உதாரணமாக ஹிஸ்புல்லா குழு ஈரானிலிருந்து நேரடி உதவி பெறுவதாகக் கூறப்படுகின்றது.

இப்பொழுது வடகொரியா முதலிய நான்கு நாடுகள் நல்ல 'சரக்கு' வரும் மட்டும் காத்திருக்கின்றன. ஆனால் அணுக் குண்டுக் குதவும் அசல் சரக்குகள் சந்தைக்கு வராமல் இப்பொழுதே தடுக்காவிட்டால் நிலைமை எல்லை கடந்து போகும். ருஷ்யா, உக்ரேன், பெலாரஸ், கசக்ஸ்தான் போன்ற பொறுப்பற்ற நாடுகளிலிருந்து இப் பொருள்கள் மேற்குலகைச் சேரும். இதைத் தடுப்பதற்கேநூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்கள் செலவிடவேண்டி வரும்.

அணுக்குண்டுகளும் அணுக்கரு உலோகங்களும்

ருஷ்யாவிடம் இருக்கும் அணு எரிபொருள்கள் தொகை என்ன? தீர்மானிப்பது கடினம். புளுற்றோனியம் 100-400 தொன்னும், வலுவாக்கப்பட்ட யுரேனியம் 400-700 தொன்னும் இருக்கலாம். ருஷ்யா பாதுகாப்புத் தளங்கள் உற்பத்தி வசதியுள்ள தொழிலகங்கள், சேமிக்கப்படும் பண்டசாலை உள்ள இடங்கள் ஆய்வுகூடங்கள் ஆகியவற்றில் நாடெங்கிலும் பரந்து உள்ளன. இராணுவமும், பெரும்பாலும் அணுசக்தி அமைச்சுமே இவற்றுக்குப் பொறுப்பானவை. தினம் 4, அணுக்குண்டு ஏவுகணைகளைக் கழற்றி அதிலிருக்கும் அணுக்கரு எரிபொருளை எடுத்துச் சேமித்து வைப்பதால் தினந்தோறும் அணு மூலப்பொருள் சேமிப்பு அதிகரித்துக்கொண்டே வருகிறது. முன்னர் சர்வாதிகார ஆட்சியில் அவற்றை உளவுத்துறை (கே. ஜி. பி) க் காவலர்கள் வெகு கவனமாகக் காவல் புரிந்தமையால் பொருள்கள் ''ஒழுகி'' வெளியேற வழியில்லை. அதனால் சரியான பண்டசாலைச் சேமிப்புக் கணக்குகள் இருக்கவில்லை. இப்பொழுது நிலை வேறு. கணக்கு விபரங்கள் சரியாக இருக்காவிட்டால் பாதுகாப்புப் பயனற்று விடும். கணக்கு விபரம் சரியாக்கப் பட்டால் மேற்குலக தொழில் நுட்பப் பண்டசாலையிலிருந்து திருடப் போவதைத் திறமையுடன் தடுத்துவிட முடியும். ஆனால் ருஷ்யா இது அந்நியத் தலையீடு என்று நோக்கலாம். மேலும் உச்ச விஞ்ஞானிகள் தமக்கு உரிய மதிப்பும், சம்பளமும் குறைந்து விட்டதே என்று வெறுப்புற்று இருக்கும் சூழ்நிலையில் எவ்வளவு திறமையான மேற்குலக காவல் முறையும் பயன் அளிக்காது.

அணுக்கருப் பொருள்கள் களவாடப்பட்டு உலகைப் பேரழிவுக்கு உள்ளாக்காமல் தடுப்பதில் மேற்குலகம் வெற்றி பெறவேண்டுமானால் ருஷ்ய விஞ்ஞான சமூகத்தின் பொருளாதார நிலையையும், உளவியற் பாங்கையும் மாற்றியமைத்தல் அவசியம்.

அமெரிக்க முயற்சி

ஏற்கனவே அமெரிக்கா ஆரம்ப முயற்சிகளைச் செய்துள்ளது. அணுப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென பல பத்து மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. நியுமெக்ஸிக்கோவில் லொஸ் அலமோஸ் அணுக்கரு ஆய்வு கூடத்துக்கும், புகழ் மிக்க மொஸ்கோ சூர்ச்சட்டோவ் நிலையத்துக்கு மிடையில் நெருங்கிய கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அமெரிக்கா, ஐரோப்பிய சமுதாயம், ஜப்பான் உதவியுடன் மொஸ்கோவில் புதிய விஞ்ஞான தொழில் நுட்பமையம் அமைக்கப் பட்டது. இவ்வாண்டுத் தொடக்

பாரிய அழிவுக்கருவியின் உட்செயற்பாடு

உள்ளெரிவு – வெடிப்புமுறை, புளுற்றோனியம் கண்டு ஒரு கோள வடிவான (கதிர் வீச்சை ஆக்கவல்ல) பொருள் குழலில் வெடிமருந்து வெடிப்பதன் மூலம் அமுத்திச் சுருக்கப்படுகிறது. அமுத்தம் அப்பொருளைச் சிறுகணப்பரிமாணமும் உயர்ந்த அடர்த்தியும் உடையதாக்குகிறது. இலத்திரன் நியூற்றன் மூலத்திலிருந்து நுணுக்கமான நேரக்கணிப்புப்படி வெடித்தவுடன் சங்கிலித் தொடரான அணுக்கரு வெடித்தல் நிகழ்கிறது.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கத்தில் அணுக்கரு விஞ்ஞானிகளில் தம் வேலையிழந்தவர்களுக்குப் புதிய வழிகளைக் காட்ட முயற்சி எடுக்கப்படுகிறது ஆயினும் இவை போதாது. ஓகஸ்ற் நடுப்பகுதியின் பின் அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் உடனே 100 மில்லியன் டொலர் ஒதுக்கி, ருஷ்யாவில் அணுக்கரு பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த வழி வகை



துப்பாக்கியின் இயந்திர இயக்கம், யுரேனியக் குண்டு. தனியே அணுக்கரு பிளப்புக்கு ஏலாத மிகச் சிறு யுரேனியத் துண்டுகளை (வெடித்து முற்செலுத்தும்) மூலம் பலமாக ஒன்றிணைக்கப்படுகின்றன. அவை இணைந்தவுடன், வேகமாக ஓடும் சங்கிலித் தொடரான எதிர்வினைவு காரணமாகவே வெடிப்பை ஏற்படுத்துகிறது.

களை ஆராய்ந்தன. ஜேர்மன் அதிபர் கெல்மட் கோலின் உயர் உளவுத் துறைத் துணைவர் மொஸ்கோவுக்குச் சென்று, யெல்சினுக்கு இந்தக் கொடை பற்றி அறிவித்தார். அமெரிக்க அதிகாரிகள் ஓர் அணு ஆயுதம் களவு போனால் தேடிப் பிடிக்கத் தமது தேடுதல் குழுவின் சேவையை ருஷ்யாவுக்கு வழங்க இரகசியப் பேச்சுக்கள் நடத்தினர்.

பேச்சுப் பல்லக்கு

அமெரிக்காவின் கடந்த கால முயற்சிகள் "பேச்சுப் பல்லக்கு, தம்பி கால் நடை" என்ற கதை தான். 1991 இல் அமெரிக்க கொங்கிரஸ் (நாடாளுமன்றம்) ஜனாதிபதி புஷ் நிர்வாகத்தினரை ஆண்டு தோறும் 400 மில்லியன் டொலர் வீதம் மூன்று ஆண்டுகள் செலவிட்டு, முன்னைய சோவியத் குடியரசுகள் தத்தம் அணுக்கருப் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும் படி அதிகாரம் அளித்தது. ஆனால் கொங்கிரஸின் செயலின்மையால் முதற் பகுதியாக ஒதுக்கிய 900 மில்லியன் டொலரில் 500 மில்லியன் வரை செலவிடப்படாதிருக்கின்றது. ஆமை வேகத்தால் தடுத்து வைத்திருக்கும் செயற்றிட்டங்களுள் ஒன்று முன்னைய சோவியத் ஒன்றியத்தின் எல்லைக் காவல் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்; பென்ரகன் (நிர்வாகத்தினர்) ஒழுங்கு செய்தது.

தேசிய விஞ்ஞான கழகம் அமெரிக்காவிலும், ருஷ்யாவிலும் புளூற்றோனியம் குவிவதைக் கவனித்து வந்தது; இவ்வாண்டு அக்குவிவு உலகெங்கும் சுற்றாமல், கை மாறாமல் முற்றாக அழித்துவிட வேண்டும் என்று சிபார்சு செய்தது. ஆனால் இதில் சிக்கல்கள் இருப்பதாலும், நினைக்க முடியாத பெருஞ் செலவு ஏற்படும் ஆதலாலும் அதனைப் பிற அணுக்கருப் பயவில் பொருள்களுடனும், உருக்கிய கண்ணாடியுடனும் கலந்து பயன்படுத்த முடியாத 2 தொன் எடையுள்ள கதிர்வீச்சுக் கண்ணாடித் தூண்களாகச் செய்து விடலாம் என்றும், இவற்றை ஆழக் கிடங்குகளில் சேமித்து வைக்கலாம் என்றும் சிபார்சு செய்தது. அன்றியும், புளூற்றோனியத்தையும், யுரேவியத்தையும் கலந்து அணுமின் உலைகளுக்கு எரிபொருளாக்கி விடலாம் என்றும், அவை பயன்படுத்திய பின் எஞ்சியுள்ள புளூற்றோனியம் (கதிர்வீச்சு) மாசுள்ள எரிபொருள் கோல்களாகப் பூட்டி வைக்கப்படலாம் என்றும் ஆலோசனை கூறியது.

பிரச்சனை எங்கே?

நல்லது நினைக்கும் அமெரிக்க விஞ்ஞானிகளது பேராசை மிக்க இந்தப் பரிந்துரைகளுக்குக் குறுக்கே நிற்பது என்ன? ருஷ்யர் இந்தப் புத்திமதிகளைத் தங்களுக்கு வேண்டாம் என விலக்கி வைக்கின்றனர். பழைய "குளிர்போர்" நாள்களில் எச்சொச்சங்களான சந்தேகம் இன்னும் அவர்கள் நெஞ்சில் நினைவிருக்கிறது. அமெரிக்கர்கள் எக்காரணம் கொண்டும் தமது புளூற்றோனிய சேமக் குவியற் பொக்கிஷங்களை அணுகவிடக் கூடாது என்பது அவர்கள் திடசங்கற்பம். தமது புளூற்றோனியம் தங்கள் தேசிய செல்வம், தங்கத்திலும் கூடிய மதிப்புடையது.

அதனை அழித்து விட அவர்கள் மனம் ஒருப்படவில்லை (தேசமக்களின் எத்தனையோ சமூக தேவைகளைக் குறைத்து அணு ஆயுத உற்பத்தி செய்து விட்டு, இப்போது அதனையும் கடலில் கரைத்துவிட – புவியின் அடியில் புதைத்துவிட அவர்களுக்கு மனம் வருமா?) அவர்களுடைய விருப்பம் அடுத்த இருபது ஆண்டுகளுக்குப் பின் புதிய தலைமுறை அணு உலைகள் அமைத்து மின்சக்தி பெறும் முயற்சி தொடங்கும் போது, இப் புளூற்றோனியம் எரி பொருளாகப் பயன்பட வேண்டும் என்பதாகும். அதுவரை தமது ஒளிமிக்க உலோகப் போர்க்கருவிகளை (ஏவுகணைத் தலைகளை) ப் பவுத்திரமாகச் சேமித்து வைத்திருக்க வேண்டும். அப் பாதுகாப்புச் செலவு ஒரு கிராமுக்கு ஆண்டுக்கு டொலர் வரையில் ஆகும்; ஆயினும் அச் செலவு செய்யப்பட வேண்டும் என்பது அவர்கள் சித்தாந்தம். அந்த வருங்காலத்தில் அணு உலைகள் அமைக்கப் பெருஞ் செலவு ஆகும். ஈடாடிக் கொண்டிருக்கும் ருஷ்ய பொருளாதாரம் அதற்கு இடங் கொடுக்குமா? அப்படியானால் புளூற்றோனியத்தைப் பாதுகாத்து வைப்பது பெரும் பாதுகாப்புப் பிரச்சனையாகத் தான் இருக்கப் போகிறது. புளூற்றோனியத்தின் ஆயுட் காலத்தில் பாதி 25,000 ஆண்டுகள் (அதன் சக்தி அரைவாசியாக) அவ்வளவு நீண்டகாலம் கள்வரிடமிருந்தும், பாதை மாறிப் பயன்படுத்தும் நியோரிடமிருந்தும் அதனைக் காத்து வைக்க இயலுமா? இப்பொழுது ஒழுக்கு அளவிலிருப்பது விரைவில் கங்கையின் வெள்ளப் பெருக்காகி, உலகை விழுங்கு முன் நிபுணர்கள் ஒன்று கூடி இதற்கு ஒரு மாற்று வழியைச் சிந்திப்பது நல்லது.

குற்றமும், தண்டனையும்

தகுதி இல்லாத இடத்தில் இருக்கும் காட்டுதல் நாகரிக மனிதனின் கடன் என்பதும், குற்றவாளிகள் தண்டனை பெறுவதற்குப் பதிலாக பாதுகாப்பான இடத்தில் சுகபோக வாழ்க்கை வாழச் செய்ய வேண்டும் என்பதும் சென்ற நூற்றாண்டுச் சிறை சீர்திருத்த இயக்கத்தை இரக்கம் மிக்க எலிசபெத் ஃபிறை பெருமாட்டியார் ஆரம்பித்ததிலிருந்து மேற்குலகில் நிலவி வரும் கருத்து ஜேர்மனியில் அணுக்கருக் களவுக்குத் தண்டனை ஐந்து ஆண்டு மறியல் மட்டுமே. இத்தாலிய சட்டப்படி அது குற்றமே அன்று. இந்தக் குறைபாடுகள் கள்ளக் கடத்தல் மன்னர்களுக்கு நன்கு தெரியும். இப்பிரச்சனை பூதாகாரமாகி விடவே, சென்ற ஒகஸ்ற் பிற் பகுதியில் ஜேர்மனியிலும், பிற ஐரோப்பிய பகுதிகளிலும் காவல் துறையினர்:

(1) சுடும் தண்டனை வழங்க வேண்டும்.

(2) கடத்தல் பற்றித் துப்புத் தருவோருக்குக் கூடிய பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

(3) கடத்தல் பற்றிய தொலை பேசி உரையாடல்களை இரகசியமாக ஒற்றுக் கேட்பதற்கு அனுமதி வழங்கவேண்டும்.

என்று மூன்று நியாயமான கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். (தனி மனித சுதந்திரத்தின் பெயரால் எத்தனை சமூக விரோதிகள் பாதுகாப்புப் பெறுகின்றனர்?)

அனைத்துலக ஒத்துழைப்பு அவசியம்

இவ் விடயமான அனைத்துலக நாடுகளும் தீவிர ஒத்துழைப்பு வழங்குவது பேரழிவைத் தடுக்க வழியாகும். அது இன்மையால், ஒரு நாட்டில் தீவிர சந்தேகத்துக்காளாகிய நபர்கள் மற்றொரு நாட்டுக்குத் தப்பிச் சென்று, விசாரணைக்குட்படாது தப்பி விடுகின்றனர். தண்டனை ஏதுமே கிடையாது. சென்ற காலத்தில், சர்வதேச காவல்துறையினர் (இன்ரபோல்) அணுக்கருப் பொருள் கடத்தலை உடல் நலத்துக்கு மாறான செயல் என்றே கணித்தனர். ஒகஸ்ற் பிற் பகுதியில் சர்வதேச காவல் துறையின் பொருளாதார குற்றவியற் குழுவின் தலைமை அதிகாரி ஹிரோகி தக்கிஸாவா 'நியூஸ்வீக்' சஞ்சிகைக்கு கூறினார்: "இப்பொழுது நாங்கள் குண்டுகள் கைமாறிப் போவது பற்றிச் சிந்திக்க வேண்டிய நாள் வந்துவிட்டது. தேகாரோக்கியப் பிரச்சனை என்று பராமுகமாயிருந்த காலம் மலையேறி விட்டது" என. சர்வதேச காவல் துறையின் பலவீனமான அணுகுமுறையின் அவல நிலையை உத்தேசித்து, ஜேர்மன் வெளித்துறை அமைச்சர் குளோஸ் கிங்கெல், அணுக்கருக் கடத்தலைத் தடுக்கும் அதிகாரம் ஐரோப்பிய ஒன்றியத்தின் கருப்பச் சிசு நிலையிலுள்ள ஐரேப்பிய பொலிஸ் முகவரகத்துக்கு (யூறோபோல் ஏஜென்ஸி) வழங்கப்படல் வேண்டும் எனச் பொர்சு செய்தார்.

நுனிக்கொம்பர் ஏறினார்

ருஷ்யாவில் எவ்வளவு பாதுகாப்பை அதிகரித்தும் என்ன? மேற்கில் காவல் துறையின் கையைப் பலப்படுத்தியும் என்ன? அணுக்கரு வழிமாறிச் செல்லும் கொடுமையைத் தடுக்க முடியுமா? உலகில் மிகப் பெருமளவு அணுக்கரு நஞ்சு (தொட்சின்) நிலை கொண்டுள்ளது. அதனைத் திருடி விற்று இவ்குவில் பணஞ்சம்பாதிக்கும் துட்டர் கூட்டம் மிகுந்து விட்டது. அணுக்கரு என்ற கற்பகத் தருவில் ஏறி உச்சக் கொம்பிலிருக்கும் பாரிஜாத மலராகிய பெரும் பணத்தைப் பறிக்க முயன்று உயிருக்கு இறுதிச் சம்பாதிப்புடன் உலகுயிரினங்கள் அனைத்தையும் பேரழிவுக்கு உட்

படுத்த அக் கூட்டம் தயாராகியுள்ளது. இதற்கு மாற்று வழி ஒன்றே. மேற்குலக நாடுகளும், அவர் தம் முன்னாட் பொதுவுடைமை எதிரிகளும் இந்த விடயத்தில் தம் இரு பகுதியினருக்கும் ஒரேவித நலன்களே உண்டு; வேறு பாட்டுக்கு இடமில்லை என்பதை உணர வேண்டும். இரு கட்சியினரும் போட்டி போட்டு உலக அழிவின் விளிம்பில் விளையாடாது ஒருங்கியைந்த முடிவுக்கு வரவேண்டும். இது நடக்குமா?

இந்நிலையில் பழைய குளிர்ப் போர் ஒரு தற்காலிக அமைதியையும், ஸ்திரத்தையும் போலியாகத் தோற்றுவித்துள்ளதா? பொதுவுடைமை கொடிய பாதை மாறிய 'மதம்' ஆயிருக்கலாம். ஆனால் அது ஒரு நன்மையைச் செய்தது. அது அணுக்கரு என்ற பூதத்தைத் தனது கடின காவல் என்ற போத்தலில் அடைத்து வைத்திருந்தது. இன்றோ? தனிமனித உரிமைக்கு முதன்மை கொடுப்போர் உலகை அழிக்கவும் ஒரு மனிதனுக்கோ, ஒரு குழுவுக்கோ உரிமை உண்டு என்று தர்மம் பேசுகிறார்கள். அறத்தின் இயல்பை உணர்தல் அரிதினும் அரிது. கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்களைக் கட்டதனோடு நேர் மனிதகுலம் என்ற பயிர் அழியாதிருக்க வேண்டுமானால் மலிவாகப் பணஞ் சம்பாதிக்க முயல்வோர் என்றகளை பிடுங்குவது அரசுக்கு அவசர கடமை. இன்று அனைத்துலக அரசு இல்லை. அனைத்து நாடுகளும் இவ்விடயத்தில் மட்டுமேனும் ஏகோபித்த முடிவு எடுக்குமா?

தமிழில் :
நிரு: அ. சபாரத்தினம்

ஒகஸ்ட் 29, ''ரைம்'' ''நியூஸ்வீக்'' சஞ்சிகையில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகளின் தீரட்டு.

★

சமாதானம்

எழியவர்: டானியல் பெடேர்ஸன்

தடை செய்யப்பட்டதும் உறுதியாக இருப்பதும் ஐரோப்பாவில் நீண்ட காலமாக நடைபெறுகின்ற இனக்கலவரத்தின் உறைவிடம் பெல்ஃபாஸ்ற் (Belfast) ஆகும். வட அயர்லாந்தின் பிராந்திய தலைநகரத்தில் கடந்த இருபத்தைந்து வருடங்களாகக் குண்டு வீச்சுக்களும், சிதறடிக்கப்பட்ட நம்பிக்கைகளும் ஊசலாடுகின்ற பொருளாதார நிலையுமாகவே காட்சியளிக்கின்றது. எட்னா பிரயின் என்கின்ற வட அயர்லாந்து பிரபல நாவலாசிரியர் கூறுவது போல் ''ஒவ்வொரு நகரத்திற்கும் ஒவ்வொரு நிறம் இருக்கு மாயின் மொஸ்கோ நகரம் கரும் சிவப்பாகவும், பெல்பாஸ்ற் மழைக்கு குறைவற்ற முகில்களைக் கொண்ட கருமையான சாம்பல் நிறத்தைக் கொண்டதாகவும் இருக்கும்'' என வர்ணிக்கிறார்.

ஆனால் கார்மேகங்களுக்கிடையில் சூரிய ஒளிக்கீற்று இறுதியில் கட்டாயமாகத் தெரிந்துதான் ஆக வேண்டும். இதனை பெல்பாஸ்ற் நகரம் கடந்தவாரம் நேரில் கண்டது. அயர்லாந்து சூடியரசு இராணுவம் (IRA) மிகவும் துணிகரமான நடக்கவே முடியாத படியை மேற்கொண்டதால் காலநிலையைத் தவிர அந்த நகரத்தின் முழு அமைப்புமே மாறிவிட்டது. அமைதியைப் பிரகடனப்படுத்தி இந்த சரித்திர பூர்வமான கணப்பொழுதிற்குரிய வாசகங்களையும் ஆச்சரியப் படத்தக்க வீதத்தில் யாரையும் புண்படுத்தாமல் தெரிவு செய்திருந்தது. டப்ளினில் (Dublin) வெளியிடப்பட்ட அறிக்கையில் அயர்லாந்து குடியரசு இராணுவத்தின் தலைமைப்பீடம் ஒகஸ்ற் 31 ஆம் திகதி நடு இரவிலிருந்து அதன் இராணுவ நடவடிக்கைகளைப் பூரணமாக நிறுத்திக்கொள்வது என முடிவு செய்துள்ளது. இசைந்து நடந்து கொள்ளுமாறு எமது அனைத்துப் பிரிவுகளும் அறிவுறுத்தப் பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இரகசியமான இராணுவ அமைப்பிற்கும் மேலாக உலகத்தை நம்பவைக்குமுகமாக, சமாதானம் என்பது உண்மையான மிகவும் சிக்கலான விடயம். விசேடமாக பல ஆண்டுகளாக கலவரங்களால் பாதிக்கப்பட்டுப் பின்னிப்போய் நம்பிக்கையை இழந்துள்ள, வட அயர்லாந்திற்கு விடுமுறையைக் கழித்துக்கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், பொஸ்

ரவிலிருந்து சான்பிரான்சிஸ்கோ வரையில் உள்ள அயர்லாந்து அமெரிக்கர்கள், அயர்லாந்து குடியரசிலிருந்து தெற்கு வரையிலுள்ள தேசியவாதிகள் ஆகியோர் கடந்த வார மாற்றங்களினால் ஆனந்தமும் உற்சாகமும் அடைந்தார்கள். கலவரங்கள் நிறைந்த கருஞ்சாம்பல் பகுதிகளில் உணர்வுகள் அமைதியாகவே இருந்தன. வறிய கத்தோலிக்கர் வாழுகின்ற மேற்குப்புற பெல்பாஸ்ற் நகரத்தின் நீர்வீழ்ச்சி வீதியில் அயர்லாந்துக் கொடிகளைக் கார்களில் பறக்கவிட்டும், ஒலி எழுப்பியும் ஆரவாரித்தனர். ஆனால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினர் யாவரும் எச்சரிக்கையுடனான நம்பிக்கையுடன்சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கின்றார்கள். ஏனெனில் சமாதானம் என்பது உண்மையில் உண்மையானதாக வேண்டுமென்றால் அது வெல்லப்பட வேண்டும் என்கிறார்கள்.

வட அயர்லாந்தில் வாழுகின்ற பெரும்பான்மையான பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட புரட்டஸ்ரான்ற் உறுப்பினர்களில் அதாவது அதன் மொத்த சனத்தொகையின் அறுபது சதவீதத்தினருக்கு, தெற்கிலுள்ள கத்தோலிக்க அயர்லாந்து குடியரசுடன் இணைக்க வேண்டும் என்கின்ற குறிக்கோளுடன் அயர்லாந்துக் குடியரசு இராணுவத்தின் போராட்டம் ஒரு பயங்கரமான கனவாகவே இருக்கின்றது. ஒகஸ்ற் 31 நடு இரவிலிருந்து இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதான ஐ ஆர் ஏ யின் முடிவு உலகத்தின் அதி நீண்ட கால அரசியல் யுத்தத்தை இது 1171 ஆம் ஆண்டில் இரண்டாம் ஹென்றி அரசன் தனது நோர்மன் கூட்டு ஆதரவுடன் சேர்ந்து ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்காக படை எடுத்ததிலிருந்து இந்தப் பிரச்சனை ஆரம்பித்து முடிவுக்குக் கொண்டு வருவதாக அமையுமென்பதனால் பலரும் அவசரப்பட்டு சொல்வதற்கொன்றுமில்லை, பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்கிறார்கள். நூற்றாண்டு காலமாக நடைபெறுகின்ற சுதந்திரப் போரின் கொந்தளிப்பு பெல்பாஸ்ற் நகர மக்களின் இளைஞர்களிடையே எந்த விதமான எதிர்பார்ப்பையும் கொள்ளை கொண்டிருந்தது.

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் அவர்கள் மிகவும் கவனமான எச்சரிக்கையான சந்தேகமான நிலையைத் தோற்றுவித்திருக்கின்றார். இந்தச்செய்தியை 'மகத்தான சந்தர்ப்பம்' என வரவேற்றுள்ளார். அத்துடன் மேஜரும் அயர்லாந்து பிரதம மந்திரி அல்பெர்ட் ரெயினோல்ட்ஸ்ம் கை குலுக்கி ஒட்டிக்கொண்டு டவுனிங் வீதிப்பிரகடனம் (Downing Street Decleartion) செய்த நாள் முதல் கடந்த எட்டு மாதங்கள் வரை மிகவும் தாராளமாகப்பயன்படுத்திய நிலையான தந்திரோபாயத்தையே அவரும் மேற்கொண்டார். அந்த ஒப்பந்தமானது வட அயர்லாந்தில் சமாதானம் ஏற்படுவதற்கான விதிமுறைகளுக்கு அடித்தளம் போட்டதுடன் வன்முறையை நிரந்தரமாகக் கைவிடுவதென ஐ ஆர் ஏ வேண்டிக்கொள்ளும் பட்சத்தில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளலாம் என அழைப்பும் விடுவிக்கப்பட்டுள்ளது, மேலும் இது பற்றிய விளக்கம் கேட்கவேண்டிய முறை மேஜரிடமிருந்து, ''முழுமை என்பது தற்காலிகமானதா? நிரந்தரமானதா?'' என்றார். ஐ-ஆர். ஏ இன் அரசியல் பிரிவின் தலைவர் ஜெரி அடம்பஸ் இதற்குப் பதிலளிக்கையில், ''முழுமை என்றால் அர்த்தம் முழுமைதான்'' என்றார். அறிக்கையின் மையின் ஈரம் காய்வதற்கு முன்னர் போர் நடைபெற்ற அல்ஸ்ற்றர் மாகாணத்தில் (Ulster province) முன்பு நடந்தது போன்ற அமைதியைக் குழப்புவது போல் சண்டையும் சச்சரவும் இடம் பெற்றது.

இருந்தபோதும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் இந்த அறிவிப்பை 'ஒரு வடிகால்' என்று வர்ணித்தது ஆச்சரியப்படத்தக்க விதத்தில் உண்மையாகும் போலிருக்கிறது. ஏனெனில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக இவ்வாறான வடிகால்கள் வட அயர்லாந்தில் மிக மிக அரிது. ஏன் திடீரென இப்போது? ஐ-ஆர் ஏ துணிச்சலாக ஆகக் குறைந்தது மேலோட்டமாகவே எந்த விதமான முன்நிபந்தனைகளுமின்றித் தரமற்ற முறையில் பகைமையை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்தது. பிரிட்டிஷ் வட அயர்லாந்து இணைப்பை தாரைவார்க்கு முகமாக திரைமறைவில் பின்கதவினூடாக ஒப்பந்தம் செய்யப்பட்டு விட்டது என புரட்டஸ்தாந்த மதத்தினர் சந்தேகிக்கின்றார்கள். ஆனால் வீழ்ச்சி வீதியில் வசிக்கும் கத்தோலிக்க கடும் கோட்பாளர்கள் சாது போன்ற ஜெரி அடம்ஸிற்கே இதனுடைய பலாபலன் உரித்தாகும் என்கிறார்கள். ஆனால் பொருத்தமான விளக்கம் என்னவென்றால், முழுமையான அரசியல் நடைமுறைச் சாத்தியத்தை வளர்த்தெடுத்திருக்கிறார்கள். 25 வருடங்களின் பின்னர் அத்துடன் ஐ. ஆர் ஏ இன் நிபுணத்துவம் வாய்ந்த பலம்

வட அயர்லாந்துக் கலவரங்கள் உண்மையில் முடிந்து விட்டனவா? அயர்லாந்துக் குடியரசு இராணுவம் தன்னுடைய இராணுவ நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி அறைகூவல் விடுத்துள்ளது. ஆனால் அந்த மண்ணில் ஏற்பட்ட வடுவிலிருந்து தொடர்ந்தும் இரத்தம் வடிகின்றது

பொருந்திய இராணுவம் போன்ற அமைப்பு இருந்த போதிலும் குடியரசின் குறிக்கோள்கள் வன்முறையினூடாக அடைவதை விட அரசியல் ரீதியாக அடைவதே மேலும் மேன்மையுடையதாக இருக்குமென ஐ-ஆர். ஏ இன் கடும் கோட்பாளர்களை ஜெரி அடம்ஸ் நம்ப வைத்துள்ளார்.

எப்படி அதனை விவாதித்தாலும் இந்த நிகழ்வுகள் ஐ-ஆர் ஏ இன் முடிவைத் தொட்டுக்காட்டவில்லை. எமது போராட்டம் ஓயவில்லை; ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைந்திருக்கிறோம் என்கிறார் ஜெரி அடம்ஸ். கடந்த 25 வருடங்களாக 1969 இல் புதிய ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியதிலிருந்து சில வேளைகளில் ஐ-ஆர் ஏ இன் கண்மூடித்தனமான வன்முறை நடவடிக்கைகளும் கொல்லப்பட்ட 3,169 பேர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்களுக்குப் பொறுப்பாகும். தன்னுடைய பலம் வாய்ந்த ஏறக்குறைய 300 தொன் எடையுடைய ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் கைவிடுவதற்காக எந்த விதமான அறிகுறியையும் காட்டவில்லையென இராணுவ நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

புரட்டஸ்தாந்து பயங்கரவாதக் குழுக்களிடமிருந்து யுத்த நிறுத்தத்திற்கு ஒவ்வாததான அசகுணமான வார்த்தைகள் நம்பிக்கையுடன் இருப்பவர்களுக்கு பெரும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது. வரவேற்பில்லாத மிகவும் அசிங்கமான ஆரூடத்தைத் தெரிவித்த அயர்லாந்தின் சுய ஆட்சியை எதிர்க்கும் கடுங்கோட்பாளர்களின் ஜனநாயக யூனியனிஸ்ற் கட்சியின் Democratic Unionist Partv) நீண்ட நாள் தலைவரான வணக்கத்திற்குரிய இயன் பேட்ஸிலியின் (Rev. Ian Paisley) ஆத்திரமூட்டுகின்ற செயற்பாடுகளை நிறுத்துவது என்கின்ற ஐ-ஆர் ஏ இன் அறிவிப்பானது உறைநாட்டு யுத்தத்திற்கான வழிகாட்டி என்ற கூற்று அவருடைய கௌரவத்தைப் பாதித்தது. ஆனால் அப்படி நடக்கும் வாய்ப்பு மிகவும் அரிது. ஆனால் புரட்டஸ்தாந்துக்களின் அட்டகாசம் மேலோங்கலாம் இல்லையா? 1985 இல் இந்த விசுவாசப் பயங்கரவாதக்குழுக்கள் இருவரை பலி எடுத்தன. இரண்டு நிழல் குழுக்களான அல்ஸ்ற்றர் பாதுகாப்புக் கழகம் (Ulster Defense Association) அல்ஸ்ற்றர் கொண்டர் படை (Ulster Volunteer Force) ஆயின 1993 இல் 47 பேரைக் கொன்றனர். 1994 ஆகஸ்ற் வரை ஐ-ஆர் ஏ 33 பேரைக் கொன்றதற்கு அடுத்தபடியாக 24 பேரை இவை கொன்றிருக்கின்றன. இன்னொரு புரட்டஸ்தாந்துக் எல்லைக்குழுவான அல்ஸ்ரர் சுதந்திர போராளிகள் (Ulster Freedom Fighters) அமைப்பு பெல்பாஸ்ற்றின் ஒரு கத்தோலிக்கரைக் கொலை செய்து தனது வரவேற்பைத் தெரிவித்தது. இப்படியான தாக்குதல்கள் எதிர்த்தாக்குதல்களை ஐ-ஆர் ஏ இனர் தொடுப்பதற்குத் தூண்டுதல்களாகவே அமையும் என்கிறார் ரிச்சட்ஸ் இங்கிலிடி.

இருண்ட பாதையை முன்னே கொண்டிருக்கின்ற நிலையில் அடுத்து நடக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் பற்றிய கணிப்பை நியூஸ் வீக் சஞ்சிகை அரசாங்கத்தின் உள்ளேயும், வெளியேயும் உள்ளவர்களை நேர்முகங்கண்டு அடிப்படையில் பன்வரும் படிகளை முன்வைக்கின்றது.

1. ஒலிபரப்பிற்கு பிரிட்டனில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும்.

கடந்த வாரம் அமெரிக்க தொலைக்காட்சி சேவையில் சற்றே அதிசயித்துப்போன ஜெரி அடம்ஸிற்கு நல்ல நேரத்தை வான் அலைகளில் அனுபவிக்கக்கூடியதாக இருந்தது. ஐக்கிய பிரிட்டிஷ் இராச்சியத்திற்குள் ஜெரி அடம்ஸ் உட்பட அனைத்து பின்பெயின் அதிகாரிகளுக்கும் அவர்களுடைய குரல் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலிப்பதை 1988 இல் இருந்து தடைவிதித்தது. ஐ.ஆர்.ஏ.இன் விளம்பரத்திற்கான உயிர்வாயுவை இது தடுக்குமென அப்போதைய பிரதமமந்திரி மார்கிறட் தட்சர் நம்பினார். பி.பி.ஸி உட்பட ஏனைய அனைத்து தகவல் தொடர்பு நிலையங்களும் ஜெரி அடம்ஸின் குரலிற்காக நடிகர்களின் குரலைப் பயன்படுத்தின. பிரிட்டிஷ் சிவில் அதிகாரிகளும் லண்டன் மக்கள் உட்பட இந்தத் தடையானது பெருங்கௌரவத்திற்குரிய மகாராணியின் ஆட்சியைப் பழைய தென் ஆபிரிக்காவில் நிலவுகின்ற அடக்குமுறை ஆட்சிக்கு ஒப்பிட்டார்கள். இந்தக் கொள்கையானது அல்ஸ்ற்றிலுள்ள மூன்றில் ஒரு கத்தோலிக்கர்களினதும் வட அயர்லாந்திலுள்ள பத்து சதவீதத்தினரினதும் ஜனநாயக ரீதியில் ஆதரவைக்கொண்ட கட்சிக்கு ஏற்பட்ட அவமரியாதை என்றே பின்பெயின் கருதியது.

பின்பெயின் மீதான இது போன்ற தடையை கடந்த ஜனவரி மாதம் தான் அயர்லாந்து அரசாங்கம் நீக்கியிருந்தது. காலம்: இரண்டு கிழமைகள்.

2. வீதிகளைத் திறத்தல்.

அயர்லாந்தையும் வட அயர்லாந்தையும் இணைக்கின்ற பிரதான வீதிகளின் எல்லைகளில் பொலிசார் கடுங்காவல் புரிகின்றனர். உட்புற வீதிகள் ஒரேயடியாக மூடப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட வீதிகளைத் திறத்தல், படிப்படியாக அதிகரித்துக் கொண்டு செல்லுதல் என்பன அழுத்தத்தைக் குறைக்க உதவி செய்யும். ஐ.ஆர்.ஏ இல் பிளவுகள் ஏற்படாமல் பாதுகாப்பதற்கு சமாதானத்திற்காக நடைமுறையில் சில சலுகைகளை ஜெரி அடம்ஸிற்கு அதாவது உடைகின்ற பலகைக்குக் குறுக்கே இன்னொரு பலகை வைத்துப் பூட்டுவதற்கு ஆணிகள் தேவைப்படுவது போல் வழங்கப்படல் வேண்டும்.

காலம்: அடுத்த மூன்று மாதங்களிற்குள்.

கலவரத்தின் காலங்கள்

கடந்த கால் நூற்றாண்டு காலமாக வட அயர்லாந்தில் நடை பெறுகின்ற கலவரங்களில் கத்தோலிக்க புரட்டஸ்ரான்ட் மத மக்களிடையே நடைபெறும் கரந்தடிப்படைப் போர் முடிவில்லாத வட்டமாக மரணங்களை ஏற்படுத்தும் தாக்குதல்களையும், இடையிடையே நம்பிக்கைக் கீற்றுக்களையும், பின்னர் அவை சரிந்து விடுவதுமான நிலையையும் கொண்டிருந்தது.

ஆகஸ்ட் 14, 1969

புரட்டஸ்ரான்ட் கத்தோலிக் கரிடையே நடைபெற்ற கலவரத்தைக் கட்டுப்படுத்துமுகமாக வட அயர்லாந்திற்கு முதன் முதலாகப் பிரிட்டிஷ் இராணுவம் வருதல்.

ஜனவரி 30, 1972

இலண்டன்டரியில் கத்தோலிக்கர் நடாத்திய மனித உரிமைகள் ஊர்வலத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தினருடன் மோதலில் அவர்கள் சுட்டதில் 13 பேர் கொல்லப்பட்ட இரத்தம் படிந்த ஞாயிறு (Bloody Sunday)நாள்.

மார்ச் 24, 1972

பிரிட்டிஷ் பிரதமர் எட்வாட் கீத் வட அயர்லாந்தை இலண்டனின் ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்தார்.

யூன் 27, 1974

இலண்டனும், டபிளினும் மேற் கொண்ட அதிகாரப்பகிர்வு ஒப்பந்தம் புரட்டஸ்ரான்ற் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தினால் தோற்கடிக்கப்பட்டது.

பெப்ரவரி 9, 1975

தாக்குதல்களைக் காலவரையின்றி நிறுத்துவதான அறிவிப்பு புரட்டஸ்ரான்டுகளினதும், ஐ. ஆர். ஏ யினதும் சில தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றாலும் 22 வரை போர் நிறுத்தம் தொடர்ந்தது.

ஆகஸ்ற் 27, 1979

மகாராணியின் மைத்துனரும், இரண்டாம் உலக மகாயுத்த வீரருமான லோர்ட் மவுன்ற் பேர்ட்டன் அவருடைய உல்லாசப் படகில் குண்டு வெடித்தது. கொலை செய்யப்படுதல்.

மார்ச் 1, 1981

சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஐ-ஆர். ஏ தலைவர்களில் ஒருவரான சான்ட்ஸ் ஐ. ஆர். ஏ கைதிகளுக்கு அரசியல் அந்தஸ்துக் கோரித் தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

ஏப்ரல் 9, 1981

பொபி சான்ட்ஸ் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுகிறார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மே 5, 1981

பெல்ஸ்பாற்றிலுள்ள மோஸ் சிறைச்சாலையில் உள்ள மருத்துவப் பிரிவில் பொபி சான்ட்ஸ் மரணமடைகிறார். அவருடைய இறப்பு ஸின் பெயினுக்குப் பெரும் ஆதரவு அலையைத் தேடிக் கொடுக்கிறது.

யூலை 20, 1982

இலண்டன் கைட் பூங்காவில் மகாராணியின் அரண்மனை பராமரிப்புப் பிரிவைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் கார்க் குண்டு வெடிப்பில் கொல்லப்படுகிறார்கள். அதே நாள் இலண்டனிலுள்ள ரீஜன்ட் பார்க்கில் பான்ட் வாத்திய உபகரணத்தில் 6 இராணுவ இசையமைப்பாளர்கள் கொல்லப்பட்டார்கள்.

டிசம்பர் 17, 1983

கரோட்ஸ் விற்பனைப் பிரிவில் குண்டு வெடித்ததில் 5 பேர் கொல்லப்பட்டும், 91 பேர் படுகாயமடைந்தனர்.

அக்ரோபர் 12, 1984

இங்கிலாந்திலி பிறைட்டன் நகரில் உள்ள கிரான்ட் உல்லாச விடுதியில் (Grand Hotel) நடைபெற்ற குண்டு வெடிப்பில் பிரதம மந்திரி மார்க்கிரெட் தட்சரும் அவருடைய மந்திரி சபை உறுப்பினர்களும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

நவம்பர் 15, 1985

வட அயர்லாந்து விவகாரத்தில் தனது சொல்லுக்கும் இடம் இருக்கும் விதத்தில அதற்கு மாற்றீடாகப் பயங்கவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க வழி செய்கின்ற ஆங்கில ஐரிஸ் ஒப்பந்தத்தில் தட்சரும் அயர்லாந்துப் பிரதம மந்திரி கரட் பிறீஸ் ஜெரால்டும் கைச்சாத்திடுதல்.

அக்டோபர் 19, 1989

கில்போர்ட் நான்கு Guild ford Four) என்கின்ற நான்கு ஐ. ஆர் ஏ உறுப்பினர்களுக்கு 1974 இல் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்காக வழங்கப்பட்ட சிறைத் தண்டனையைப் பிரிட்டிஷ் மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்துச் செய்தது.

பெப்ரவரி 7, 1991

பிரிட்டிஷ் பிரதமரின் வதிவிடமான டவுனிங் வீதி இலக்கத்தின் மீது எறிகணைத் தாக்குதல். பிரதமர் ஜோன் மேஜரும், மந்திரிசபையும் கொலைச் சதியிலிருந்து நழுவிக் கொண்டது.

ஏப்ரல் 10, 1992

இலண்டன் போல்ற்றிக் எக்சேஞ்சில் (London Baltic Ex change) ஐ. ஆர். ஏ நடத்திய குண்டுத் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டும், 100 பேர் காயமடைந்தும், ஏறக்குறைய 600 மில்லியன் பவுண்கள் பெறுமதியான கொத்துக்களும், வருமானமும் இழக்கப்பட்டது.

மார்ச் 20, 1993

இங்கிலாந்தின் வடமேற்கிலுள்ள வாரிங்டன் (Warrington) நகரில் ஐ. ஆர். ஏ குண்டுத்தாக்குதலில் 2 பிள்ளைகள் கொல்லப்பட்டும், 56 பேர் காயப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் இரண்டு வாரங்களாகக் கடுமையான அமைதி ஊர்வலம் நடாத்தப்பட்டது.

ஏப்ரல் 10, 1993

பாராளுமன்ற உறுப்பினரும், வட அயர்லாந்தின் கத்தோலிக்கரைச் சார்ந்த சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் தலைவருமான ஜோன் கியூம் ஸின் பெயினின் தலைவரான கெரி அடம்ஸ் இரகசியமாகப் பேச்சுக்களை ஆரம்பித்தல்.

செப்ரெம்பர் 27, 1993

சமாதானத் தீர்வுத் திட்டத்திற்கான விரிவான விதிமுறைகளைக் கைக்கொள்வதற்கென கெரி அடம்ஸ் கியூமும் ஒப்புக் கொள்ளுதல்.

அக்ரோபர் 29, 1993

மேஜரும் அயர்லாந்துப் பிரதம மந்திரி அல்பிரெட் ரெய்னோல்ட்ஸும் வட அயர்லாந்து விடயத்தில் ஒத்துழைப்பது என்றும், ஆனால் அடம்ஸ் கியூபின் திட்டத்தை மறுதலிப்பதெனவும் அறிவிக்கப்படுகிறது.

நவம்பர் 15, 1993

ஐ ஆர் ஏ வன்முறையைக் கைவிடுவதென உறுதியளித்தல். அமைதிப் பேச்சுக்களில் கெரி அம்ஸிற்கு இடம் தருவதாக மேஜர் அறிவிக்கிறார். பிரிட்டன் ஐ. ஆர். ஏ உடன் கதைப்பதாக அடம்ஸ் தெரிவிக்கிறார். பிரிட்டன் இதனை மறுக்கிறது.

நவம்பர் 19, 1993

அயர்லாந்தின் ஒற்றுமைக்கு ஐக்கிய இராஜ்யம் ஒத்துழைப்புத் தருமாயின் வட அயர்லாந்தை அரசியலமைப்பின் படி உரிமை கோருவதற்கான சாசனத்தைப் புகுத்தலாம் என்கின்ற இரகசிய ஆவணம் அம்பலமாக்கப்படுதல்.

நவப்பர் 27, 1993

ஐ. ஆர். ஏ உடன் நீண்ட நாள் தொடர்புகள் வைத்திருப்பதாகப் பிரிட்டன் உறுதிப்படுத்துகிறது.

டிசம்பர் 15, 1993

டவுனிங் வீதிப் பிரகடனம் அமைதிக்கான அடித்தளத்தை வழங்குகின்றது. பெரும்பான்மையான மக்களின் சம்மதமின்றி வட அயர்லாந்தில் எவ்வித மாற்றமுமில்லை என ரெய்னோல்ட்ஸும், மேஜரும் அறிவிக்கிறார்கள்.

பெப்ரவரி 01, 1994

48 மணித்தியால விசாவுடன் கெரி அடம்ஸ் அமெரிக்காவிற்கு வருகிறார்.

யூலை 24, 1994

பிரிட்டிஷ் ஐரிஸ் பிரகடனத்தை ஸின்பெயின் மறுதலிக்கிறது.

ஆகஸ்ட் 31, 1994

ஐ. ஆர். ஏ போர் நிறுத்தத்தை அறிவிக்கிறது.

3. சில அரசியல் கைதிகளை விடுதலை அல்லது பரிமாற்றம் செய்ய வேண்டும்.

(Release or Transfer Some Political Prisoners)

இதில் ஓரளவிற்கு விட்டுக் கொடுக்கும் தன்மையை ஏற்கனவே பிரிட்டிஷ் அரசாங்கம் காட்டியுள்ளது. பிரிட்டன் பெருநிலத்திலுள்ள சிறைகளிலிருந்து எண்ணிக்கை தெரியாத ஐ. ஆர். ஏ கைதிகள் அமைதியாக விடுதலைசெய்யப்பட்ட பின்னர் வன்முறையற்ற முறையை மேற்கொள்ளுமாறு ஐ. ஆர். ஏ. ஐ தம்பச் செய்ததாகச் சில அறிக்கைகள் கூறுகின்றன. ஏனையோர் கிறிஸ்மஸ் லீவிற்காக வீட்டுக்குச் செல்லவும், உலகக் கிண்ணத்தை பார்வையிடுவதற்கும் அனுமதிக்கப்பட்டு விட்டார்கள். இதே போன்ற அன்பளிப்புக்களுக்கான வாக்குறுதிகள் புரட்டஸ்தாண்டினரைத் தூண்டி அவர்களது இராணுவ அமைப்புக்களின் ஆத்திரமூட்டல் செயற்பாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவர உதவி செய்யும்.

காலம்: படிப்படியான படிமுறைகள்.

4. இராணுவத்தின் பிரசன்னத்தைக் குறைத்தல்.

Reduce The Military Presence

மாகாணத்தின் பொலிஸ்படையான றோயல் அல்ஸ்ற்றர் பொலிஸ் பிரிவின் தலைவரான சேர் ஹக் அனஸ்லீ, (Sir Hugh Annesley) சமாதானம் தனது கால்களை ஊன்றத் தொடங்கியதும் இது சாத்தியப்படும் என்றிருக்கிறார். இவருடைய வெளிப்படையான கூற்றுக்கு சுயஆட்சியை வட அயர்லாந்தில் எதிர்க்கின்ற கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர். சேர் அனஸ்லீ தன்னுடைய நிலைப்பாட்டில் உறுதியாக நின்றார். ஆனால் விபரிக்க விரும்பவில்லை. நடைமுறைச் சாத்தியமான ஓர் இலட்சிய முடிவு என்னவென்றால் கத்தோலிக்கரின் பகுதியிலிருந்து ஒரு சில கிழமைகளுக்குள் குறிப்பிடத் தக்களவு பொலிசாரை ரோந்து நடவடிக்கைகளிலிருந்து வாபஸ் பெறுதல். அடுத்த ஆண்டின் முதல் அரைவாசிப் பகுதியில் அல்ஸ்ற்றரில் நிலைகொண்டுள்ள 17,600 இராணுவத்தினரின் அரைவாசியை வலக்கிக் கொள்ளல்.

இது ஒரு சக்தி வாய்ந்த அடையாளமாக அமையும். ஆனால் புரட்டஸ்ரான்றுகளின் ஊடுருவலும், பயமுறுத்தலும் இருக்கு மட்டும் இது ஆபத்கான நடவடிக்கையாகவும் அமையலாம்.
காலம்: சூழ்நிலையிலேயே முழுவதும் தங்கியிருக்கின்றது.

5. அமெரிக்காவிற்குத் திறந்து விடுதல் (*Open America*)

அடம்ஸ் அமெரிக்க மண்ணில் நீண்ட நேரம் நின்றதைப் பலர் பார்த்திருக்கமாட்டார்கள். சுட்டுப் பாடுகள் குறைந்த அதிகம் பேருக்கு வீஸாக்கள்.–ஜெரி அடம்ஸ் சிற்தும் ஏனைய ஸின் பெயின் உயர் அதிகாரிகளுக்கும் கிடைக்கு விருக்கின்றது. அவர்கள் எப்பொழுதுமே மிகவும் நுணுக்கமாக சம நிலையான உண்மையைப் பேசாவிட்டால் தான் என்ன? முன்னை நாள் அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதி மொரிஸன் குறிப்பிடுகையில், ''வார்த்தைகளால் ஒருவர் சண்டையிடுகின்றபோது எந்தவொரு பார்வையாளர்களையும் அடைவதற்கு அவருக்கு உரிமையுண்டு'' என்கிறார். கவலை கொண்டுள்ள பிரிட்டனுக்கு இதுஒரு படி சாதகமாக அமையும். ஸின்பெயின் தலைவர்கள் எவ்வளவிற்கு அதிகளவில் வழமையான அங்கீகரிக்கப்பட்ட தகவல் உலக அரசியலில் பங்கேற்கிறார்களோ அவ்வளவிற்குத் தமது பழைய கொடூரமான விவாத முறைகளைக் குறைத்துக்கொள்வர்கள்.
காலம்: உடனடியாக.

6. பேச்சு பேச்சு பேச்சு. (*Talk Talk Talk*)

இப்போது இருக்கின்ற உந்தல் தொடருமாயின் பேசுவதற்கு அட்டவணையில் ஏராளமாக இருக்கின்றது. முதலாவதாக அயர்லாந்து தேசியவாதிகளான அடம்ஸ் முதல் அயர்லாந்து பிரதமமந்திரி ரெய்னோல்டஸ் வரை அக்ரோபர் மாதம் டபிளினில் (Dublin) நடைபெறவிருக்கும் பரந்துபட்ட அயர்லாந்து மாநாட்டின் ஒரே மேசையில் காணப்படலாம். அதனையும் விட திருப்பு முனையாக ஒரு வேளை அடுத்த மூன்று மாதங்களுக்குள் நடந்தேறலாம். ஸின் பெயின் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடனும், சுயஆட்சியை எதிர்ப்பவர்களுடனும் ஒரே மேசையில் இருந்து பேசலாம். முதலில் தொடர்ந்து அடுத்த முறை என்ன பேசுவது என்று இப்போது பேசுவார்கள். அதன் பின்னர் என்ன நடக்கும்? அது ஒரு பொருட்டேயல்ல. எந்தவொரு விடயமென்றாலும் ஒப்பந்தம் ஏற்படப் போவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. 16 வருடங்களுக்கும் பின்னர் 1991 ஆம் ஆண்டில் ஸின்பெயின் பங்கு கொள்ளாது மிதவாத தேசியவாதிகளுக்கும், அயர்லாந்தில் சுயஆட்சியை எதிர்ப்போருக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தை ஓர் இடமும் போய்ச் சேரவில்லை. ஐ. ஆர். ஏ இன் இந்தப் புதிய அறிவிப்பிற்கு இரண்டு நாள்களுக்குப் பின்னர் பிரிட்டிஷ் உயர் அதிகாரி ஒருவர், ''கணிசமான முற்னேற்றம் சமாதானப் பேச்சுக்களில் ஏற்படுவதற்கு ஆகக்குறைந்தது இரண்டு நிமிடங்களுக்கு மேல் எடுக்கும்'' என்றார். அவர் கூற்று அநேகமாகச் சரியாகத்தான் இருக்க வேண்டும்.

7 வட அயர்லாந்தில் முதலீடு செய்ய வேண்டும். (*Invest In Northern Ireland*)

யுத்தம் என்றோ ஒரு நாள் முடிவிற்குக் கொண்டுவரும் போது பலர் முதலீடு செய்யத்தான் போகின்றார்கள். வடஅயர்லாந்தில் அமைதி திரும்பினால் அமெரிக்காவினுடைய 150 மில்லியன் டொலர் முதலீடு பிரதானமான வடிகாலாக அமையும். பெரும் பான்மையான புரட்டஸ்ரான்று களின் ஏறக்குறைய 20,000 பேரினுடைய தொழில் இழப்பிற்கு வன்முறை காரணமாக அமைந்து விட்டது. இத்துடன் சலுகை அடிப்படையிலான பிரிட்டனின் பொருளாதார உதவியாக 4.5 பில்லியன் (4,500 பில்லியன்) அமெரிக்க டொலரை அல்ஸ்ற்றர் மாநிலத்திற்குச் செலவிடுகின்றது. பிரிட்டிஷ் தனது துருப்புக்களை விலக்கிக் கொள்ளும் போது இந்த நிதி உதவியும் விலக்கிக் கொண்டு தெற்கு எல்லையப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு விட்டுவிடும் என்கிற சிந்தையும் நிலவுகின்றது. குயின்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த றிச்சார்ட் இங்கிலிஸ், ''இடிந்து நாசமாக்கப் பட்ட கட்டடங்களை மீளக் கட்டுவதில் கண்ணாடிக் காரர்களும், கட்டடக் கலைஞர்களும் பெரும் பணம் சம்பாதிக்கலாம்'' என்கிறார்.
காலம்: அயர்லாந்து – அமெரிக்கர் களிடமிருந்து வரும் பணத்தைப் பொறுத்தது.

8. ஆயுதங்களைக் கையளித்தல். (*Hand Over Weapons*)

இது தான், சந்தேகம் கொண்ட அயர்லாந்தின் சுயஆட்சியை எதிர்ப்பவர்கள் எதிர்பார்த்திருப்பதும் ஐ. ஆர். ஏ கடைசியாகச் செய்ய விரும்புவதும் குறிப்பாக புரட்டஸ்ரான்றுகளின் கெடுபிடிகள் அதிகரிக்கின்ற அபாயம் இருக்கையில் அநேகமான கனரக ஆயுதங்கள் எண்ணெய் பூசப்பட்டுப் பாதுகாப்பாக ஆயுதக்களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்படும். பேசுகின்ற விளையாட்டுத் தொடரும்.
காலம்: சாத்தியமான வருடங்கள்.

9 அரசமைப்பில் திருத்தங்கள் செய்தல். (*Make Constitutional Revisions*)

அயர்லாந்து அரசியலமைப்பையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின்

அயர்லாந்து சட்டப்பிரமாணத்தையும் மாற்றியமைக்கும் பொருட்டு இரு நாட்டுச் சிவில் அதிகாரிகளையும் விவாதிக்க வேண்டுமென்பது ஒரு கருத்தாகும், இரண்டு ஆவணங்களுக்கு வட அயர்லாந்து மீது தமது ஆட்சியுரிமையைக் கோருகின்றன. ஐக்கியராட்சியத்துக்குள் (Uuited Kingdom) அடங்கியிருக்கும் அல்ஸ்ற்றரின் எதிர்காலத்தை அங்குள்ள மக்களே தீர்மானிக்க வேண்டும் என "டவுனிங் வீதி பிரகடனத்தில்" (Downing Street) ஏற்பட்டுள்ள அபிப்பிராயம் முன்னைய இரண்டு ஆவணங்களிலும் இருந்திருக்கவில்லை. புதிய மாற்றங்கள் அரசியல் அமைப்புச்சட்டத்தில் அங்கீகரிக்கப்படுவதற்குச் சர்வஜன வாக்கெடுப்பும் பாராளுமன்ற வாக்குப்பதிவும் அவசியமாகும்.
காலம்: தெரியாது.

10, எல்லைகளில் ஒத்துழைத்தல் (*Cooperate Across Boarders*)

என்றோ ஒரு நாள் வட அயர்லாந்து தனி சுயாட்சிப்பிரிவாக வருமெனக் கனவினைக் காண்கிறார்கள். அப்படி இல்லையென்றாலும் வட அயர்லாந்தின் தலைவிதியை தீர்மானிக்கக்கூடிய அதிகளவு அதிகாரங்களையுடைய சபையொன்று பெல்பாஸ்ற்றில் அமைய வேண்டுமென்கிறார்கள். இதன் மூலம் வடக்கும், தெற்கும் இணைந்து கெயற்படலாம் என்கிறார்கள் எல்லைகளுக்கிடையில் உல்லாசப்பயணத்துறை, விவசாயம் என்பவற்றில் அதிகளவு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் முழு அயர்லாந்து என்கின்ற இலட்சியத்தில் தேசியவில் பாதுகாப்பு சக்திப்பரிமாற்றம் போன்ற நிறுவனங்களைக் கட்டியெழுப்பலாம். இந்தப் படிமுறைகள் மூலம் என்றோ ஒரு நாள் யாராவது சிலரின் வாழ்க்கைக் காலத்தில் அமைதியான ஒன்று பட்ட அயர்லாந்து உருவாகிவிடும்.
காலம்: தெரியாது.

நாளை எல்லாமே விழுந்து நொறுங்கி இரத்தக்களரி ஏற்படலாம். இதற்கு மாற்றீடாக யீற்ஸ் தனது பயங்கர அழகு என்கிற கவிதையில் காண்கின்ற 1916 இன் அயர்லாந்தின் உதயம் துப்பாக்கிகளன்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயங்களின் அடிப்படையில் தோன்றக்கூடும். அந்த மாநிலத்தவர்கள் ஜனநாயகரீதியில் டபிளினுடன் இணைந்து தெரிவு செய்ய வாக்களிக்க வேண்டும். அபிப்பிராய வாக்கெடுப்பில் பிரிட்டிஷ் பெரு நிலப்பரப்பில் உள்ளவர்கள் மூன்றில் ஒரு பகுதியினரே இணைப்பைத் எதிர்க்கிறார்கள். ஆனால் அந்த நாள் அது எப்போதாவது வருமானால் தூரத்திலேயே தள்ளி வைக்கப்படும். அதே நேரம் அயர்லாந்து அரசியல்வாதிகள் பிரதான நீரோட்டத்திலிருக்கிற கத்தோலிக்க அரசியல்வாதியான கியூமின் ஆலோசனைப்படி நடப்பதைத்தவிர வேறொன்றும் பெரிதாகச் செய்துவிட முடியாது. ஏனெனில் ஒதுக்கரையில் அடைந்துள்ள முன்னேற்றங்களுக்கு பேச்சுவார்த்தைகளில் மிகவும் அவசியமாகத் தேவைப்பட்டவை அவருடைய சிறந்த யுக்திகளாகும்.

இரத்தம் சிந்தாமல் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து எமது வியர்வையைச் சிந்தும்போது பழைய தடைகள் யாவும் உடைத்தெறியப்படும். வட அயர்லாந்தில் இந்தப் புதிய எண்ணவலை முழுமையாகத் தவறான ஒலியையும் பொய்யான நம்பிக்கையையும் ஏற்படுத்தவில்லை.

தமிழில்:
வைத்திய கலாநிதி
எஸ். பி. ஆர். சிறிமாறன்.

நியூஸ்வீக், செப்ரெம்பர் 12, 1994

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒற்றுக் கேட்கும்போது

கம்பியில்லாத தொலைபேசிகள் அநேகமானவை இரு திசை வானொலி பெருக்கிகள் போல் அமைந்து செயற்படுவதனால் திறந்த வான்வெளியில் அந்த ஒலிகள் செல்லும் பொழுது அதனைக் கூட மூன்றாம் நபர்கள் ஒற்றுக் கேட்க முடியும் என்று இருந்த நிலைக்கு முற்றுப்புள்ளி போட ஒரு புதிய சாதனத்தை நியூஜேர்சியில் உள்ள பனாசோனிக் நிறுவனம் சந்தைப்படுத்துகிறது.

சீசியர் காட் என்ற அந்தச் சாதனம் பொருத்தப்பட்ட கம்பியில்லாத தொலைபேசியில் இருமுனைகளில் இருவர் பேசும் பொழுது மூன்றாமவர் ஒற்றுக் கேட்க முனைந்தால் அவரை அடையும் ஒலி சிதறியதாக, விளக்கமற்றதாக இருக்கும். புறப்படும் இடத்திலிருந்து வெளிப்படும் ஒலியும் சென்றடையும் இடத்திலிருந்து வெளிப்படும் ஒலியும், ஒற்றுக் கேட்கும் மூன்றாம் ஒலிவாங்கியில் குழப்பிய நிலையில் கேட்பதனால் ஒற்றுக்கேட்பவர் புரிந்து கொள்ள முடியாது. விலைகள் 120 முதல் 299 டொலர் வரை.

பப்புவா நியூ கினியா

சான்னின் வாய்ப்பு

எழுதியவர்: ரொவான் கல்லிக்

சேர் யூலியஸ் சானிற்கு 12 வருடங்கள் எடுத்தது பப்புவா நியூ கினியாவின் புதிய மந்திரியாகத் திரும்பவும் வருவதற்கு. ஆனால் இப்போது திரும்ப வந்ததும் தான் இழந்து விட்ட நேரத்தைச் சரி செய்வது போன்று மிகவும் விரைந்து செயற்படுவது போல் தெரிகிறது.

55 வயதான பிரதமர், பப்புவா நியூ கினியாவின் மிகப் பெரிய பிரச்சனையை மிக விரைவாகத் தீர்க்க முயற்சிக்கிறார். பப்புவா நியூ கினியாவின் பெரு நிலப்பரப்பிலிருந்து 800 கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் சிறிய தீவான போகன்வில்லாவில் 6 ஆண்டுக் காலமாக நடைபெறும் பிரிவினவாத கெரில்லாப் போருக்கு, இந்தக் கலவரங்களினால் இது வரையில் மருத்துவ வசதிகள் இல்லாமையினாலும், பொருள்களின் விநியோகம் தடைப்பட்டிருந்ததாலும் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தனர். 300 இற்கும் மேற்பட்ட போராளிகளும், இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒகஸ்ற் 30 ஆம் தேதி பிரதமராகப் பிரமாணம் செய்து கொண்டதுடன் போகன்வில்லா பிரச்சினைக்கே முன்னுரிமை என அறிவித்தார் செப்ரெம்பர் 2 ஆம் தேதி அருகிலுள்ள சொலமன் தீவுகளுக்குச் சென்று போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார் அடுத்த நாளே சானும், போகன்வில்லா புரட்சிகர இராணுவத்தின் தளபதி (Bouganville Revolutionary Army Chief) சாம் கௌனாவும் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள், அடுத்த ஏழு நாள்களுக்குள் போர் நிறுத்தம் அறிவிக்கப்படும் வரை தமது நிலைகளிலேயே நிலை கொள்ளுமாறு போராளிகளும், அரச துருப்பினரும் கேட்கப்பட்டுள்ளனர்.

புதிய பிரதமர் போகன்வில்லாவின் பிரச்சனையைத் தீர்க்க விரைந்து செயற்படுகிறார்.

அக்ரோபர் 10 ஆம் தேதிக்கு முன்னர் அரசியல் விடயங்கள் பற்றியும், அமைதிப்படையை ஈடுபடுத்துவது பற்றியும் ஆராய்வதான மாநாடு நடத்துவதற்கு கௌனாவும், சானும் ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த அமைதிப்படை அயலிலுள்ள பிஜி தீவுகள் (Fiji) வனுஆட்டு (Vanuatu) முடியுமானால் டொங்கா ஆகிய நாடுகளின் துருப்புக்களிலிருந்து வங்கம் வகிப்பார்கள். 'போகன்வில்லாவிற்கு சுதந்திரம்' என்கின்ற போராளிகளின் குறிக்கோள் சான் கௌனாவின் பேச்சு வார்த்தையில் நேரடியாகப் பேசப்படவில்லை.

மக்களுடைய அயரங்களைக் குறைப்பது மட்டுமன்றி உலகத்திலேயே அதிகளவு செப்பை உற்பத்தி செய்கின்ற பன்குனா செப்புச் சுரங்கத்திலிருந்து செப்பு உற்பத்தியினை மீண்டும் ஆரம்பிக்க இந்த போகன்வில்லா ஒப்பந்தம் வழி செய்கின்றது. இந்த செப்புச் சுரங்கமே சண்டை ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும். அதன் வருவாயில் ஏற்பட்ட சச்சரவுகள் போகன்வில்லா தனியாகப் பிரிய வேண்டும் என்கின்ற உணர்விற்குத் தூபமிட்டது.

CRA என்கிற அவுஸ்திரேலிய சுரங்க நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட்ட இந்தச் சுரங்கத்திலிருந்து பப்புவா நியூ கினியாவின் வருமானத்தின் 20 சத வீதத்தையும், 44 சத வீத வெளி நாட்டு சாம்பத்தியத்தையும் பன்குனா வழங்கி வந்தது. செப்பு உற்பத்தியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நீண்ட காலமும், பெருமளவு பணமும் அதாவது 18 மாதங்களும், 480 மில்லியன் அமெரிக்க டொலர் பணமும் தேவைப்படுமென நிறுவனத்தின் முகாமையாளர் மார்க் ரேய்னர் தெரிவிக்கிறார். ஆனாலும் ஆகக் குறைந்த பட்சம் இது சாத்தியம் என்பது இப்போ தெரிகிறது என்கிறார்.

புதிய பிரதமரின் அடுத்த இலக்கு பாய்ந்து போய் ஆரம்பிக்க விரும்புகின்ற 750 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி கொண்ட இந்த நூற்றாண்டில் உலகத்தின் ஆகப் பெரிய தங்கக் கண்டு பிடிப்பாகிய லிஹிர் திட்டமாகும். இந்தத் திட்டம் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படுவதைக் காண்பதற்கு ஆசைப்படுவதற்கு முக்கிய மான காரணம், இது அவருடைய தேர்தல் தொகுதிக்குள் அமைந்திருப்பதாகும். இவரும் இவருடைய நிதி அமைச்சரான சிறில் கைவெற்றாவும் இந்தத்திட்டம் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்படும் என வாக்குறுதி அளித்தனர்.

முன்னைய பிரதமர் டயான் விங்டியும், நிலச்சுரங்க மந்திரி சேர் ஜோன் கபுட்டிலும் வருமானத்தின் 50 சதவீதத்தை அரசாங்கத்திற்கு கழிவுடன் தரப்படவேண்டுமென கோரியதனால் இந்தத் திட்டம் கடந்த ஒரு வருட காலமாக இழுபட்டுக் கொண்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து அதன் பங்குகளில் 20 சத வீதத்தை மலேசியாவின் நலன்களுக்கு விற்கத் திட்டமிட்டுள்ளனர்.

எல்லாமே இப்போது மாறி விட்டது. இப்போது கூட்டாகச் செயற்பட இருக்கும் RTZ என்கிற பிரித்தானிய நிறுவனத்திற்குச் சுரங்கத்தின் 24 சத வீதப் பெறுமானம் கிடைப்பதுபோல் தெரிகிறது. பப்புவா நியூ கினியா அரசாங்கத்திற்கு 10 சத வீதமும், நியூகினி மைனிங் என்கிற அவுஸ்திரேலிய நிறுவனத்திற்குப் 10 சத வீதப் பங்குகளும் போக மிகுதி பொதுமக்களுக்கும் சொந்தமெனத் தீர்மானிக்கப்பட்டது.

மிகவுந் துடிதுடிப்பான சானுக்கு இன்னொருவரின் அரசாங்கத்தில் இரண்டாம் தரமனிதனாக இருந்து செயற்றிறனுடைய தலைவராக மாறியிருப்பது மீள உயிர்ப்பூட்டுகின்றது போலத் தானிருக்கிறது. கடைசியாக 1980 - 1982 வரை சான் பிரதமராகப் பதவி வகித்திருக்கிறார். அவருடைய இந்தச் சந்தர்ப்பம் 1993 செப்ரெம்பரில் நடைபெற்ற விங்றியின் தெரிவு செல்லுபடியாகாது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துப் புதிய பிரதமரைத் தெரிவு செய்யுமாறு பாராளுமன்றத்தைக் கேட்டுக்கொண்டதிற் கிணங்க வந்தது. மனமுடைந்து போன, விங்டி பிரதமருக்கான போட்டியில் பங்கேற்கவில்லை என அறிவிக்கவே அவருக்குத் துணையாக இருந்த சான் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். இந்தப் பாட்டியில் மக்கள் முன்னேற்றக் கட்சி (Peoples Progressive Party) யின் தலைவரான சான் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தேசிய மக்கள் காங்கிரசின் (National People's Congress) சபாநாயகரான திரு. பில் ஸ்கேற்றை 69 இற்கு 32 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். வெற்றி கொண்ட சான் முன்னைய பிரதான எதிர்க்கட்சியான பான்குக் கட்சியின் தலைவர் கெய்வேற்றாவுடனும், கைவிட்டு எண்ணக் கூடிய சில சிறு கட்சிகளுடனும், சுயேச்சைக் குழுக்களுடனும் இணைந்து கூட்டரசாங்கத்தை அமைத்தார்.

அடுத்த பொதுத்தேர்தல் 1997 ஆம் ஆண்டு நடைபெறுமட்டும், சான் அநேகமாகப் பதவியிலிருப்பார். பப்புவா நியூ கினியா பிரதமர்களில் வழமையாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் பெறவேண்டிய 18 மாத ஆட்சியுரிமையை, வென்றெடுத்துள்ளார். இவ்வாறான தீர்மானங்கள் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் உள்ள 12 மாதங்களில் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மேலும் போகன்வில்லா ஒப்பந்தத்தையும் கவனத்தில் கொள்ளுகின்றபோது புதிய அரசாங்கத்தின் உடனடியான அரசியல் உறுதிப்பாட்டிற்கான வாய்ப்புக்கள் நன்றாகவே இருக்கின்றன.

தமிழில்:
டாக்டர் எஸ். ஆர். சிறிமாறன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வார் ஸ்ரேன் எக்கனமிக் றிவியூ,
செப்ரெம்பர் 15, 1994

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கண்விழிக் கண்ணாடிப் பார்வை

கண் விழித்திரையை ஒட்டினாற்போல அணிந்து கொள்ளும் பார்வைக் கண்ணாடி (Contact Lense) அதனைத் தரித்திருப்பவர் எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும் காலகதியில் அழுக்கடைந்து விடும். அதில் ஒட்டிக்கொள்ளும் அழுக்கு கண்ணுக்கு எரிச்சலைக் கொடுப்பதுடன் பார்வைக்கும் தீங்கு செய்து நுண்கிருமிகள் வளரும் ஓர் இடமாகவும் ஆகலாம். அதனைச் சுத்தப்படுத்துவது என்றால் கழுவுதல், தொற்று நீக்கல் கொண்டு கழுவுதல் என்று பல சோலிகள் அடங்கியதால் அதனை அணிவோர் அநேகர் அந்தவேளையில் பின்னின்று தவறவிடுவதுண்டு. அழுக்குச் சேர்வது என்ற பிரச்சனையோடு தினமும் அதனைக் கையால் தொட்டுப்புழங்குவதால் கிறல் விழவும், கிதறல் ஏற்படவும் செய்கிறது.

இப்பொழுது அந்தப் பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க புளோரிடாவில் உள்ள ஜோன்சன் அன் ஜோன்சன் நிறுவனம் அன்றாடம் பயன்படுத்தி விட்டு இரவில் கழற்றி எறிந்து விட்டு மறுநாள் புதிதாக ஒன்றைத் தரித்துக் கொள்ளத் தக்கவிதமாகக் கண்ஒட்டுக் கண்ணாடி உற்பத்தி செய்கிறது. ஒன்றே அகுவே என்று பெயரிடப்பட்டுள்ளது. ஒரு நாளில் அணியத் தேவையான ஒரு சோடியின் விலை 1.75 முதல் 2.00 டொலர் வரையாகும்.

இன்றைய உலகின் கலைப்பொருள் வாணிப இரகசியங்கள்

தொல்பொருள் ஆய்வு : சீனாவின் தொன்மை வாய்ந்த கலைப்பொக்கிஷங்கள் நாட்டை விட்டுக் கடத்தப்படுகின்றன.

ஐயாயிரம் வருடங்களுக்கு மேலாக நிலைத்த எகிப்திய அரச பரம்பரையினரின் கல்லறைகள் யாவும் இந்த நூற்றாண்டின் முற்பகுதிக்கு முன்பாகவே சூறையாடப்பட்டுள்ளன. திருடர்கள் கண்ணிற் படாமல் எஞ்சியிருந்த ரூட் அன்க் அமன் அரசனின் கல்லறைச் சேமிப்புக்கள் யாவும் 1925 ஆம் ஆண்டு வெளிக் கொணரப் பட்டுள்ளன. குறுகிய காலம் (கி.மு. 1352 – 1343) அரசோச்சிய ஒருவனுக்குத் துணையாக இவ்வளவு திரவியங்கள் என்றால் நாட்டைக் கட்டியெழுப்பியவனின் கல்லறையில் என்னவெல்லாம் இருந்திருக்கக்கூடும். எகிப்தின் பெருமையைப் பறைசாற்ற ரூட் அரசனின் பொக்கிஷங்கள் தான் இன்று மிஞ்சியுள்ளன. இத்தகையதொரு நிலை சீனாவிலும் உருவாகிக் கொண்டுவருகிறது. எகிப்தியர்களைப்போல் அரசர்களின் உடலை சீனர்கள் பதனிடாவிட்டாலும் கல்லறைகளில் பெரும் கலைச் செல்வத்தைக் குவித்து வைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

பிரமிட் கலாசாரம் தொடங்கிய காலத்திலேயே திருடர்களுடைய நடவடிக்கைகளும் ஆரம்பித்துவிட்டன. அல்லாவிட்டால் இவ்வளவு தீவிரமான பாதுகாப்பு முறைகளை அந்தக் காலத்தில் கையாள வேண்டிய அவசியம் இல்லை. என்றாலும் திருடர்கள் பிரமிட் கட்டடத்தை ஊடறுத்து உட்புகுந்து வெற்றிகரமாகத் திருடியுள்ளனர். அரசனின் அதிகாரிகளுக்கும், திருடர்களுக்கும் ஒரு விதப் போட்டியே நடந்ததாக இவ்விடத்தில் குறிப்பிடலாம். ரூட் அரசனின்

2,000 வருடம் பழைமைவாய்ந்த கற்சிற்பங்கள் விலைபோகின்றன.

புதையல் தப்பியுள்ளது களையுலகிற்கு ஒரு பேரதிர்ஷ்டமே. சீனாவில் திருடர்களுக்குப் பஞ்சமில்லை. ஆனால், அவர்கள் அக்காலத்தில் அரசர்களின் கல்லறைகளை அணுகுவதற்கு அஞ்சினர். காரணம் அரசபயம் அல்ல, பேய், பிசாசுப் பயம் தான். 1949 ஆம் ஆண்டு மாவோவின் புரட்சியின் பின் இந்தப் பயம் பெருமளவு நீங்கியுள்ளது. எனினும் துணிந்து திருடுவதற்கு வேறொரு பயம் தொற்றிக் கொண்டுள்ளது. மாவோ போட்ட சட்டத்தின் படி நாட்டின் கலைப் பொருள்களைத் திருடுபவர்கள், திருடி விற்க முயல்பவர்களுக்கு மரணதண்டனை. இரண்டொருவர் இவ்வாறு கொல்லப்பட்டபின் கலைப்பொருள்கள் திருட்டு நடைபெறவேயில்லை.

ஆனால் டெங்கியோபிங் அதிகாரத்திற்கு வந்த பின் சீனா வெளிநாட்டவர்களுக்கும், வெளி நாட்டு வர்த்தகத்திற்கும் திறந்து விடப்பட்டுள்ளது. அதன்பின் கதை வேறுவிதமாக மாறிவிட்டது. இன்று சீனாவின் விவசாயிகள் முதற்கொண்டு அரச அதிகாரிகள் வரை சீனாவின் தொன்மை வாய்ந்த அரசர்களின் கல்லறைகளைச் சூறையாடுவதும், கைக்கெட்டியதைக் கடத்தற்காரர்களுக்கு விற்பதும் ஓர் இலாபகரமான தொழிலாகவே மாறியுள்ளது. சீனாவின் தொழிற்சாலைத் தயாரிப்புக்கள் பெரும் பொதி கொண்டு செல்லும் வாகனங்களில் ஏற்றப்பட்டு ஹொங்கொங், மக்காவோத் தீவுகளுக்கு அனுப்பப்படுவது வழக்கம். இப்போது இதே வழியைப் பின்பற்றி சீனாவின் கலைச் செல்வங்களும் வெளிநாடு செல்கின்றன. அண்மையில் சந்தேகமுற்ற ஹொங்கொங் தீவின் சுங்க அதிகாரி ஒரு கொள்கலனைத் திறந்து பார்த்தபோது கி.மு 2,000 வருடத்திற்குரிய தான் டேரரசர்களின் கல்லறையை அலங்கரித்த சிற்பங்கள் கிடக்கக் கண்

டுள்ளார். கொள்கலன் ஆவணங்களில் அவை மின்சார உபகரணங்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தன.

இன்று உலகம் பூராவாகவும் கலைப் பொருள்களுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஜப்பான், ஜேர்மன் போன்ற நாடுகளின் புதிய பணக்காரர்கள் தங்கள் மாளிகைகளில் இவற்றை அலங்காரப் பொருள்களாகப் பயன்படுத்துகின்றனர். அரசுகளுக்குச் சொந்தமான நுண்கலைப் பொருள் காப்பகங்களும் தரமான பொருள்களுக்கு உச்சமான விலை கொடுக்கத் தயாராக இருக்கின்றன. இந்த வாணிபத்தில் ஓர் அதிசயம் உண்டு. விற்பனைக்கு வரும் சரக்கை எங்கிருந்து கிடைத்தது என்ற விசாரணைக் கேள்வி கேட்க யாருமில்லை. ஒரே மூச்சில் காலதாமதமின்றி வியாபாரம் முடிந்து விடும். கலைப் பொருள்களைத் தொழிற்சாலைகளில் செய்ய முடியாது. செய்ய முடிந்தாலும் அவற்றிற்குப் பழமை ஊட்ட முடியாது; இல்லாவிட்டால் விடுவார்களா ஜப்பானியர்கள்? ஆகவே, கலைப்பொருள்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் பணமே குறியாகத் திருடர்கள் மொய்க்கத்தான் செய்வார்கள். வாங்குபவரின் கட்டளைப்படி திருடி விற்பவர்களும் இந்த வியாபாரத்திற்றான் காணப்படுகின்றனர். இந்தியாவின் நடராசர் சிலைகள் இவ்வாறே அமெரிக்காவுக்கும், இங்கிலாந்திற்கும் பயணம் செய்துள்ளது.

பெறுமதி ஒருபுறமிருக்க, கலைச் செல்வங்கள் நாட்டின் பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றுடன் இணைந்தவையாகும். இவை கப்பலேறும் போது நாட்டின் வரலாறும், அதன் பண்பாட்டுச் சின்னமும் விடை பெறுகின்றன. 1989 – 1990 காலப் பகுதியில் சீனாவின் 40,000 முக்கிய கல்லறைகள் சூறையாடப்பட்டுள்ளன. இன்னும் சில மில்லியன் கல்லறைகள் உடைக்கப்படாது இருக்கின்றன. ஆனால் திருடர்களும் நேர்மையற்ற அதிகாரிகளும் செயற்படும் வேகத்தைப் பார்த்தால் இவை தாக்குப் பிடிப்பது மிகவும் கஷ்டம். ஹொங்கொங் தீவின் கடல் எல்லைக் கப்பால் கப்பல்கள் நங்கூரம் இட்டு நிற்கின்றன. இவை சீனாவின் கலைச் செல்வங்களை ஏற்றிச் செல்வதற்கே பெரும் பாலும் வந்துள்ளன. இவையெல்லாம் நாடறிந்த இரகசியம். ஆனால் சீன அரசு இவற்றையெல்லாம் கவனத்திற்கு எடுப்பதைக் காணோம்.

அமெரிக்காவின் மதிப்புமிக்க றார்வாட் பல்கலைக் கழகப் பேராசிரியர் கே. சி. சாங் பின்வருமாறு சீன நிலவரத்தை மதிப்பீடு செய்துள்ளார்.

"நாடுகளின் வரலாற்றில் நாட்டமுள்ளோர் யாவருக்கும் சீனாவில் நடப்பவை அதிர்ச்சி ஊட்டுகின்றன. சீனாவின் பழம் பெரும் வரலாறே அழிக்கப்படுகிறது."

அவர் கொடுக்கும் விளக்கம் 35,000 வருடங்களுக்கு முன் பிருத்த சீன வரலாற்றாசிரியர்கள் மிருகங்களின் பெரிய எலும்புகளில் பல முக்கிய நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்துள்ளனர். இன்று இவை யாவும யாருக்கு விற்கப்பட்டன என்று தெரியாத நிலையில் நாடு கடந்துள்ளன. அகழ்வு ஆய்வு ஒரு கற்றுத் தேர்ந்த கலை. இன்று திருடர்களும், விவசாயிகளும், அரச அதிகாரிகளும் மனம் போனவாறு தோண்டி எடுத்து வியாபாரம் செய்கின்றனர். முறையான ஆய்வுகள் மேற் கொள்ளும் காலத்தில் முக்கிய தடயங்கள் இருக்கவே மாட்டா. சில விதி முறைகளுக்கு அமைவாகவே அகழ்வுகள் நடத்தப்படுகின்றன. ஆனால் மேற் கூறியவர்களிடம் அவற்றை எதிர்பார்ப்பது பேதைமை.

1970 ஆம் ஆண்டு அமெரிக்கா உட்பட 82 நாடுகள் செய்து கொண்ட கலைப் பொருள் திருட்டைத் தடுக்கும் ஒப்பந்தம் ஜனாவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கலைப் பொருள்களைப் பறிகொடுத்த நாடுகள் அவற்றை மீளப் பெறுவதற்கும், அவை கைமாறாமல் தடுப்பதற்கும் இந்த ஒப்பந்தம் வகை செய்கின்றது. சீனா இதன் கீழ் நன்றாக அங்கத்துவ நாடுகளிடம் உதவி பெறலாம். ஆனால் இது வரை சீனா யாதொரு விண்ணப்பமும் செய்யவில்லை. இது ஒரு மர்மமாகவே உள்ளது. இதற் கிடையில் இன்று சாவதேச மட்டத்தில் நிலவும் கலைப் பொருட்பசி அடங்குவதானால் சீனாவின் கலைச் செல்வங்கள் மாத்தரமல்ல, கம்போடியா, நேபாளம், இந்தியா போன்ற வற்றின் பழம் பெரும் திரவியங்களும் ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும்.



கம்போடியாவின் அன்னோ வாற் சிற்பங்களும் திருடப்பட்டு விற்பனையாகின்றன.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

நியூஸ்வீக், ஒகஸ்ற் 22, 1994

பரம்பரையலகு புவியியல்

விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் தற்போது தான் முதன்முதலில் 23 கோடி மனித மூர்த்தங்களினது வரைபடங்களைத் தயாரித்துள்ளனர்.

எழுதியவர்: கிறிஸ்டீன் கோமன்

கொலம்பஸ், மகேலன் ஆகியோர் காலத்தில் வரையப்பட்ட உலகப்படம் தற்போது பயன்படுத்தப்படுவதில்லை. ஆதிகால ஐரோப்பிய ஆய்வாளர்கள் அமெரிக்கா மிகவும் ஒடுக்கமானது எனக் கருதினர். பசுபிக் சமுத்திரம் மிகவும் சிறிய தூரம் எனக் கருதினர். மிகவும் பின்தங்கியதாயிருந்தாலும் உலகை ஆராயவும், பயணங்கள் மேற்கொள்ளவும் இவை ஓர்உந்துதலைக்கொடுத்தன.

இதேபோன்று பரம்பரையலகு ஆராய்ச்சியில் இன்று ஈடுபடுவோர், மனித நிறமூர்த்தங்களின் (Chromosomes) 23 சோடிகளைப் பல்வகையான (Gene) சுளை கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். இம்மட்டும் எந்த ஒரு குறிப்பையும் நம்பாமலும், எவ்வளவு தூரமிலக்கு உள்ளது என அறியாமலும் செயற்பட்டனர். ஆனால் அண்மையில் பாரிசில் உள்ள ஆய்வு கூடத்தின் (Centre for the study of Human Polymorphism) கலாநிதி டானியல் கோஷன் அவர்களது குழுவின் ஆராய்ச்சி மனித இனம் (Genome) பற்றிய ஒரு வரைபடம் வரைந்துள்ளார். இதில் குறைபாடுகள் இருந்தாலும் மிகவும் முக்கியமானது; முன்னேற்றப் பாதையில் பெரியதொரு காலடியாகும், என யேல் ஆய்வாளர் டேவிட் வோர்ட் அவர்கள் கூறினார். டீஎன்.ஏ (D N.A) 100,000 ஜீன்களை (Genes) கொண்டுள்ள நீளமான சங்கிலிகளால் ஆனது. இதனை ஒரேயடியாக ஆராய முடியாது. எனவே விசேட நொதியங்களைப் பயன்படுத்தி நிறமூர்த்தங்கள் சிறு துண்டுகளாக உடைக்படுகின்றன. அவற்றிலிருந்து இனங்காணக்கூடிய பகுதிகள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. இவை – குறி (Markers) எனப்படுகின்றன. நோய் ஒன்றினை ஆராய வேண்டுமாயின் அந்நோயினால் அவதிப்படுபவர் அனைவரிலும் காணப்படும் பொதுவான குறியைத் தேடுவர். அது கண்டுபிடிக்கப்படின் நோய்க்குக் காரணமான ஜீன் அதற்கு அண்மையில் இருக்க வேண்டும். ஆயினும் அது எவ்வளவு அண்மையில் உள்ளது என அவர்கள் அறியார்கள்.

கோஹனின் வரைபடம் இங்குதான் உதவுகிறது. இதனைத் தயாரிப்பதற்குப் பல குரோம சோம் தொகுதிகளை ஆயிரமாயிரம் துண்டுகளாக்கினர். ஒவ்வொரு துண்டையும் மதுவ கலத்துள் (Yeast Cell) பாதுகாப்பர். இக்கலங்கள் பின் ஆயிரக்கணக்கான 'மனித டிஎன்ஏ' க்களின் பிரதிகளைத் தயாரிக்கும். பல்வகையான ஒழுங்கு முறைகளை ஆராய்வதன் மூலம் கோஹனின் கணனிப் படுத்தப்பட்ட இயந்திரங்கள் குறிகளையும் துண்டுகளின் சரியான ஒழுங்கு முறையையும் கண்டு பிடிக்கின்றன.

கோஹனின் ஆய்வு கூடம், 33,000 நிற மூர்த்தத் துண்டுகளின் பல பிரதிகளைக்கொண்டுள்ளது. ஜீன் தேவைப்படுவோர் விண்ணப்பித்தால் உலக தொலைத் தொடர்பு சாதனத்தின் மூலம் இரண்டு நாள்களுள் இப்பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாருக்காவது முழுமையான வரைபடம் தேவைப்படின் கணனி ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம். இன்டர்நெட் (Inter net) என்ற தொலைத் தொடர்பு இணைப்பு முறையில் இத் தகவல் சேர்க்கப்படும் என கோஹன் கூறியுள்ளார். இது விஞ்ஞானிகளால் அதிகம் பயன்படுத்தப்படும் இணைப்பு முறையாகும்.

உயிரியலாளர்களின் இறுதி இலக்கு 100,000 ஜீன்களின் சரியான தொடரைக் கண்டு பிடிப்பதாகும். இதற்கு 3.5 மில்லியன் தனிப் புள்ளிகள் தேவை. எனவே இந் நூற்றாண்டு முடிவுக்குள் முழுத்தகவலையும் பெறமுடியாது.

தமிழில்: திரு. போல்

ரைம், டிசம்பர், 27.

ஒப்பமிடலும் பொறியிடலும் வழங்குதலும் நடந்து முடிந்தன.

ஜெப்ரி பார்தலொட் (ஜெருசலேம்)
நியூஸ்வீக் ஸ்டஞ்சர்.

வெளித் தோற்றத்துக்கு 258187 பி இலக்கக் கைதி உற்சாகமானவனாகவும், புன்னகை புரிபவனாகவும் காட்சி தந்தான். ஒரு தாள் ஆற்றின் இடது கரையிலுள்ள ஆடம்பர உணவு விடுதியில் நாம் மதிய உணவருந்துவோம். அன்று எனது வீரப்பிரதாபத்தை நீர் தெரிந்து கொள்வீர் என்று தம்மைக் குறுக்கு விசாரணை செய்த பிராஞ்சிய அதிகாரிக்கு அவன் பதிலளித்தான். குள்ளநரி காலோஸ் என்பவனே அந்தக் கைதி. பாரிசிலுள்ள லா சாந்தே சிறைச்சாலையிலே தமது இறந்த காலத்தின் மூர்க்க சுபாவ முத்திரையோடு சிறைவாசமாகிய புதுவாழ்வினை அவன் தொடங்கியுள்ளான். ''நான் இன்னமும் உயிர்ப்புடனேயே இருக்கின்றேன். தொடர்ந்து மேலும் நீண்ட காலம் இருப்பேன்'' என்று பெருமையடிக்கும் காலோஸ் உலகின் மிக ஆபத்தான பயங்கரவாதியாகக் கருதப்படுபவன்.

கடந்த மாதம் காலோஸ் கைதானதைத் தொடர்ந்து உலகம் முழுவதுமே நிம்மதிப் பெருமூச்சு விட்டது. ஆனால் அவன் எந்த அளவிற்கு உலகை அச்சுறுத்தினான் என்பதே கேள்வி? அவனது பயங்கர வாதக் கொடுமைகள் எல்லாவிதத் தடையுமின்றிக் கட்டுக் கதைகள் வடிவில் உலாவுகின்றன. நடுத்தர வயதினனும், பானை போன்ற பெரு வயிறினனுமான இந்த மனிதன் பற்றிய கதைகளிலே பலவும் அவன் நேரடியாக இலக்கு வைத்துச் சுடுவதில் நிறமை பெறாதவன் என்றே குறிக்கின்றன. ஆனால் பொது இடங்களிலும், வீடுகளிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும், புகைவண்டிகளிலும், நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மோட்டார் கார்களிலும் ஆபத்தான வெடிப் பொருள்களை வைத்து அவற்றின் மூலம் படுகொலைகள் நடத்துவதுதான் அவனது உத்தி என்றே கூறப்படுகிறது. இவ்வகையில் காலோஸ் 83 மனிதக் கொலைகள் நடத்தியுள்ளான். நிராயுதபாணிகளான பிராஞ்சியக் காவல் துறையினரை இவன் நேருக்கு நேராகப் படுகொலை புரிந்தவன். இந்தக் குற்றத்திற்காகவும், ஒண்டுகள் வைத்த குற்றத்திற்காகவும் இரகசியப் புலனாய்வுப் பிரிவு பல ஆண்டுகளாய் இவனைத் தேடும் வேட்டையில் இறங்கியது. இறுதியில் சூடானுடன் அவனது சரணாகதி தொடர்பில் ஓர் உடன்பாட்டுக்கு வந்தது.

பயங்கரவாதம் காலோஸ் பிடிபட்டு விட்டான். முடிவாக உலகம் அவன் பற்றிய கட்டுக்கதைகளை வேறுபடுத்தி எதார்த்த உண்மையினைத் தெரிவதற்குத் தொடங்கியுள்ளது.

''காலோஸ் விரும்பினால் உம்மை மயக்கவும் வல்லவன். அதே போல உம்மைச் சந்தித்த பத்து நிமிடங்களிலேயே கொல்லப் போவதாகப் பயமுறுத்தவும் கூடியவன்'' என்று இருப்புத்திரைக்குப் பின்னால் காலோசின் வரலாறு என்ற நூலை எழுதிய ஹங்கேரியப் பத்திரிகையாளர் லஸ்லோ விஸ்கை எம்பவர் கூறுகிறார். ''பயங்கரவாதம் என்பது அவனது புறத்தோற்றம் மட்டுமே. ஆனால் அவன் பாரதூரமான பயங்கரவாதியல்ல; வெறும் காட்சியாளன் (Show man)'' மட்டுமே. அவனது தப்புதற் பெருமைகளெல்லாம் அதிர்ஷ்டவசமான நிகழ்ச்சிகளேயன்றித் துணிவின் வெளிப்பாடுகள் அல்ல. ஒரு முறை மேற்கு

ஜேர்மன் முகவர்கள் என அவன் நினைத்தவர்களின் கண்ணிலே பட்டதும் அவர்களுக்குத் தெரியும் வண்ணம் தமது துப்பாக்கியிலிருந்து வெடிபொருளை வெளியேற்றினான். ஆனால் அவன் நினைத்தது போல அவர்கள் ஜேர்மன் முகவர்கள் அல்லர். அவனுடைய நடமாட்டங்களை உளவு பார்க்க வென்று நியமிக்கப்பட்ட ஹங்கேரியப் பாதுகாப்பதிகாரிகள். ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர்களிடமிருந்து அவன் தப்பிக்கொண்டான்.

எண்பதுகளில் அவனது புகழ் மலரத் தொடங்கிய வேளையிலேயே காவல்துறையினர் அவனைப் பிடிக்க முனைந்தனர். ஆனால் கியூபாவில் படைப் பயிற்சி பெற்ற காலத்தில் அவனது சகாக்களான ஆற்றல் நிறைந்தோரின் உறவும், ருஷ்யாவின் லுமும்பாப் பல்கலைக்கழகத்தில் கற்கையில் நண்பர்களான பாலஸ்தீனிய அடிப்படைவாதிகளின் நல்லுறவும் அவனுக்குப் பாதுகாப்பளித்தன. கிழக்கு ஜேர்மனியின் (Stasi) இயக்குத்தினர் இந்தக் ''குள்ள நரி'' சுமார் நூறு போலிக் கடவுச் சீட்டுக்கள் தயாரிக்க உதவினர். (அவனுடைய பட்டப் பெயர் குள்ளநரி. இது 1970 இல் பிரெடரிக்போறிஸ் என்ற வீரப் பிரதாபரால் வழங்கப்பட்டது. அப்பொழுது பிரித்தானியா காலோசின் ஒழிவிடமாயிருந்தது.) 1979 இல் டான்யூப் நதியை நோக்கியவாறு அமைந்த டினா, இன்டர் கொண்டினன்டல் உணவு விடுதியில் இராஜமரியாதையோடு அவன் தங்கியிருந்த பொழுது ஹங்கேரிய உபசரிப்பாளருக்கு அவனிடம் கலக்கத்தோடு கூடிய அச்சமானது வளரலாயிற்று. தங்கு மெருகிட்ட மேசிடெஸ் பென்ஸ் கார்களில் உலாவினான். பின்னிரவுகளில் உடைகளையும் நடனங்களைக் கண்டு களிப்பதில் ஈடுபட்டான். இவை காரணமாகக் காலோசைக் காவல்துறையினர் புடாபெஸ்றிலிருந்து வெளியேறக் கட்டளை பிறப்பித்தனர். ''இலகுவில் அணுகமுடியாத இடது சாரி'' என்று பிரெஞ்சுப் புலனாய்வுத் துறையின் முன்னாள் தலைவர் அலெக்சாந்தர் டிமாறெஞ்சஸ் இவனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இவனது நண்பரிடையிலும் அவன் பற்றிய பல்வேறு கட்டுக் கதைகளில் ஏற்புக்களும், மறுப்புக்களும் உலாவி வருகின்றன.

''1972 இல் மியூனிச் நகரிலே இஸ்ரேலிய ஒலிம்பிக் வீரர்களின் படுகொலைக்குப் பின்னணியில் இருந்தவன் காலோஸ் என்று சில பத்திரிகைகளில் படித்தேன்'' என்று இஸ்ரேலின் மொசாட் புலனாய்வு முகவத்தின் முன்னைய தலைவர் மெய்ர் அமிற் கூறியது முற்றிலும் பொய்யானது என்று இஸ்ரேலிய புலனாய்வுக் குழு மறுப்பதோடு என்ரபேபே விமானக்கடத்தல் விவகாரத்திலும் காலோஸ் சம்பந்தப்பட்டார் என்பதையும் மறுக்கிறது. அவருடைய ''மிகப் பெரிய செயற்பாடு'' என்று கருதப்படும் வியன்னா அமைச்சர்களைக் கடத்த முயன்றதும், ஆபத்தான அந்தச் செற்பாடு வெற்றியடைந்தும் இயந்திரக்குள்ளாகிபுள்ளன. சிலர் சொல்வது போல ஐரோப்பாவிலும், மத்திய கிழக்காசியாவிலும் இடம்பெற்ற பயங்கரவாதங்களின் சூத்திரதாரி காலோஸ் என்பதும் ஏற்கப்பட்ட உண்மையல்ல. காலோசைப் பொறுத்த வரை அவனே ஒரு நகைப்புக்கிடமான கோணங்கித்தான். அவனுடைய வெடிவைக்கும் செயற்பாடுகள் எவையும் உயர்ந்ததொரு குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டனவல்ல. மேற்கு நாடுகளின் முதலாளி வர்க்கத்தை வேர் பறிப்பது ஒன்றுதான் அவனது கரிசனை. ஐரோப்பாவிலுள்ள ஈரிஏ, ஐஆர்ஏ, செஞ்சேனை இத்தாலியப் புரட்சியணி முதலான பயங்கரவாதக் குழுக்கள் அனைத்துடனும் தாம் ஒத்துழைத்ததாக அவன் காட்டிக் கொள்கிறானேயன்றி அவற்றோடு இவனுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. இன ரீதியாகவும், கோட்பாட்டு ரீதியாகவும் ஐரோப்பிய நகர்ப் புறக் கெரில்லாக்கள் தமக்கெனச் சொந்த நிகழ்ச்சி நிரலையும் செயல் முறையையும் கொண்டவர்கள். காலோசின் சுதந்திரமான இயக்கமும், பாணியும் பங்கமாகப் பலரதும் கவனத்தை ஈர்க்க அவன் கையாண்ட வழிகளும் அவனை எல்லாக் காலத்திலும் வரவேற்கத்தக்க நிறமைசாலியாகக் கொள்ள வைக்கவில்லை. அவனது புகழ்ப் பகட்டானது எல்லா இடங்களிலுமுள்ள கெரில்லாக்களின் இயக்கங்களை அதிகாரிகள் முறியடிக்கவே பயன்பட்டுள்ளது.

கரையோரக் கண்காணிப்பு

காலோஸ் மேற்கத்தைய சமூகங்களின் வரையறையற்ற சுதந்திரத்தைச் சோதித்தும், துஷ்பிரயோகஞ் செய்தும் வந்துள்ளான். 1970 களில் கண்காணிப்புக் குறைவும், சுதந்திரக் கரையோரங்களில் நிலவிய தாராண்மையும் வெடிபொருட்களை அவனுக்கு எளிதுபடுத்தின. விரைவில் கடுங் கண்காணிப்பும் தொலைக்காட்சிப் பரிசோதனை மூலம் அரசுக் கட்டடங்களுக்குப் பாதுகாப்பளித்து வரும் கணனிகள் மூலம் ஆளடையாளப் பரிசோதனையும் அவனுக்கு எதிரணியாகத் தொழிற்படும் வகையில் அறிமுகமாயின. ஆனால் பெரும்பான்மையான ஐரோப்பிய ஆட்சி ஒன்றியங்கள் மேற்குறித்த வகையில் கரையோரப் பாதுகாப்புகளை மேற்கொள்ள லாய்ப்புப் பெறாததால் எதிர் காலத்தில் காலோஸ்கள் பலர் தலையெடுத்துத் தமது பாதுகாப்புக்கு மீண்டும் அச்சுறுத்தலாகலாம் என்று அஞ்சுகின்றனர். ஆனால் சூடானில் காலோஸ் பிடிபட்டதும் அவனது உலகம் செயலிழந்து விட்டது.

காலோசின் உண்மையான பெயர் இல்லிச் ரமிரெஸ் சன்செஸ் என்பதாகும். இடதுசாரிகளுக்கு இன்னமும் லெனினே இலட்சிய வீரராய் விளங்கியும், சமவுடைமைப் புரட்சி இன்னமும் மனங்களிக்கும் காரணியாய் நிலவியும், வந்த காலத்தில் அவன், தனது சொந்தப் பெயரை மறைத்து வாழத் தொடங்கினான். இன்றைச் சர்வதேசிய பயங்கரவாதமானது தனது பரந்த குறிக்கோளைக் கைவிட்டுக்

குறுகிய இனவாதத்தையோ ஹிஸ் புல்லா போன்ற மதவாதத்தையோ தூக்கிப் பிடிக்கத் தொடங்கியிருக்கிறது. பாலஸ்தீனிய இயக்கங் கூடத் தனது வன் செயல்களை விட்டு இஸ்ரேலுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளது.

அராபிய உலகின் பயங்கரவாத உறுப்பினர்களின் தெரிவு, குடும்பம், கிராமம், இரத்த உறவு என்பவற்றின் அடிப்படையில் நிகழ்வது என்பதால், காலோஸ் அந்த இயக்கத்தில் இணையும் தகுதியை என்றைக்கும் பெறவியலாது புடாபெஸ்றும், டமாஸ்கசும் காலோசை அகதியாகத் தொடர்ந்து ஏற்காததால், அவன் சிரியாவில் மெஸ் என்ற இடத்தின் அயற்புறத்தில் தஞ்சமடைந்தான். ஆனால் 1991 இல் இடம் பெற்ற வளைகுடாப் போரில் சிரியா மேற்குலகிற்குச் சார்பாயிருந்த நிலையில் அங்கிருந்து அவனைச் சென்று விடுமாறு கட்டளையிடப்பட்டது. ஓராண்டு வரை சூடானில் காட்டும் விமான நிலையத்துக் கண்மையில் சாதாரண வீடொன்றில் அவன் வாழ்ந்ததாகப் பிரான்சின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

முடிவில் காலோஸ் மிகவும் பரிதாபத்திற்குரியவனாக ஆனான். அவனை எந்த நாடும் ஏற்க மறுத்துத் தன் கதவுகளை மூடிவிட்டது. அவனை யாரும் வேண்டியிருக்காதது அவனுக்குப் பெருங் கவலையை அளித்தது. தனது அன்றாடச் சீவியத்திற்காக அவன் ட்றக்குகள், கார்கள் என்பவற்றை வாங்கி விற்பதில் ஈடுபட்டான். வெளி சூலாவுக்கு விரைவில் திரும்ப வேண்டும் என்று விரும்பினான். ஆனால் அரசியல் சகாக்களாய் இருந்து வந்த பலரும் அவனை விட்டகன்றனர். பணத்தைப் பொறுத்த வரையில் அவனுக்கு அது கிடைப்பது பெரும் பிரச்சினையாகவே இருந்தது.

பிரஞ்சு அதிகாரிகளோடு காலோஸ் ஒத்துழைப்பானா? முன்னாளைய பயங்கரவாதம் பற்றியும், அதில் சம்பந்தப்பட்ட முக்கியமானவர்கள் பற்றியும் அவன் பல உண்மைகளை வெளியிடக் கூடும். ஆனால் ஸ்கொட்லாந்தின் அன்ட்ரூஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்த்த புறூஸ் வெறாஃப்மனின் கருத்துப்படி அவர்கள் எவரும் காலோஸ் போன்று ஏமாளிகளல்லர். பிடிபடக் கூடிய அண்மையிலும் அவர்கள் இல்லை. உண்மைகளை அவர்களிடமிருந்து வெளிப்படுத்த அவனுக்கு ஊக்கியாக எது இருக்கும் என்பதும் தெளிவாயில்லை. காலோசின் சார்பில் வழக்காட முன் வந்துள்ளவர் பிரான்சில் இடதுசாரிகளின் நலன்களுக்காக வாதாடிய வரும் பிரபல சட்டத்தரணியாக குவிஸ் வேர்ஜெஸ். இவர் தமது தொழில் ரீதியான அக்கறையிலும் அதிகமான அக்கறையை இவ் வழக்கில் எடுத்து வருகிறார். பிரஞ்சுப் பத்திரிகைகள், வேர்ஜெஸ் 1980 தொடக்கத்திலிருந்தே காலோசின் தூதுவராய் இயங்கி வந்துள்ளதாக அவன் மீது குற்றம் பாரிக்கின்றன, ஆனால் அது பிழையான தகவல் என வேர்ஜெஸ் மறுத்து வருகிறார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

செய்மதியிலிருந்து ஒளிப்படங்கள்

காலோசைத் தன்னிடம் கையளிக்குமாறு பிரான்ஸ், சூடானைத் தூண்டியது எவ்வாறு என்ற கேள்விகள் எழுகின்றன. பிரான்சின் உள்நாட்டமைச்சர் சார்ள்ஸ் பாஸ்குவா, சூடான் அரசுக்குப் பணமும். புலனாய்வுதவியும் காலோசைக கையவிப்பதற்கு மாற்றாக வழங்கினார் எனத் தெரிகிறது. பிரான்சிய நாளிதழான லிபெறேசன் (விடுதலை) பிரஞ்சிய அதிகாரிகள் சூடானில் தெற்கிலுள்ள கிறிஸ்தவ கிளர்ச்சியாளர்களோடு போரிட வாய்ப்பளிக்கும் வகையில் செய்மதி ஒளிப்படங்கள் எடுக்க உதவினர் என்கிறது. அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் பாஸ்குவா வெற்றியீட்டக் காலோசின் பிறைப் பிடிப்பு அவருக்கு உதவலாம்.

காலோசின் பழைய சகாக்கள் பிரான்சையும், அதன் நலன்களையும் பாதிக்கக் கூடிய வகையில் எதிர்த் தாக்குதல் நடத்துவார்களா? "பயங்கர வாதிகளிடையே இறுக்கமான பிணைப்பு உள்ளது. அவர்கள் பிரான்சுக்கு வெளியே அதன் நலன்களைப் பாதிக்கும் வகையில் தாக்குதல்களை நிகழ்த்தக் கூடும்" என்று பயங்கர வாதத்தை எதிர்த்து வாதிட்டு வரும் அலன் மார்சவுட் என்ற சட்டத்தரணி எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆனால் பயங்கர வாதிகள் இந்த நாள்களில் எந்த அளவுக்குப் பொருத்தமான ஆதரவைப் பெற்றுள்ளார்கள் என்பது கேள்விக் குரியது. பாஸ்குவா, ஐயத்துக் கிடமான பிரதேசங்களிலே கண்காணிப்பைப் பலப்படுத்தும் படி காவல் துறையிலருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

1980 களில் பாரிலும், புகை வண்டிகளிலும் குண்டு வைத்ததாகப் பிரான்சிய அரசு காலோசில் வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளது. காலோசின் சட்டத்தரணி, "அவன் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தமக் கெதிரான குற்றச் சாட்டுக்களை மறுத்துப் பெருமிதத்தோடு வழக்காடுவான்" என்கிறார். காலோசினுடைய பயங்கரவாதச் சாதனைகள் ஆழமற்ற மேலெழுந்த வாரியானவையாகலாம், ஆனால் பயங்கரவாத சகாப்தத்தின் குறியீடாக அவன் விளங்குகிறான். "அவனைப் பிடிப்பதும் அவனுக் கெதிராக வழக்கு நடத்துவதும் முக்கியமானவை. அவனைப் பிடித்தல் என்பது பொது மக்களிடையே உணர்ச்சிக் கிளர்வை ஏற்படுத்திய ஒன்றாகும். அவர்கள் பயங்கரவாத சகாப்தத்தினை எவ்வாறு நினைவு கூருவர் என்பது வியத்தகு விடயமாகவேயிருக்கும். மேற்கு நாடுகளால் என்றைக்குமே மறக்கப்பட முடியாதவன் என்பதால் காலோசில் கழிவிரக்கம் கொள்ளவும் இடமுண்டு.

— தமிழில் —
திரு. சொக்கலிங்கம்

நியூஸ் வீக், ஒகஸ்ட் 29, 1994.

குற்றமற்ற ஒற்றரின் மரணம்

அமெரிக்காவின் அரிய மதிப்பு மிக்க ருஷ்ய உளவாளி எவ்வாறு அல்றிச் எமில் என்பவரால் காட்டிக் கொடுக்கப்பட்டார் என்பன பற்றியும் சொல்லப்படாத கதை.

அவர்கள் அவரைக் கற்பனையான குறியீட்டுச் சொற்களால் அழைப்பர். வேர்ஜியா மாகாணத்தின் லாங்லியிலுள்ள சிஐஏ தலைமையகத்தில் அவருடைய இரகசியத் தகவல்கள் வந்து சேரும் போது அங்கே கிறிஸ்மஸ் கொண்டாட்டம்போல இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒன்றிருக்கும். சோவியத் யூனியனுக்கு ஒற்றர் வேலை பார்த்த நான்கு அமெரிக்க ஆயுதப்படை அதிகாரிகளின் பெயர்கள்– மொஸ்கோவுடனான தொடர்பில் சீனாவின் ஆழமான விருப்பம் பற்றிய சாட்சியங்கள் இவற்றை ஜனாதிபதி நிக்சன் அவருடைய 1972 ஆம் ஆண்டு சீன விஜயத்தின் போது மேம்படுத்தப் பயன்படுத்திக் கொண்டார்.

இவ்வாறான உளவுத் தகவல் புதையல்களை ஜெனரல் டிமிற்றி பொலியாகோவ் வழங்கினார். இவர் துவக்குகளைச் சேகரிப்பவர். வார விடுமுறையின் போது தச்சுவேலை செய்பவர். உயர் அதிகாரியான இவர் சோவியத் ஆயுதப்படை உளவு முகவராகப்(GRU) பணியாற்றியவர். பொலியாகோவ், அமெரிக்கத் தகவல் பிரிவுக்கு 1961 இல் இருந்து பணியாற்றத் தொடங்கினார். அதற்குப் பின்னால் வந்த தசாப்தங்களில் விலை மதிப்பற்ற இரகசியங்களைக் குருநி உறையுந் தனிப்பட்ட ஆபத்துக்களின் மத்தியில் அனுப்பியிருக்கிறார். மொஸ்கோவில் அவர் GRU பத்திரங்கள்

சேகரித்து வைக்கும் இடத்தில் இருந்து இரகசிய ஆவணங்களைப் படம் பிடிக்கும் விசேட படச் சுருளையும், அவைகளை மறைத்து வைக்கக் கூடிய போலியான சுற்றுகளையும் திருடியிருக்கிறார். இவ்வகைக் கற்கள் அமெரிக்க ஒற்றர்களால் கண்டெடுக்கப்படுவதற்கான புற்றரைகளில் விடப்படும் அவரது கையாட்களுக்கு சமிக்ஞை கொடுப்பதற்காக அவர் அமெரிக்க அரசதூதுவர் அலுவலகத்தின் பக்கமாகட்றாம் வண்டியில் போய் பொக்கற்றில் மறைத்து வைத்திருந்த சிறு அளவிலான ஒலிபரப்புக் கருவியை இயக்குவார். வெளிநாடுகளில் வேலைபார்க்கும் நேரங்களில் நேருக்குநேர் தகவல்களைப் பரிமாறிக் கொள்வார். இது பின்வருமாறு நிகழும்: றங்கூவில் தோட்ட நடைபாதையிலும், புதுடெல்கியில், ஜமுனா நதிக்கரையோரம் ஓங்கி வளர்ந்த புதர்களுக்கு மத்தியில் அங்கே அவருடைய சிஐஏ கூட்டாளிகளுடன் மீன்பிடிப்பதுபோலும் பாசாங்கு செய்வார். ஆனால், பொலியாகோவின் இராணுவ இரகசியங்களைச் சுருக்கமாகச் செயற்படுத்துவதை மறைத்து வைத்திருக்கின்ற ஒலிப்பதிவு நாடாவில் பதியப்படும். இதற்குப் பின்னணியாக மயில்களின் கீச்சிடும் சத்தம் கேட்கும்.

கடந்த வாரம் ''ரைம்'' சஞ்சிகையுடனான செவ்வியின்போது தன்னை அடையாளங் காட்டிக் கொள்ளச் சிறிதும் விரும்பாத சிஐஏ அதிகாரி 1980 யூலில் பொலியாகோவைச் சந்தியாக மொஸ்கோவுக்குத் திரும்புமாறு கட்டளை கொடுக்கப்பட்டதும் தாம் எவ்வாறு துன்பம் அடைந்தார் என்பதை நினைவு கூருகிறார். ''உமக்கு ஏதாவது நடந்தால் எப்போதும் எம் நாடு உம்மை வரவேற்கும் என்பது உமக்குத் தெரியும்'' எமது நாட்டில் உம்முடன் பிரங்கமாக இருந்து குடித்து, இரவுச் சாப்பாடு உண்ணத் தருந்த காலம் வரும் என்று எதிர்பார்க்கிறேன். ருஷ்யக் கூரர் உறுதியான நீலக் கண்களால் உற்றுப்பார்த்து அமைதியாக விட்டு விட்டுப் பதில் சொன்னார்கள்.

''எனக்காகக் காத்திருக்க வேண்டாம். நான் அமெரிக்காவுக்கு ஒரு போதும் செல்லமாட்டேன். நான் உங்களுக்காக இதைச் செய்யவில்லை. எனது நாட்டுக்காகச் செய்கிறேன். நான் ருஷ்யனாகப் பிறந்தவன்; ருஷ்யனாக மடிவேன்.'' உமது உளவு வேலை தெரிய வந்தால் உமது விதி எவ்வாறு இருக்கும் என்று கேட்ட போது பின்வருமாறு பதில் வந்தது. ''பொது அடையாளமிடப்படாத புதை குழி.''

1990 ஜனவரி வரை அமெரிக்காவின் குற்றமற்ற ஒற்றருக்கு என்ன நேர்ந்தது என்று ஒருவருக்குந் தெரியாது அதே வருடம் அரசாங்கப் புனைத்தாள் ''பிராவ்தா'' மார்ச் 15 1988 பொலியாகோவ் உளவு வேலை பார்த்தமைக்காகச் சிரச் சேதம் செய்யப்பட்டார் என்று அறிவித்தது. இவரைத் தெரிந்த சிஐஏ மற்றும் எவ்பிஐ முகவர்கள் இவருடைய முகமூடி கிழிந்தமைக்காக வருத்தப்பட்டார்கள். ஆனால் மிக அண்மைக் காலத்தில் உண்மையை அறிந்தனர். அல்றிச் ஹசன் ஏமிஸ் என்ற சிஐஏ அதிகாரி பெப்ரவரியில் சிறைபிடிக்கப்பட்டு ஆயுட் காலம் வரை தண்டனை வழங்கப் பட்டது, சிஐஏக்காக உளவுவேலை பார்த்த சோவியத் மற்றும் கிழக்குப் பகுதிப் பிரஜைகளின் அடையாளங்கள் பற்றிய இரகசியங்களை பரிமாறிக் கொண்டமைக்காக, அவர் 1985 தொடக்கம் 25 மில்லியன்களை கேஜீபியிடம் இருந்து பெற்றது பற்றி ஒப்புக்கொண்டிருந்தார். இவர்களில் ஆகக் குறைந்தது 10 பேராவது கொல்லப்பட்டனர்.

இதுவரை ஏமிஸின் சதிக்கு இரையானவர்களில் பிரதானமானவர் பொலியாகோவ். அவருடைய இரகசிய ஆவணங்களின் படப் பிரதிகளும், மற்றும் ஒலி பெயர்த் தெழுதியவையும், 25 இலட்சங்களில் முகவர் நிலைய அந்தரங்க அறையில் வைக்கப்பட்டுள்ளன. 1963 இல் கியூபாவின் ஏவுகணை நெருக்கடியின் போது அமெரிக்காவுக்குத் தேவையான தகவல் கொடுத்தமைக்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட கேர்னல் ஒலெக் பென்கோவ்ஸ்கியிலும் பார்க்க விசேட மான பங்களிப்புச் செய்துள்ளார் என்று உளவு வேலை நிபுணர்கள் பலர் கருதுகிறார்கள். சிஐஏ இயக்குநர் ஜேம்ஸ் ஜூல்சி சொல்கிறார்: ''பனிப் போர்க் காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்களில் 'பொலியாகோவ்' 'கிரீடத்தில் வைரம்' போன்றவர். பனிப்போர் சம்பந்தமான இரகசிய வரலாற்றிலே நாயகனான இவருடன் கூட வேலை செய்தவர்களும் இவருடைய தகவல்களைப் பயன் படுத்தியவர்களுமான ஒற்றர்கள் இவருடனான தங்கள் தொடர்புகளை 'ராம்' பத்திரிகைக்குப் பிரத்தியேகமாகப் பேட்டியளித்துள்ளார்கள்'' என சிஐஏ அதிகாரி ஜூல்சி சொல்கிறார்: ''ஏமிஸ் அண்மைக் காலச் செல்விகளில் தனது துரோகத் தனத்துக்காக செலவிடப்பட்ட மனித தேசிய பாதுகாப்புச் செலவினங்களைக் குறைத்து மூர்க்கத் தனமாக வெளிப்படுத்தியிருக்கிறார்'' என. பொலியாகோவ் மேற் குலகுக்குச் செய்தது பனிப்போரை வெல்ல உதவவில்லை. ஆனால், அது வெப்பமாகாமல் தடுத்தது. பொலியா கோவின் நடிப்புப் பெறுமதி மிக்கது அதை அவர் கடைசி வரை செய்தார். அவருடைய சொற்கள் அவருடைய நாட்டுக் காக என்பதாகும்.

பொலியாகோவ் 1921 இல் உக்கிறேனில் பிறந்து இராணுவப் பாடசாலையில் பயின்றார். இரண்டாம் உலக யுத்தத்தின் போது பிரங்கிப்படை அதிகாரியாகக் கடமையாற்றி அநேக விருதுகளைப் பெற்றார். யுத்தத்திற்குப் பிறகு GRU சேவையில் உளவாளியாக உடன்படுமுன் சோவியத் இராணுவக் கல்லூரியில் சல்வி கற்றார்.

அவருடைய முற்பகுதிகளின் தொடக்க நாள்களில் அவருக்கு நியூயோர்க் நகரத்திலுள்ள சோவியத் தூதரகத்தில் முதற் பயிற்சி கொடுக்கப்பட்டது. அங்கே அவர் இராஜதந்திர நிபுணத்துவ பலாபலன் இல்லாமல் வேலை பார்க்கும் சோவியத் ஒற்றர்களை நெறிப் படுத்தினார். 1961 இல் ஐநாவுக்கான இரண்டாவது நியமனத்தின் போது பொலியாகோவ் மான்காற்றனில் தங்கியுள்ள எவ். பி ஐ.யின் எதிராளி ஒற்றர்களைச் சந்திக்க விரும்பினார். அவர்கள் இவரை ''உச்சித் தொப்பி'' (Top hat) என்று பட்டப் பெயர் சூட்டி தங்களுக்குக் கிடைத்த சம்பத்தை எண்ணி அதிசயித்தார்கள். நடுத்தர அதிகாரியாக ஆரம்பித்து ஜெனரல் தரத்திலான பதவிக்கு உயர்பவர்கள் அதிகமோ அல்ல.

எவிலும் பொலியாகோவில் கையாட்கள் அவரை அபூர்வப்பிறவி என்றே எண்ணினார்கள். அவர் அதிகம் பணம் ஏற்றுக் கொள்ள மாட்டார். வருடம் 3,000 திற்கும் குறைவான தொகையே. அதுவும் ஆற்றலுள்ள உபகரணங்கள், அங்கிகள், மீன்பிடிக் கருவிகள் மற்றும், துவக்குகள் போன்றவை மூலம் கொடுக்கப்பட்டவையே. அவர் பேனாக்கள், ஒளிபூட்டும் கருவிகள் போன்ற அற்ப சாமான்களையே கேட்டார். இவைகளைத் தலைக்குச் சலுகை செய்த GRU அதிகாரிகளுக்குக் கொடுத்தார். எல்.பி.ஐ இக்கும், சி.ஐ ஏக்கும் தெரிந்த சோவியத் அதிகாரிகளைப் போலல்லாமல் அவர் குறைவாகவே குடித்தார், புகைத்தார், மற்றும் மனைவிக்கு விசுவாசமாய் இருந்தார்.

அவருக்குப் பொருட்டாக இருந்தவை அவருடைய பிள்ளைகள், மனைவி மற்றும் பேரப் பிள்ளைகள். அவர் தன்னை ஓர் உண்மையான ருஷ்ய நாட்டுப் பற்றாளன் எனக் கருதினார். அவருடைய கையாட்கள் அவ் வெண்ணத்தைக் கொண்டிருந்தவர். புது டெல்லியில் பொலியாகோவுடன் பணியாற்றிய சிஐஏ அதிகாரி சொல்கிறார்: ''அவருடைய உந்து சக்தி இரண்டாவது உலக யுத்தத்திற்கு இழுத்துச் செல்கிறது'' என்று. அவர் அப்போது நடந்த அட்டூழியங்கள், படுகொலைகள் மற்றும் எவற்றுக்காகத் தாம்போராடியது ஆகியவற்றுடன் ருஷ்யாவில் நடக்கும் வஞ்சனையான செல்களுக்கும் மற்றும் ஊழலுக்கும் வித்தியாசம் கண்டார். அவர்

எங்களுக்கு உதவ வேண்டும் அல்லது ருஷ்யர் போரில் வெல்வார்கள். அதை அவரால் பொறுக்க முடியாது என்ற தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார். நாங்கள் கூடமில்லாதவர்கள் அதனால் தோற்றுப்போக நேரிடும் என்பதை உணர்ந்தார்.

யதார்த்த நிலையில் பொலியாகோவ் தமது ஆண்பிள்ளைகள் இருவரையும் சிறந்த கல்வி புகட்டி அவர்களை உத்தியோகத்தில் அமர்த்த விரும்பினார். அதை அவரின் உயர்வினால் உறுதிசெய்ய முடியும். அவருடைய தொழில் சி. ஐ. ஏ யினால் உதவப்பட்டது. சி. ஐ ஏ அவருக்குச் சில இரகசியங்களையும் அவரால் சேர்த்துக் கொள்ளப்பட்ட இரு அமெரிக்கர்களையும் கொடுத்தது அவர்கள் சி. ஐ. ஏ க்கு இருதரப்பு முகவராக மாறினர். எவ். பி. ஐ உடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஒரு வருடத்தின் பின் பொலியாகோவ் மொஸ்கோவுக்கு மீண்டும் அனுப்பப்பட்டார். அங்கே மேற்கத்தேய உளவு வேலையை G. R. U ஊடுருவ வழிபிறந்தது. வெகு நாள்கள் செல்லமுன் மிகச்சிறு தகவல்களை வழங்கினார். இவற்றுள் பிரித்தானிய விமானப்படை இலாகாவில் ஆய்வாளராகப் பிராங் பொசாட் என்பவரைப் பற்றியதும், இராணுவ சேர்ஜன்ற் யாக் டன்லப் தேசிய பாதுகாப்பு முகவர் நிலைய செய்தி சொல்பவராக இருந்தவர் என்பவரைப் பற்றியதும் அடங்கும்.

அவர் ஒரு சோவியத் சார்பாளர் என்ற ஓர் ஐயப்பாட்டையும் அவர் பரிமாறும் தகவல்களின் தரம் சாந்தப்படுத்திவிடும். 1960 களில் றங்கூனில் G. R. U வின் பிரதான ஒட்டுக்கேட்கும் பதவி வகித்த காலத்தில், பொலியாகோவ் சி ஐ ஏ இக்கு வியற்நாமிய சின ஆயுதப்படைகள் பற்றிய சோவியத் சேகரித்த எல்லாவற்றையும் வழங்கினார். திரும்ப மொஸ்கோவுக்கு G. R. U வின் சினத் தலைமையகத்திற்கு வந்தும் கூட மொஸ்கோவுடனான சினாவின் கடுமையான பிளவு பற்றிய தகவல்களைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். சின - சோவியத் உளவு பற்றிய விடயத்தில் சி. ஐ. ஏ நிபுணர் சோவியத் தரப்பிலிருந்து பெறுமதிவாய்ந்த விபரங்களைப் பெற்றது இவர் மூலம் தான் என்பதைக் கடந்த வாரமே அறிந்தார். சின – சோவியத் பிளவு தொடரும் என்ற நம்பிக்கையான முடிவுக்குவர அது உதவியது என்று அந்த ஆய்வாளர் கூறுகிறார். அவ்வாறான தகவல் முன்னாள் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஹென்றி கிஸ்லிங்கரால் பயன்படுத்தப்பட்டு 1972 இல் நிக்சனால் சினாவுடன் அமெரிக்கத் தொடர்பு ஏற்படுத்த ஏதுவானது.

பொலியாகோவ் 1974 இல் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டது, அவருடைய எல்லைக்கப்பாலும் ஏராளம் இரகசியங்களைப் பெறக்கூடியதாக இருந்தது. ஜனாதிபதி றிச்சாட் நிக்சனுக்குப் பாதுகாப்புத் துணைச் செயலாளராக இருந்த றிச்சாட் பேர்ள் சொல்கிறார்; '' ஆயுதப்படையைத் தகுதியாக்குவதற்காக மேற்கத்திய தொழில் நுட்பத்தை 5,000 வித்தியாசமான சோவியத் நிகழ்வுகளுக் காகப் பயன்படுத்துவதைக் கண்டார்கள். பொலியாகோவின் பட்டியல், பேர்ள் என்பவரை இராணுவத் தொழில் நுட்ப விற்பனையை கட்டுப்படுத்தும் முகமாக்கடும் நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி நிக்சனை தூண்ட உதவியது '' என்பதாக.

1970 இற்குப் பிறகு சி.ஐ.ஏ அதிகாரிகள் பொலியாகோவைத் தகவல் கொடுப்பவர் என்று அழைப்பதிலும் பார்க்க ஆசிரியர் என்றே எண்ணித்தனர். சி ஐ.ஏ யின் தொழில் நுட்பவியலாளர் அவருக்கு என விசேட கருவியை உண்டாக்கினார். இதன் மூலம் அவர் தகவல்களை 2 6 செக்கனில் பரிமாறிக் கொள்வார். தகவல் மொஸ்கோவில் உள்ள தூதுவர் பலிமலை யில் உள்ள ஓர் ஒலிவாங்கியில் விழும். பொலியாகோவ் அநேகமாகத் தலக்குமட்டும் தெரிந்த இரசாயனச் சேர்க்கை மூலம் அபிவிருத்தியாக்கப்படும் படச் சுருள்கள் பாவித்து ஆவணங்களைப் பிரதிபண்ணிக் கொள்வார்.

அவ்வாறான வணிகக் கலையைப் பயன்படுத்திப் பொலியாகோவ் 100 இற்கு மேற்பட்ட மாதாந்தம் சோவியத் இராணுவ அதிகாரிகளால் வெளிப்படும் '' இராணுவச் சிந்தனை '' என்ற போர் முறைத் திறன் ஆவணங்களைப் பெற்றார். இப் பருவகாலச் சஞ்சிகை சோவியத்தின் உயர்தர இராணுவ போர்முறைத் திறன் ஆய்வாளர்களால் வெளிப்படையாகவே செய்யப்பட்ட, மதிப்பீடுகள் கொண்டவை. பொலியாகோவினால் திருடப்பட்ட ஆவணங்கள் அவர்களின் உரையாடல்களில் பொதிந்துள்ள நுண்ணறிவைப் பெற வழிவகுத்தது. அணு ஆயுதப் போரில் வெற்றி சாத்தியமா என்று அவர்களுக்கிடையே நடந்த உரையாடல்களின் நுண்ணறிவை எட்ட வழிவகுத்தது. பொலியாகோவ் சோவியத் தலைவர்கள் போர் வெறியர்கள் என்பதை நிரூபித்துள்ளார். அமெரிக்கர்களைப் போலவே அவர்களும் பயந்தவர்கள். இவ்வகை நுண்ணறிவு வெடிக்கும் தறுவாயில் உள்ள போரை நிறுத்த ஐக்கியநாடுகளில் ஸ்தாபனம் தடுத்திருக்கலாம்.

பொலியாகோவ் எங்கே புதைக்கப்பட்டார் என்று ஒருவருக்கும் தெரியாது; அல்லது அவர் எப்படி இறந்தார்? ஆகக் கூடுதல் தண்டனை வழங்கப்பட்டதும் குற்றம் சாட்டப்பட்டவர் ஓர் அறைக்குள் கூட்டிச் செல்லப்பட்டு முழங்காலில் நிற்கவைத்து சுட்டுக் கொல்லப்படுவர். அது ஸ்ராலின் சகாப்தத்தின் ஒரு பகுதி. ஆல் வகையான மரபுரிமைச் சொத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றப் பொலியாகோவ் அதன் ஆட்சியாளரை ஏமாற்றத் துணிந்தார். ஏமாற்றியவர் இன்னொருவரால் ஏமாற்றப்பட்டு உயிரை இழந்தார்.

தமிழில்
திரு. லி. அரியநாயகம்
ஸரம், ஒகஸ்ட் 8, 1994.

இழந்ததும் பெற்றதும்

அவரது தலைமையில் வலை மூடிய தலைக்கவசத்துடனும், பளபளக்கும் புதிய பிஸ்ரல் செருகப்பட்ட காற்சட்டையுடனும் பின்யாமின் ஷறன் எடுத்துக்காட்டாகத் தீவிரவாத வைதிக யூத குடியேற்றவாசியின் சாயலைக் கொண்டிருக்கிறார். அவர் அவ்வாறிருக்கலாம். ஷறன் இஸ்ரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையோரக் குன்றின் உச்சியிலுள்ள நகரமான குறியற் அர்பாவில் குடியிருப்பவர். இந்தக் குடியேற்றம் வலதுசாரி யூதர்களுள் அடிப்படைவாதக் கொள்கையுடைய பகுதியினரால் நிரப்பப்பட்டது. அங்கிருந்து கொண்டு அவர் அராபியர்களை எனக்குப் பிடிக்காது, எங்களுடைய நிலத்தில் அவர்களுக்கு ஒரு வேலையும் கிடையாது என்கிறார். அதற்குப் பதில் கொடுப்பது போல ஹெப்றனில் உள்ள மசூதியில் இருந்து பிரார்த்தனைக்கான அழைப்புக் கேட்கிறது.

அவருடைய அராபிய துவேஷ மனக்கிளர்ச்சி எவ்வாறிருப்பினும் ஷறன் மட்டுந்தான் எடுத்துக்காட்டாக அங்கே உள்ளார். அவர் பிறப்பால் இந்தியர், அதிகாலத்திற்கு முன்பல்ல, 31 வயது நிரம்பியவர், புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர். மிசோராமில் ஒரு மத ஆலையில் வேலை செய்தவர். மிசோராம் பங்களாதேசுக்கும் பர்மாவுக்குமிடையே உள்ள இந்திய மாகாணம். அவர் ஹிப்றூ பேசுவரல்ல அல்லது யூதரைப் பற்றியோ அல்லது யூதேயிசம் பற்றியோ அதிகம் தெரிந்தவருமல்ல.

அமிஷாவ் என்ற மதக்குழுவுடன் 130 வேறு போர்களையும் இஸ்ரேலுக்குக் கூட்டி வந்ததுடன் இவருடைய புதிய வாழ்வு ஆரம்பமாகிறது. மிசோ இனகுகி, ஸெய், வைப்பை மற்றும் சங்ரே குலத்தினர் இஸ்ரேலிலிருந்து மறைந்துபோன 10 வகை இனங்களின் வழித்தோன்றல்கள் என்று அமிஷாவ் நம்புகிறது. அதனால் அவர்கள் யாவரும் திரும்ப மூதாதையரின் தாய் நாட்டிற்கு அழைக்கப்பட வேண்டும்.



இஸ்ரேல் இழந்துபோன குலகுழுக்களின் வம்சாவழியினரா இவர்கள்?

தீவிர வலதுசாரி யூதர்கள் இந்தியாவில் மீசோ மக்களை உறவினராகக் காண்கின்றனர்.

1990 இல் யூத நாட்டிற்கு அமிஷாவ், ஷறன் மற்றும் வேறு மிசோ மக்களையும் அழைத்து வந்தார். மேலும் சிலர் கடந்த வருடம் வந்தனர். கடந்தவாரம் மேலும் 100 மிசோராம் மக்கள் வந்துசேர்ந்ததும் சிறிது சிறிதாக வந்தது வெள்ளம் போலாயிற்று. புது டெல்லியில் உள்ள இஸ்ரேலிய தூதுவர், ஆயிரக்கணக்கானோர் ஸ்ரா கோருகின்றார்கள் என்று அறிவிக்கிறார்.

அமிஷாவின் பிரயத்தனங்கள் இந்தியாவிலிருந்து ஒப்பீட்டளவில் வளப்பமுள்ள யூதநாட்டிற்குப் பெருமளவில் குடிபெயர்ந்து உட்செல்வ தூண்டுகோலாக அமையும். ஆனால் இஸ்ரேலிய அரசு இப்படியான பாய்ச்சலை நிறுத்த உறுதி பூண்டு இருக்கிறது. இஸ்ரேலுக்குள் செல்வோரை கிரகிக்கும் இலாகாவிற்குப் பொறுப்பான மந்திரி பெயர் ஷிபான், ''இழந்த குலக்குருக்களின் மீள் வருகையை நம்புகிறவர்கள் மெசயாவின் காலம் வரும்வரை காத்திருக்குமாறு அன்பாய்க் கேட்டுக் கொள்வதாக'' என்று பிரகடனப்படுத்தி இருக்கிறார்.

யொசி பீலின் வெளியுறவுப் பிரதிமந்திரி தீவிரவாதிகள் படை எடுப்பதைத் தடுக்கும் முகமாக மீள்வருகைச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று கோருகிறார். இப்போதுள்ள சட்டப்படி மதம் மாற்றப்பட்ட எல்லா யூதர்களும் தாமாகவே இஸ்ரேலிய பிரஜா உரிமைக்குத் தகுதியானவர்கள். அத்துடன் தாராள குடியேற்றல் உதவிகளும் வழங்கப்படும்.

தாம் ''இன்ரேலின் பிள்ளைகள்'' என்று மிசோ மக்கள் உரிமை கொண்டாடுவது சாதாரணமாக அங்கீகரிக்கப்பட்டால் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள 300 மில்லியனுக்கு மேற்பட்டோர் அதே உரிமையைக் கோருவார்கள் என்று இஸ்ரேலிய அதிகாரிகள் எச்சரிக்கிறார்கள். 10 இழந்த குலக்குழுக்களின் வம்சாவழியினர் என்று உரிமை கோருவோருக்குக் குறைவில்லை. மேலதிகமாக அமெரிக்க மிசோ இனத்தவரோடு 60 மில்லியன் நைஜீரிய மற்றும் பெலின் குழுக்களும் பெருநாட்டின்

குச்சா இந்தியரும், எதியோப்பியாவின் சியொன் இனத்தவரும் இந்தியாவின் மலிப்பூரியரும், மற்றும் அசாமியரும் அடங்குவர்.

எனினும் அவ்வாறு பெருமளவில் வந்து சேரும் ஆட்களைப்பற்றி குர்யாத் அர்பா தலைவர்கள் கவலைப்படுவதாக இல்லை. ''சுடந்த பெப்ரவரியில் அல்ஜிப்றாஹிம் பள்ளிவாசலில் வைத்து 40 பாலஸ்தினியரை இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற டாக்டர் பாறூக் கோல்ட்ஸ்ரீன் என்பவரின் வசிப்பிடம் இதுவே'' என்று சொல்கிறார், மிசோவாவில் இருந்து வரும் புதியவர்களுக்குப் பொறுப்பான நகரசபை அங்கத்தவரான பெல்லாகோன். ''கவலைப்பட வேண்டாம், போதியளவு இடம் இருக்கிறது'' என்கிறார். எனினில் அவ்வாறானஉள்வருகையால் அராபியர் எல்லாரையும் அப்புறப்படுத்தி விட்டு எகிப்துத் தொடக்கம் ஈராக் ஈறாக அகண்ட இஸ்ரேல் நிர்மாணிக்கப்படும்.

சுற்றுலாப் பயணிகள் விசாவில் வரும் மிசோராமியர்கள் மீள் வருதல் சட்டங்களின் அடிப்படையில் சலுகைகள் பெறுவதற்காக வைதிக யூதேயிசத்துக்கு மாற்றப்படுகிறார்கள். மதமாற்ற நடவடிக்கை வழமையாகப் பலவருடங்கள் எடுக்கும். புதிதாக வருவோருக்காகச் சுலபமாக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் வந்தவர்கள் அவர்களுடைய கடவுச் சீட்டுக்களைப் பெற்றுள்ளனர். நான்கு இந்திய இளைஞர்கள் இஸ்ரேலிய இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

விவாகமான மிசோக்கள் அனைவரும் குர்யற் அர்பாவுக்கு நகர்த்தப்பட்டுள்ளனர். ஆனால் தனியாட்கள் இஸ்ரேலிய சமயப் பாடசாலைகளிலும், நீவிரவாதிகள் குடியிருப்புக்களிலும் இருக்க விட்டுள்ளனர். குர்யற் அர்பாவில் உள்ளோர் ஆவலுடன் புதியவர்களைத் தம்முடன் சேர்த்துக்கொள்வர். குர்யற் அர்பாவில் வந்து சேர்ந்ததும் இலவசப் பயணிகளுக்கான இருப்பிடங்களில் வசிக்க விடப் படுவர். முன்பு வந்து குடியேறியவர்கள் குடிசைகள், தளபாடங்கள், பாத்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மின் உபகரணங்கள் வழங்குவதற்கான நன்கொடை முயற்சியை ஒழுங்கு படுத்தினர். எல்லா வயது வந்த ஆண்களுக்கும் வேலை வழங்கப்படுகிறது. குர்யற் அர்பாவில் விசேட பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு அங்கே ஹிப்புறூ சக யூதேயிசம் கற்பிக்கிறார்கள்.

இஸ்ரேலினால் இழந்த குலக் குழுக்கள் பற்றிய தேடல் யூத வரலாற்றில் மையப்பொருள். இக் குலக்குழுக்கள் கி. மு. 722 இல் அசீரியன்ஸ் இனத்தவரால் அவர்களுடைய இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். பிறகு அவர்கள் எல்லைப்புறப் பகுதிகளில் அடிமைகளாக மீளக்குடியமர்த்தப்பட்டனர். கி. பி 70 இல் உரோமானியப் படையினரால் ஜெருசலேம் அழிக்கப்படும் வரை யூதர் பாலஸ்தினத்தில் தங்கியிருந்தனர்.

இந்தியாவில் மிசோக்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வெல்ஷ மற்றும் அமெரிக்க மிஷனரிமார்களினால் கிறிஸ்தவத்துக்கு மதம் மாற்றப்பட்டனர். அது வரைக்கும் அவர்கள் இயற்கையைக் கடவுளாக வழிபட்டனர். அல்லாமலும் அவர்களுக்கென எழுத்துவடிவிலான மொழி இல்லாதிருந்தது. அவர்களுடைய பிற்படுத்தப்பட்டிருந்த நிலைமை இந்திய சாதி அமைப்பு வேலிக்குப்பால் இருக்கச் செய்தது. மகாராஷ்ராவிலுள்ள பெனிஇஸ்ரேல் என்ற குலக்குழுவை யூதர் என்று 1982 இல் இஸ்ரேல் அங்கீகரித்து விட்டது. இவர்களிலும் பார்க்க மிசோக்கள் யூதேயத்தில் இருந்து தூர விலகி இருக்கிறார்கள்.

இஸ்ரேல் - மிசோ ஆகியோருக்கிடையிலான ஒத்த தன்மை பற்றி 1990 இல் சாய்தஞ்சுங்கி என்பவரால் அரசஆதரவுடன் வெளியான புத்தகம் கிறிஸ்தவர்களாகு முன் மிசோக்கள் நரபலி, பல்லி ஊன் உண்ணல், சூ என்ற குடிவகை அடிக்கடி குடித்தல் ஆகியவற்றில் ஈடுபாடு உடையவர்களாய் இருந்தார்கள் என்று கூறுகிறது. சமயச் சடங்குகளின்போது வழங்கல் வற்றிப் போகும் வரை சூ அருந்தப்படும். சடங்கு எவ்வளவு நேரத்துக்கு நீடிக்கும் என்பது எவ்வளவு சூ கிடைக்கிறது என்பதைப் பொறுத்தது என்று எழுதுகிறார் தஞ்சுங்கி

மிசோ சமயமும், யூதேயிசமும் இருவித தொடர்புகளில் மட்டும் ஒத்திருக்கிறது. முதலாவது அமிசாவால் ஆவலுடன் பயன்படுத்தப்பட்ட மிசோவினரின் வம்சாவழிக் கடவுள் மெனேயா இது ''மெனாஷி'' என்ற குலக்குழுவின் பெயரை ஒத்திருக்கிறது. இரண்டாவது மிசோ பாரம்பரியம் கடவுளின் அற்புதங்களடங்கிய ''புனித தோல்கடிதம்'' பற்றிப் பேசுகிறது. துரதிர்ஷ்டவசமாகத் தோல்கடிதத்தை நாய் சாப்பிட்டு விட்டது.

ஹிப்புறு பல்கலைக்கழகத்தின் இழந்த குலக்குழுக்களுக்கான விசேட நிபுணரும், இந்திய இஸ்ரேல் நட்புறவுச் சங்கத்தின் தலைவருமான ஷல்வாவெயில் என்பவரைப் பொறுத்தளவில் இஸ்ரேலிய டரம்பரையைக் கோருவதென்பது மூட நம்பிக்கையின் பாற்பட்டது. மிசோவிலிருந்து புதிதாக வருவோர் பொருளாதாரத்திற்காக இடம் பெயர்கிறார்கள் என்பதை நிராகரிக்கிறார். இஸ்ரேலுக்கு அவர்கள் வருவதில் பொருண்மிய மேம்பாடு அடைவார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை. ஆனால் மிசோக்கள் உண்மையாகவே சமயப்பற்று உள்ளவர்கள். வைதிக யூத சமயத்தைக் கடைப்பிடிப்பதென்பது சுலபமானதல்ல.

— தமிழில் —
நிரு. வீ. அரியநாயகம்

அன்ஃபிரான்க் முதல் ஜன்ஸ்டீன் வரை

சமுதாயம்: ஆசியாவில் எழுந்துவரும் யூத இன வெறுப்பைத் தணிக்க உதவ டோக்கியோவில் நடத்தப்பட்ட கண்காட்சி

தமிழில்

— திரு. கிருபைராஜா —

பல ஆண்டுகளாக அன்ஃபிரான்க் ஜப்பானில் அதிக விற்பனையுள்ள நூலாசிரியையாக இருக்கிறார். அந்தப் பெண்மணி, ஒரு யூதச்சிறுமி. நாசிகளின் பிடிக்குள் படாமல் ஒழிந்திருந்த கதையொன்றை எழுதிப் பல ஜப்பானியர்களின் உள்ளங்களை வென்றதுடன், அந்தக் கதாபாத்திரத்தையும் ஒரு வீராங்கனையாகத் திகழவைத்தார். "யூதர்களை நீங்கள் புரிந்து கொண்டால் உலகத்தையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்" என்பன போன்ற தலைப்புக்கள் கொண்ட யூத இன விரோத நூல்களுக்கு அடுத்தாற் போல், உள்ளூர் நூல் நிலையங்களில், "அன்ஃபிரான்கின் நாட்குறிப்புக்கள்" என்ற நூலும் விற்பனைக்கு வைக்கப்படுகிறது. அதனால் ஃபிரான்கின் யூதசார்புத் தன்மை ஜப்பானியரின் மன உணர்வுகளுள் கலக்கவில்லை என்று அமெரிக்காவில் லொஸ் ஏஞ்ஜல்ஸ் நகரில் உள்ள சிமொன் விசன்தால் நிலையத்தைச் சேர்ந்த யூதமதப் போதகரான ரப்பி ஏபிரகாம் கூப்பர் கூறுகிறார். அந்த நிலையம் சில வாரங்களுக்கு முன்பு டோகியோவில் யூதர் அழிப்பு செயல்கள் பற்றிய கண்காட்சி ஒன்றை நடத்தியது. அதை நினைக்கத் துணிவு தருகின்றதென்று அவர்கள் கூறுகின்றனர்.

முன்பு காட்சிக்கு வைக்கப்படாத ஃபிரான்கின் கடிதங்கள் பலகூட பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பொருட்காட்சி வரலாற்றின் மீது ஒரு மீள்பார்வை செலுத்துவது போல் அமைந்துள்ளது. ஆசியாவில் எழுந்து வரும் யூத வெறுப்புச் சிந்தனைகளுக்கு அஞ்சும் யூத ஆதரவுக் குழுக்கள் இத்தகைய பொருட்காட்சிகள் மூலம் மாற்று நடவடிக்கைகள் எடுக்க முயல்கின்றன. ஆசியப் பிராந்தியத்து மக்களில் வெகு சிலரே யூதர்களுடன் தொடர்பு உடையவர்கள் ஆவர். அதனால் அங்கு யூதர்கள் பற்றிய அறியாமையும் வெறுப்பும் நிலவுகின்றன. அதற்கிடையில் சந்தேகமும் மறைந்து கிடக்கிறது. "சென்ட்லர்ஸ் லிஸ்ட்" என்ற ஒஸ்கார் பரிசு பெற்ற நிரைப்படம், அநேக ஆசிரியர்களை யூத இன அழிப்பு பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளச் செய்துள்ளன; அதே வேளையில் மலேசிய அரசின் தணிக்கையாளர்கள் அதனைப் பிரச்சாரம் என்றும், வேறு இன மக்கள் (ஜேர்மனியரின்) மீது களங்கம் கற்பிக்க மேற்கொள்ளப்படும் செயல் என்றும் கூறுகின்றனர். ஆரம்பத்தில் அந்தத் நிரைப்படத்தின் மீது விதிக்கப் பட்டிருந்த தடை பின்பு நீக்கப்பட்டாலும், தணிக்கையாளர்கள் அதில் உள்ள நிர்வாண, வன்செயல் காட்சிகளை நீக்கச் செய்தனர். ஜப்பானில் 1980 களின் இறுதிக் காலம் வரை யூத இன எதிர்ப்பு நூல்கள் வெகுவாக விற்பனையாகின. அதன்

மிசோக்களைப் பொறுத்தளவில் அவர்களுடைய வருகைக்கு கண்டிப்பான சமய விளக்கங்களைக் கொடுக்கிறார்கள். "நாங்கள் இஸ்ரேலுக்கு வருவது பொருளாதாரத்திற்காக வல்ல" என்கிறார் 48 வயது சால்மன்சடெங் முன்னாள் கடைக்காரர். "றபி (யூத மதத் தலைவர்) சொன்னதினால் நாங்கள் இங்கு வந்தோம். நாங்கள் ரோறோ அனுட்டிக்க வேண்டும் ஏனெனில் மெசையா வருகிறார்" என மேலும் கூறுகிறார்.

மிசோ குடியேற்றவாதி ஷறன் அவர்களைப் பொறுத்தளவில் அனைவருடைய நாட்டு மக்கள் யூதேயிசம் பக்கம் ஏன் திரும்புகிறார்கள் என்றால் அது சலா என்ற நீர்க்கதரிசி 1940 இல் இஸ்ரேலிய பாரம்பரியம்பற்றி புரியமுடியாத நீர்க்க தரிசனத்தை வெளிப்படுத்தினார். ஏறக்குறைய 20 வருடங்களிற்குப் பிறகு உள்ளூர் மதப் போதகர் ஜெருசலேமுக்கு யூத மதத்தைப்பற்றிக் கூடுதலாக அறியச்சென்றார். காலக்கிரமத்தில் மேலும் மேலும் மிசோக்கள் யூத மதக் கொள்கைகளை அனுட்டிக்கத்தொடங்கினர். இப்போ 5,000 மக்கள் சாதாரண மத மாற்றத்துக்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரேலுக்கு இடம் பெயரக்கூடியவர்கள் என்கிறார் ஷறன்.

இது வேகமாகப் பெருகுகிறது. ஒவ்வொரு மாதமும் புதிய ஆட்கள் தாமும் யூதராக வர விருப்பதாகத் தீர்மானிக்கின்றனர் என்று சொல்கிறார் ஷறன். "யூத மத கூடமைகளைக் கடைப்பிடிக்கப் பஞ்சிப்படுபவர்களே மிசோ ராமில் தங்கி கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள்" என்று யாலா மெனாஷி சொல்கிறார்.

★

வார் ஸ்ரேன் எக்கனமிக் றிவியூ
செப்ரெம்பர் 8, 1994

பின்பு மேற்கு உலகுடனான வர்த்தக முறுகல் நிலை மென்மேலும் வளர்ந்த பின்பு அது தணிந்தது.

ஜப்பானில் 1,000–க்கும் குறைவான யூதர்களே அதுவும் அநேகமாக வெளிநாட்டவர்கள் இருக்கையில் கூட யூதர்களின் சதிச்செயல்கள் பற்றி எச்சரிக்கும் ஓர் இடசினுக்கும் மேற்பட்ட நூல்கள் தற்சமயம் சந்தையில் உள்ளன.

அவற்றில் ஒன்று: ''யூதர்களின் உலகத்தைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் 111 ஆம் கட்டம்; கடுமையான எதிரி ஜப்பானைத் தாக்க'' என்பதாகும். அதில் ஜப்பானின் பொருளாதாரத்தைச் சிதைக்க யூதச்சதி நடப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. அதில் ஜப்பானின் காற்றுக் குழிழ் பொருளாதாரத்தையும், அதன் அரசியல் வர்த்தகம் அதிகாரவர்க்கம் ஆகியவற்றையும் கட்டுப்படுத்தும் யூதரே கட்டி எழுப்பிவிட்டு அழித்தார்கள் என அதில் கூறப்படுகிறது. அமெரிக்க யூதர் சங்கத்தின் பசுபிக் பிராந்திய வட்டத்தின் பணிப்பாளர் நீல் சாண்ட்பாக், ''நான் ஜப்பானிய சமுதாயத்தை எந்த வகையிலும் யூத இன எதிர்ப்புக் கொண்டதென்று கூறமாட்டேன். ஆனால் மேற்கத்திய உலகின் பல மாதிரி உருக்களை ஜப்பானியரும் பொருக்கி எடுத்துக் கொண்டு உள்ளனர். அமெரிக்க எதிர்ப்பின் மறுவடிவமாக யூத இன வெறுப்புத் திகழ்கிறது. அமெரிக்காவைத் தாக்கிப்பேசுவது பொருந்தாது என்பதால் யூதத்தைத் தாக்குகின்றனர். சில ஜப்பானியர் அந்த வெறுப்புணர்வுக்குப் பின்னணியில் ஆச்சரியமும் உள்ளதாகக் கூறுகின்றனர். பல மேற்கத்தியப் பொருளாதாரங்கள் ''சரிந்து'' கொண்டு இருக்கையில் கூட யூதர்கள் தொடர்ந்து எப்படி நன்றாக இருக்கிறார்கள் என்று அவர்கள் வியக்கின்றனர்.

சீனாவில் அதிகமாக நிலவும் யூதர் பற்றிய மனப்பான்மையாவது, அவர்கள் நன்கு கற்றவர்களாகவும், கடின உழைப்பாளிகளாகவும், செல்வம் படைத்தவர்களாகவும் உள்ளனர் என்பதாகும். சீனர்கள் என்னிடம், ''உங்கள் யூதர்கள் கெட்டிக்காரர்களாகவும் நன்றாக வர்த்தகம் செய்பவர்களாகவும் பெரும் பணக்காரர்களாகவும் உள்ளதுபோல் நாங்களும் ஆக விரும்புகின்றோம்'' என்று கூறினார்கள் என்று யூத மதப் போதகரான ரவி சாமுவேல், ஜோசப் என்னும் ஹொங்கொங்கில் வசிக்கும் அமெரிக்கர் சொன்னார். ஹொங்கொங்கில் சினகோக் என்னும் யூத ஆலயங்களும், கோசர் எனும் சம்பிரதாயமான யூத உணவு விடுதிகளும், யூதர்களுக்கான கூடும் இடங்களும் உள்ளதுடன், அந்த நாட்டில் வாழும் 3,000 பேரளவு யூதர்கள் அங்கெல்லாம் தொழுகைக்கும், உண்பதற்கும், சமூகக்கூட்டங்களுக்குமாகக் கூடுவர் சீனாவில் மாணவர்களை அவர்கள் கேள்விப்பட்ட மூன்று யூதர்களை மட்டுமே மதிக்கும்படி கற்பிக்கப்படுகிறார்கள் என்று நினைக்கத் தோன்றும் விதமாக கார்ல் மார்க்ஸ், ஐன்ஸ்டீன், ஹென்றி கிசிங்கர் ஆகிய மூவரும் தான் பிரபல்யமாகி உள்ளனர். ரப்பி கூப்பர் என்பவர் சீனாவின் மிகச்சிறந்த மனப்பான்மை வரலாற்று ரீதியாக அவர்கள் இனப் பாகுபாடு காட்டாமல் யூதர்களுடன் இணைந்து செயலாற்றி வந்துள்ளமையைக் காட்டுகிறது என்று கூறுகிறார். சீனாவின் பட்டுப்பாதையில் பல யூத வர்த்தகர்கள் இருப்பதுடன் இரண்டாவது உலகப்போர்க்காலத்தில் ஹிட்லரிடம் தப்பவென ஓடிவந்த 20,000 யூதர்களுக்குச் சீனாவின் ஷங்ஹாய் நகரம் புகலிடம் கொடுத்தது. சென்ற ஏப்ரல் மாதத்தில் சீனாவின் முதலாவது யூத இன அழிப்பு நினைவுச் சின்னம் ஒன்றை அந்த நகரின் போர்க்கால யூதர் சேரிப்பகுதியில் திறந்து வைத்துள்ளனர்.

முஸ்லிம் சகோதரத்துவம்

பெரும்பான்மை முஸ்லிம்கள் வாழும் மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் பொதுவாக யூதர்களைத் தாக்கத் தூற்கு உள்ளாவர்களாகக் கருதப்படுவதில்லை. தங்கள் சார்ந்த மதத்தவர்களான அரபுகளுடன் உள்ள சகோதரத்துவத்தின் காரணமாக அவர்கள் பாலஸ்தீனியர் போராட்டத்திற்கு அனுதாபங் காட்டி இஸ்ரேலைப் புறமொதுக்குகின்றனர். 1989 இல் அவுஸ்திரேலிய உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளர் ஒரு யூதர் என்ற காரணத்தால் மலேசியா அவருக்கு அந்த நாட்டுக்குள் வர அனுமதி மறுத்ததால், அவுஸ்திரேலிய அணி அந்தப் பயணத்தை இரத்துச் செய்தது. இந்தோனேசியாவில் ''சின்ட்லர்ஸ் லிஸ்ட்'' என்ற திரைப்படம் பொதுமக்கள் பார்வைக்குக் காட்டப்படுவது தணிக்கை அதிகாரிகளிடையே எழுந்த பிணக்குக் காரணமாகத் தாமதப்பட்டது. பல நூற்றுக்கணக்கான இனக்குழுக்களைக் கொண்ட அந்த நாட்டில் இனப் பாகுபாடு சட்டவிரோதமாக்கப் பட்டுள்ளது. அந்த நாட்டின் இஸ்ரேலுடனான உறவுகள் திருந்திக் கொண்டு வருகின்றன. மேற்கத்தேய யூகக் குழுக்கள் அந்த இரு நாடுகளிலும் யூத இன ஒதுக்கலுக்கு எதிரான உணர்வுகள் உயர் மட்டங்களில் தான் நிலவுகின்றன என்றும், முஸ்லிம் பொதுமக்கள் மேலும் தீவிரமாக மாறினால் அதுவும் மாற்றமுறும் என்றும் கூறுகின்றனர். ''ஆசியாவில் எல்லாவிதமான இஸ்லாம் நிலைத்துப் பரவும் என்பதில் தான் அது கங்கியுள்ளது'' என்று கூப்பர் கூறுகிறார். ஆசியர்களிடையே நிலவும் பல இலவிரோதத் தன்மைகளுக்குள் ஆகப்பிந்தி வந்து புகுந்துள்ளது யூத இன வெறுப்பாகும். ஜப்பானில் உள்ள கொரியர்களும், ஜூஸ் இனத்தினரும், தென்கிழக்கு ஆசியாவில் உள்ள சீன இனத்தவரும், சீனாவில் உள்ள துருக்கிய மற்றும் ஹான் இனம் அல்லாத சிறுபான்மையினரும் வெகு காலமாக இனவெறியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் தான் யூதக் குழுக்கள் இத்தகைய நிலைமைகள் பலமாக ஆதிக்கம் செலுத்த முன்பு அதற்கு மாறான செயல்களை முன்வைக்க முனைகின்றன. அமெரிக்க யூகக் கவுன்சிலைச் சேர்ந்த சான்ட்பாக், ''நாங்கள் உலகளாவிய கலாசாரத்துக்குள் வாழ்கிறோம். அதனால் நாங்கள் கலாசார உணர்வின்மைகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது'' என்று கூறுகிறார். எதிர்வரும் வாரங்களில் அவர்களில் அநேகர் கண்டு கொள்ள உள்ளது போல் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மனி, ஜப்பானைச் சமாளித்திருந்தால் அன்னிபிரான்கும் ஒரு சாதாரண சிறு பெண்ணாக இருந்திருப்பாள்.

நியூஸ்வீக், மே 16, 1994

நாணயத்தின் நிறம்

முன்னொருகால் கைத்தொழிலில் மட்டும் பாவிக்கப்பட்ட மஞ்சள், பழுப்பு நிற வைரங்கள் அவுஸ்ரேலியாவுக்கு அதிர்ஷ்டப்பொருள்களாக மாறுகின்றன.

சுரங்கத் தொழிலாளியின் கனவு: மூன்று பில்லியன் வருட ஆராய்ச்சியின் விளைவாக கண்டுபிடிக்கப்பட்ட விலைமதிக்கரிய இரத்தினக் கற்களைப் பார்வையிடுகிறார்.

இன்னும் சில வாரங்களில் உலக முன்னணி வைர வியாபாரிகள் ஜெனிவாவில் உள்ள பியோறிவேஜ் ஹோட்டலில் பாதுகாப்பான அழகான அறையில் அந்தரங்கச் சந்திப்புக்காகக் கூடுவார்கள். ஒவ்வொரு வியாபாரியும் அநேக சந்தர்ப்பங்களில் அவரவருடைய நம்பிக்கைக்குரிய ஆலோசகரும் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட நேரத்திற்கு அழைத்துவரப்பட்டு அலங்காரமான தனித்தனிப் பெட்டிகளில் வைக்கப்பட்ட ஏறத்தாழ ஐம்பது இளஞ் சிவப்பு நிற வைரங்கள் காண்பிக்கப்படும். நுணுக்கமாக ஆராய்ந்த பின் முத்திரை இடப்பட்ட கூறு விலைகள்-சில சமயம் மில்லியன் டொலர் பெறுமதியானவை கையளிக்கப்படும்.

வழமையாக வைரக்கல் காட்சிகள் டி பியோர்ஸ் என்ற குழுவே ஒழுங்கு செய்யும். ஆனால், ஜெனிவாவில் இடம்பெறவிருக்கும் காட்சி முழுக்க முழுக்க அவுஸ்திரேலிய சாம்ராஜ்யத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒப்பீட்டளவில் சர்வதேச வைரங்கள் வியாபாரத்தில் புதியவரான 'ஆர்கையில் வைரங்கள்' அவுஸ்திரேலியாவின் கிம்பர்லின் பிரதேசத்தில் அகழ்வு செய்யப்படுவது. உண்மையான வைரம் மிகச் சிறு அளவிலான பழுப்பற்ற உறை பனி வெள்ளை நிறங் கொண்டது என்ற நூறுவருட பழைமை வாய்ந்த பாரம்பரியத்தை இது தோற்கடித்து விட்டது. உலகின் வேறெங்கிலும் பார்க்க அவுஸ்திரேலியாவில் காணக்கூடிய இளஞ் சிவப்பு நிற வைரங்கள் அரிய கவர்ச்சிமிகு கலைப் பொருள்கள் வியாபாரத்தில் பத்து வருடங்களுக்கு முன்பு ஆர்கையில் கணிசமான நற்பேறுகளுடன் முன்னேறத் தொடங்கியுள்ளன. அதன்பிறகு நிறுவனம் முன்னேறுதலால் கைத்தொழிலுக்கு மட்டும் பொருத்தமானது எனக் கருதப்பட்ட மஞ்சள் பழுப்பு நிற வைரங்களுக்கு உற்சாகமான உயர் நாகரிக சந்தைகளை உருவாக்க முடிந்தது.

1985 இல் இருந்து அவுஸ்திரேலியா உலகின் ஒருக்கூடிய தொகை வைரங்களை உற்பத்தி செய்யும் நாடு. அப்போ முன்னைய சோவியத்யூனியனையும் மிஞ்சியது. கடந்த வருடம் கிம்பர்லி 40 மில்லியன் கறற்ஸ் (அது 300 மில்லியன் பெறுமதி வாய்ந்தது) பட்டை தீட்டப்படாத வைரங்களை ஒப்படைத்தது. ஆர்கையில் அகழ்வு நிறுவனம் அவுஸ்திரேலியாவின் 95 சதவீதத்தை உற்பத்தி செய்தது. அது 1 பில்லியன் கறற்ஸ் கொண்டவையாக மதிப்பிடப்பட்டுள்ளது; அதன் அநேக கற்கள் நிறமிலை தரங்குறைந்தவை. கைத்தொழிலுக்கு உகந்த தரத்திலான வைரங்கள் ஒரு சில டொலர்கள் பெறுமதியானவை. அது உற்பத்தி செய்யும் 67 சதவீத நகைத்தரத்திலான வைரங்களில் அரைவாசி வர்ணச் சாயல் கொண்டவை. அநேகம் மஞ்சள் பழுப்பு.

நான்காம் நூற்றாண்டளவில் இந்தியாவில் ஆரம்பித்த வைர வியாபாரம் அதன் ஆரம்பகாலத்திலிருந்து வர்ண வைரங்கள் தரங்குறைந்தவையாகக் கணிக்கப்பட்டது. 1948 இல் தனிச் சிறப்புடைய 'என்றைக்கும் வைரங்கள்' என்ற பிரச்சார இயக்கத்தைத் தொடர்ந்து வைரங்கள் வெள்ளை இரத்தினமாக உறுதியாக அரண் செய்யப்பட்டது அதே சமயம் டி பியேர்ஸ் நிறுவனம் வர்ணக் கற்களை விற்பனை செய்தது. ஆனால், அவற்றின் விற்பனையை அபிவிருத்தி செய்யவில்லை. வைரங்கள் அவதானமாகப் பிரகாசம்மிக்க வெள்ளை வர்ணமற்ற இரத்தினமாக நிலைப்படுத்தப்பட்டது என்று சொல்கிறார் அன்றூ வாக்ஸ்ரால். ஆர்கையிலில் வாடிக்கையாளர், விற்பனைமேலாளர் எல்லா

வைரங்களும் குற்றமற்றவை என்றும், வர்ணக் கற்கள் போலியானவை என்றும் அதிகம் பேர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

பழுப்பு மற்றும் மஞ்சள் நிற வைரக் குவியல்கள் கிடைத்ததும் ஆர்கையில் மரபுக்குச் சவால் விடத் தீர்மானித்தது. நிறுவனம் சர்வதேச வியாபாரச் சின்னமாக 'சம்பெயின் வைரங்கள்' ஆரம்பித்தது வெள்ளைக் கற்களுக்கு உபயோகப்பட்டதுபோன்ற தரம் பிரித்தலை நிலை நாட்டியது. 1990 இல் ஆர்கையின் அமெரிக்காவில் 9 பில்லியன் நகை வியாபாரத்தில் ஈடுபடத் தயாரானது. '' எங்களைப் போன்ற பெரிய தொகுதிக்குப் பெரிய தீர்வு தேவைப்படும்.'' இவ்வளவு தொகையான வைரங்களை உள்வாங்க அவுஸ்திரேலியாவால் கிட்டவும் நெருங்கமுடியாது.

ஆர்கையிலின் பிரச்சாரம் மிகத் தந்திரமாகச் செய்யவேண்டியதாயிற்று. டிபியேர்ஸ் உலகச் சந்தையை இரும்புக் கரங்களால் ஆட்சி செய்கிறது. அது 78 சத வீத ஆர்கையிலின் வைரங்களை அதன் இரத்தினங்கள் உட்பட வாங்குகிறது. இளஞ்சிவப்பு வைரங்களைப் பொறுத்தளவில் ஆர்கையில் திரும்ப வாங்கும் ஒழுங்கைச் செய்துள்ளது. அவைகள் பேர்த் நகரில் மெருகு ஊட்டப்படுகின்றன. ஆனால், எஞ்சிய எல்லாம் சாம்பெயின் மற்றும் கொக்நாக்ஸ் உட்பட டிபியேர்ஸ் ஆல் தரகு பண்ணப்படுகிறது என்று சொல்கிறார் வாக்ஸ்ராவ். தொடக்கத்தில் அவர்கள் நம்பிக்கைக் குறைவாகக் காணப்பட்டனர். ஆனால், வெள்ளை வைரங்களைப் பாதிப்புறும வகையில் நாம் ஒன்றும் செய்யமாட்டோம் என்று உறுதி கூறினோம்.

ஆர்கையில் நிறுவனத்தில் பிரச்சார நடவடிக்கையின் முதற்படியாக ஆபரணங்கள் செய்யும்போது வர்ண வைரங்களைப் பயன்படுத்தும் அமெரிக்கத் தொழில் நிபுணர்களுக்குக் கழிவு கொடுத்தது. பின்பு நிறுவன வர்த்தகக் காட்சிகள் விசாலமான கவர்ச்சிமிகு கடைகள் போன்ற பளபளப்பான சஞ்சிகைகள் தொடங்கும். இவைகளுடாக கற்களின் மேம்பாட்டுக்குப் பிரச்சாரம் செய்யும்.

இவ்வாறான முயற்சி நல்ல பலா பலன்களைக் கொடுத்தது. சம்பெயினும், கொக்நாக்கும் மிகச் சிறந்தவையாக வந்துவிட்டன என்கிறார் கலிபோர்னியாவில் விற்பணை மேலாளராகக் கடமையாற்றும் மார்க் லாமியா என்பவர். நூறு வருடங்களுக்கு முன் ஆரம்பத்தில் தேக்க நிலையில் இருந்த நிறுவனம் ஒவ்வொரு வருடமும் 165 மில்லியன் பெறுமதிவாய்ந்த வைரங்களை அமெரிக்காவில் மட்டும் விற்கிறது. ஒப்பீடுகள் செய்வது கடினம். ஆயினும் அவ்வாறான வைரங்கள் பொதுவாக, அநேகமாக அதே அளவிலானதும் தரத்தினால் ஆனதுமான வெள்ளை வைரங்களுக்குக் கிடைக்கின்ற விலையிலும் பார்க்க அரைவாசியே கொண்டுவரும்.

கிம்பர்லியினரின் இளஞ் சிவப்பு வைரங்கள், இவை இளம் ஊதா, மற்றும் சிவப்பிலும் கிடைப்பதால் விற்பதற்கு சுலபமானவை. இளஞ் சிவப்பு வைரங்களுக்கு உலகில் ஒரே ஒரு நம்பத்தகுந்த உறைவிடம் ஆர்கையில் நிறுவனம் மட்டுமே. நிறுவனத்தின் உற்பத்தியில் 1 சத வீதம் மட்டுமே. அதனால் அவைகள் பூமியில் காணப்படும் அதி விலையுள்ள பொருள்களில் அடங்கும். ஓர் அவுன்ஸ் அல்லது 142 கறற்ஸ் இளஞ் சிவப்பு வைரம் 102 மில்லியன் பெறுமதி வாய்ந்தவை. 1988 இல் 1.51 கறற்ஸ் வட்ட வடிவமான கல் 'கடும் ஊதாச் சிவப்பு' 750,000 – க்கு ஓர் அநாமதேய நபருக்கு விற்கப்பட்டது. கடந்த வருடம் விற்பனைக்காக அவுஸ்திரேலியாவால் விடப்பட்ட முழுவதையும் 40 கறற்கள்– 41.48 கறற்ஸ் அல்லது 8 கிராம் றொபேர்ட் மௌவாட் 2.25 மில்லியனுக்கு வாங்கியுள்ளார். எவ்வளவு விரைவாக வருகின்றனவோ அவ்வளவு விரைவாக அவைகள் விற்றுப் போகும் என்கிறார் லாமியா.

இவ் வருடத்தில் சேகரிக்கப்பட்ட இளஞ் சிவப்புக் கற்களின் காட்சி ஜெனீவாவில் நடைபெறுமுன் டோக்கியோ, ஹொங்கொங் ஆகிய இடங்களில் காட்சிக்கு வரும். அப்போ பொருளைவிடக் கட்டுக்கதை வலுவானதா என்பதை பரீட்சித்துப் பார்க்கும் ''கலைப் பொருள்களைப் போல அவைகளைப் பார்க்கும் போது அவர்களின் முகம் மலரும். அது அப்பழுக்கற்ற கவர்ச்சியாகும்'' என ஏலத்தை மேற்பார்வை செய்யும் ஆர்கையிலைச் சேர்ந்த இறேம் றோலி என்பவர் கூறுகிறார்.

— தமிழில் —

திரு. வி. அரியநாயகம்

ரைம், ஒகஸ்ட் 29, 1994.

நீதி மந்திரி பாதுகாப்பில்

இதற்கு முன்பு ஜப்பானின் நீதி அமைச்சராக இருந்து சென்ற மே மாதத்தில் தாமாகவே பதவியை விட்டு நீங்கிய சிகேடோ நகானோவுக்குச் சிறப்புப் பாதுகாப்புத் தரப்பட்டுள்ளது. அவர் செய்தி ஏடு ஒன்றுக்கு அளித்த பேட்டியின்போது: ''ஜப்பானியப் படையினர் சீனக்குடிமக்களை நான்ஜீஸ்இல் படுகொலை செய்தனர் என்பது கட்டுக்கதை'' என்று கூறினார். அவருடைய கூற்று ஜப்பானிய இடதுசாரிக் குழுக்களாலும், முக்கிய செய்திப் பத்திரிகைகளாலும் கண்டனத்துக்கு உட்பட்டது. அதனால் அவர் பதவி விலக நேர்ந்தது. ஆனால், அவர் தனது கூற்றைப் பின்பு வாபஸ் பெற்றுக் கொண்டமையால் அவர் வலது சாரித் தீவிரவாதிகளின் கோபத்திற்கு ஆளாகியிருப்பது தான் அவருக்கு உள்ள பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

விண்வெளி ஆய்வில் தொலை நோக்கியின் பங்களிப்பு

— தமிழில் —
கலாநிதி க. சோமஸ்கந்தன்

தொலைநோக்கி எமது கண்ணின் விரிவு எனப்படுகிறது. (Extension of the eye) இது முற்றிலும் உண்மை. தொலை நோக்கிகள் நீட்டப்படும்வரை விண்வெளி பற்றி எமது அறிவு மட்டுப்படுத்தப் பட்டதாகவும், தவறுகள் மலிந்ததாகவும் இருந்தன. ஐரோப்பிய விண்வெளி ஆய்வின் முன்னோடிகளான கிரேக்கர்கள் தொலைநோக்கி இல்லாத பெருங் குறையால் பூமியை நடுவில் இருத்துதல் உட்பட பல அடிப்படைத் தவறுகளை விட்டுள்ளனர். சீனர்களும் இத் தவறு உட்பட பல பிழைகள் விட்டுள்ளனர். தென் அமெரிக்க வாசிகளான மாயா இனத்தவர்கள் வானியலில் வல்லவர்கள் எனப்படுகின்றது. ஆனால், சரியான விபரங்கள் கிடைக்கவில்லை.

1440 ஆம் ஆண்டளவிலேயே விண்வெளி எல்லை அற்றதெனக் கூசா நகர் தந்த நிக்கலஸ் (Nicho-las of cusa) என்ற ஜேர்மனியர் தெரிவித்துள்ளார். ஆனால் ஆதார பூர்வமாக அவரால் அதை நிரூபிக்க முடியவில்லை. 1609 ஆம் ஆண்டு தொலைநோக்கி மூலம் விண்வெளியை ஆராய்ந்த முதல் மனிதர் கலிலியோ, புதியதொரு சகாப்தத்திற்கு அடிகோலியுள்ளார். 1838 ஆம் ஆண்டு வில்கெல்ம் பேசல் (Wilhelm Bessel) என்ற இன்னுமொரு ஜேர்மனியர் 61 சிக்னி என்ற விண்மீன் (61 Cygni) 64 இலட்சம் கோடி மைல் தொலைவில் இருப்பதாகக் கண்டு பிடித்துள்ளார். எமது சூரியமண்டலத்தின் பரிமாணம் எவ்வளவு குறைந்தது என்பது இதனால் புலப்படுகிறது.

இவ்வளவு பெருந் தொலைவுகளை எளிதாகக் குறிப்பிடுவதற்கு ஒளி ஆண்டு (Light Year) என்ற அளவு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு வினாடியில் ஒளி 186,282 மைல் (298 051 கி மீ) தூரம் பாய்கிறது. ஓர் ஆண்டில் அது 5 88 இலட்சம் கோடி மைல் 9.41 இலட்சம் கோடி கி. மீ) தூரத்தைக்கடக்கிறது. இந்தத் தூரம் ஓர் ஒளி ஆண்டு எனக் குறிப்

"சடமும் சக்தியும் உயிரும் உடலும் போல் விண்வெளியில் பொருளும் ஆற்றலும் இணைந்திருக்கின்றன."

பிடப்படுகிறது. 32.6 ஒளி ஆண்டுகள் 10 பார்செக் (Parsee) தொலைவு. ஒரு பார்செக் என்பது 3 26 ஒளி ஆண்டுகளுக்குச் சமம். (கிட்டத்தட்ட 30 4 இலட்சம் கோடி கி. மீ.) 1900 ஆம் ஆண்டுக்குள் மேற்படி கணக்கை அடிப்படையாக வைத்து 70 விண்மீன்களின் தொலைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1980 ஆம் ஆண்டுக்குள் பல்லாயிரம் விண்மீன்களின் தொலைவுகள் பதியப்பட்டுள்ளன.

1924ஆம் ஆண்டு எட்வின் பவல் ஹபிள் (Edwin Powell Hubble)என்ற அமெரிக்க விண்வெளி விஞ்ஞானி வில்சன், மலைவானம் அவதான நிலையத்தில் இருந்து அங்குள்ள 100 அங்குல விட்டமுள்ள தொலை நோக்கியின் மூலம்அன்ட்ரோமீடா உடு மண்டலத்தைப் பரிசீலித்துள்ளார். (Andro meda Galaxy) இந்த மண்டலத்தின் விளிம்பில் விண்மீன்கள் தனித்தனியாகத் தெரிந்தன. இவருடைய ஆய்வுக்குப்பின் இந்த மண்டலம் மிகத் தொலைவிலுள்ள கலக்சிகளில் ஒன்று என்பதுஉறுதியாயிற்று. ஹபிள் அவர்களுடைய கணக்கின்படி அன்ரோமீடா பத்து இலட்சம் ஒளியாண்டுகள் தொலைவில் இருக்கிறது. தொலைவு மாத்திரமல்ல இது உருவத்திலும் மிகப் பெரியதாக இருக்கும் என ஹபிள் மதிப்பிட்டார். வானில் தெரியும் வேறு ஒளித் திட்டுகளும் உடு மண்டலங்களே என்று பிற்பாடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவை அன்ரோமீடாவிலும் வெகு தொலைவில் உள்ளன. இவை எல்லாவற்றையும் நோக்கும் கால் பிரபஞ்சம் பல கோடி ஒளி ஆண்டுகள் பருப்பம் உள்ளதாகத் தெரிய வருகிறது.

1942 இல் வில்சன் மலைத் தொடர் தொலைநோக்கி மூலம் வால்ரர் பாட் (Walter Baade) என்பவர் அன்ட்ரோமீடா மண்டலத்தைப் பரிசீலித்து அங்கு இரண்டு வித்தியாசப்பட்ட விண்மீன் கூட்டங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார். பின்பு இரண்டு கூட்டங்களிலும் பல்வேறு உட்பிரிவுகளும் இருப்பது தெரிய வந்துள்ளது. 1945 ஆம் ஆண்டு இரண்டாவது உலகப்போர் முடிவடைந்தும் பலோமர் மலையில் (Palomar mountain) 200 அங்குல விட்டமுள்ள தொலைநோக்கி நிறுவப்பட்டுள்ளது. அன்ரோமீடா ஆய்வுகள் இந்தத் தொலை நோக்கி மூலமும் தொடர்ந்தன. இதன் காரணமாக ஹபிள் 10 இலட்சம் ஒளி ஆண்டுகள் தொலைவு எனத் தெரிவித்தது. இன்று 25 இலட்சம் ஒளி ஆண்டு என மாற்றப்பட்டுள்ளது.

இதேபோல் வேறு உடு மண்டலங்களில் தொலைவுகளும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. பிரபஞ்சத்தில் உள்ள உடுமண்டலங்களுக்கிடையிலான சராசரித் தொலைவுகள் கிட்டத்தட்ட 200 இலட்சம் ஒளி ஆண்டுகளென மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்பு எண்ணியதைவிட இரண்டு மடங்கு அதிகமாகும். இந்தத் திருத்தத்தின் பின் பூமியின் வயதைப்பற்றிப் புவி இயலாளர்கள் போட்டிருந்த மதிப்புக்கும், பிரபஞ்சத்தின் வயதிற்கும் உள்ள முரண்பாடுகள் நீங்கியுள்ளன.

மங்கலாக இருந்த விண்மீன்களே திடீரென அதிக ஒளியை வீசுகின்றன என்றும் தெரியவந்துள்ளது. சில நாள்களில் பல்லாயிரம் மடங்கு ஒளியை வீசிவிட்டு, பின்பு மெதுவாக மங்கலாகத் தொடங்கிவிடும். ஒவ்வொரு கலக்சியிலும், ஒவ்வொரு வருடமும் சராசரி 20 நோவாக்கள் தோன்றுகின்றன. அன்ரோமீடாவின் தொலைவு, பாலோமார் தொலைநோக்கி மூலம் சரி செய்யப்பட்ட பின் 1985 ஆம் ஆண்டு தோன்றிய நோவாவின் அசாதாரண ஒளி வானியலாளர்களுக்கு எமது சூரியனைவிட 100 கோடி மடங்கு அதிகமான ஒளி வீசும். சீனர்கள் பண்டைக்காலந் தொட்டு வானில் தெரிந்த புது விண்மீன்களைப் பற்றிய விபரங்களை எழுதியுள்ளனர். அவை சுப்பர் நோவாக்களாக இருத்தல் வேண்டும். இல்லையென்றால் அவை வெறும் கண்ணுக்குப் புலப்படமாட்டா. பண்டைக்கால மனிதர்கள் தமக்குக் குகைகளில் சுப்பர் நோவாவைப் பார்த்த பின் தீட்டிய ஓவியங்கள் இன்றும் உள்ளன. பெரும் ஒளியுடன் பிரகாசித்த பின் சுப்பர் நோவா வெடித்துச் சிதறுகின்றது. இது அங்கு தோன்றும் ஆற்றலாலும், அங்கு நிகழும் பல்வேறு வேதியல் வினைகளாலும் ஏற்படுகின்றது.



விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள ஹபிள் தொலைநோக்கி

விண்மீன்கள், நட்சத்திரம், ஸ்ரார் (Star) என்றெல்லாம் அழைக்கப்படும் புதிதாகத் தோன்றும் விண்மீன்களை வானியலாளர்கள் நோவா (Nova) என்றழைப்பர். 1604 ஆம் ஆண்டு தோன்றிய பேரொளி வீசிய, நோவாவை ஜோகானஸ் கெப்பிலர் (Johanes keppler) பரிசீலித்து ஒரு நூல் எழுதியுள்ளார். தொலைநோக்கிகள் வந்தபின், நோவாக்கள் பற்றிய மர்மம் தெளிவாகியுள்ளது. அவை புதிதாகத் தோன்றுவதில்லை என்றும் அறியக்கு எட்டியுள்ளது. ஹபிள் பல நோவாக்களைத் தன் வாழ்நாளில் பதிவு செய்துள்ளது. ஆனால் அவை ஒன்றும் 1985 ஆம் ஆண்டு தோன்றியதற்கு நிகராக வரவில்லை.

தொலைநோக்கியின் உதவியின்றி வெறும் கண்ணுக்குத் தெரியும் விண்வெளிப் பொருள்களில் சுப்பர்நோவா (Super nova) ஒன்றாகும். தனிப் பொலிவு எண் 17 வரை போகும் சுப்பர் நோவாக்கள் தனது உச்சப்பொலிவு நிலையில் சூரியனைவிட 5 கோடி மடங்கு அதிகமான ஒளி வீசும். இவற்றின் பிரகாசம் சில நாள்களில் பல்லாயிரம் மடங்கு அதிகரிக்கின்றது. இவை சில நாள்களில் பல்லாயிரம் மடங்கு ஒளியை வீசிவிட்டு, பின்பு மெதுவாக மங்கலாகத் தொடங்கிவிடும். ஒவ்வொரு கலக்சியிலும், ஒவ்வொரு வருடமும் சராசரி 20 நோவாக்கள் தோன்றுகின்றன. அன்ரோமீடாவின் தொலைவு, பாலோமார் தொலைநோக்கி மூலம் சரி செய்யப்பட்ட பின் 1985 ஆம் ஆண்டு தோன்றிய நோவாவின் அசாதாரண ஒளி வானியலாளர்களுக்கு எமது சூரியனைவிட 100 கோடி மடங்கு அதிகமான ஒளி வீசும். சீனர்கள் பண்டைக்காலந் தொட்டு வானில் தெரிந்த புது விண்மீன்களைப் பற்றிய விபரங்களை எழுதியுள்ளனர். அவை சுப்பர் நோவாக்களாக இருத்தல் வேண்டும். இல்லையென்றால் அவை வெறும் கண்ணுக்குப் புலப்படமாட்டா. பண்டைக்கால மனிதர்கள் தமக்குக் குகைகளில் சுப்பர் நோவாவைப் பார்த்த பின் தீட்டிய ஓவியங்கள் இன்றும் உள்ளன. பெரும் ஒளியுடன் பிரகாசித்த பின் சுப்பர் நோவா வெடித்துச் சிதறுகின்றது. இது அங்கு தோன்றும் ஆற்றலாலும், அங்கு நிகழும் பல்வேறு வேதியல் வினைகளாலும் ஏற்படுகின்றது.

கடந்த பல தசாப்தங்களாக வானியலாளர்கள் விண்வெளியில் உள்ள நட்சத்திரங்கள், கோள்கள், மண்டலங்களை போன்றவற்றைத் தொலைநோக்கி மூலம் ஆராய்ந்து பல அரிய உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளனர். ஆனால், பல நம்பகமான சான்றுகளைக் கொண்டு அதிசக்தி வாய்ந்த தொலைநோக்கிக்கும் புலப்படாத ஏராளமான பொருள்கள் விண்வெளியில் உண்டு என்பதும் இவர்களுடைய கண்டுபிடிப்பாகும். ஒரு கலக்சியின் வெகுதூரத்திலுள்ள நட்சத்திரங்கள் கற்றும் வேகத்தைக் கொண்டு அந்த கலக்சியின் (உடுமண்டலம்) நிறை மதிப்பிட முடிகின்றது. பின்பு அதே உடுமண்டலத்தில் உள்ள நட்சத்திரங்கள், தூசி, துகள், வாயு ஆகியவற்றைக் கூட்டிப் பார்க்கும் போது கிடைக்கின்ற நிலையைவிட சுழற்சி வேகத்தின்மூலம் கண்டுபிடிக்கப்படும் நிறை பன்மடங்கு அதிக

மாயிருக்கின்றது. இந்த வித்தியாசம் கண்ணுக்குத் தெரியாத கரும் பொருளால் ஏற்படுகிறது. இத்தகைய கரும் பொருள் உண்டு எனச் சொல்வது சுலபம். ஆனால், அதை என்னவென்று எடுத்துச் சொல்வது இதுவரை முடியவில்லை.

தொலை நோக்கிகளைப் பெரிதாக்காமல் அவற்றின் திறனை அதிகப்படுத்த முடியும் தொலை நோக்கிகளின் கண்ணாடி (லென்சு) பெரிதாகப் பெரிதாக அவை ஒளியை உட்சுவர்ந்து கொள்ளும். இதனால் உருப்பெருக்க அளவுகூலம் இழக்கப்படும். இதைத் தடுக்க இன்றுள்ள பிரமாண்ட தொலை நோக்கிகள் எல்லாம் பிரதிபலிப்பு (Reflectors) முறையில் அமைக்கப்படுகின்றன. இவை ஒளியை அதிகமாக உட்கவரா. அத்துடன் இப்போதெல்லாம் கண்ணாடி லென்சுகளைக் கொண்ட தொலை நோக்கிகள் அவ்வளவாகப் பயன்படுத்தப்படுவதில்லை. அதற்குப் பதிலாகக் கிண்ணம் போன்ற உட்குழிந்த கண்ணாடி உருவத்தை அமைத்து அதன் வெளிப் புறத்தில் திரவ அலுமினியத்தைப் பூசி பிரதிபலிப்புத் தன்மையை உண்டாக்கிய பின் தொலை நோக்கியில் பொருத்துகின்றனர். விம்பங்கள் இதில் பட்டுப் பன்மடங்கு பெரிதாகத் தெரிகின்றன. விம்பங்களை(Images) கண்ணாற் பார்க்கவும், படமாக எடுக்கவும் இதில் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இப்போது விண்ணில் சுற்றிக் கொண்டிருக்கும் ஹபிள் தொலை நோக்கியில் இந்த முறையில் தயாரிக்கப்பட்ட லென்சு பொருத்தப்பட்டுள்ளது.

1850 ஆம் ஆண்டு தொடக்கம் வானியலாளர்கள் வானத்தை ஒளிப்படம் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். வெறும் கண்ணால் பார்ப்பதைவிட ஒளிப்படத்தை நோக்குவது கூடிய விபரங்களைத் தருகிறது. தொலை நோக்கி மூலம் படம் எடுக்கும் கலை படிப்படியாக வளர்ந்துள்ளது. ஆனால் மிகப் பெரிய தொலை நோக்கி கூட வானில் ஒரு சிறு பகுதியைத்தான் காட்டுகின்றது. படங்களைப் பெரிதாக்கும் போது அவற்றின் விளிம்புப் பகுதி உருக்குலைகிறது. 1930 ஆம் ஆண்டு ருஷ்ய-ஜேர்மனியரான பேர்னாட் ஷிமிட் (Bernard Schmidt) என்ற லென்சு நிபுணர் உருக்குலைவைத் தடுக்கின்ற கண்ணாடி லென்சை உருவாக்கியுள்ளார். இந்த லென்சைப் பொருத்தி வானின் பெரும் பரப்பை ஒரே படத்தில் பதிவு செய்ய முடிகிறது. இந்த ரக லென்சுகளே இன்று தொலை நோக்கிகளில் பாவிக்கப்படுகின்றன. இவை ஷிமிட் படக்கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன.

மேற் கூறப்பட்ட ஒளித் தொலை நோக்கிகளை விட ஒலித் தொலை நோக்கிகளும் இன்று பாவிப்பில் உள்ளன. இது ரேடியோ வானியல் என்ற புதிய கலையின் ஓர் அலகு ஆகும் ரேடியோ அலைகள் விண்வெளியில் இருந்து வருகின்றன. விண்வெளிப் பொருள்கள் வெளியிடும் ரேடியோ அலைகளிலிருந்து அவற்றின் பண்பைக் கண்டு பிடிப்பதே ரேடியோ வானியல். இதைத் தொடக்கி வைத்தவர் கார்ல் ஜான்ஸ்கி என்ற அமெரிக்கர். (1931) சேர் பேர்னாட் லோவெல் என்ற விஞ்ஞானியின் மேற்பார்வையில் இங்கிலாந்தின் ஜொட்ரல் பாங்க் என்னுமிடத்தில் நிறுவப்பட்ட 250 அடி விட்டமுள்ள கிண்ண அலைவாங்கி உலகின் முதன் முதலான ரேடியோ தொலைநோக்கியாகும். ரேடியோ அலைகளைப் பிடிப்பதற்குப் பல வழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. துல்லியத்தையும், பிரிதிறனையும் அதிகமாக்கப் பெரிய அலைவாங்கிகள் தேவையில்லை. சாதாரண அளவிலான இரண்டு ரேடியோத் தொலை நோக்கிகளை இரண்டு இடங்களில் அமைத்து விட்டு அணுக் கடிகாரங்களின் உதவியாலும், கணிப்பொறிகளின் உதவியாலும் இரண்டையும் சேர்த்தால் போல் ஒரே மாதிரியாக இயங்க வைக்கலாம். அப்போது அவற்றிற் கிடையில் உள்ள தொலைவுக்குச் சமமான விட்டமுள்ள அலை வாங்கியைப் பாவிக்கும் பயன் கிடைக்கும்.

இத்தகைய அமைப்புக்கள் நீண்டு அடிக் கோட்டுவகை (Long Base-Link) தொலை நோக்கிகள் எனப்படுகின்றன. இந்த அமைப்பு சிறிது சிறிதாக அபிவிருத்தி செய்யப்பட்டு அவுஸ்ரேலியாவில் ஒன்றும், கலிபோர்னியாவில் இன்னொன்றும் ஒன்றிணைக்கப்பட்டு 10560 கி.மீ. நீளமுள்ள அடிக் கோடுள்ள தொலை நோக்கி இன்று இயங்குகின்றது. மேலும் சந்திரனில் ஒன்றும், பூமியில் ஒன்றும் அமைத்துத் தொடக்கும் திட்டம் எழுத்துருவில் இருக்கின்றன. இவ்வாறு அமைந்த ஒளித் தொலை நோக்கிகளிலும் கூடுதலான விபரங்களை அளிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ரேடியோ வானியல் உதவியால் விண்வெளியில் பெரும் தொலைவு வரை பார்க்க முடியும். விண்வெளியில் நூற்றுக்கு மேற்பட்ட ரேடியோ மூலகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஒரு கோடி ஒளி ஆண்டு தொலைவிலுள்ள எம் 82 (M 82) என்ற சப்தரிஷி மண்டலத்தைச் சேர்ந்த உடுமண்டலத்தில் இருந்து பலமான ரேடியோச் சைகைகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

வானியல் வரலாற்றில் முதன் முறையாக விண்வெளிக்கு ஒரு தொலை நோக்கி ஹபிள் என்ற பெயரில் அனுப்பப்பட்டுள்ளது. கருங்குழிகள், நட்சத்திரங்கள், உடுமண்டலங்கள், உடுமண்டலத் தொகுதிகள் (Constellation) ஆகியவாவற்றையும் ஹபிள் ஆராயும். பூமியில் இருந்து பார்க்கும் போது புலப்படும் மிகச் சிறிய பொருள்களிலும் நூற்றியொரு பங்கு சிறிய வற்றையும் அது துல்லியமாகப் படம் பிடிக்கும். அதன் பார்வையை மறைக்க வளிமண்டலமோ, தூசு அல்லது மேகமூட்டமோ விண்வெளியில் இல்லை. பகல் இரவு வேறுபாடும் இல்லை. 1260 ஒளி ஆண்டு தொலைவில் உள்ள 300 கோடி ஆண்டுகள் வயதான

தீற்றா கரினா (Theta Carina) என்ற நட்சத்திரத்தின் ஒளிப் படத்தை முதன் முதலாகக் கண் சிகிச்சை அளிக்கப்படும் முன்பே ஹபிள் அனுப்பியுள்ளது. இந்த வெற்றிக்குப் பின் சந்திராவில் ஒரு தொலைநோக்கியையும், பூமித் தொடர்புள்ள ஆய்வுக் கூடத்தையும் நிறுவ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

விண்மீன் எனப்படும் நட்சத்திரங்கள் கூடிய உடுமண்டலம் அல்லது கலெக்சி எனப்படும் நட்சத்திரக் கூட்டங்களாகவும், இதே உடுமண்டலங்கள் கொத்துக்களாகவும் (Clusters) அதே கொத்துக்கள் கூடிய கொத்துக்களின் கொத்துக்களாகவும் ஆகின்றன. இவ்விடயத்தில் பிரபஞ்சம் எல்லையற்றதா அல்லது எல்லை உள்ளதா என்ற வினா எழுகிறது. இப்போதிருக்கும் கருவிகள் 1,000 கோடி ஒளி ஆண்டுகள் தொலைவு வரை தமது பார்வையைச் செலுத்துகின்றன. ஏதோ ஓர் எல்லை அதற்கப்பால் இருப்பதாக விஞ்ஞானிகள் இபம்புகின்றனர்.

பிரபஞ்சத்தில் பொருளும் ஆற்றலும் அமைந்துள்ள பாங்கை நோக்கி எல்லா வகையான ஆற்றல்களும் அலைவடிவில் வருகின்றன என்று ஐன்ஸ்ரீன் தனது சார்புக் கொள்கை அடிப்படையில் விளக்கியுள்ளார். ரேடியோக் கதிர்கள், எக்ஸ் கதிர்கள், ஒலி அலைகள் வரையிலான சகல ஆற்றல்களும் அலை வடிவில் வருகின்றன என்று விஞ்ஞான ஆய்வுகள் நிரூபித்துள்ளன. ஆனால் நிறை ஈர்ப்பு அலை இருப்பதாக நம்மால் நம்ப முடியவில்லை. பொருள்கள் தமது நிறை காரணமாக ஒன்றின் மேல் ஒன்று செலுத்துகின்ற விசை நிறையீர்ப்பு விசை (Gravity) எனப்படும். பனம்பழம் நிலத்தில் விழுவது முதற் கொண்டு சூரியனைப்பூமி சுற்றுவது இப்பிரபஞ்சமே தனது மையத்தைச் சுற்றுவது வரையிலான எல்லாமே இந்த விசையின் காரணமாகவே நடக்கின்றன. எனினும் நிறையீர்ப்பு அலை இருப்பதாக மிக நுட்பமான கருவிகளாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இது போன்ற இன்னும் பல கேள்விகளுக்கு விடை காண வேண்டியிருக்கிறது.

தொகுப்பு: உலா உலா
ஆசிரியர் குழு,

ஆதாரம் (1) சயன்றிபிக் அமெரிக்கன் சஞ்சிகைகள் 1991, 1993.

(2) வானியல் எல்லைகள் பிறெட் றோயில்

கஞ்சாவைச் சரக்காக்குகிறார்கள்

அமெரிக்காவில் கொலடறாடோ மாநிலத்தைச் சேர்ந்த சகோதரிகளான ஷீறீன் லும், கிறிஸ்டினா படர்சனும் இணைந்து ஒரு தொழில் நிறுவனம் தொடங்கியுள்ளனர். அது சுவிற்சலாந்து அரசு, கஞ்சாச் செடி சம்பந்தமாகக் கொண்டுள்ள கொள்கையைப் பயன்படுத்திக் கஞ்சா எண்ணெய் உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. சுவிற்சலாந்தில் கஞ்சாவைப் போதைப் பொருளாகப் புகைப்பது தவிர்ந்த வேறு எந்தத் தேவைக்காகவும் விளைவிக்கலாம் என்று உள்ளதனால் அந்த நிறுவனம் அதனை விளைவித்துச் சாப்பாட்டிற்கும், தலைமுழுகும்போது பாவிக்கும் ஷம்பூ, முகத்தில் பூசும் களிம்பு, ஹோமியோபதி மருந்துகள் பாவித்தபின் எறிந்துவிடும் குழந்தைகளுக்கான மலசலக் கச்சம் போன்றவற்றுக்கும், மண மூட்டல் போன்ற பல தேவைகளுக்கும் பாவிக்க உள்ளனர். அந்தச் சகோதரிகளின் கூற்றுப்படி ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி போன்ற நாடுகளில், கஞ்சாவில் இருந்து செய்து முடிக்கப்பட்ட பொருள்களுக்குத் தடை ஏதும் இல்லை என்பதனால் அங்கு சந்தை வாய்ப்பு உள்ளதாம். அங்கு விதை தவிர்ந்த வேறு செடிப் பாகங்களில் இருந்து வடித்து எடுக்கப்பட்ட கஞ்சா கலந்த உற்பத்திகள் அனுமதிக்கப்படுவனவாம். ஒரு கஞ்சா ஷம்பூக்கு £ 10 பிரிட்டிஷ் பவுணும், சாப்பாட்டிற்கு ஊருகியூட்டும் எண்ணெய் டப்பா £ 12 பவுணாகவும், ஒரு தேவீர் போச்சியை மண மூட்டத் தேவையான கஞ்சாச் சாறு £ 2 பவுணும் ஆகலாம் என்று கூறப்படுகிறது. இந்தக் கஞ்சா வடிப் பொருள்கள் வெறியூட்ட மாட்டாது. ஆனால், பாவனைக்குப் பின் குதூகலிப்புத்தரும் என்று உற்பத்தி செய்பவர்கள் கூறுகின்றனர்.

"முற்றிலும் பொருத்தமான"

'PIE' (Profile Interview Evaluation)

ஊழியர்களை வேலைக்கமர்த்துதல்

— றிச்சாட் ஜே. பின்ஸ்க்கர் —

முகாமையாளர் ஒருவர் மேற் கொள்ளும் முடிவுகளில் 50 சத வீதத்துக்கு மேற் பட்டவை சரியானவையாக அமையுமானால், அவர் நல்ல விதமாகவே செயற்படுகிறாரென்பது சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒன்றேயாகும். மிகத்திறமையாகச் செயற்படும் நிறுவனங்களின் முகாமையாளர்கள் பொதுவாக இந்த வீதத்தைத் தாண்டி விடுபவர்களாகவே இருப்பர். இவர்களையும் இவர்களது நிறுவனங்களையும் ஏனையவற்றிலிருந்தும் தனித்துவமாக வேறுபடுத்திக் காட்டுவதும் அநேகமாக இக் காரணமேயாகும்.

ஊழியர் தேர்வு என்று வரும் போது அநேகமான நிறுவனங்கள் அதில் 50சத வீத வெற்றியைக் கூட எட்டுவதில்லையென்பது துரதிட்டவசமான தாகும். ஊழியர்களுக்கான தேர்வென்பது வழமையாக நிறைவில்லாத ஒரு வழி முறையாகவே அமைகிறது. இவை உணர்வுகளாலும், ஊகங்களாலும், கற்பனை மற்றும் திரிபு நியாயங்களாலும் அடிக்கடி குளப்பத்திற் குள்ளாக்கப்படுகின்றன. அநேகமாக, போதியதும், உறுதியானதுமான ஆதார உண்மைகளெதுவுமின்றி ஆட்களின் அபிப்பிராயங்கள் மீதே இது நிர்மானிக்கப்படுவதாக இருக்கிறது.

தேர்வு முறை அது எப்படி என்பதை உங்களுக்கு காட்டுகிறது.

சரியான நியாயவாதங்கள் இவ் வழி முறைக்குப் பிரயோகிக்கப்படாமல் வேலைக்கு ஆட்களை அமர்த்துவது சடுதியாகவே மிக இலகுவானதாவதுடன் குறிப்பாகவே கூறிவிடக் கூடிய பெறுபேறுகளையும் கொண்டு வருகின்றன. பகுத்தறிவு நியாயங்களின் அடிப்படையில் ஊழியர்களைத் தெரிவு செய்யும் வழி முறையாக 'PIE' ஒழுங்கு முறை பின்பற்றப்படுவதன் மூலம் வெற்றிகரமான ஆட்களைத் தெரிவு செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நீங்கள் காண்பதுடன், உங்களது நிறுவனத்தின் செயற்திறனையும் அதிகரித்துவிட உங்களால் முடிகிறது.

பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதன் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ள விரும்பும் பிரதியேக பெறுபேறுகள் பற்றியதும், பின்னர் இதனைச் சாதிக்கக் கூடிய வரான ஒருவர் பற்றியதுமான ஆழமான பார்வையுடன் கூடிய மேலோட்டமான ஒரு "நியக்கணிப்பீடே" (Profile) 'PIE' முறையின் முதற் படியாகும். உங்களது கணிப்பீட்டைப் படிப்படியாக உருவாக்கிக் கொள்வதில் நீங்கள் மேற் கொள்ளும் அனைத்தும் அடுத்த இரு படிகளாகிய "நேர்முகங் காணல்" (Interview) மற்றும் "மதிப்பீடு செய்தல்" (Evaluation) போன்றவற்றுக்கு அத்தியாவசியமானதாகும். நீங்கள் தெரிவு செய்ய விரும்புபவரில் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்களென்பது உங்கள் கணிப்பீட்டில் அடிப்படையிலேயே அமைகிறது.

'PIE' யின் அடிப்படையென்ற வகையில் உங்களது இக் கணிப்பீடே உங்களது தேவைகளைத் தெளிவாக நிர்ணயிக்கிறது. இது நிறுவனத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டிய தொழிற்பாடுகளை மட்டுமல்லாமல், நிறுவனத்தை வெற்றிகரமான ஒன்றாக விளங்கச் செய்வதற்கு வேண்டிய பெறுபேறுகளையுங் கூடவே விரித்துரைக்கிறது. நீங்கள் நிரப்புவதற்கு முயற்சிக்கும் பதவிக்குச் சிறந்த விதப் பொருத்தமான மனிதர் எப்படிப்பட்டவராக இருப்பார் என்பதை முன் கூட்டியே அறிவதற்கு, இக் கணிப்பீடு உங்களுக்கு உதவுகிறது. தேர்வுக்கான வழி முறை முழுவதற்கும் இதுவே இறவுகோலுமாகும்.

செயற்றிறனுக்கான (Performance) உங்களது எதிர்பார்ப்புக்களை பட்டியலிட்டுக் கொள்வதே, தெரிவுக்கான ஆளைப் பற்றிய உங்கள் கணிப்பீட்டை உருவாக்கி வளர்த்துக் கொள்வதற்கான முதற் படியாகும். இத்தப் பதவியை நிரப்புவதன் மூலம் நிறுவனம் என்ன சாதிக்கப் போகிறது? நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைகள் என்ன? விரும்பப்படும் பெறுபேறுகள் என்ன?

செயற்றிறனுக்கான உங்களது எதிர்பார்ப்புக்களை உருவாக்குவதில், அப்படியான எவராவது உண்மையில் உங்களுக்கு எவ்விதத்திலும் தேவைதானா என்ற கேள்வி நிர்ப்பந்தமாகவே உங்கள் மனதில் எழுகிறது. திறமையென்பது உங்

கள் நிறுவனங்களிலேயே, தற்போது வேலை பார்க்கும் ஒருவரிலோ அல்லது பலரிலோ தானும் ஏற்கனவே இருப்பதாக நீங்கள் காணக்கூடும்.

அனுபவங்கள் சாதனைகள் மற்றும் திறமைகளின் மொத்த வடிவமே எடுத்துக் காட்டான வெற்றிகளாகும். குறிப்பிடத்தக்க சில வருடங்களிலான பிரத்தியேகமான தோர் அனுபவத்தைக் கொண்டு ஒருவரது தகைமைகளை ஒரு போதுமே வரையறுத்துக் கொள்ள முடியாது. தேவைப்படும் அனுபவ சம்பந்தமாக ஒப்பிட்டளவில், அவர் என்ன சாதித்திருக்கிறார் என்பதே அவசியம். ஒரு வருட அனுபவங் கொண்ட ஒருவர் ஒரு வருட அனுபவசாலியான வேறொருவரின் சாதனைகளிலும் பத்து மடங்கு சாதிக்கும் ஆற்றல் கொண்டவராகவு மிருக்கலாம்.

அபேட்சகர்கள் கடந்த காலத்திற் போலவே எதிர் காலத்திலும் எடுத்துக்காட்டான முறையில் சிறப்பாகச் செயலாற்றுவார்கள் என்ற கருது கோலின் அடிப்படையிலேயே 'PIE' ஒழுங்கில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுகிறது. அபேட்சகர்கள் கடந்த காலத்தில் என்ன சாதித்துள்ளார்கள் என்பதுடன், எப்படியாக அவர்கள்அதைச் சாதித்தார்கள் என்பதை நீங்கள் கண்டு கொண்டதும், எதிர்காலத்தில் அவர்கள் எப்படியாக உங்களிடம் வேலை செய்யப் போகிறார்கள் என்பதற்கான பலத்த அறிகுறியாகவே அது உங்களுக்கு அமைகிறது. உண்மையில் வெற்றிகரமான ஊழியர்களை இவ்விதமாகவே நீங்கள் கண்டு கொள்கிறீர்கள்.

உங்களது தகவல் மூலங்களுடாக அபேட்சகர்களைப் பற்றி நீங்கள் என்ன கேள்விப்படுகிறீர்கள் என்பதுடன், நேர்முகப் பரீட்சையின் போது அவர்களது சான்றிதழ்கள் விண்ணப்ப மாதிரிகள் போன்ற அவர்கள் பற்றிய சாதாரண தொகுப்புரைகளுக்கும் அப்பாலேயே நீங்கள் செல்ல வேண்டும், அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் சாதித்தது என்ன என்பவற்றுடன், வருங்காலத்திலும் அவர்களது செயற்பாடுகள் பற்றி என்ன நோக்கத்தினை அவர்கள் கொண்டுள்ளனர் என்ற முதற்றரமான ஒரு கலந்துரையாடலை நீங்கள் பெற்றுக் கொள்வதற்காக அவர்களது பின்னணியை நேர்முகங் காணலின் போது நீங்கள் ஆழமாகவே துருவிப் பார்க்க வேண்டும். பின்னர் இந்தத் தகவல்களை உங்களது தேவைகளுடன் ஒப்பு நோக்க வேண்டும்.

நேர்முகங்காணும் நேரத்தில் பெரும்பகுதியை அபேட்சகர்களின் வாழ்விலான எந்தக் காலகட்டப் பகுதியுடன் நீங்கள் செலவிடப் போகிறீர்களென்பதை நேர்முகப் பரீட்சைக்கு முன்னரே நீங்கள் தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும். இளவயதினருடன் பேசும் போது அனுபவ முதிர்ச்சி வாய்ந்த நிர்வாகிகளுடன் பேசுவது போலல்லாது அவர்களது கல்லூரி வாழ்க்கையிலேயே கூடுதலான கவனஞ்

வேலைக்கமர்த்துவதில் விடப்படும் மிகமோசமான ஏழு தவறுகள்

01. தேவை என்ன என்பதைச் சரியானபடி தீர்மானித்துக் கொள்ளாமை: வெற்றிகரமான ஒருவரைக் கண்டு கொள்வதற்கு, அதற்கான தேவையை நீங்கள் இனங்கண்டு கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

02. அபேட்சகர்களுக்கான தகவல் மூலவளங்களைத் தேவையற்ற விதமாகக் கட்டுப்படுத்தல்: தகவல்கள் கூடுதலாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கு இருக்கக் கூடிய சிறந்த அபேட்சகரைக் கண்டு கொள்வதற்கான உங்கள் வாய்ப்புக்களும் சிறப்பாக இருக்கும்.

03. அபேட்சகர்களைச் செம்மையாக நேர்முகங்காணத் தவறுதல்: அநேகமான அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சை பற்றிய உத்திகளில் கைதேர்ந்தவர்களாகவே இருப்பர். அவர்களுக்கும் மேலோங்கியவர்களாகவே நீங்கள் இருக்க வேண்டும்.

04. உங்கள் தீர்மானங்களுக்கு ஒரே விடயத்தையே அடிப்படையாகக் கொள்ளும் போக்குக்கு (Hello Effect) இடங் கொடுத்தல்: ஒரு விடயத்தில் கூடு இணையற்றவர்களாகத் திகழ்பவர்கள் மற்றொரு விடயத்திலும் அதே போன்ற திறமையுடன் திகழ்பவர் என்று கருதுவதற்கு இது இடமளித்து விடும்.

05. உண்மையை அல்லாது விருப்பையே கருத்திற் கொள்ளுதல்: (Wish ful Thinking) பதவியொன்றுக்கான வெற்றிடம் அவசரமாக நிரப்பப்பட வேண்டிய தேவை மேலாங்கும் போது இத் தவறு நிகழ்கிறது.

06. உள்ளுணர்வை அசட்டை செய்தல்: உங்களது உள்ளுணர்வைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற போதிலும் அதனால் ஏற்படும் உளஉறுத்தல்களில் சரி, பிழை தீர்மானிக்கப்பட்டே செயற்படுத்தப்பட வேண்டும்.

07. சாட்சியங்களைச் சரிபார்க்கத் தவறுதல்: அபேட்சகர் ஒருவரைப் பற்றிய சாட்சி பூர்வமான பின்னணித் தகவல்கள் (Track Record) பற்றிய அடிப்படையின்றி நல்லபடியான தீர்மானங்களுக்கு நீங்கள் வரமுடியாது.

செலுத்த வேண்டும். அனுபவம் வாய்ந்த நிபுணர்களுடன் அவர்களது கிட்டிய வருட கால சாதனைகள் பற்றிய கூடுதலாக ஆழமான கண்ணோட்டம் செலுத்தப்படவேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது அதற்கான நேரம் முழுவதும் அபேட்சகர்களே தொடர்ந்து பேசும்படியாக நீங்களே பார்த்துக் கொள்வது உங்களது முக்கியமான பணிகளிலொன்றாகும். ஏனென்றால் அபேட்சகர்கள் என்ன கூறுகிறார்களென்பது வெற்றி வாய்ப்புக்கள் பற்றிய உங்களது திட்ட ஏற்பாடுகளுக்கும், தனித்துவ இயல்புகளுக்கும் அவை எவ்வாறு பொருந்தப் போகின்றன என்பது பற்றிய ஆர்வம் உங்களுடையதேயாகும். இருபதுக்கு எண்பது (20 / 80) என்ற விதியே வெற்றிகரமான நேர்முகங் காணலுக்கு அடிப்படையாகும். பரீட்சைக்கான நேரத்தில் நீங்கள் 20 வீத நேரம் மட்டுமே பேசும் போது பரீட்சார்த்திகள் 80 வீத நேரமும பேச வேண்டும். இந்த விதியை நீங்கள் பின்பற்றுவீர்களாயின் சரியான கேள்விகளை நீங்கள் கேட்பதுடன் அபேட்சகரின் பதிலை முறையாகவே துருவித் தேடி அபேட்சகர் பற்றி நீங்கள் அறிய வேண்டிய அனைத்துமே தெரிந்து கொள்வீர்கள். உங்களது நேர்முகங்காணலின் போது ஆகக் கூடுதலான நேரத்தில் பொதுஅறிவுக் கூர்மையுள்ள அபேட்சகர்களையே நீங்கள் கையாளுபவர்களாக இருப்பீர்கள். நூல்களைப் படித்து அறிவு பெற்றவர்களாகவும், நேர்முகப் பரீட்சையொன்றில் வெற்றி பெறுவது எப்படி எனபதற்கான வழி முறைப் பயிற்சி பெற்றவர்களாகவுமே அவர்கள் இருப்பார்கள். உங்களிடமிருந்தே குறிபபான துப்புக்களை உனனிபபாகப் பெற்று ஏறறாற் போல் சாதகமாக நடந்து கொள்வது எப்படி என்பதைக் கற்றுக் கொண்டவர்களாகவும் அவர்கள் இருப்பர். மெச்சத்தக்க ஒரு நிறமையாகவே இது இருக்குலாமென்ற போதிலும் வெற்றிகரமான அபேட்சகர்களை நீங்கள் கண்டு கொள்வதற்கான உங்களது வாய்ப்புக்களை இது அதிகரிக்கப் போவதில்லை.

உங்களது அபேட்சகர் உன்னிப்பாக இருந்து பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பான துப்புக்களை உங்களது பேச்சுக்களில் ஏற்படக்கூடிய சறுக்கல்கள் மூலம் அவர்களுக்கு வழங்கி விடாதீர்கள். கேள்விகளை நீங்கள் கேட்பதற்குப் பதிலாக அவற்றுக்கான பதில்களை நீங்களே வெளிவிட ஆரம்பிப்பீர்களேயாகில் நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கான கட்டுப்பாட்டை நீங்கள் இழந்தவர்களாவீர்கள்.

ஆம் அல்லது இல்லை என்ற ஒரே வார்த்தையில் பதிலளிக்கக் கூடியதான கேள்விகளை ஒரு போதுமே கேட்காதீர்கள். ஏதோ ஒரு விதக் கலந்துரையாடலுக்கு வழியைத் திறந்து விடுவதான கேள்விகளைக் கேட்பதே கூடுதல் பயனளிப்பதாக இருக்கும். ''கடைசியாக நீர் புரிந்த தொழில் உமக்குப் பிடித்தமானதுதானா'' என்பது போலான ஒரு கேள்வி விரிவான பதிலுக்கான வழியை மூடி விடுகிறது. ஒரு வார்த்தையிலேயே உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பதில் அபேட்சகர் பற்றி உங்களுக்கு அவ்வளவாக வெளிப்படுத்தப் போவதில்லை ''இறுதியாக நீர் மேற்கொண்ட தொழில் பற்றி நீர் கூற விரும்புவது என்ன?'' என்பதான ஒரு கேள்வியே சிறந்ததாகும்.

நேர்முகப் பரீட்சை மூலம் உங்களது அபேட்சகர்களைக் கண்டு கொண்டதன் பின்னர் அவர்களது பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கான நேரம் இதுவாகும். உங்களது இறுதித் தேர்வுக்கான அபேட்சகர்களை உங்களுடைய அந்த மேலோட்டமான 'நியம கணிப்பீட்டுடனும்' பின்னர் ஒருவரை மற்றவர்களுடன் மாறிமாறி மேலும் கூடுதல் நெருக்கமாக ஒப்பு நோக்குதல் வேண்டும்.

அதிசிறந்த அபேட்சகளிருவரை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவர்கள் ஒவ்வொருவரது பெறுமதி பற்றிய உங்களது மதிப்பீடுகள் வழங்கும் தனித்தனியான அவர்களது ஒட்டுமொத்த திறமைகளே ஒப்புநோக்கப்பட வேண்டும். எவ்விடயங்களில் ஒருவர் மற்றவரிலும் மேலோங்கியவராக இருக்கிறார் என்பதைச் சரியாகத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

உள்ளுணர்த்தும் உங்களது மனச்சாட்சிக்கு நீங்கள் செவிசாய்க்க வேண்டும். ஆட்களை வேலைக்கமர்த்துவதற்கான நடைமுறைச் செயற்பாடுகளில் இதுவே முக்கியமானதொரு பங்கு வகிக்கிறது. இந்த நடைமுறைகளின் போது முற்றிலும் சரியான படியேதான் நீங்கள் செயற்பட்டிருந்த போதிலும் உங்களது மனச்சாட்சி தொடர்ந்தும் உறுத்திக்கொண்டிருக்குமாகில் அதனை நீங்கள் சரி பார்த்துக்கொள்ள வேண்டும். அபேட்சகருக்கான உங்களதுவிருப்பத்திற்குரிய தெரிவை நீங்கள் மேற்கொள்ளும்போது அதுபற்றித் தெளிவான ஒரு நிர்மானத்திற்கு உங்களால் வர முடியவில்லையென்றால் குறிப்பிட்டவரை வேலைக்கமர்த்தாது விடுவதே உங்களுக்கு நல்லது.

World Excative 's Digest
ஜூலை 1994

றிச்சாட் ஜே. பின்ஸ்கர் என் பலரது ஆக்கமாகிய ''வெற்றிகரமானவர்களை வேலைக்கமர்த்தல். நியமக் கணிப்பீடு, நேர்முகங்காணல், பெறுமதி மதிப்பீடு, வெற்றிக்கான மூன்று படிகள் கொண்ட வழிமுறை'' என்ற ஆக்கத்திலிருந்து எடுக்கப்பட்டது.

இவர் பின்ஸ்கர் அண்ட் கம்பனி ஒன்றியம் எனும் நிறுவனத்தின் தலைவராவார். நிறைவேற்று உத்தியோகஸ்தர் தெரிவுகளுக்கென ஆலோசனை வழங்கும் ஒரு நிறுவனமே இதுவாகும். நிர்வாக சபைகள், கூட்டுத்தாபனங்கள், ஒன்றியங்கள் போன்றவற்றின் முகாமைத்துவ ஆலோசகர் ஒருவராவார். வில்கொல்லின் பல்கலைக்கழகத்தில் உளவியலில் பட்டம் பெற்றிருக்கிறார்.

அணியாக வேலை செய்வதில் உள்ள சக்தியைத் திறந்து விடுங்கள்

இரகசியம் : கட்டுப்பாட்டை விட்டுவிடுங்கள் - கையளியுங்கள்

கலிபோர்னியாவில் உள்ள ஜெனரல் ஆலையின் தானியப் பொறித் தொகுதியின் இரவு நேர வேலை அணி அவர்களுக்குரிய வேலை அட்டவணையைத் தாமே உருவாக்கி உபகரணங்களை இயக்கியும் பராமரித்தும் வருகின்றது. இந்த அணி மிகவும் சாதுரியமாகச் செய்து வருவதனால் இரவு நேர வேலை அண்மித்த மேற்பார்வை இல்லாமல் இயங்குகின்றது.

பெடரல் எக்ஸ்பிரஸ் (Federal Express) ஐச் சார்ந்த இலிகிதர் குழு நிறுவனத்துக்கு ஆண்டுதோறும் 2 1 மில்லியன் டொலர் இழப்பினை ஏற்படுத்தும் இரகசிய பிரச்சனை ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். குழுவினர் வழமையான முறையில் முகாமைத்துவத்துக்குச் சொல்லாமல் பிரச்சனையைத் தாமே தீர்க்க முனைந்தனர். ஒரு குழுவாகத் தாமே பிரச்சனையைத் தீர்க்க செயற்பட்டனர்.

ஜோன்சன் வில்லிவ்பூட்ஸ் (Johnsonville Foods) ரால்ஃ ஸ்ரேயர் (Ralph Stayer) தனது தொழிலாளர்களில் ஒரு குழுவினரிடம் பொறியை விரிவாக்குவது பற்றிய தீர்மானம் எடுப்பதற்கு உதவும்படி கேட்டுக் கொண்டார். குழுவின் அங்கத்தவர்கள் பொறியை விரிவாக்கும்படி கூறியதுடன் அதிகளவு சோசேச் உற்பத்தியை அவர் கற்பனை செய்து பார்க்க முடியாத வேகத்தில் உற்பத்தி செய்து தருவதாகவும் கூறினார். ஸ்ரேயர் அவர்களது ஆலோசனைக்கு அமைவச் செயற்பட்டார். விளைவு உற்பத்தி அடுத்த நான்கு ஆண்டுகளில் 50 சத வீதத்தினால் உயர்ந்தது.

குழு வேலையின் சக்தியை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட நிறுவனங்கள் பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளன. போட்டிபட்ட முதலீட்டிலிருந்து முழுமையாக வருமானத்தைப் பெற எல்லோரும் ஒன்றாக வேலை செய்யத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். குழுவாக வேலை செய்தல் என்ற எண்ணக் கரு நிறுவனத்தின் கலாசாரத்தில் மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. இதனைச் செய்வதற்கு உங்களுக்கு பின்வருவன உதவும்.

பழையனவற்றை அழித்து விடுங்கள்

முற்றுமுழுதாக அதிகாரம், பயமுறுத்தல், முடிவுத்திகதி, அனுமதிப்பங்கு கடிந்துரை என்பவற்றில் தங்கியுள்ள முகாமைத்துவ நுட்பங்களை இல்லாது அழித்து விடுங்கள். அவை தற்போது வேலையைச் செய்விக்கலாம். ஆனால் அவை நீண்ட காலத்தில் உற்பத்தித் திறன், தரம் என்பவற்றில் முன்னேற்றத்தை

ஒரு குழுவாக இயங்கும் அங்கத்தினர்கள் தொழில் முன்னேற்றம் கருதி, தங்கள் எண்ணங்களைத் தம்முட் பரிமாறிக் கொள்கின்றனர்.

புதியனவற்றைக் கற்பியுங்கள்

வழமையாகச் செய்பவற்றில் மாற்றங்களைச் செய்வதனால் அதில் ஈடுபட்ட அனைவருக்கும் முழுவதையும் நன்கு விளக்குங்கள். தொழில் எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றி ஒவ்வொரு வேலையாளும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துங்கள். அதாவது பொருள் கபிவிருத்தி நிதி, கணக்கு வைத்தல், ஸ்தாபிக்க எதுவுமே செய்யாது. அணியாக வேலை செய்வதற்குப் பயிற்றுநர்கள் தான் தேவையெழுகிய அதிகாரிகள் அல்ல.

போட்டியை ஒழியுங்கள்

அணிகள் ஒன்றுசேர்ந்து கூட்டாக இயங்கவில்லையானால் குழு வேலை வீழ்ச்சி காணும். தினைக்களங்களுக்கிடையில் பணிக்குழுவினாலும், போட்டியினாலும் ஏற்படும் தடைகளை உடைத்தெறியுங்கள்

நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பலதரப்பட்ட நுட்பங்களைக் கொண்டவர்களை உள்ளடக்கியதே ஒரு சிறந்த அணியாகும். ஆய்வும் அபிவிருத்தியும், சந்தைப்படுத்தல், விற்பனை, உற்பத்தி என்பவையும் ஒன்றில்லாமல் மற்றையது வேலை செய்ய முடியாது.

மக்களை முகாமை செய்

மக்களை முகாமை செய்வதற்குச் சிறந்த வழி அணியிலுள்ள அங்கத்தவர்களைப் பூரணமாக நம்புவதாகவும், அவர்கள் பங்கு கொண்டு உற்பத்தித் திறனுடையவர்களாக வரவேண்டும் என நீங்கள் எண்ணுவதாகவும் காட்ட வேண்டும். தொழிலாளர்கள் தாமும் ஓர் அங்கம் என்பதை உணர்ந்ததும் கடுமையாகவும் திறமையாகவும் உழைப்பர். நீங்கள் அவர்களது நலன்களை நெஞ்சில் கொண்டிருக்கிறீர்கள் என நம்பினால் தொழிலில் தம்மை முழுமையாக அர்ப்பணிப்பார்கள்,

முடிவுகளுக்குப் பொறுத்திருக்கவும்

குழுவாக வேலை செய்கின்ற அணுகுமுறைக்கு மாறிவிட்டீர்கள் என்பதனால் ஓர் இரவிலேயே அற்புதங்கள் நிகழும் என எதிர்பார்க்க வேண்டாம். கடுமையான போட்டிக்கு முகங் கொடுப்பதற்கு முன்னர் ஓர் அணிக்கு ஒரு சில சிநேகபூர்வமான போட்டிகள் தேவை.

எதிர்பார்ப்புக்களைச் சமாளிக்கவும்

அணியில் உள்ள ஒரு சிலர் நீங்கள் விளையாட்டை விளையாட விரும்புவது போல விளையாட விருப்பமில்லாமல் இருக்கலாம். சிலர் பந்தைத் தாம் மட்டுமே வைத்து விளையாடுவர். வேறு சிலரோ இதனை நாம் முதலில் இப்படிச் செய்யவில்லை என்ற நிலையில் இருப்பர். ஒரு நல்ல பயிற்சியாளர் போன்று சிறந்த பாதுகாப்பு என்பது நல்ல முன்னணித் தாக்குதல் என்பது தெரிந்திருக்க வேண்டும். தமது விருப்பப்படி செயல்படுபவர்களையும் நீர் விரும்பியபடி செய்ய மறுப்பவர்களையும் தூண்டி நீர் விரும்பியவாறு செயற்பட்டத் தயாராக்க வேண்டும்.

பாராட்டும் பரிசும்

அணிக்கும் தனிநபருக்கும் பரிசுகள் வழங்கி அங்கத்தவர்களது முயற்சியை வரவேற்பதாகக் காட்டவும். அணிகளிடை வெற்றிகளின் அடிப்படையிலேயே உங்களது பிரதான பரிசுத்திட்டத்தை வகுக்க வேண்டும். இவை பலதரப்பட்டவையாக அமையலாம். இலாபத்தில் ஒரு விதமாக, நேர ஒய்வு, இரவுப் போசனம் அல்லது மதியபோசனம், கலைநிகழ்ச்சி அல்லது விளையாட்டிற்கான நுழைவுச் சீட்டு என்பன ஒருசில. அவர்களை என்ன ஊக்குவிக்கும் என்பதை நன்கு அறிந்து அதற்கேற்ற வண்ணம் பரிசுத் திட்டத்தை வகுக்க வேண்டும்,

நகைச்சுவை உணர்வைக் கொண்டிருத்தல்

இடையிடையே சிறிது மடைமைத் தனமான செய்கை மனத்தாக்கலில் இருந்து விடுதலை தரும். கற்பனையைத் தட்டிவிடும். நகைச்சுவை கோபத்தைப் போக்குவதுடன் கூட்டமான சில முயற்சிகளில் உள்ள விருப்பற்ற நிலையையும் போக்கும். அணியில் உள்ள அங்கத்தவர்கள் உடனே மாற்றங்களை ஏற்கவும் இது உதவும்.

ஒவ்வோர் அணியும் தாம் எங்கே செல்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். இலக்குத் தெரியாமல் முன்னேறுகின்ற அணி எதிராளிக்குச் சாதகமாகப் புள்ளிகளைப் பெற்றுக் கொடுக்கும். எனவே அணியும் இலக்கினை நிர்ணயித்து அதனை அடைந்து கொள்ள அர்ப்பணிக்க வேண்டும். அந்த இலக்குகளை அடைந்து கொள்வது நிறுவனத்தின் வெற்றிக்கு எவ்வாறு பங்களிக்கும் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

விளையாடும் திட்டத்தைத் தீட்டிக் கொள்ள வேண்டும். ஊக்குவிக்கக் கூடியதைத் தெரிந்தெடுக்கவும். திறமைச் சான்றுகள் என்பவற்றிற்கு அப்பால் நோக்கவும். ஆர்வமும், சுய ஒழுக்கமும், கடுமையாக உழைக்க விருப்பமும், சுய முன்னேற்றத்திற்கு அர்ப்பணமும் உள்ளவர்களைக் கண்டறிய ஆளுமை, நடத்தை என்பவற்றை மதிப்பிடவும். எந்த இடத்தில் விளையாடுகிறார்கள் என்பதையும் அந்த இடத்தில் விளையாடுவதன் மூலம் அணியின் வெற்றிக்கு எவ்வாறு பங்களிக்கிறார்கள் என்பதையும் அணியின் அங்கத்தவர்கள் நன்கு விளங்கிக் கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதைக் கூறி வையுங்கள். அவர்களது செயற்பாட்டினை மதிப்பிட என்ன தகுதி வீதிகளைப் பயன்படுத்தப் போகின்றோம் என்பதில் இருசாராருக்குமிடையில் உடன்பாடு ஏற்பட வேண்டும். மதிப்பீடு பற்றிய கருத்துக்களை அடிக்கடி அவர்களுக்கு வழங்கி ஒழுங்காக மதிப்பிடவும். அணியின் அங்கத்தவர்களைத் திட்டத்தினைப் பின்பற்றி நடந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளவும். விளையாட்டின்போது எழுகின்ற பிரச்சனைகளையும் எதிரிகளால் முன்வைக்கப்படுகின்ற பிரச்சனைகளையும் எப்படித் தீர்ப்பது என்பதை அவர்கள் அறிந்து கொள்ளல் வேண்டும்.

தனியாட்களுக்கிடையிலான உறவுகளைப் பராமரிக்கவும், வெற்றியீட்டிய அணி ஒவ்வொருவருக்கு மிடையில் நன்கு தொடர்பாடக் கூடியதாக இருக்கும். அத்துடன் முரண்பாடுகள் எழுந்தால் எப்படிக் கையாள்வது என்பதையும் அறிந்து கொள்வர். அணியின் முயற்சிக்குத் தம்மால் இயன்ற அதிகூடிய பங்களிப்பினை வழங்க ஒவ்வொருவரும் உதவியாகவும் அதேவேளை சுயலாபமாகவும் இருப்பர். தனியாரினதும் அணியினதும் நுட்பங்களில் முன்னேற்றத்திற்கு ஆக்கபூர்வமான திறனாய்விலேயே உதவ முடியும் என்பதை அறிந்திருத்தல் வேண்டும்.

அதனுடைய முயற்சிக்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். நிறுவனத்தில் இருந்து அணியைப் பாராட்ட வேண்டிய தேவையும் உண்டு. அவர்களது கருத்துக்களைப் பயன்படுத்துங்கள். அவர்களது பங்களிப்பிற்குப் பரிசு வழங்குங்கள். ஆனால் சம்பள உயர்வில் மட்டும் தங்கியிருக்காதீர்கள். அடிக்கடி பாராட்டுங்கள். அடிக்கடி பாராட்டுவதன் மூலம் சுயமதிப்பு ஊக்குவிக்கப்பட்டுக் குறுங்கால திருப்தியைத் தரக்கூடிய பண அன்பளிப்பை விடத் தொழிலாளி உந்தப்படுவார்.

நிறுவனத்தில் அணி எங்கே பொருந்தும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். வெற்றியான அணி நிறுவனத்தில் உள்ள மற்ற அணிகளுடனும், தனிநபர்களுடனும் நல்ல உறவுகளைப் பேணிக் கொள்வர். மாற்றங்களினால் ஏற்படக் கூடிய பயமுறுத்தல் அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தம்மை இசைவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

பயிற்சியாளராக இரு

ஒரு முகாமையாளராக எண்ணாமல் ஒரு பயிற்சியாளராக உம்மை நீர் கருதிக்கொண்டால் நீரும் உமது அணியும் வெற்றிபெறுவதற்கான சந்தர்ப்பங்களை உயர்த்திக் கொள்ளலாம். இந்தப் பயிறசித் தத்துவம் மக்களை ஊக்குவிக்கவும், தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் ஒரு வழியைத் தந்துதவ முடியும்.

● அதிசிறந்ததை அவர்களிடமிருந்து கேட்கவும், அவர்களால் தமக்கு விதிக்கப்பட்ட வரையறைகளைத் தாண்டி அணிகளில் அங்கத்தவர்களை விரிவாக்கம் செய்து அவர்களே வியக்கும் வண்ணம் சாதனை செய்யவும் வையுங்கள். எதிர்பார்த்தவர்கள் மற்றவர்களை விடக் கூடுதலாக எப்போதும் செய்வார்கள்.

● குறிக்கோள்களில் பங்கிருக்கின்றது என்ற உணர்வை உருவாக்குங்கள். செயல்களைச் செய்யக் கட்டாயப்படுத்தினால் அணியாக வேலை செய்வது தோல்வியில் முடியும். உமது குறிக்கோள்கள் என்ன என்பது தெரிய வேண்டும். நீங்கள் எவ்வாறு அதனை அடைய விரும்புகிறீர்கள் என்பதில் உடன்பாடு வேண்டும்.

● அவர்களுக்குத் துணையாக இருங்கள். உங்கள் அணியின் அங்கத்தவர்களுக்கு உதவுங்கள். தேவைப்படும்போது அங்கே சமுகமளியுங்கள். இப்படிச் செய்யும்போது அவர்களது நம்பிக்கையைப் பெறுவீர்கள். இதனைத் தொடர்ந்து அவர்களின் அர்ப்பணிப்பு இடம் பெறும். அவர்களுடன் எப்போதும் உடன்பட முடியாவிட்டால், ''எனக்கு உடன்பாடில்லை'' என்று சொல்லாமல் 'இது வேறு விதமாகப் பார்க்கின்ற முறை' என்று சொல்லக் கற்றுக் கொள்ளவும்.

● முயன்று பார்க்க விடவும். அணிவேலைகள் வெற்றியளிக்க கட்டுப்பாடுகளை விடுங்கள். அப்படியாயின் பாரப்படுத்துங்கள். பொறுப்புக்களை ஏற்க அணியின் அங்கத்தவர்களைத் தயாராகச் செய்யுங்கள். முயற்சி செய்ய விடலில் லையானால் ஏற்றுக் கொள்ள ஒருபோதும் கற்கமாட்டார்கள்.

● பொறுமையைக் கடைப்பிடிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அணியின் அங்கத்தவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரிந்து எப்படிச் செய்ய வேண்டும் என்பது தெரியாத போது அவர்களை ஊக்கப்படுத்துங்கள். உங்களுக்கு என்ன வேண்டும் என்பதைக் காட்டுங்கள். சில சமயங்களில் மீண்டும் மீண்டும் அவர்கள் உடன்படாத போதோ அல்லது விரும்பாத செய்தியைக் கொண்டுவரும் போதோ அமைதியாக இருங்கள்-

● தவறுகளில் இருந்து விலக உதவுங்கள். அவர்கள் தவறு இழைக்கும்போது அந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கி அதிலிருந்து கற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஆக்கபூர்வமான பின்னூட்டிகளை (Feed back) வழங்கி அவர்களது செயற்பாட்டில் முன்னேற்றமடைய உதவுங்கள்.

● புத்திசாலித்தனமாகப் புகட்டுங்கள். அணியின் அங்கத்தவர்கள் ஒத்துழைக்கத் தவறும்போது ஆலோசகருக்குரிய தொப்பியை அணியுங்கள். எல்லா அணிகளிலும் இது ஏற்படும். ஆகவே நீங்கள் தோல்வி கண்டதாக எண்ண வேண்டாம் பிரச்சனை அவர்களை அழித்து விடும் என்று எண்ணினால் அன்றி அமைதியாக இருந்து ஆணித்தரமாக அமுத்துங்கள் அவர்களையே சிக்கலைத் தீர்க்க விடுங்கள். அதிகார பூர்வமான அணுகுமுறையில் பிரச்சனையைச் சீர்செய்ய முயல வேண்டாம்.

● அவர்களது தொழில் முன்னேற்றத்திற்கு வழிகோலுங்கள், அவர்கள் வளர்ச்சிக்கு உதவாவிட்டால் நீங்கள் அவர்களை இழந்து விடுவீர்கள். நெகிழ்ச்சியாக வேலை நேரங்களை வழங்குங்கள். எனவே அவர்கள் பாடசாலைக்குச் செல்ல வாய்ப்பிருக்கும். பயிற்சிப்பட்டறைகளுக்கும், கருத்தரங்குகளுக்கும், அனுப்புங்கள். வாண்மை விருத்தி அமைப்புக்களில் சேர்ந்து காத்திரமான பங்களிப்பினைச் செய்ய ஊக்கப்படுத்துங்கள்.

சமநிலையைக் காண்க

வினைத்திறனான பயிற்சியாளர் தனது அணியின் அங்கத்தவர்களுடன் இடைவிடாது தொடர்பு கொள்வார். ஏனெனில் தனியார் தொடர்பு குறிப்பிடத் தக்க ஊக்கமளிக்கும் என்பதனாலாகும். ஆனால் வினைத்திறனான தொடர்பு ஒரு சமநிலையை வேண்டி நிற்கிறது.

தொடர்பினைக் குறைத்து கொண்டால் முன்னேற்றம் பிரச்சனை தொடர்பான சில முக்கிய தகவல்களை இழக்கும் ஆபத்து உண்டு. தொடர்பினை அதிகரித்தால் அங்கத்தவர்கள் நீங்கள் அவர்களை நம்பவில்லை என்று கருதுவார்கள்.

ஒரு சமநிலையைப்பேண உங்களுடைய நேரத்தில் அரைவாசியை அணியின் நாடியைப் பார்ப்பதில் செலவிடுங்கள். நீங்கள் ஊடாட்டத்திற்கு அதிக நேரம் ஒதுக்க விரும்பினாலும் உங்களுக்கு வாசிக்க, திட்டமிட, காரிய நேலைகளைக் கவனிக்க நேரம் வேண்டும். உங்களது தொடர்புகளை அணியின் எல்லா அங்கத்தவர்கள் மத்தியிலும் பரவ விடுங்கள். ஒரு சிலருக்கு சலுகை வழங்கி மற்றொரு சிலரை உதாசீனம் செய்தால் ஒருவருடன் மற்றவர் கதைக்காத சந்தர்ப்பங்களில் பொறாமையும் எதிர்ப்பும் வளர வாய்ப்பு ஏற்படும்.

எவ்வளவு நேரம் அணியின் அங்கத்தவர்களோடு செலவு செய்வது என்ற நேர வரையறைகளை ஏற்படுத்த வேண்டாம். சூழ்நிலையே தொடர்புபடும் நேரத்தை தீர்மானிக்க விட்டு விடுங்கள். குறுகிய காலப் பயணங்களைச் செய்வதாக நீங்கள் உணர்ந்தால் அது நீங்கள் இன்னும் கையளிக்க வேண்டும் என்பதற்கான ஒரு சைகையாகக் கருத வேண்டும். தொடர்பு நீண்டதாக இருந்தால் நீங்கள் அணியின் அங்கத்தவர்களில் உள்வாங்கக் கூடிய அளவு தகவல்களை விட அதிகமான பற்று வழங்குவதாக இருக்கும்.

— தமிழில் —
இ. நந்தகுமாரன்

World Executive Digest.
July 1994.

மொஸ்கோவை கலக்குகின்றனர்

சென்ற யூலை இறுதியில் நியூஸ்வீக் சஞ்சிகை ருஷ்யாவில் உள்ள வெளிநாட்டு வர்த்தகர்களிடம் ''பாதுகாப்புப்பணம்'' பெறும் குற்றச் செயல் குப்பல்கள் பற்றிச் செய்தி வெளியிட்டிருந்தது. அதன்பின்பு சென்ற வாரம் அதே நியூஸ்வீக்கின் மொஸ்கோ பணிமனை ஊழியர்களே அந்தச் சிக்கலுக்கு ஆளாகும் அனுபவத்தைப் பெற்றனர்.

நியூஸ்வீக்கின் ருஷ்யப் பிரசைய ஊழியர் ஒருவர் செய்தி நிறுவனங்களுக்கு ருஷ்ய அரசு வழங்கும் சிறப்பு இலக்கத்தகடு பொருத்திய நியூஸ்வீக் என்ற பெயர்த்தாள் தெளிவாகத் தெரியக் கூடியதாக ஒட்டப்பட்ட காரில் கடமை நிமித்தம் காரியாலயத்திற்குச் சென்று கொண்டு இருக்கும் போது, வீதி வழியே அல்பா றோமியோ கார் ஒன்றில் வந்த கைத்துப்பாக்கி ஏந்திய மூன்று பேர் வழிமறித்து அந்தக் காரைப் பின் தொடர்ந்து நியூஸ்வீக் பணிமனைக்குச் சென்றனர். அங்கு அவர்கள் தாம் பணிப்பாளரைச் சந்திக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். அங்கு உள்ள ஊழியர் இருவர் எப்படியோ அவர்களைச் சமாளித்துக் கட்டடத்தின் வாயில் வரை இட்டுச் சென்றதும் கும்பல் தங்கள் கட்டாயக்கோரிக்கையைக் கூறியது. ''சிறைகளில் உள்ள எங்கள் சகோதரர்களின் வாழ்க்கை வசதியுற எமக்கு சிறிது பணம் வேண்டும்; அதற்காக நிதி தரப்படல் வேண்டும்'' என்று அவர்கள் கூறினர். மேலும் தாங்கள் அங்கு உள்ள பெயர் பெற்ற மாபியாக் கும்பலான ''சொலொண்டிவோ குழுவைச் சேர்ந்தவர்கள்'' என்றும் கூறினர் தங்கள் ''உதவியை'' ஏற்கா விட்டால் வன்முறையில் இறங்கப்போவதாகவும் அவர்கள்விடாப் பிடியாகக் கூறினர். ''இப்பொழுதே கட்டு விடட்டுமா'' என்றும் அவர்கள் அச்சுறுத்தினர். அதன்பின்பு அவர்கள் அலுவலகத் தொலைபேசி இலக்கத்தையும் எடுத்துக்கொண்டு பின்பு வருவதாகக் கூறிச்சென்றனர். இப்பொழுது தேசிய மற்றும் நகரப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் அது பற்றி விசாரணை நடத்திக் கொண்டு வருகின்றனர்.

மாளாத் துயரம், தொடரும் வேதனை

"ஐம்பது வருடம் சென்றாலும் உலக நாடுகள் சம அந்தஸ்துத் தர மறுக்கின்றன."

சொல்லம்பு விடுவதில் வல்லவரான பிரித்தானிய பிரதமர் சேர்ச்சில் (Churchill) யுத்தத்தில் அடையும் தோல்வி வேதனைக்குரிய தென்றாலும் அத்தோல்வியால் கிடைக்கும் நெடுங்காலத் தண்டனையே பாரதூரமானதென்று ஒருமுறை கூறியுள்ளார். இரண்டாம் உலகயுத்தத்தில் தோல்வி கண்ட ஜேர்மன், ஜப்பான் ஆகிய இருநாடுகளுக்கும் இது நன்றாகப் பொருந்தும். போர் பற்றிய வரலாற்று நூல்கள் வெற்றி பெற்றவர்களால் எழுதப்படுகின்றன. வெற்றியைநோக்கி முன்னேறும் போது செய்யப்பட்ட கொடூரங்கள் இதனால் மறைக்கப்படுகின்றன. எத்தகைய பிராயச்சித்தம் செய்தாலும் தோல்வி கண்ட நாடுகளின் அத்துமீறல்களும் பலாத்காரங்களும் மன்னிக்கப்படுவதேயில்லை.

உயிர் பொருள் அழிவில் இரண்டாம் உலகயுத்தம் நிகரற்றதாகும். சிறிது பெரிது என்ற வித்தியாசம் இன்றி புவியின் நாடுகள் யாவும் இதில் பங்கேற்றுள்ளன. நடுநிலைவகித்த ஒரு சில நாடுகளும் இதன் தாக்கத்தை உணர்ந்துள்ளன. இதன் பிரதான போர் முனைகள் ஐரோப்பாவில் தொடங்கி வடக்கு ஆபிரிக்கா வரை காணப்படுகின்றன. அத்துடன் பசுபிக் தீவுகளில் தொடங்கி தென்கிழக்கு ஆசியா வரையிலான நாடுகளிலும் கடுப்யுத்தம் நடைபெற்றுள்ளது. அக்சிஸ் (Axis) எனப்பட்ட அச்சநாடுகள், ஜேர்மன், இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்றும் ஒரு புறமும், நட்பு நாடுகள் (Allied Powers) எனப்பட்ட பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் ருஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகியவை மறுபுறமும் இப்போரில் மோதியுள்ளன. 1939 இல் தொடங்கி 1945 இல் முடிந்த இச்சமரில் இருபக்கத்திற்கும் பொதுவாக 16 மில்லியன் போர் வீரர்களும், அதற்கு மிகவும் கூடுதலான பொதுமக்களும் இறந்துள்ளனர். பொருட்சேதத்தை அளவிட முடியவில்லை. ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் பல நகரங்கள் விமானத்தாக்குதல்களால் அழிந்துள்ளன. பயன்தரு நிலங்கள் பல பாலையாகி உள்ளன.

சிங்கப்பூரில் ஜப்பானிய இராணுவத்தினர் செய்யும் படுகொலைக் காட்சி

ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் ஜேர்மனி கைப்பற்றிய நாடுகளில் வாழ்ந்த யூதர்கள், நாடோடிகள், எதிர்ப்பாளர்கள் பெருமளவில் ஜேர்மன் துருப்புக்களால் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட யூதர்களின் கணக்கு 6 மில்லியன் எனப்படுகின்றது. மிகுதியானோரின் விபரங்கள் தெரியவரவில்லை. இதைப் போன்று கிழக்கில் ஜப்பான் கைப்பற்றிய நாடுகளிலும் ஏராளம் படுகொலைகள் நடைபெற்றுள்ளன. இந்த இரண்டு நாடுகளும் தமது கறைபடிந்த அத்தியாயத்தை மறைக்க முடியாது தவிக்கின்றன. உலகக் குடும்பத்தில் இந்த இரண்டு நாடுகளின் அந்தஸ்தும் கேள்விக்குறியாகவே உள்ளது கண்கூடு. இரண்டாம் உலக யுத்தம் முடிந்த 50 வருட நிறைவு விழாக்கொண்டாடிய இவ்வருடம், பழைய படுகொலைகள் மீண்டும் வாதப்பிரதிவாதங்களைக் கிளப்பியுள்ளன.

எண்ணிக்கையில் ஜேர்மனிக்கு மேலாக ஜப்பான் பெருந்தொகைப் பொதுமக்கள் கொலைக்குப் பொறுப்பாகவுள்ளது. மிகக் கூடுதலான கொலைகள் சீனாவில் நடத்தப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் சிரடையாததற்கு இதுவே முக்கிய காரணம். 1931 ஆம் ஆண்டு ஜப்பான் சீனாவில் மஞ்சூரியா மாகாணத்தைத் தாக்கிக் கைப்பற்றியுள்ளது. இப்பகுதியில் உள்ள வளங்கள் ஜப்பானிய தொழிற்சாலைகளுக்கு அத்தியாவசியமான படியாலும் ஜப்பானியப் பொருள்களுக்கு இதுவொரு சந்தையானபடியாலும் ஜப்பானிய இராணுவத்தினரும் தொழிலதிபர்களும் இந்த ஆக்கிரமிப்பைச் செய்துள்ளனர். இதற்கு அடுத்தாக, சீனாவின் மிகப்பெரிய துறை

யான ஷங்காயை ஜப்பானியர்கள் கைப்பற்றியுள்ளார்கள். இப்படியே படிப்படியாக முழுச்சீனாவும் ஜப்பானின் பிடியில் வந்துள்ளது. பசுபிக் பிராந்தியத்திலும், தென் கிழக்கு ஆசியாவிலும் தனது ஆதிக்கத்திற்குத் தடையாக இருப்பது அமெரிக்கக் கப்பற் படை ஒன்று தான் என்பதைக் கண்ணுற்ற ஜப்பானியத் தலைமைப்பீடம் 1941 ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் தேதி ஒரு விதமுன்னறிவித்தலுமின்றி ஹவாய் தீவின் பேர்ள் கப்பற் தளத்தை (Pearl Harbour) இரவு நேரத்தில் விமானத்தாக்குதல் நடத்தி அழித்துள்ளது. இத்தாக்குதலில் அமெரிக்கப் பசுபிக்பிராந்தியக் கப்பற் படை முற்றாக அழிக்கப்பட்டதோடு 2,086 கப்பற்படை அதிகாரிகளும், 237 இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர். அடுத்த நாள் 08 ஆம் தேதி அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனஞ் செய்து அந்த நாட்டின் தலை விதியை மாற்றியுள்ளது.

பேர்ள் கப்பல் தளத்தின் மீது இரண்டு மணித்தியாலத் தாக்குதலில் பேரழிவை ஏற்படுத்திய அதே தினத்தில் தென் கிழக்கு ஆசியாவிலும் பரந்த பசுபிக் பிரதேசத்தின் வேறு பல பகுதிகளிலும் ஜப்பான் அகோரத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. கிழக்கில் உள்ள பிரிட்டிஷ் மற்றும் டச்சு பிரெஞ்சு நாடுகள் வைத்திருந்த நிலப்பரப்புக்களைக் கைப்பற்றுவது தான் ஜப்பானின் அடிப்படை நோக்கம். இதற்காக அவர்கள் 6 மில்லியன் ஜப்பானியத் துருப்புக்களை ஈடுபடுத்தியுள்ளனர். அவர்களுடைய கப்பற் படை அச்சமயத்தில் உலகில் மூன்றாவதாக நிலை பெற்றிருந்தது. அவர்களுடைய விமானப்படையோ ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முதலிடம் வகித்தது. டிசம்பர் 10 இல் பிலப்பைன்சையும், டிசம்பர் 18–19 இல் ஹொங்கொங், மலாயா ஆகிய வற்றையும், பெப்ரவரி 1942 இல் சிங்கப்பூரையும், ஜப்பான் கைப் பற்றியுள்ளது. தூர கிழக்கில் அச்சமயத்தில் மிகப் பலம் வாய்ந்த கப்பல் தளம் சிங்கப்பூர் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. இக்கால கட்டத்தில் பிரிட்டனுக்குச் சொந்தமான இரு பாரிய யுத்தக் கப்பல்களை அழித்து இந்து சமுத்திரத்திலும் ஜப்பான் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. ஆகவே 1942 மே இல் பர்மா முழுவதையும் கைப்பற்றியதுடன் ஜப்பானிய விமானம் தாங்கிகளும், யுத்தக் கப்பல்களும் வங்காள விரிகுடாவில் உலாவ ஆரம்பித்துள்ளன. இலங்கையின் தலைநகரம் கொழும்பு மீது அவர்கள் விமானத் தாக்குதல் நடத்துமளவுக்கு அப்போது அவர்கள் பலம் பெற்றிருந்தனர். இந்தியா, இலங்கை ஆகியவையும் பறிபோகும் தறுவாயில் அப்போது இருந்துள்ளன. இதே ஆண்டில் இந்தோனேசியாத் தீவுகள் யாவற்றையும் டச்சுக்காரர்களிடமிருந்து ஜப்பான் பறித்தெடுத்துள்ளது. இதற்கிடையில் வியற்நாமில் தொடங்கி லாவோஸ், கம்போடியா, தாய்லாந்து ஆகியவற்றை உள்ளடக்கிய பெரு நிலப்பரப்பும், ஜப்பானின் பிடியில் சிக்கியுள்ளது. இங்கு ஆதிக்கம் செலுத்திய பிரெஞ்சுக்காரர்கள் ஜப்பானியப் படைகளால் துரத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அவுஸ்ரேலியாவுக்கு மிக அண்மையில் வடபுறத்திலிருந்த நியூகினித் தீவையும் கைப்பற்றும் நிலையில் ஜப்பானியர்கள் இருந்துள்ளனர். எனினும் அவர்களுடைய அதிர்ஷ்டம் நிலைக்கவில்லை. மிட்வே எனப்படும் மத்திய பசுபிக தீவில் வைத்து அமெரிக்கப் படைகள் கொடுத்த அடியுடன் ஜப்பானின் பலம் குன்ற ஆரம்பித்துள்ளது.

1943 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் அமெரிக்க விமானங்கள் ஜப்பானிய நகரங்கள் மீது குண்டு பொழிய ஆரம்பித்துள்ளன. ஆனால் 1945 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் தேதி உடன் ஜேர்மனியின் சரணுக்குப் பின் ஐரோப்பிய யுத்தம் முடிந்தாலும் ஜப்பானுடனான மோதல் தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இக்கால கட்டத்தில் தாய்வானுக்கும், ஜப்பானுக்கும் இடைப்பட்ட ஒகினாவாத் தீவைக் கைப்பற்றப் பெரும் போர் நடந்துள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதித் தலைப் போர் இதுவாகும். இந்த யுத்தத்தில் 49,151 அமெரிக்கத் துருப்புக்களும், 1,10,000 ஜப்பானிய வீரர்களும் உயிரிழந்துள்ளனர். இது வரை நடந்த வேறு போர் முனைகளில் 3,00,000 இத்திற்கு மேற்பட்ட ஜப்பானியத் துருப்புக்கள் இறந்துள்ளனர். ஒகினாவா யுத்தத்தில் பின் (யூன் 1945) நாளொன்றுக்கு 1,000 யுத்த விமானங்கள் என்ற வீதத்தில் ஜப்பானிய நகரங்கள் மீது ஒட்டு மொத்தமாக 1,00,000 தொன் நிறையுள்ள குண்டுகள் போடப்பட்டுள்ளன. ஜப்பான் சரணாகதி அடைய மறுத்த போது யூலை 26 இல் ஹிரோசிமா நகர் மீது அமெரிக்கர்களால் அணுகுண்டு

போடப்பட்டுள்ளது. இதில் 1,50,000 ஜப்பானியர்கள் இறந்துள்ளனர். 4.4 சதுர மைல் எரிந்து சாம்பராகியுள்ளது. இரண்டு நாள்களின் பின் நாகசாக்கி மீது மீண்டும் ஓர் அணுகுண்டு போடப்பட்டுள்ளது. இதில் 40,000 மக்கள் இறந்துள்ளனர். இதன் பின் ஜப்பானியர்கள் சரணாகதி அடையச் சம்மதித்து 1945 செப்ரெம்பர் 2 இல் சரண்புகும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

வெட்கித் தலைகுனியும் ஜப்பானியர்கள்

இதுவரை இருபகுதியினரும் வெளியிட்ட ஆவணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறு தகவல்கள் இதன் மேல் தரப்பட்டுள்ளன. தமது தோல்விக்கு மேலாக ஜப்பானியர்கள் வேதனைப்படும் செய்திகள் அண்மைக் காலத்தில் வெளிவரத் தொடங்கியுள்ளன. கைப்பற்றிய நாடுகளில் ஜப்பானியர்கள் நடத்திய பொதுமக்கள் படுகொலைகள் இன்றைய ஜப்பானிய சமுதாயத்தின் மனச்சாட்சியை உலுக்கியுள்ளது. ஜப்பானியத் துருப்புக்களும், அதன் அதிகாரிகளும் இந்த நாடுகளில் செய்த கொடுமைகளுக்கு மன்னிப்புக் கேட்போரும், இத்தொனியில் பேசுவோரும் ஜப்பானிய உயர் மட்டத்தில் இன்று காணப்படுகின்றனர். அதே சமயத்தில் தமது யுத்த கால நடவடிக்கைகள் சரியென வாதிடுவோரும் உளர். எனினும் அண்மையில் ஜப்பானியர்கள் சில திடுக்கிடும் தகவல்களைத் தாமாகவே வெளியிட்டுள்ளனர்.

1937 ஆம் ஆண்டு சீனாவின் நான்ஜிங் பிரதேசத்தைக் கைப்பற்றிய பின் பல இலட்சம் சீனப் பிரஜைகளை ஜப்பானியத் துருப்புக்கள் படுகொலை செய்துள்ளனர். தமது சீருடையுடன் இராணுவ சேவையில் கொடுக்கப்படும் நீளமான கத்தியால் சிரச்சேதஞ் செய்தும், துப்பாக்கியால் சுட்டும் இக் கொடுமைகளை அவர்கள் செய்துள்ளனர். 1931 இல் தொடங்கி சீனாவை விட்டு வெளியேற்றப்படும் வரை ஜப்பான் 10 மில்லியன் பொதுமக்களையும், சீன இராணுவத்தினரையும் கொன்றுள்ளதாக ஜப்பானிய ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஹொங்கொங் மற்றும் கொரியாவிலும் அவர்கள் பல்லாயிரக்கணக்கானோரைப் படுகொலை செய்துள்ளதாக ஒத்துக் கொண்டுள்ளனர். வியற்நாம், லாவோஸ், கம்போடியாவில் மொத்தமாக 2 மில்லியன் பொதுமக்களை அழித்துள்ளதாகவும் அதே ஆவணங்கள் தெரிவிக்கின்றன மேலும் பிலிப்பைன்சில் 1.1 மில்லியன் மக்களையும், மலாயா, சிங்கப்பூரில் 50,000 பொதுமக்களையும், கொன்றுள்ளதாகவும் ஜப்பானியப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. சீனா தரப்பில் ஜப்பான் கொடுத்த புள்ளி விபரம் மறுக்கப்பட்டுள்ளது. சீனாவின் கூற்றுப்படி கொல்லப்பட்டோர் தொகை இன்னும் பன்மடங்கு கூடுதலாக இருக்கின்றது.

நாட்டின் பெயர்	துருப்புக்களின் தொகை
சீனா, ஹொங்கொங்	1,124,900
மஞ்சூரியா	665,500
கொரியா	335,500
தாய்வான்	190,500
பர்மா	71,500
தாய்லாந்து	107,500
இந்தோசீனா	98,200
மலாயா, சிங்கப்பூர்	134,700
பிலிப்பைன்ஸ்	127,200
சுமாத்திரா	59,600
ஜாவா	50,000
போர்னியோ	29 500
மொலுக்காஸ்	71,500
செலிபீஸ்	26,500
நியூகினி	3 ,800
அந்தமான் நிக்கோபார் தீவுகள்	11,300

இந்த ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஜப்பானின் பொருளாதார மேம்பாட்டுக்கு நிகரான அந்தஸ்து அவர்களுக்கு உலக சமுதாயத்திலும் ஐ நா போன்ற பொதுக் சபைகளிலும் கிடைக்கவில்லை என்பதே அவதானிகளின் கருத்து. ஜேர்மனி இன்று ஓரளவு அங்கீகாரம் பெறுவதற்குப் பேர்லின் மாநகரின் மேயராக இருந்து பின்பு மேற்கு ஜேர்மனியின் ஜனாதிபதியாகப் பதவி வகித்த றிச்சாட் வொன்வைற்சன் ஏக்கர் 1985 ஆம் ஆண்டு உலக சமுதாயத்தை நோக்கி ஜேர்மனியின் கடந்த கால நடத்தையை மன்னிக்கும்படி பகிரங்கமாக மன்றாடியதையே காரணமாகக் கூறுகின்றனர். அதே உணர்ச்சிவசமான உரையில் வைற்சன் ஏக்கர் அவர்கள் ஜேர்மனியின் கடந்த காலத் தலைவர்கள் ஜேர்மன் இராணுவத்தினரைத் தவறாக வழிநடத்தித் துரோகம் இழைத்து விட்டனர் என்றும் கூறியுள்ளார். இதற்கொப்பான உரையொன்றை உலக சமுதாயம் ஜப்பானியத் தலைவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

1993 ஆம் ஆண்டு பிரதமராகவிருந்த மொறிஹிரோ ஹொசோகாவா (Morihiro hosokawa) அவர்கள் ஜப்பானியப் பாராளுமன்றத்தில் முதன்முறையாக ஆசியாவிலும், பசுபிக் பிராந்தியத்திலும் ஜப்பான் "அத்துமீறியதாக" ஒத்துக்கொண்டுள்ளார். ஜப்பானிய அரசியல்வாதி ஒருவர் இப்படிப்

பேசுவதற்கு அசாத்தியத் துணிச்சல் தேவை என்பதை இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும். ஜப்பானியத் தீவிர தேசியவாதிகள் அவரைத் தாக்கக்கூடிய அபாயம் இன்றுவரை இருக்கின்றது. ஆனால் பிரதமருடைய உரை குற்றத்தை ஒப்புக்கொள்வதில் முழு நாட்டையும் பிரதிபலிக்கவில்லை, அவருடைய மந்திரிசபையினரே அவருடைய உரையை ஏற்கவில்லை, தேசியவாதிகளும்,பழமை விரும்பிகளும் பிரதமருடைய இந்த உரையைப் பலமாகக் கண்டித்துள்ளனர். ஜப்பான் ஒருவிதமான குற்றமுஞ் செய்யவில்லை என்று கூறும் பலம் வாய்ந்த உட்பிரிவு எல். டீ. பி.கட்சியில் இன்றுவரை இயங்கிக்கொண்டிருக்கின்றது. இந்த அணியின் முன்னிலையில் றையுந்தாறோ ஹசிமோட்டோ (Riutaro Hashimoto) என்ற அமைச்சர் இடமபெற்றுள்ளார். இவருடைய நிலைப்பாடு ஜப்பான் ஆசியாவிடமோ, பசுபிக் நாடுகளிடமோ மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியம் இல்லை. நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகள் பெருந் தொகைப்பணத்தை நட்ட ஈடாகக் கேட்கலாம் என்றும் இவர் தெரிவிக்கிறார். மறுவளத்தால் ஹிரோசிமா, நாகசாகி அழிவுகளை மாத்திரம் கணக்கில் எடுத்து வெளிநாட்டு அனர்த்தங்கள் யாவற்றையும் ஏறெடுத்தும் பாராமல் இருப்பது நல்லதோர் அரசியல் யுக்தியாகும். இதனால் உலகில் ஜப்பான் ஓர் ஒதுக்கப்பட்ட நாடாகத் தொடாவது மாத்திரம் நிச்சயம்.

ஜப்பானின் வரலாற்றுப் பாடப் புத்தகங்கள் ஒரு சிறு குறிப்பு

1980 ஆம் ஆண்டுவரை ஜப்பானிய வரலாற்று நூல்களும், உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கிடைக்கும் பாடப் புத்தகங்களும் ஜப்பானின் ஆசிய பசுபிக் நடவடிக்கைகளைத் திரை போட்டு மறைத்துள்ளன. இதை அவதானித்த சீனாவும், தென்கொரியாவும் பலமாக ஆட்சேபத் தெரிவித்துள்ளன. இன்று நிலைமை வித்தியாசமாக இருக்கின்றது. இவ்வாறான நூல்கள் நடவாததையும் வரலாறாக வெளியிடுகின்றன என்று நடுநிலையாளர்களே கூறுமளவுக்கு அவை ஜப்பானிய இராணுவத்தின் அக்கரூல செயற்பாடுகளைப் பகிரங்கப்படுத்துகின்றன. ஒரு காலத்தில் நான்ஜிங் படுகொலைகள் பரம இரகசியமாகப் பேணப்பட்டு வந்துள்ளன. இன்று பள்ளிச் சிறுவர்களின் பாடப் புத்தகங்களில் இதுவும், இன்னும் பல உயிரிழப்புகளும் புள்ளிவிபரங்களுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இந்த மாற்றத்திற்கு ஓர் அரசியற் காரணம் பின்னணியில் இருக்கிறது. சீனாவுடனான இராஜதந்திர உறவுகளைச் சீராக்க ஜப்பானிய அரசும் அதை இயக்கும் தொழிலதிபர்களும் பெரிதும் விரும்புகின்றனர். இதற்கு முதற்படியாக நான்ஜிங் படுகொலைகளை ஒத்துக் கொள்ள வேண்டியது அவசியம். நான்ஜிங்கில் தொடங்கியவர்கள் நிறுத்த முடியாமல் வேறு ஆசிய நாடுகளில் செய்தவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட்டுள்ளனர். எனினும் பாடப்புத்தகங்களில் வெளியிடப்பட்ட எண்ணிக்கைகள் சம்பந்தமான புள்ளிவிபரங்கள் சீனாவையும், தென்கொரியாவையும் திருப்திப்படுத்தத் தவறியுள்ளன. ஒரு கல்வி அமைச்சு அதிகாரி கூறும் விளக்கம் பின்வருமாறு: ''சீனாவிலும், தென்கொரியாவிலும் வரலாற்று நூல்களும், பாடப் புத்தகங்களும் அரசின் கல்வி அமைச்சினால் வெளியிடப்படுகின்றன. ஜப்பானில், தமது ஆய்வுகளின் அடிப்படையில் தனியார்துறை அறிஞர்களே நூல்களை வெளியிடுகின்றனர். நூல்களை அச்சேற்றுவதும், விநியோகம் செய்வதும் தனியார் துறைதான்.'' தேசிய மட்டத்தில் ஒரேவிதமான நூல்களை வெளியிடுவது ஜப்பானைப் பொறுத்தளவில் இயலாத காரியம் என்பது வெளிப்படை.

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

நல்வாய்ப்பு அற்ற நாடு

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் எதிர்வரும் நவம்பரில், தான் பயணம் மேற்கொள்ள பிலிப்பைன்சையும் இந்தோனேசியாவையும் மட்டும் தேர்ந்தெடுத்தது, அந்தப் பிராகத்தின் வேறு பல நாடுகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. அவுஸ்திரேலியா கிளின்ரனைத் தனது நாட்டுக்கு அரசமுறைப் பயணம் மேற்கொள்ளச் செய்வதற்காக நெடுநாளாகப் பல முயற்சிகள் மேற்கொண்டிருந்தது; அது மட்டுமன்றி 1993 செப்ரெம்பரில் கிளின்ரன் அவுஸ்திரேலியப் பிரதம அமைச்சர் போல் கீற்றிங்குடன் வோசிங்ரனில் சந்திப்பு நடத்திய போது இந்தோனேசியாவை, ''மிகவும் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நாடாக'' விபரித்துள்ளார். ஆனால் இப்பொழுது ஜகார்த்தா கிளின்ரனின் மதிப்பீட்டைக் கன்பராவிலும் பார்க்கக் கூடியதாகத் தன்பால் ஈர்க்க ஒரு தவளைப் பாய்ச்சல் போட்டுவிட்டது போல் தெரிகின்றது.

இலத்திரனியல்

இவ் வருடம் சட்டைப்பை இலத்திரனியற் கருவிகள் மிகக் குறைவாகவே தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளன. மேசையில் வைத்தும், இருக்கையில் இருந்தவாறு மடியில் வைத்தும் இயக்கப்படும் இலத்திரனியல் கருவிகள் இப்போது கூடுதலாக விற்பனைக்கு வந்துள்ளன. இவை சமூக அந்தஸ்தைக் காட்டும் சாதனங்கள் அல்ல. கூடுதலான செயற்பாடுகளை மிக எளிதாகச் செய்யும் விதத்தில், இவை உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டிருப்போரும், சந்தைப்படுத்துவோரும் ஒருமித்துத் தெரிவிக்கும் கருத்து இதுவாகும் இவ்வருடத்துடன் பெரும்பாலான கருவிகள் விசைப்பலகை (Key Board) நிலையிலிருந்து வெகுதூரம் முன்னேறியுள்ளதாகக் காணக்கூடியதாக இருக்கிறது. தனிநபர் இலத்திரனியற் கருவிகளுடன் பொருத்தப்படும் அச்சுவேலை செய்யும் அலகு இப்போது பெரிய கலைக் களஞ்சியங்களை வெளியிடும் அளவிற்கு விரிவாக்கம் பெற்றுள்ளது.

சிலவற்றை இங்கு ஆராய்வோம்

ஜப்பானில் நிக்கோ நிறுவனத்தின் வெளியீடு

இது மூன்றுவித செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும். அவையாவன: (அ) அது சாதாரண கடதாசியில் இயங்கும் (எவ்) பாக்ஸ் இயந்திரம் எந்தவிதக் கடதாசியையும் இதில் பயன்படுத்தலாம். (ஆ) இது ஓர் உலர் அச்சு இயந்திரம். ஒரே நேரத்தில் 10 பிரதிகளைக் கோவையாக வெளியேற்றலாம். (இ) இது ஓர் அச்சுப் பொறி. மேலதிகமான ஓர் அலகு இதில் பொருத்தப்பட்டதும் கணனியின் இயக்கத்தில் நிதுமை அச்சுவேலைகளைச் செய்கிறது. வெட்டிய கடதாசிகளை இதில் புகுத்தி அச்சுவேலைகளை மிகவும் துல்லியமாகச் செய்யலாம்.

இதன்பெயர் (எவ்) பாக்ஸ் 800. அதன் விலை 1695 டொலர். மேலதிகமாகப் பொருத்தப்படும் அச்சுவேலை அலகின் விலை 150 டொலர்.

ரொஷிபாவின் காவித்திரியும் கணனிப் பொறி

இதன் நிறை 4 இறாத்தல் 6 அவுன்ஸ் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பெயர் ஸ்பார்ட்டேஷரி. 3,4000 CT விலை 4,000 டொலர். இது குறுப்பேடு ரகக் கணனி என விபரிக்கப்பட்டுள்ளது. இதன் மூடி

உட்பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் திரவப்படித்திரை (எல். சி. டி.) 7.8 அங்குல அளவும் பலவர்ணக் காட்சியும் உள்ளதாகும். அடையாள அட்டைபோன்ற சிறியரக அட்டைகள் இதில் செருகுவதற்கு இடம் விடப்பட்டுள்ளது. அட்டையைப் பொதாக்கி விபரங்களை மேற்கூறிய திரையில் பார்வையிடலாம். துரித இயக்கத்திற்கும் இதில் இடமுண்டு. நீள்பாவிப்பு மின்கலவில் இது இயங்குகிறது. இந்த மின்கலனை மின்சார சத்தியூட்டி மீண்டும் பாவிக்கலாம். ஒரு முறை 3 மணித்தியாலங்கள் சத்தி ஊட்டினால் இதில் பொருத்தப்படும் மின் கலன் 3 மணித்தியாலம் தொடங்கி 6 மணித்தியாலம் வரை வேலை செய்யும்.

தனியார் வீட்டுக் கணனியில் திரைப்படம்

80 டொலர் விலைக்குக் கிடைக்கும் இந்த வீடியோ கசற் தன்னகத்தே 2 மணித்தியாலங்கள் திரையில் ஓடும் விஞ்ஞான பூர்வமான இரண்டு படங்களையும், நீண்ட தொரு விளக்க உரையையும் கொண்டுள்ளது. இதை விட்டுக் கணனியில் இயங்கும் நிரைப்பட அலகில் புகுத்தித் திரை அரங்கில் காண்பிக்கப்படும் தரத்திலுள்ள படத்தைப் பார்க்கலாம். இது சாதாரண சினிமா அல்ல. இப் படத்தில் இரண்டு பெரும் வித்தியாசங்கள் உண்டு. இரண்டும் முதன் முறையாக வீடியோ கசற்றில் புகுத்தப்பட்டுள்ளன.

1. இப்படத்தில் மனித நடிகர்கள் பங்கேற்கிறார்கள். ஆனால், இந்த நடிசர்களுடைய அசைவுகள் காட்டூன் படங்களின் சாயலை ஒத்திருக்கிறது. அசைவுகளின் வேகமும், பேச்சும் அசல் காட்டூன் படம் பார்க்கும் பிரமையை ஏற்படுத்துகிறது.

2. முப்பரிமாணத்திலும் கூடுதலான துல்லியமும், காட்சிகளின் நேர்த்தியும் இப் படத்தில் புகுத்தப்பட்டுள்ளன.

ஒலியின் புதிய வடிவம்

மல்டிவேவ் நிறுவனம் முப்பரிமாண ஒலி வடிவத்தை அமைத்துள்ளது. இரு பக்க ஸ்ரியோ ஒலிக் கருவியில் இருந்து இது மாறுபட்டதாகும். எமது பரதநாட்டிய நிகழ்ச்சிகளின் பின்னணியில் பதிவு செய்யப்பட்ட இசை ஒலிக்க அதற்கேற்றாப்போல நடனமாடுவது கண்கூடு. இந்த இரக இசைக்கருவிகளிலும் இதைப்போன்ற செயற்பாடு உண்டு. மல்டிவேவ் ஒலிக்கருவியில் முன்பு பதிவு செய்யப்பட்டவற்றுடன் மேடையில் ஒருவர் சேர்ந்து பாடலாம். வித்தியாசம் கேட்போருக்குத் தெரியாது. இசையின் தன்மையும், பதிவின் துல்லியமும் அவ்வளவு சுத்தம். அத்தோடு இந்தக் கருவி வெளியிடும் ஒலி மேடை அல்லது அரங்கத்தைச் சுற்றி வியாபித்துக் கொண்டிருக்கிறது. இது வெகு முன்னேற்றகரமான புதுமையாகும். இதன் விலை 300 டொலர் மாத்திரமே.

கொஜினூர் நிறுவனத்தின் தயாரிப்பு

ஓவியர்களுக்கும், சித்திரம் தீட்டுவோருக்கும் உதவும் பல முக்கிய உபகரணங்களைத் தயாரிக்கிறது கொஜினூர் நிறுவனம். இவர்கள் தயாரிக்கும் வீனஸ் பென்சில் எழுதுவதற்கும், கீறுவதற்கும் உலகில் பல பாகங்களில் பாவிக்கப்படுகிறது. இப்போது கணனி மூலம் சித்திரம் கீறுவதற்கும், ஓவியங்கள் தீட்டுவதற்கும் ஒரு கருவியைக் கொஜினூர் நிறுவனத்தின் ஒரு கிளையான அரிஸ்ரோ நிறுவனம் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றது. இந்தக் கருவி பின்வருமாறு இயங்குகின்றது.

கணனித் திரையுடன் தொடுக்கப்பட்டுள்ள கணனிப் பலகையில் பிரத்தியேக கையடக்கமானதொரு தூரிகை (தூரிகை – ஓவியனின் எழுதுகோல்) யால் தீட்ட அந்த ஓவியம் திரையில் படிப்படியாகத் தோன்றும். திருத்தங்கள் எளிதாகப் பலகையில் செய்யத் திரையிலும் திருத்தப்பட்ட ஓவியம் தோன்றும். ஓவியன் முழுதியான சித்திரத்தைப் பலகையில் தீட்டிவிட்டு, திரையில் காண்பதைப் பிரதிபண்ணி எடுத்துக் கொள்ளலாம். இதை உண்மையான ஓவியக்கலை என்று சொல்ல முடியாவிட்டாலும் விளம்பரத் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கும், புத்தகங்களுக்குப் படம் போடுவோருக்கும் இந்தக் கருவி பெரும் வரப்பிரசாதம் என்று சொல்லலாம்.



இதுபோன்ற முன்னும் தயாரிப்பில் இருந்துள்ளன. ஆனால், பலரும் வாங்கமுடியாமல் அவற்றின் விலை தடுத்துள்ளது. இப்போது அரிஸ்ரோ நிறுவனம் 295 டொலருக்கு மலிவாக விற்பனை செய்கிறது. வாங்கிப் பயனடையுங்கள்.

நெஷனல் பனசோனிக் நிறுவனத்தின குறிப்பேடு

இதன் மேல் விபரிக்கப்பட்ட ரொஷிபா நிறுவனத்தின் போர்மேஷ் குறிப்பேடுபோன்ற 486 இரகம் தான் இந்தக் கருவியும். ரொஷிபா தயாரிப்புப்போன்று இதுவும் காவித்திரியும் வசதிக்காக குறைந்த நிறையில் மின்கலனில் இயங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதனுடைய மூடியில் பொருத்தப்பட்டிருக்கும் திரையில் சிறிய அட்டைகளைப் பெரிதாக்கி அவதானிக்கலாம். வாங்குபவர்கள் கறுப்பு வெள்ளை அல்லது வர்ணத் திரையைத் தெரிவு செய்யலாம். கையடக்கத் தட்டுக்களை (கொம்பாக்றடிஸ்க்) இதில் இணைக்கவிருப்பின் மேலதிக அலகு 499 டொலர் கொடுத்து வாங்க வேண்டும். இதனோடு இணைப்பதற்கென்றே பல அலகுகளை நெஷனல் தயாரித்துள்ளது. ஆகவே, இதன் விலை 2,500 டொலர் தொடங்கி 4500 வரை செல்கிறது.

உங்கள் கலைப் பொருள்களைக் கணனிப் பொறி மூலம் ஆய்வு செய்யலாம்

வைத்திய சாலைகளில் இன்று நோயாளர்களை 'ஸ்கானர்' எனப்படும் கணனி மற்றும் இலத்திரனியற் கருவி மூலம் நோயின் தன்மையை அதற்குரிய பரிகாரம் ஆகியவற்றை மனிதரிலும் கூடுதலான சாமர்த்தியத்துடன் தெரிவிக்கிறது. மனிதன் செய்யும் தவறுகளை இந்த இயந்திரம் விடாது என்பதே அடிப்படை. சிறியரகத்தில் இன்று இத்தகைய கருவிகள் "பி.சி." எனப்படும். தனியார்துறை வீட்டுப் பாவிப்புக்குரிய கணனியில் பொருத்துவதற்கென்றே தயாராகி விட்டன. விஞ்ஞான ஆர்வம் உள்ளவர்கள் இதைப் பல்வேறு விதத்தில் பயன்படுத்தலாம் பழைய முத்திரைகள், பழைய புதிய நாணயங்கள் சேகரிப்போர் இந்தக் கருவியின் உதவியால் அவற்றை வீட்டில் இருந்தவாறே பரிசோதனை செய்யலாம். இப்படியான சிறிய வீட்டுப்

பாவிப்பு ஸ்கானர்கள் தட்டையான உருவங்களைப் பரிசோதிப்பதற்கு உருவாக்கப்பட்டிருந்தன. இப்போது 895 டொலர் விலைக்கு வந்திருக்கும் கருவி முப்பரிமாண உருவாக்கங்களை ஆய்வு செய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் இதில் பொருத்தப்பட்டிருக்கும் புகைப் டக் கருவியை ஒத்த லென்சு பார்வையிடும் பொருளுக்கு கால் அங்குல அண்மைக்குச் சென்று பரிசோதனை செய்கிறது. இந்தக் கருவி பார்வையிடும் பொருளைக் கணனிப் பொறியின் திரையில் பெரிதாக்கிக் காண்பிக்கின்றபடியால் கலைப் பொருள்களில் உள்ள வடுக்கள், திருத்தங்கள், வழுக்கைகளையும் உய்த்து உணரலாம். கலைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்போருக்கும் இது உதவுமென நம்பப்படுகிறது. மிகவும் பிரயோசனமான இக் கருவியைப் பல்வேறு முறையில் நாம் வசதியாகப் பயன்படுத்தலாம். பத்திரிகைத்துறையினர் எமக்குத் தேவையான படங்களைப் போடுவதற்கு இது உதவும்.

கம்பித் தொடர்பில்லாத தகவல் வாங்கி

கம்பியில்லாத் தொலைபேசிகள் தயாரிப்பில் மோட்டோரோலா நிறுவனம் முன்னோடி நிலையில் உள்ளது. இதன் தயாரிப்புகள் எமது நாட்டிலும் அமோகமாக விற்பனையாகின்றன. அவர்கள் இந்த அடிப்படையில் கணனிகளுக்கிடையிலான தகவல்களைப் பெறுவதற்குத் தங்கள் பிரபலமான தொலைபேசி மாதிரியானதொரு கருவியை உருவாக்கியுள்ளனர். அமெரிக்காவில் பொருள்கள் வாங்குவதற்குப் பணத்திற்குப் பதிலாகப் பாவிக்கப்படும் கடன் அட்டைப் பரிமாணத்தில் இவை தயாராகின்றன. இக் கருவியைக் காவிச் செல்லப்படும் கணனியில் அட்டைகள் செருகிப் பெரிதுபடுத்தும் பகுதியில் செருகலாம். இவ்வாறு செருகுவதற்கென்றே இதன் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ''பீ-பீ'' இரகத் தனியார் வீட்டில் பாவிக்கும் கணனியிலும் இதைப் பொருத்தலாம். இவ்வாறு மேற்கூறியபடி பொருத்தாமலும் இக் கருவியைத் தனித்துவம் தகவல் தொடர்புக்குப் பயன்படுத்தலாம் தகவல்தொடர்பு நெடுஞ்சாலையில் இக்கருவி முக்கிய இடம்வகிக்கிறது. அதாவது இதன் 'மினி' கிறிய உருவம் அதன்பயன் பாட்டைப் பன்மடங்கு உயர்த்தியுள்ளது. இது பல்வேறு ஜப்பானிய அமெரிக்கக் கணனிகளில் பொருத்தக் கூடிய விதமாகத் தயாரிக்கப் பட்டுள்ளது. விலை இன்னும் நிர்ணயஞ் செய்யப்படவில்லை.

பாடகர் எல்விஸ் பிறெஸ்லியின் பிறந்த ஊரின் பெயரில் ஓர் உயர்தர இசைக்கருவி

எல்விஸ் பிறெஸ்லி இறந்தாலும் அவர் புகழ் இன்றும் மங்காமல் இருக்கின்றது. 'சிடி' எனப்படும் இசைத் தட்டுக்களைப் பயன்படுத்தும் உயர்தர இசைக்கருவி ஒன்று ''மெம்பிஸ்'' அவர் பிறப்பிடத்தின்பெயரால் 1,000டொலர் விலையில் விற்பனைக்கு வந்துள்ளது. இதில் இசையை வெளியிடுவதற்கும், புதிதாகப் பதிவு செய்வதற்கும் வசதிகள் உண்டு. இந்தச் செயற்பாடுகள் இரண்டு விதவேகத்தில் செய்யலாம். கூட்டத்தில் பேசப்படும் பேச்சுக்களைப் பதிவு செய்வதற்கும் இதில் ஒழுங்குகள் உண்டு. இதன் ஒலிப்பெட்டிகளை வித்தியாசமான இடைவெளிகளில் விருப்பம்போல் வைத்து இசையின் தன்மையை வித்தியாசப்படுத்தலாம். விலை நிர்ணயஞ் செய்யப்பட வில்லை.

பொப்பியுலர் மெக்கானிக்ஸ், ஏப்ரல் 1994.

செல்லப்பிராணியாகும் முள்ளுப் பன்றி

அண்மைக்காலமாக முள்ளுப்பன்றிகளைச் செல்லப்பிராணிகளாக வளர்ப்பது அமெரிக்காவில் அதிகரித்து உள்ளது. அந்த முட்களைக் காட்டிப் பயமுறுத்தும் பிராணியும் மனிதர்கள் பரிவுகாட்டுவதை விரும்பும் தன்மையினாலாம். அத்துடன் ஒரு நாளைக்கு ஒரு முறை அவற்றிற்கு உணவு ஊட்டினால் போதுமாம். ஓளவு கூடான பருவநிலை நிகழும் இடங்களில் அவை சுகமாக வளரும். அத்துடன் அவற்றிலிருந்து கெட்ட நாற்றமும் அவ்வளவாக வெளிப்படுவதில்லையாம். தற்போது அமெரிக்காவில் ஒரு சோடி 250 டொலர் வரை விலை போகிறது.

அலாஸ்கா - சைபீரியா பாலம்

பாலம் கட்டுவோம் சுரங்கம் தோண்டுவோம்

சைபீரியாவும் வட அமெரிக்காவின் அலஸ்காப்பிரதேசமும் ஒரே நிலப் பரப்பாக அல்லது இன்றிலும் கூடுதலாக அண்மையில் இருந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. பூமியின் மேல் ஓடு சதா அசைந்து கொண்டிருப்பதால் இரண்டு

பாலமும், சுரங்கமும் இரு முனைகளைத் தொடுக்கும் பொது வேலையை இரு விதத்தில் செய்கின்றன. பாலம், நிலம் அல்லது நீரின் மேலாகக் கட்டப்படுகின்றது. சுரங்கப் பாதை நீரின் அடியில் உள்ள மண்ணின் கீழாகவும், பெரும் மலைகளுக்கு ஊடாகவும் அமைக்கப்படுகின்றது. மனிதனின் போக்குவரத்தை இலகுவாக்குவதே இரண்டிற்கும் உரிய நோக்கமாகும். இத் தேவைக்காக மனிதன் வெட்டிய வாய்க்கால்களையும் நாம் இங்கு குறிப்பிட வேண்டும். கி. மு. 5 ஆம் தொடங்கி கி. பி. 13 இல் முடிவுற்ற 1,000 மைல் நீளமான றான்சல், பீக்கிங் நகரங்களைத் தொடுக்கும் நீர் வாய்க்காலைச் சீனர்கள் வெட்டியுள்ளார்கள். இன்றும் பாவனையில் உள்ள இப் பாதை உலகின் மிகப் பழைமை வாய்ந்த மனிதன் வெட்டிய நீர் வாய்க்காலாகும். இப்போது சூயஸ் கால்வாய் உள்ள இடத்தில் கி. மு. 2,000 ஆண்டளவில் எகிப்தியர்கள் நைல் நதியையும், செங்கடலையும் தொடுத்து ஒரு வாய்க்கால் அமைத்துள்ளார்கள். ஆனால் காலப்போக்கில் இது அழிந்து எமது காலத்தில் புதிதாக வெட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. புகையிரதப் பாதைகள் போகும் வரை இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் பொருள்களை இடம் மாற்றுவதற்கு நீர் வாய்க்கால்களே உபயோகிக்கப்பட்டுள்ளன. இவை பெரும் பாலும் சம

கண்டங்களுக்கிடையிலான அமைதிப்பாலம் நெடுஞ்சாலை, புகையிரதம், எண்ணெய், மற்றும் வாயுக் குழாய்களை அடக்கியிருக்கும். இரும்பினால் குளிர் தாங்கமுடியாதபடியால் யாவும் சீமெந்துக் குழையலால் மூடப்படும்.

பூமியில் தான் கட்டப்பட்டுள்ளன. ஆனால் பெருந்தொகை நீரை ஏற்றி இறக்கும் தொழில் நுட்பம் நடைமுறைக்கு வந்தபின் பனாமாக் கால்வாய் போன்ற உயர்ந்த பூமியில் கால்வாய்கள் கட்டப்பட்டுள்ளன.

கல்தோன்றா மண்தோன்றா என்று கவிதை நடையில் குறிப்பிடும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தற்போது ருஷ்யாவுக்குச் சொந்தமான கிழக்கு ஆசியாவின் முனைகளும் சற்று விலகி இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. கிழக்கு முனைகளும் சற்று விலகி இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. கிழக்காசியாவுக்குரிய மஞ்சள் நிறத்தவர்களான செவ்விந்தியர்கள் சைபீரியாவுக்கும் அலாஸ்காவுக்கும் இடைப்பட்ட பெரிங் நீரிணையைக் (BERING STRAIT) கடந்து 10,000 வருடங்களுக்கு முன்பு வட அமெரிக்கா தென் அமெரிக்கா கண்டங்களுக்கு வந்து விட்டதாக

வரலாற்று ஆசிரியர்கள் கூற்று இருக்கின்றது. இதே மாதிரி கிழக்கு ஆசியாவுக்குரிய எஸ்கிமோ இனத்தவர்களும் 3,000 வருடங்களுக்கு முன் அலாஸ்காப் பிரதேசங்களுக்கு வந்து விட்டதாக மேற் கூறிய அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். செவ்விந்தியர்களும், எஸ்கிமோக்களும் நேரடித் தொடர்பு அற்றவராயினும் மஞ்சள் நிறக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே.

1728 ஆம் ஆண்டு ருஷ்ய அரசரின் கீழ் மாலுமியாகக் கடமையாற்றிய டென்மார்க் நாட்டவராகிய விற்றுஸ்பெரின் (Vitus Bering) ருஷ்யாவின் கிழக்குப் பிரதேசத்திற்கு அப்பால் இருந்த அலாஸ்காவைக் கண்டுபிடித்தனர். இவருடைய பெயரே இந்த நீரிணைக்குத் தரப்பட்டுள்ளது. அன்று தொட்டு அலாஸ்கா ருஷ்யாவின் சொத்தாகவே இருந்து வந்துள்ளது. ருஷ்ய மீன்பிடி காரர்களும், தோலுக்காக மிருகங்களை வேட்டையாடுபவர்களும் காலத்திற்குக் காலம் இங்கு வந்து போய் உள்ளனர். ருஷ்யாவின் கிறிஸ்தவ மதபோதகர்கள் அலாஸ்காவின் எஸ்கிமோக்களையும், வேறு இனத்தவர்களையும், மதம் மற்றும் நோக்குடன், சிறிய கிறிஸ்தவ தேவாலயங்களையும் கட்டியுள்ளனர். இன்றும் இக் கட்டடங்களை இங்கு காணக்கூடியதாக இருக்கிறது. பெருந் தொகையான மக்கள் அலாஸ்காவில் குடியேறுவதைத் தடுப்பது அங்கு நிலவும் கடும் குளிரும், உறைபனியுமே காரணம். இதனால் 1867 ஆம் ஆண்டு ருஷ்யாவின் சார் மன்னர் இரண்டாம் அலெக்சாண்டர் 7,200,000 டொலருக்கு, தமக்குச் சொந்தமாக இருந்த அலாஸ்காப் பிரதேசத்தை என்றென்றும் அறுதியாக விற்று ஆட்சியையும், அமெரிக்காவுக்கு ஒப்படைத்துள்ளார். இன்று அலாஸ்கா அமெரிக்காவின் 49 ஆவது மாகாணமாகத் திகழ்வதோடு அளவிட முடியாத செல்வங்களுக்கு இருப்பிடமாகவும் இருக்கிறது.

இன்று பாலம், சுரங்கப்பாதை போன்றவை கட்டும் தொழில் நுட்பம் உச்ச நிலை அடைந்துள்ளது. பொறியியல் படியின் ஒரு பகுதி இப்பிரிவிற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. மரக்குற்றியில் தொடங்கி இன்று மனிதன் தொங்கு பாலம், கயிற்றுப் பாலம் போன்றவற்றைக் கடந்து வந்து மிக நீளமான இரும்புப் பாலம் வரை வந்து உள்ளான். இங்கிலாந்தின் கம்பர் நதிக்கு மேலாகக் கட்டப்பட்ட பாலம் உலகின் மிக நீளமான தென்ற பெருமையை ஒரு காலத்தில் பெற்றிருந்தது. ஆனால் ஸ்கன்டினேவியா பாலம் பூர்த்தியானதும், அந்த ஸ்தானம் மாறிவிட்டது. ஸ்கன்டினேவியாவின் புகழும் நீடிக்காது போல் தோன்றுகிறது. ஜப்பானில் அக்காசி கைக்

"சிற்றருவிக்குமேல் வீழ்ந்த பட்டமரம் தான் மனிதன் கடந்த முதலாவது பாலம்"

கிலோ என்ற பாலம் கி. பி. 2,000-ம் ஆண்டளவில் பாவனையாளர் சேவைக்கு வந்து விடும். இதன் நீளம் 6,528 அடி. மிக நீளமான தென்ற பெருமை அப்போது இதற்குக் கிட்டிவிடும். பொறியியலாளர்கள் உலகில் காணப்படும் பாலங்கள் யாவற்றையும் இரு பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளனர். அசைவுள்ள, அசைவற்ற பாலங்கள் இதற்குள் பல்வேறு விதமான பாலங்கள் அடங்கும். இந்தியர்கள் கி. மு. 3,000 அளவில் இவை யாவற்றையும் சிறிதளவில் தமது நாட்டில் செய்து காட்டியுள்ளனர். ஐரோப்பாவில் தெருக்கள், பாலங்கள் கட்டுவதில் உரோமர்கள் நிகரற்றவர்கள். அவர்கள் கட்டியவை இன்னும் சேவையில் இருக்கின்றன. மார்க்கோவின் பிரயாணப் புத்தகத்தில் சீனா உட்பட பல நாடுகளில் பிரசித்தமான பாலங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்றைய பாலங்கள் இவை யாவற்றுடன் வேறுபட்டவையாகும். 18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஆரம்பித்து இன்று இரும்பிலேயே பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

முதலாவது சுரங்கப் பாதைகள் கி. மு. 2,000 இத்தில் பபிலோனியர்கள் கட்டியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சுரங்கப் பாதைகள் போக்குவரத்துக்கும், நீர் கொண்டு செல்லுதற்காகவும் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஜெருசலம் நகரில் 2,500 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட நீர் கடத்தும் சுரங்கப் பாதை இன்னும் பாவிப்பில் உள்ளது. இதன் நீளம் 1,700 அடி. ரோமர்களும், அவர்களுக்கு முன் கிரேக்கர்களும் தூரத்திலிருந்து நீர் கொண்டு வருவதற்குச் சுரங்கப் பாதைகளை அமைத்துள்ளனர். ஆனால் நீருக்கடியில் கட்டப்படும் சுரங்கப் பாதைகள் மிகவும் பெரிதாகவும், தொழில் நுட்பம் கூடியதாகவும் எமது காலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. 17½ மைல் நீளமான நீருக்கடியிலான சுரங்கப் பாதை 1964 ஆம் ஆண்டு அமெரிக்காவில் செசாபீக் நதியின் கீழ் கட்டப்பட்டுள்ளது. அண்மையில் இங்கிலாந்தையும், பிரான்சையும் தொடுக்கும் சுரங்கப்பாதை திறக்கப்பட்டுள்ளது. உலகின் மிக நீளமானதும், பெரும் தொழில் நுட்பங்கள் அடங்கியதுமான மலைகளுக்கூடான போக்குவரத்துப் பாதை பிரான்சையும், இத்தாலியையும் தொடுக்கும் மொன்ற் பிளான்க் (Mount Blanc) சுரங்கப் பாதையாகும்.

உலகின் சனத்தொகை கூடக் கூட போக்குவரத்துப் பிரச்சனைகளும் புதிய நகரங்கள் கட்டப்பட வேண்டிய அவசியமும் எழுகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் பாலங்களும், சுரங்கப்பாதைகளும் மனித வாழ்வை வளப்படுத்தத் தேவைப்படுகின்றன. இன்று ஆசி

யாவையும், அமெரிக்காவையும் தொடுக்கும் மிகப்பெரிய பாலம் கட்டும் திட்டமொன்று எழுத்துருவில் இருக்கிறது. அது இதன்மேல் கூறப்பட்ட ருஷ்யாவின் சைபீரியாவையும் அமெரிக்காவின் அலாஸ்காவையும் தொடுக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இது இரு பெரும்நாடுகளுக்கிடையிலான போக்குவரத்தை எளிதாக்குவதுடன், சைபீரியாவில் மூடங்கிக் கிடக்கும் எண்ணெய், எரிவாயு போன்றவற்றை உலகிற்கு கிடைக்கச்செய்யும். ஆகவே இந்தப்பாலத்தின் வரைபடங்கள் மூன்று அம்சங்களை உள்ளடக்கியுள்ளன. அவையாவன: நெடுஞ்சாலை, புகையிரதப்பாதை, எண்ணெய்வாயுக் குழாய்கள். இந்தக் கட்டுமானப் பணிக்குத் தடையாக இருப்பது இப்பிரதேசத்தின் பயங்கர குளிரும், கார்காலத்தில் மண்டிப்பிடிக்கும் பனிக்கட்டிகளுமே. ஆகவே பாலம் கட்டும் போது குளிர்தாங்கும் பொருள்களைப் பாவித்தே கட்டுமானப் பணியைத் தொடர வேண்டியுள்ளது. தனி இரும்பால் இப்பாலம் கட்டப்பட்டால் கடும் குளிரைத்தாங்கமுடியாமல் அவை முறிந்து பாலத்தைச் சேதப்படுத்திவிடும். ஆகவே இப்பாலத்திற்குப் பாவிக்கப்படும் இரும்பு யாவும் நிமெந்துக்குழையலால் மூடிக்கட்டப்படல்வேண்டும்.

இந்தப் பாலத்தின் ஆரம்ப வேலை என்று தொடங்குமென சொல்லத்தெரியவில்லை. இத்திட்டத்தை முன்வைத்த பேராசிரியரும், முதுபெரும் பொறியியலாளருமாகிய அமெரிக்க ரீ. வை. லின் (T. Y. LIN) இதன் வரைபடங்களையும் தயாரித்தளித்துள்ளார். இரண்டு முனைகளுக்குமிடையில் உள்ளதூரம் ஆக 55 மைல் தான். ஆனால் இதில் அடங்கிய பொறியியல் பிரச்சனைகள் பிரமாண்டமானவை. மனிதனுடைய கட்டடக் கலைக்கு விடப்பட்ட மிகப்பெரிய சவால் என்று இது வர்ணிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இப்பணிக்கு அமைதிப்பாலம் (Peace Bridge) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. லின் அவர்களுடைய திட்டப்படி பாலத்தை 220 துண்டுகளாகத் தொழிற்சாலைகளில் செய்து பின்பு பெரிங் நீரிணைக்கு காவிச்சென்று பொருத்துவதுதான் சிறந்தவழி. இவ்விடத்தில் தங்கி வேலை செய்யும் நேரத்தைக் கூடியளவு குறைக்க வேண்டியது மிகவும் அவசியம். மிதக்கும் பனிப்பாறைகள் பாலத்தின் அடிப்பாகத்தை அதாவது அத்திவாரத்தை இடித்து நொருக்காமலும் பாதுகாப்பாகக் கட்டப்படவேண்டியது நடைமுறைப்பிரச்சனையாகும். இவ்விடத்தில் காணப்படும் நீர் ஆழம் குறைந்ததென்றும் தெரிவிக்கப்படுகிறது, 180 அடி மாத்திரமே. ஒரு சில இடங்களில் மாத்திரம் ஆழம் கூடுதலாக இருக்கின்றது. லின் அவர்கள் தனது திட்டங்களை வெளியரங்கப்படுத்தியபின் ஸ்ருவர்ட் றெசோர் (Stuart Resor) என்ற இன்னுமோர் அமெரிக்கப் பொறியியலாளர் சைபீரியாவுக்கும் அலாஸ்காவுக்குமிடையில் சுரங்கப்பாதை அமைப்பது தான் பிரச்சனைகளைக் குறைப்பதோடு நெடுங்காலம் நிலையாக நிற்கக்கூடியதாகவும் இருக்குமெனத் தெரிவித்துள்ளார். இதற்கு அத்தாட்சியாக அவர் வரைபடங்கள், வரவு செலவுத்திட்டங்கள் யாவற்றையும் வெளியிட்டுள்ளார்.

பெருந்தொகைப் பணமும், மூளைச் செலவும் தேவைப்படும் இந்த வகையான பாரிய பணி மனிதசக்திக்கு அப்பாற்பட்டதல்ல. பிரபஞ்சத்தை வலம் வர ஆரம்பித்துள்ள மனிதப்பிறவிக்கு இது போன்ற பணிகள் நன்கு திட்டமிடப்படின் வெற்றி அளிக்குமென விஷயம் தெரிந்தோரின் நம்பிக்கை.

தமிழில் :
கலாநிதி க. சோமஸ்கந்தன்

பொப்பியுலர் சயன்ஸ்,
ஏப்ரல், 1994

மலேசியாவில் புதியதொரு நீதிமன்றம்

மலேசியாவின் மேல் நீதிமன்றங்களுக்கும் சமஷ்டி அரசாங்க நீதிமன்றுக்கும் இடையில் வர்த்தகத்துக்காக ஒரு மேன்முறையீட்டு நீதிமன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த மேலாணை நீதிமன்றிற்கு நீதிபதிகள் 6 பேர் தற்போதைய மேல் நீதிமன்ற நீதிபதிகள் மத்தியில் இருந்தும் ஒருவர் தற்போது பிரபல்யம் பெற்றுத்திறமையாகத் தொழில் புரியும் வழக்கறிஞர் ஒருவரையும் நியமித்து உள்ளனர். அந்த நீதிபதிகள் அனுார், செம்நாள் ஆப்மன், என். எச். சாண், சகாரியாயாடிம், நோத்மாயாகுப், சாகிக்டாவுட், மகாதேவசங்கர் என்பவர்களுடன் வழக்கறிஞரான ஜீ. சிறி. ராம் என்பவரும் ஆவர். தனிப்பட்ட தொழில் புரிந்த வழக்கறிஞர் ஒருவர் மேலாணை நீதிபதியாக நியமிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

மருந்து விற்பனையாளருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் !

உங்களுக்குத் தேவையான ஆங்கில மருந்து வகைகளை மொத்தமாகவும்,
நியாயமான விலைகளிலும் பெற்றுக்கொள்ள

மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது

DRUGS & MILK FOODS [PRIVATE] LTD.,

484, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.

அத்துடன் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான

★ ஆங்கில மருந்து வகைகள்
★ பால்மா வகைகள்
★ சத்துணவுகள்
★ மற்றும் இதர பொருள்களை

ஒரே கூரையின் கீழ், நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

★ மருந்து-பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிளைகள்:

★ மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

★ மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
பிரதான வீதி, சித்தன்கேணி

★ மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
ஊறணி, வல்வெட்டித்துறை.

★ மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
யாழ் வீதி, கிளிநொச்சி.

★ மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
முருங்கன், மன்னார்.

அச்சுப்பதிப்பு: இராசன் அச்சகம், அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
அட்டைப்பதிப்பு: அந்திவானம் பதிப்பகம்